## 18-4-2000

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. கவன ஈர்ப்பு— | |
| மயிலாடுதுறை, சாரங்கபாணி மேம்பாலத்தில் அதிர்வு தாங்கிகள் பழுதடைந்துள்ளது | 1-3 |
| 2. மானியக் கோரிக்கைகள், 2000-2001. விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 10 — பால் வழங்கு செயல் திட்டங்கள்<br>(ஆ) கோரிக்கை எண் 22 — கால்நடை வளர்ப்பு<br>(இ) கோரிக்கை எண் 21 — மீன்வளம் | 3-135 |
| மாண்புமிகு திரு. க. சுந்தரம் | 3-4,8,46,47, 48-49,59,90, 91,117-124, 126-128 |
| *மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் | 9,13,23,26, 41,42,61,86-88,102-117 |
| *மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் | 13,18,93-102 |

223306


| | பக்கங்கள் |
|---|---|
| 2. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 10 — பால் வழங்கு செயல் திட்டங்கள் | |
| (ஆ) கோரிக்கை எண் 22 — கால்நடை வளர்ப்பு | |
| (இ) கோரிக்கை எண் 21 — மீனளம்—தொடர்ச்சி | |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 13,17,18-26, 42,43,101 |
| *திரு. இரா. மதிவாணன் | 27-31 |
| *திரு. கே. தங்கமணி | 6,11,16,31-36 |
| திரு. ச.க. வெங்கடேசன் | 36-38 |
| திரு. இரா. விசுவநாதன் | 38-52,82, 83,124-125 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 52-60,117 |
| திரு. ஏ.வி.ஏ. நாசர் | 60-63 |
| திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் | 5,10,15,63-68 |
| *திரு. துரை. சந்திரசேகரன் | 68-72 |
| திரு. பி. வெங்கடசாமி | 6-7,11-12,16, 72-75,130, 132,134 |
| *திரு. டி. மணி | 75-81 |
| திரு. சீ.வெ. கிருஷ்ணன் | 81-82,84-85 |
| திரு. மு. அப்பாவு | 7,12,17,85-93 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 136 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.*

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.*

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.*

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:**

   *வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.*

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

   *நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

53-59—1a

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:
விளையாட்டு, இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 8. | **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transpsort, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Youth and Pollution Control** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports, Youth Service Corps and Environmental Pollution Control. |
| 18. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:**
Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:**
Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:**
Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:**
Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. திரு. அ.லெ. சுப்பிரமணியன்
2. திரு. சி.டி. தண்டபாணி
3. திரு. குத்தாலம் பி. கல்யாணம்
4. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
5. திரு. நா. பெரியசாமி

*செயலாளர்*

திரு. வெ. இராசாராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீநா. உமா. பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. க. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 20. ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 21. ஆறுமுகம், திரு. தி.ப. | .. | திருச்செங்கோடு |
| 22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 23. ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 24. இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 26. இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 27. இராசன், திரு. வி.பி. | .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. | ஆண்டிமடம் |
| 29. இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 30. இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 33. இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 34. இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 35. இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 37. இராமஜெயம், திரு. ந.பூ. | .. | மயிலாப்பூர் |
| 38. இராஜ ரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 39. இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 40. இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 41. ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 42. உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 44. கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 45. கணேசன், திரு. கே.சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 46. கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 47. கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 48. கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 49. கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 50. கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 52. காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. | .. | நாங்குநேரி |
| 55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. | .. | வேடசந்தூர் |
| 56. குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 58. குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. | கும்மிடிப்பூண்டி |
| 60. குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 61. கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 62. கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஓட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆவா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80 சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

| | | | |
|---|---|---|---|
| 107. | செல்வராஜ், திரு. து. | .. | உடுமலைப்பேட்டை |
| 108. | சேகரன், திரு. ஆர்.ஆர். | .. | ஓமலூர் |
| 109. | சேதுநாதன், திரு. ரா. | .. | திண்டிவனம் |
| 110. | சைதை கா. கிட்டு, திரு. | .. | சைதாப்பேட்டை |
| 111. | சொக்கர், திரு. ஆர். | .. | சிவகாசி |
| 112. | சொக்கலிங்கம், திரு. ஜி. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 113. | ஞானசேகரன், டாக்டர் ஆ | .. | மேல்மலையனூர் |
| 114. | ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 115. | டேவிட் செல்வின், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 116. | தங்கமணி, திரு. கே. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 117. | தங்கம் தென்னரசு, திரு. | .. | அருப்புக்கோட்டை |
| 118. | தங்கவேலன், திரு. சுப. | .. | கடலாடி |
| 119. | தங்கவேல், திரு. அ.ல. | .. | சேலம்-2 |
| 120. | தண்டபாணி, திரு. சி.டி. | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 121. | தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | .. | இளையான்குடி |
| 122. | தமிழ்ச்செல்வன், திரு. ஆர். | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 123. | தமிழ்மணி, திரு. வீ. | .. | செங்கல்பட்டு |
| 124. | தளபதி, திரு. கோ. | .. | சேடப்பட்டி |
| 125. | தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | .. | சேலம்-1 |
| 126. | தனபால், திரு. வி.ஜி. | .. | குடியாத்தம் |
| 127. | தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 128. | திசைவீரன், திரு. உ. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 129. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |
| 130. | திருவேங்கடம், திரு. பெ.சு. | .. | கலசப்பாக்கம் |
| 131. | துரைசாமி, திரு. பா. | .. | வரகூர் (செ.வ.) |
| 132. | துரை. திரு. கே. | .. | திருவெறும்பூர் |
| 133. | துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 134. | தெய்வநாயகம், திரு. எ. | .. | மதுரை மத்தி |
| 135. | தேவராஜன், டாக்டர் மு. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 136. | நடராசன், திரு. ஆ. | .. | பேரூர் |
| 137. | நடராஜன், திரு. த. | .. | செஞ்சி |
| 138. | நயினா முகமது. திரு. கோ. | .. | கடையநல்லூர் |
| 139. | நன்னன், திரு. கொ.வீ. | .. | செங்கம் (செ.வ.) |
| 140. | நாகரத்தினம், திரு. ச. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 141. | நாசர், திரு. ஏ.வி.ஏ. | .. | புவனகிரி |
| 142. | நாஞ்சில் கி. மனோகரன், திரு. | .. | திருவல்லிக்கேணி |
| 143. | நிஜாமுதீன், திரு. ஜி. | .. | நாகப்பட்டினம் |
| 144. | நேரு, திரு. கா.நா. | .. | லால்குடி |
| 145. | பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. | .. | சிவகங்கை |
| 146. | பத்மா, டாக்டர் | .. | நன்னிலம் (செ.வ.) |
| 147. | பரணிகுமார், திரு. பா. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 148. | பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 149. | பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 150. | பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். | .. | மதுரை மேற்கு |
| 151. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 152. | பன்னீர்செல்வம், திரு. மு. | .. | சீர்காழி (செ.வ.) |

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு



176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178 மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180 மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

203. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்

210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

211. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி

212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

213. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப்பாளையம்

224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)

225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

226. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

227. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

228. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

229. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

230. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

232. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

233. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு

235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 6, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 18, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை ".

எல்லா உயிர்களிடத்தும் கருணைகொண்டு அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர்கள் தமது உயிரைப்பற்றிக் கவலை அடையமாட்டார்கள்.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. கவன ஈர்ப்பு

#### மயிலாடுதுறை, சாரங்கபாணி மேம்பாலத்தில் அதிர்வு தாங்கிகள் பழுதடைந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ், ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. குத்தாலம் பி. கல்யாணம்

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை, சாரங்கபாணி மேம்பாலத்திலுள்ள bearing' பழுதடைந்துள்ளதால், பாலம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

மயிலாடுதுறையில் 1975-ல் கட்டப்பட்ட மாணவர் சாரங்கபாணி மேம்பாலத்தின் அதிர்வு தாங்கிகளை (Bearings) மாற்றியமைக்கும் பணியானது திருவாளர்கள், மெசர்ஸ் பிரிஸ்லினெட் பிரிஸ்டெரஸ்டு கான்கிரீட் கம்பெனி லிமிடெட், மும்பை (M/s Freissinet Prestressed Concrete Company Limited, Mumbai) என்னும் ஒப்பந்தகாரரிடம் ஒப்படைக்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி மூன்று மாத காலத்திற்குள் முடிக்கப்படும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அந்தப் பணி நடைபெற்று வருவதைப்பற்றி இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 29 ஸ்பான்கள் இருக்கின்றன. அதில் 18 ஸ்பான்களின் வேலை முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. பாக்கியுள்ளது 7 ஸ்பான்கள். 4 ஸ்பான்கள் இரயில்வே வழித் தடத்திலே வருகின்றன. எனவே, இரயில்வே துறையிலுள்ள பொறியாளர்களுடைய அனுமதி கேட்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அதை விரைந்து பெற்று, விரைவாக அந்தப் பணியை முடித்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாலத்தைச் சரி செய்ய இன்னும் ஒன்றரை மாத காலமாகும் என்று சொல்கிறார்கள். இப்போது அதிலே சென்று கொண்டிருக்கிற வாகனங்கள் அதற்கு இணையாக இருக்கிற கல்லணை பூம்புகார் சாலையில் திருப்பி விடப்பட்டு, மயிலாடுதுறை பக்கத்திலே இருக்கிற மாப்படுகை வழியாக, குத்தாலத்திற்கு வந்து, பிறகு அந்த முதன்மைச் சாலையை அடைந்து வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றன. இந்த மாற்றுப் பாலத்தினுடைய தூரம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மிகவும் சுருக்கமாகக் கேட்க வேண்டும். நீங்கள் உரையைப் போல நிகழ்த்தக் கூடாது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** 10 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. எனவே ஒன்றரை மாத காலத்திற்குள் இந்த 10 கிலோ மீட்டர் தூரம் உள்ள சாலையை முழுமையான போக்குவரத்தைத் தாங்கக் கூடிய அளவிற்கு செப்பனிட்டுத் தர வேண்டும்; தரப்படுமா என்று கேட்டு அமைகிறேன்.





**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை சாரங்கபாணி பாலம் 1975 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. பொதுவாக, இப்படிப்பட்ட பாலங்களில் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை, அந்தப் பாலத்தின் அடியிலே இருக்கக்கூடிய இரப்பர் பேரிங்ஸ் (rubber bearings) மாற்றப்பட வேண்டும். அதை மாற்றுகிற பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், இந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பணி இன்னும் 45 நாட்களிலே முடிவடையும் என்று எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. இரயில்வே துறையிலே அனுமதி பெற்றிருக்கிறோமா என்று கேட்டார்கள். இரயில்வே துறையினுடைய அனுமதியோடுதான், இந்தப் பழுது நீக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பாலத்திற்காக, அவர் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துவிட்டு, தூண்டில் மீனை வைத்து விலாங்கு மீன் பிடிப்பதைப் போல இன்னொரு சாலையைச் செப்பனிட்டுத் தரமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்த மாற்றுப் பாதையிலே அதிகமான வாகனங்கள் செல்கிற காரணத்தாலே, அந்தச் சாலை பழுதுபட்டு இருப்பதாகவும், அதை உடனடியாக பழுதுபார்த்துத் தர முடியுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**(அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள்**
**(ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு**
**(இ) கோரிக்கை எண் 21—மீனளம்**

### (அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.13,20,42,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1724*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் செய்த 3 நாட்களில் பணம் பட்டுவாடா செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4407*, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1951*, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிரதம கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு காலம் கடத்தாமல் உடனடியாக பணப் பட்டுவாடா செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1417*, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தின் முறைகேடுகளைக் களைய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1831*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1531*, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ. 100/ குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3251*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதியில் பால் அதிகம் உற்பத்தி செய்வதற்கு பால் உற்பத்தியாளர்களுக்குத் தரமான கால்நடை தீவனம் வழங்குதலின் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ. 100/ குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4204*, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பால் உற்பத்தியாளர் ஒன்றியம், விவசாயிகளுக்கு அரசு மானியத்துடன் கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2774, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4032, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயப் பெருமக்களின் பொருளாதாரத் தரத்தினை உயர்த்த நீண்டகாலத் தவணையில் கறவை மாடு வாங்க கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1387, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to regularise the temporary services of the workers who have worked more



than 240 days in the milk producing Co-operative Societies in Tamil Nadu", I move—

"That the sum of Rs.13,20,42,000/- allocated under Demand No.10 - Milk Supply Schemes be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3633, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000-ல் ரூ100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2854, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் பால் பொருட்கள் தயாரிக்க தேவையான தொழில்நுட்பப் பயிற்சி மையம் நடப்பாண்டில் தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2420, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம் ஆவின் பால் பண்ணையில் தினக்கூலிகளாகப் பணிபுரியும் நபர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2732, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓட்டப்பிடாரம் தொகுதி, ஓட்டப்பிடாரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3614, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியான விலை தற்பொழுது கிடைக்கப்படாமல் இருப்பதை மாற்றி கட்டுப்படியான விலை வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,20,42,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு செயல் திட்டங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 137 முதல் 159 வரையிலான பக்கங்களில் இணைப்பு 1-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



## (ஆ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.175,87,34,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1690, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்குட்டை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3163, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை வந்துள்ள இடங்களில் கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம்பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1392, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1783, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1595, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3309, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களில் மருந்துகள் தட்டுப்பாடின்றி வழங்கும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2996, திரு. ந. கருப்பண்ண உடையார்.



***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள விவசாயப் பெருமக்களுக்கு வெளிநாடுகளிலிருந்து அதிக பால் தரும் பசு மாடுகளை வாங்கி மானிய விலையில் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2758, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் கிராமத்தில் ஆடுகள் அதிகம் உள்ளதால் புதிய துணை கால்நடை மருந்தகம் அமைக்கும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4072, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நல்ல அயல்நாட்டு கலப்பின கால்நடைக் கன்றுகள் இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,00/-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3123, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to open more veterinary dispensaries in the rural areas", I move—

"That the sum of Rs.175,87,34,000/- allocated under Demand No.22—Animal Husbandry be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3754, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2422, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2725, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதி, புளியம்பட்டியில் கால்நடை மருத்துவமனை ஒன்றைத் தொடங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3649, டாக்டர் தே. குமாரதாஸ்.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெளிநாடுகளிலிருந்து முட்டைகள் இறக்குமதி செய்வதால் நம் நாட்டில் கோழி வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.175,87,34,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2353, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

## (இ) கோரிக்கை எண் 21—மீனளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 21—மீனளம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.49,82,91,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

---

@ 161 முதல் 206 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1687, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3161, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1395, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1788, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1590, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3403, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி மீனவர்களுக்கு அரசு சார்பில் மீன் வலை, மானியத்தில் வழங்கும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4199, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் சிறு குளம் மற்றும் ஏரிகளை ஆழப்படுத்தி மீன் வளர்க்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2761, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4067, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கடலோரப் பகுதிகளில் வாழும் அனைத்து மீனவர்களுக்கும் இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை விரிவுபடுத்துவது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3126, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to supply deep sea fishing boats to fishermen in Tamil Nadu", I move—

"That the sum of Rs.49,82,91,000/- allocated under Demand No.21—Fisheries be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3769, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2840, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.



**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2472, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இடிந்தகரை மீனவ மக்களுக்கு விஜயாபதி வருவாய் கிராமம் சர்வே எண் 471/1-ல் 100 வீடுகள் கட்டவும், சர்வே எண் 320-ல் 25 வீடுகள் கட்டவும், துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 753, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் மீன் பதனிடும் தொழிற்சாலை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,82,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர் இன்று பேச இருக்கின்றார்கள். காலத்தின் அருமை கருதி, பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். முதலிலே டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மானியங்கள் மீதான கோரிக்கைகளில், முதலாவதாக நான் மீன் வளத் துறையின்மீது சில கருத்துகளைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன். அதற்காக எனக்குப் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்த தமிழ் மாநில காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவருக்கு முதலில் என்னுடைய நன்றியினைச் சொல்லி, சில கருத்துகளை உங்கள் முன்னால் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1000 கிலோமீட்டர் நீளமுடைய நமது தமிழகத்தினுடைய கடற்கரைப் பகுதியில் உற்பத்தியாகின்ற மீன்கள், இந்தியாவில் உற்பத்தியாகின்ற மொத்த மீன்களில் 15 விழுக்காடு ஆகும் என்று ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். அதேபோன்று நாட்டினுடைய மொத்த கடற்பொருள் ஏற்றுமதியில் ஏறக்குறைய 25% தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் உங்களுடைய புள்ளிவிவரக் கணக்கில் கூறியிருக்கின்றீர்கள். அதேபோல் 556 கடல் மீன்பிடி கிராமங்கள் இருப்பதாகவும், 6.70 இலட்சம் கடல் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு இருப்பதாகவும், 2.62 இலட்சம் மீன்பிடித் தொழிலாளர்கள் முழு நேர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 10,000 மீன்பிடி விசைப் படகுகள், 43,000 கட்டுமரங்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு அம்சங்களை நீங்கள்

@ 207 முதல் 233 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



சொல்லியிருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை என்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது.

அடுத்து 1999-2000 ஆண்டில் இலங்கைக் கடற்படை மற்றும் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள் மூலம் 181 மீனவர்கள் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகவும், 9 படகுகளை மீட்டு வந்திருப்பதாகவும் இன்னொரு புள்ளிவிவரத்தில் கூறியிருக்கிறீர்கள். ஓராண்டில் இவ்வளவு கொடுமைகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அது ஏற்புடையது அல்ல. ஆக அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு வழங்குகின்ற முகத்தான், அரசு ஏதாவது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறதா? நமது மீனவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு அளிப்பதற்கான திட்டங்கள், வழிமுறைகள் ஏதேனும் வகுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

கிட்டத்தட்ட ரூ.50 கோடிக்கு மீன் வளத் துறைக்காக பட்ஜெட்டைப் போட்டிருக்கிற நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் நான் தெரிவிக்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் 25,000 முதல் 50,000 மக்கள் மீன் பிடிக்கிற தொழிலிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். கடல் கொந்தளிப்பிலிருந்து, இயற்கைச் சீற்றங்களிலிருந்து ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான வீடுகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையைக் கருத்திலேகொண்டு அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பதற்கு வசதியாகவும் அதே நேரத்தில் இயற்கைச் சீற்றங்களிலிருந்து அந்தக் கிராமங்களைப் பாதுகாத்துக்கொள்கின்ற முகத்தானும் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்று வெகுகாலமாக கோரிக்கை இருந்தபோதும் பல ஆண்டுகளாகவே இந்தச் சட்டமன்றத்திலே தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்ற பதில், அதை அதைப்பற்றிப் நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம், படித்துக்கொண்டிருக்கிறோம் என்பதுதானே தவிர உண்மையிலேயே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பக்குவமும் மனப்பான்மையும் இல்லை என்றே நான் கருதுகிறேன். எனவே அரசு அதிலே தனிக் கவனம் செலுத்தி இயற்கைச் சீற்றத்திலிருந்து அந்த கிராம மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-45

அடுத்து, பாகிஸ்தான் சிறையிலே இருக்கின்ற மீனவர்களைப் பற்றி நான் அன்றைக்குக் குறிப்பிடுகிறபோது நாங்கள் விரைவான நடவடிக்கை

எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆனால் அவர்களை மீட்டு வருவதற்கு இன்னும் காலதாமதம் ஆகும் என்கிற பட்சத்தில் அந்த 19 குடும்பங்களைச் சார்ந்தவர்களை தங்களுடைய குடும்பத் தலைவனை அல்லது குடும்பத்தைச் சார்ந்தவர்களை இழந்து தவிக்கின்றவர்களை— இங்கிருந்து குழுக்கள் சென்று பார்க்கின்றபோது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து ஆறுதல் கூறுகின்றார்கள். நமது மாநிலத்தில் உள்ள உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவும் முடிந்தால் எல்லா கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களில் ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்து ஒரு குழுவாகச் சென்று பாகிஸ்தான் சிறையிலே இருப்பவர்களைப் பார்த்து அவர்களுக்கு ஆறுதல் கூறிவருகின்ற முகத்தான் குறைந்தபட்சம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு அதுகுறித்து நீங்கள் அறிவிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இங்கிருந்து போகின்றவர்களையும் பிடித்து வைத்துக்கொண்டால் என்ன செய்வது?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதனால்தான் அரசின் மூலமாகப் போக வேண்டும் என்று சொல்கிறேன். எனவே நீங்கள் அதைக் கருத்திலே கொள்ள வேண்டும். அதேபோல நான் அன்றைக்குக் குறிப்பிட்டதைப்போல செஞ்சிலுவைச் சங்கம் மூலமோ அல்லது ஐ.நா. சபை மூலமோ அவர்களை விடுவிப்பதற்கான தீவிர முயற்சிகளை நீங்கள் மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என்று மிகவும் அன்புடன் உங்களை வற்புறுத்திக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக மீன்கள் கிடைக்கின்ற காரணத்தினாலே மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

பழவேற்காட்டைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில் கிட்டத்தட்ட 20 கிராமங்களில் 10,000-க்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டு வருவதாகச் சொல்கிறார்கள். பழவேற்காடு பகுதியிலே அனல் மின்சார நிலையம் அமைப்பதன் காரணமாகவும், அங்கே துறைமுகம் அமைப்பதன் காரணமாகவும் மீன்பிடித் தொழில் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையைக் கருத்திலேகொண்டு அனல் மின்சார நிலையத்திலோ அல்லது துறைமுகத்திலோ அந்த மீனவர்களுக்குப் பணி கிடைக்கின்ற விதத்திலே 10,000 மீனவர்களுடைய வாழ்க்கையைக் கருத்திலேகொண்டு அவர்களை அந்தப் பணியிலே அமர்த்த முன்னுரிமை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, ஆர்.கே. நகரிலே வ.உ.சி. மன்றம் என்ற ஒரு மன்றம் தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்திலே இயங்கி வந்தது. ஆனால் இப்போது அந்த இடத்தை தனியார் ஆக்கிரமித்து அந்த மன்றத்தை இடித்து, அதிலே தனியார் கட்டடங்களைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். நீதிமன்றமும் உத்தரவு போட்டிருக்கிறது, அது வ.உ.சி. மன்றத்தைச் சேர்ந்தது; அதைத்தான் செயல்படுத்த வேண்டும் என்று. ஆனால் நீதிமன்றம் சொன்னாலும் கேட்க மாட்டேன், பொதுமக்கள் சொன்னாலும் கேட்க மாட்டேன், அரசு ஆணையிட்டாலும் கேட்க மாட்டேன் என்று தான்தோன்றித்தனமாகத் தனியார் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற மன்றஇடத்தை வ.உ.சி. மன்ற நிர்வாகத்தினிடமே ஒப்படைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. மத்திய அரசும் மாநில அரசும் கொள்கைப் பிரகடனம் ஒன்றைச் செய்திருக்கின்றன. ஒரு படகிற்கு 60,000 லிட்டர் டீசல் வழங்கப்பட வேண்டும் என்றும் ஒரு லிட்டருக்குக் குறைந்தபட்சம் 45 காசு மானியமாக வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் கடந்த ஆண்டு 1999-2000-லே கொடுக்கப்பட்டிருக்கின்ற மானியம் ஒரு படகிற்கு, வெறும் 13,500 ரூபாய். ஒரு படகு என்று சொல்கின்றபோது, 60,000 லிட்டருக்கு கிட்டத்தட்ட 27,000 ரூபாய் வருகிறது. ஆனால் மிகச் சரியாக பாதிதான் வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, முழுத் தொகையும் வழங்கப்படவில்லை. எனவே, உங்களுடைய கொள்கையை நீங்கள் அறிவித்துவிட்டு, அது செயல்படுத்தப்படாமல் இருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது. ஆகவே இந்த மானியத் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த மீனவர்கள் இப்போது ஏமாற்றம் அடைந்திருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசு 80 சதவிகித மானியமும் மாநில •சர்க்கார் 20 சதவிகித மானியமும் வழங்குவதாக அறிகிறேன். ஆக அதை முழுமையாக நீங்கள் வழங்கிட வேண்டும். இருக்கிற தொகை ஒரு கோடி ரூபாய் என்றும் அதை பங்கு வைத்துக் கொடுத்தோம் என்றும் சொன்னால் அது ஏற்புடையது அல்ல. எனவே அறிவித்தபடி யார் யாருக்கு எவ்வளவு வருகிறதோ அதை வழங்குவதற்கு இந்த அரசு முன்வரவேண்டுமென்று நான் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

அடுத்து கால்நடைத் துறையைப் பொறுத்தவரைக்கும் சில கருத்துகளை நான் உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கால்நடைத் துறை மருத்துவர்கள் அமைந்தகரைப் பகுதியிலே உள்ள அண்ணா Arch பக்கத்திலே ஒரு போராட்டத்தை நடத்துகிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கக் கூடாது. கடந்த ஆண்டுவரைக்கும் எந்த இலாகாவைச் சேர்ந்தவர்களானாலும் போராட்டம் நடத்துவது என்று சொன்னால் நம்முடைய Guest House பகுதியிலே போராட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். ஆனால் இந்த முறை சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகிற காரணத்தால் வள்ளுவர் கோட்டம், அமைந்தகரைப் பகுதிகளிலேதான் போராட்டம் நடத்த வேண்டுமென்றும் மற்ற பகுதிகளிலே அனுமதி தர மாட்டோம் என்றும் சொல்லி காவல் துறையினுடைய கெடுபிடி மிகக் கடுமையாக இருக்கிறது.

நேற்றைக்கு கால்நடைத் துறையைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள், போராட்டம் நடத்துகிறபோது, அவர்களுடைய வீட்டின் அருகிலேயே அவர்களைக் கைது செய்து, வெளியிலே போராட்டத்திற்கு வந்த உடனேயே கைது செய்து, அவர்கள் எந்த வீட்டிலே தங்கியிருந்தார்களோ அங்கேயே மாலைவரை வைத்துவிட்டு மாலையிலே வீட்டிற்குப் போங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த ஜனநாயக நாட்டிலே தங்களுடைய உரிமையை நிலைநிறுத்துவதற்குப் போராட்டங்கள்கூட நடத்த முடியாத அளவிற்கு அப்படி என்ன கொடுமை நடந்துவிட்டது என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

அதுமாத்திரம் அல்ல. தமிழகம் முழுவதிலுமிருந்து வருகிற பட்டதாரி ஆசிரியர்கள், கரும்பு விவசாயிகள் மற்றும் பல்வேறு தரப்பினர்களுக்கு அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் அனுமதி கொடுப்பதும் கிடையாது. முதலாவதாக, சரி போராடுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். போராட்டத்திற்கு வந்ததற்குப் பிறகு உங்களுக்கு இந்தப் பகுதி ஒதுக்கப்படவில்லை, நீங்கள் அண்ணா Arch பக்கம் போங்கள்; வள்ளுவர் கோட்டத்திற்குப் போங்கள் என்று சொல்லி அலைக்கழிக்கிறார்கள். வெளியூரிலிருந்து வருகிறவர்களுக்கு சென்னை மாநகரம் முழுவதும் தெரிந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

அது மாத்திரம் அல்ல. நாளைக்குப் போராட்டம் என்று சொன்னால் இன்றைக்கு மாலையிலே சொல்கிறார்கள் உங்களுக்குப் போராட அனுமதி இரத்து செய்யப்படுகிறது என்று இவர்கள் போராடுவதற்கு ஒரு மாதம், ஒன்றரை மாதங்கள் முன்னதாகவே தேதி கேட்டும் அந்தக் குறிப்பிட்ட



காலவரையறைக்குள்ளாக அந்தத் தேதியைக் குறிப்பாக காவல் துறை அறிவிக்காத நிலை உள்ளது. வேண்டுமென்றே ஜனநாயகப் படுகொலையை காவல் துறை இப்பொழுது செய்து கொண்டிருக்கிறதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இவையெல்லாம் தெரியுமா? தெரிந்தும் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே நேற்றைக்கு பட்டதாரி கால்நடை மருத்துவர்கள் ஒரு நியாயமான கோரிக்கையை முன்வைத்துப் போராட்டம் நடத்தினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வள்ளுவர் கோட்டத்திலே 1998-லே நடைபெற்ற ஒரு கூட்டத்திலே மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கிட வேண்டுமென்ற கோரிக்கையைப் பற்றிச் சொல்கிறபோது, உங்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும், இது இப்போது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது மறுக்கப்படவில்லை என்று அன்றையதினம் சொன்னீர்கள். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம், என்று சொல்கிற அரசு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு நீங்கள் சொன்ன உத்தரவாதத்தின் அடிப்படையிலே மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான அடிப்படை ஊதியமாக 8,000 ரூபாய் வழங்குவதற்கு இந்தக் கூட்டத் தொடரிலேயே ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக மெத்தப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கால்நடைத் துறை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இதுவரைக்கும் மருந்து கொள்முதல் தனித் தனியாகச் செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது கால்நடைகளுக்காகக் கொள்முதல் செய்யக்கூடிய மருந்துகளையும், மனிதர்களுக்காகக் கொள்முதல் செய்யப்படுகிற மருந்தோடு இணைத்து கொள்முதல் செய்வதாக ஒரு கொள்கையை நீங்கள் அறிவித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இவ்வாறு செய்வதால் இரண்டும் கலந்து அதனால் பின்விளைவுகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எந்தவொரு காலத்திலும் ஏற்படுவதற்கான வாய்ப்பும் வசதியும் உண்டு. எனவே இரண்டு துறைகளுக்கும் மருந்துகளை தனித் தனியாக, இதற்கு முன்பு வாங்கியதுபோல வாங்குவது சிறப்பாக இருக்கும். அது மாத்திரம் அல்ல. சிறியசிறிய அலகுகளில் நிறைய மருந்துகளைச் செய்து வருவதாகச் சொல்கிறார்கள். அப்படி ஒட்டுமொத்தமாக நீங்கள் வாங்குகிறபோது . . .

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரேயடியாகக் கடைசியிலே பதில் சொல்லுங்கள். திரு. குமாரதாஸ், நீங்கள் பேசுங்கள். நீங்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சரி. ஒட்டுமொத்தமாக வாங்குகிறபோது அதிலே சிறிய சிறிய அலகுகளை Small Scale Industries-லே ஆரம்பித்து மருத்துவத் தொழில் செய்து வருகிறவர்கள் நசுக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என அந்தச் சிறு முதலீட்டாளர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். எனவே அரசு இவ்வளவு காலமும் வாங்கி வந்த தரமான மருந்துகளை சிறு முதலாளிகளிடமிருந்து வாங்குவதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்திற்கென்று பல நல்ல திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்திலே அவற்றிலே 19 வகையான வியாதிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய I.V.P.M. என்று இராணிப்பேட்டையிலே இயங்கி வருகின்ற மருத்துவ ஆய்வகத்தினுடைய விரிவாக்கத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இப்பொழுது எல்லாக் கால்நடைகளுக்கும் தரமான மருந்துகளை வழங்க வேண்டுமென்று சொன்னால்- பல கோடி ரூபாய்க்கான மருந்துகள், vaccines அங்கே உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. - அதை விரிவுபடுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-55

அடுத்து கோழி வளர்ப்புத் துறையைப் பற்றிச் சொல்கிறபோது, கோழி வளர்ப்பு இப்போது ஒரு தொழிலாக மாறியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். TAPCO என்பது நமது முதலமைச்சர் அவர்கள் 1973 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட ஒரு பொது நிறுவனம். இப்போது அதை மூடுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பது மிக வேதனைக்குரிய செய்தியாக இருக்கிறது. எனவே அதிலேகூட தரக் கட்டுப்பாடு, குஞ்சு தரக் கட்டுப்பாடு, குஞ்சு பொறிப்பு தரக் கட்டுப்பாடு, முட்டை, கோழி தரக் கட்டுப்பாடு என பல்வேறு பிரிவுகள் இருக்கிற காரணத்தினாலே, இதிலே பணியாற்றி வருகிற தொழிலாளர்களை நீங்கள் வீட்டுக்கு அனுப்பாமல் அவர்களை கால்நடைத் துறையிலோ அல்லது சத்துணவுப் பிரிவிலே முட்டைகளை எல்லாம் தரக் கட்டுப்பாடு செய்வதற்குத் தேவைப்படுகிற காரணத்தினாலே அதிலேயே பணிமாற்றம் செய்து அவர்கள் அனைவரையும் பணியிலே அமர்த்துவதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எனவே



TAPCO நிறுவனத்தை மூடுவதாக ஒரு பரவலான செய்தி இருந்து கொண்டிருக்கிறது. நீங்கள் உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட ஒரு வரியைப் போட்டு அதை மூடிவிடுவதுபோல ஒரு பாவனையை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். இருக்கிற ஒரு ஸ்தாபனத்தை மூடக்கூடாது என்பது நமது அரசினுடைய கொள்கை. எனவே TAPCO நிறுவனம் இப்போது நல்ல முறையிலே செயல்பட்டு வருகிற காரணத்தினால் அதை மூடிவிடக்கூடாது என்ற வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

அதேபோல கால்நடைத் துறையிலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு இணை இயக்குநர் நியமிப்பதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். அதை நிறைவேற்றித் தந்திட வேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** முடித்துவிடுகிறேன். கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், இப்போது ஒரு மிகப் பெரிய பிரச்சினை பூதாகரமாக வந்திருக்கிறது. இப்போது படித்துப் பட்டம் பெற்ற கால்நடை மருத்துவர்கள் சுமார் 1200 பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளாக Livestock Assistants Course-ஐ நிறுத்தி வைத்திருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு 250 பேரை மீண்டும் எடுக்கிறீர்கள். என்னுடைய வேண்டுகோள், ஏற்கெனவே படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கிற 1250 கால்நடை உதவி மருத்துவர்களை அந்த இடங்களில் தொகுப்பூதியமாகக் கொடுத்து பணியிலே அமர்த்தியிருக்கலாம். அவர்கள் படித்து முடித்து வருகிறபோது கிட்டத்தட்ட 6000 முதல் 7000 ரூபாய்வரை சம்பளம் வாங்குகிற சாத்தியக்கூறு ஏற்படுகிறது. எனவே கால்நடை மருத்துவர்களில் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு அந்தப் பணியினைக் கொடுத்திருந்தால், அவர்களுக்கு 5000, 7000 என்று இதே தொகையைக் கொடுத்திருந்தால் அவர்கள் தொகுப்பூதியம் பெற்று தங்கள் பணியைச் செய்திருக்கலாம். மாறாக, இப்போது 250 பேரை நீங்கள் தேர்வு செய்து 9 மாத கால பயிற்சி கொடுப்பதற்கு அவர்களை அனுப்பியிருக்கிறீர்கள். அதிலே மிகப் பெரிய ஊழல் நடந்திருப்பதாகச் சொல்கிறார்கள். என்ன என்று சொன்னால் எந்தவிதமான வரையறையும் நிர்ணயிக்கப்படவில்லை. Employment Exchange-லிருந்து call for செய்து அதன்மூலம் 125 பேரும் பிற இலாகாக்களிலிருந்து 125 பேரும் என எடுத்திருக்கிறீர்கள். இன்னின்ன

தகுதி உடையவர்கள்தான் அதற்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்ற .Merit basis இல்லை. குறைந்தபட்சக் கல்வி இவ்வளவு இருக்க வேண்டும் என்ற தகுதியில்லை. இப்படியெல்லாம் இல்லாமல் நான் கேட்கிற செய்தி உண்மையாக இருக்கும் என்று சொன்னால் நபர் ஒருவருக்கு 3 இலட்சம் ரூபாய்—யார் வாங்கினார்கள் என்று தெரியாது—எனப் பெற்றுக் கொண்டுதான் இந்தப் பயிற்சிக்கு 250 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் கால்நடை ஆய்வாளர் பயிற்சியிலே ஒவ்வொருவருக்கும் 3 இலட்சம் ரூபாய் பெறப்பட்டதாகச் சொல்கிறார்கள். நியாயமில்லாத ஒரு குற்றச்சாட்டு. கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு கால்நடைத் துறையில் தினக்கூலிப் பணியாளர்களாக இருந்து நிரந்தரம் செய்யப்பட்டவர்களில் கல்வித் தகுதி பத்தாவது தேர்ச்சியின் அடிப்படையிலே 125 பேர் தேர்வு செய்யப்படுகிறார்கள். 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் பணி மூப்பு அடிப்படையிலே கல்வித் தகுதி அடிப்படையிலே. அது அல்லாமல் 125 பேர். அதிலே முன்னாள் இராணுவத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்கப்பட்டு, மீதி 106 பேர் வேலைவாய்ப்புத் துறை மூலம் தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள். அதற்கும் 12 ஆம் வகுப்பு கல்வித் தகுதி, மற்ற ஏனைய தகுதிகள் எல்லாம் உண்டு. இந்த நிலையிலே தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளபோது எங்கே ஊழல் நடைபெற்றது? 3 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆதாரத்தோடு குறிப்பிட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஆதாரமில்லாமல் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரைப் பற்றியும் தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை. இந்த மாதிரி ஒரு தகவல் இருக்கிறது, கேள்விப்படுகிறேன் என்று சொன்னார். அதனால் நீங்கள் கொடுத்த விளக்கத்தோடு போதும். அடுத்து திரு. இரா. மதிவாணன். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ், நீங்கள் முடித்துவிட்டீர்கள். நான் உங்களுக்கு 10 நிமிடங்கள் கொடுத்தேன். நீங்கள் 15 நிமிடங்களுக்கு மேலே பேசிக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன் என்றால் என்ன அர்த்தம்? திரு. இரா. மதிவாணன், (குறுக்கீடு) நான் பேசுகிறேன். திரு. மதிவாணன் என்று சொல்லுகிறேன். அதற்கு மேலே நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். நான்தான்



சொல்கிறேனே, 9.42-க்கு நீங்கள் பேச ஆரம்பித்தீர்கள். இப்போது மணி எவ்வளவு என்று பாருங்கள். நான் ஏதாவது உங்களுக்கு மறுத்திருக்கிறேனா? எல்லோருக்கும் 10 நிமிடம் என்றால், நீங்கள் 17 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். திரு. இரா. மதிவாணன்.

முற்பகல் 10-00

***திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தாண்டில் 1-1-2000 அன்று முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியிலே அய்யன் வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து இந்த ஆண்டில் மீனவர்களுக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மீனவ மக்களின் சார்பிலே மனதாரப் பாராட்டி, மீன் வள மானியக் கோரிக்கையில் சில கருத்துகளை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் தலைமை)*

தமிழக கடற்கரைப் பகுதியான பழவேற்காடு, கூனங்குப்பம் முதல் கன்னியாகுமரி வரை கிட்டத்தட்ட ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையில்- 556 கிராமங்களைக் கொண்ட மீனவர்கள் வாழ்கின்ற பகுதியில் சுமார் 6.70 இலட்சம் மீனவர்கள் உள்ளனர். தற்போது சுமார் 10 ஆயிரம் மீனவர்கள் சிறு விசைப் படகுகளிலும் மற்றும் சுமார் 43 ஆயிரம் மீனவர்கள் படகுகளிலும் மற்றும் கட்டுமரங்களிலும் சென்று கடலில் மீன்பிடித் தொழிலைச் செய்து வருகின்றனர். அவர்களுக்குத் தொடர்ந்து நல்ல திட்டங்களை அறிவித்து அவற்றை நிறைவேற்றி வருகின்ற நம்முடைய கழக அரசை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாண்புமிகு இந்தத் துறையின் அமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்.

நம்முடைய அரசு சொன்னதைச் செய்கின்ற ஓர் அரசாகத் திகழ்கின்றது. 1996 ஆம் ஆண்டு நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்தபோது சிங்காரவேலர் நினைவு வீடு கட்டும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆண்டிற்கு 4 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்லி, 5 ஆண்டுகளில் 20 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளில் 14 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள 6 ஆயிரம் வீடுகள் இந்த ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்று

அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, மீனவர்களின் பாதுகாவலர் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களையும் மீனவ மக்களின் சார்பிலே மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களைப் பாதுகாக்க கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின் கொள்கைக் குறிப்பிலே மீனவர்களுக்கு 5 அதிவேக விசைப் படகுகள் வழங்குவதாக அறிவித்தார்கள். 4.50 இலட்சம் ரூபாய் செலவிலே அந்தப் படகுகளை இந்த நடப்பாண்டிலே கட்டி முடித்து, நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் ஐந்தமிழறிஞர் அவர்கள் அந்த 5 படகுகளுக்கும் முத்தான பெயர்களைச் சூட்டி அந்தப் படகுகளை 5 மாவட்டங்களுக்கு வழங்கி, அந்தப் படகுகளும் மீனவர்களைப் பாதுகாக்கும் பணியிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து புதிதாக மீன் அங்காடி கட்டும் திட்டத்தை நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்திலே முதல் கட்டமாக 10 மீன் அங்காடிகளும், மீன் இறக்கும் தளங்களும், நல்ல வசதியுடன் கட்டித் தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய இராயபுரம் தொகுதியிலே சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 1,200 விசைப் படகுகளும், வடசென்னை ஐக்கிய பஞ்சாயத்து சபையின் சுமார் 5 ஆயிரம் கட்டுமர மீனவர்களும் மீன்பிடித் தொழில் செய்து வருகின்ற அளவிற்கு இராயபுரம் பகுதியிலே மீன்பிடித் தளம் உள்ளது. அந்தப் பகுதியிலே இன்னும் சுகாதார முறையிலே மீன் தளமும், மீன் market-ம் கட்டித் தர மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டு மீனவர்களின் பல ஆண்டு கால கோரிக்கையை ஏற்று, ஏழை எளிய மீனவர்களுக்கு இந்த ஆண்டில் கிட்டத்தட்ட ஒரு வீடு 32 ஆயிரம் ரூபாய் செலவிலே ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே உள்நாட்டு மீனவ மக்களின் சார்பிலே எனது நன்றியை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தரப்படும் என்று அறிவித்தார்கள். அதனை என்னுடைய தொகுதியான இராயபுரம் தொகுதி மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். குறிப்பாக, மீனவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் வாழ்கின்ற பகுதிகளில் அதிலும் குறிப்பாகச் சொல்லப்போனால், சிங்காரவேலர் நகர், ஜி.எம். பேட்டையில் இரண்டு



பகுதிகள், விநாயகபுரம், Y.M.C.A. குப்பம், மாடல் நகர், ஆஞ்சநேய நகர், பனமரத்தொட்டி போன்ற இடங்களில் அதிக குடிசைகள் உள்ளன. இந்த ஆண்டு நம்முடைய குடிசைமாற்று வாரியத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுக்கு அதிக அளவிலே கல்நார் வீடுகளைக் கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

இராயபுரம் பகுதியிலே கடந்த காலத்திலே போக்குவரத்து வசதியில்லாத அந்த இடத்திலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இராயபுரம் மேம்பாலத் திட்டத்தைக் கொண்டுவந்து அதைக் கட்டிமுடித்து, இந்த ஆண்டு திறந்து வைத்ததன் காரணமாக, பொதுவாக அனைத்துத்தரப்பு மக்களும் நமது முதல்வர் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றார்கள் என்பதை நான் இந்த அவையில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதேபோன்று, சென்னை - எண்ணூர் - திருவொற்றியூர் நெடுஞ்சாலை. குறிப்பாக வடசென்னைப் பகுதி பெரும் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பகுதியாகும். அடிக்கடி கடல் அரிப்பு ஏற்பட்டு பெரும் துன்பத்திற்கு உள்ளாகும் பகுதி அது. அதற்காக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக, நெதர்லாந்து நாட்டுக்கு ஒரு குழு சென்று அங்கே உள்ளவர்களுடன் இதைப்பற்றிப் பரிசீலித்து, வருகின்ற ஆண்டிலே அந்த நாட்டு உதவியோடு நிரந்தரமாக அங்கே கடல் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீனவ மக்கள் சார்பிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆந்திர கடல் பகுதியிலே தமிழ்நாட்டு மீனவர்கள் சென்று, கடலிலே தொழில் செய்தால் - கடல் கொள்ளை என்று சொல்வார்கள் - அதுபோன்று வேண்டுமென்றே தொடர்ந்து நமது மீனவர்களுக்கு எதிராக அங்கே பிரச்சினை நடந்துகொண்டு வருகிறது. கடல் சட்டத்திற்குட்பட்டு நடுக்கடலுக்கு அப்பால் மீன் பிடித்துக்கொண்டிருக்கிற தமிழக மீனவர்களை ஆந்திர மீனவர்கள் பிடித்துச் சென்று கிட்டத்தட்ட 10 அல்லது 15 படகுகளைப் பிடித்துச் சென்று, ஆட்களையும் அடித்து, மீன்களையும், விறால்களையும் எடுத்துக்கொண்டு, ஒரு படகிற்கு 10,000 ரூபாய், 15,000 ரூபாய் வீதம் அபராதம் விதித்து, அங்கே கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே நமது கழக அரசு, ஆந்திர அரசின் மீன் வளத் துறை மற்றும் காவல் துறையுடன் கலந்து பேசி, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடற்கரைப் பகுதியிலே உள்ள நெற்குன்றத்தில் வெளிமாநிலத்திலிருந்து லாரி மூலமாக மீன்களைக் கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். அதனால் இங்கே கடலில் பிடிக்கும் மீன்கள் விலை போகவில்லை. ஒரு பக்கம் டீசல் விலை ஏறிவிட்டது. மறுபக்கம் மீன்கள் விலை குறைந்துவிட்டது. ஆகவே மீனவர்கள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே நெற்குன்றத்தில் இருக்கிற வெளிமாநில மீன் விற்பனையைத் தடை செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும் நம்முடைய மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டீசல் மானியம். உங்களுக்கெல்லாம் தெரியும். என்னுடைய இராயபுரம் தொகுதியைச் சேர்ந்தவர் மீன் வளத் துறையின் அமைச்சராக இருந்தார். கடந்த ஐந்தாண்டுகளில் அவர் 157 விசைப் படகுகளுக்கு மட்டும் ரூ.12,63,201 நிவாரணம் வழங்கியிருக்கிறார். ஆனால் நம்முடைய கழக அரசில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நான்காண்டுகளில், கிட்டத்தட்ட 357 படகுகளுக்கு 42 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் 5 ஆண்டுகாலம் அமைச்சராக இருந்து 157 படகுகளுக்குத்தான் நிவாரணம் வழங்கினார்கள். நான் சாதாரண சட்டமன்ற உறுப்பினர். நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்த திட்டத்தின்படி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் உதவியோடு இப்போது கிட்டத்தட்ட 42 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். முந்தைய ஆட்சிக் காலத்தில் அத்தொகுதி உறுப்பினர் அமைச்சராக இருந்த காலத்தில் வழங்கியது 12 இலட்சம் ரூபாய். நம்முடைய காலத்தில் இந்த நான்காண்டுகளில் 42 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். தொடர்ந்து வழங்க இருக்கிறோம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நல்ல பல திட்டங்களை அறிவித்த நமது கழக அரசுக்கும், குறிப்பாக மீனவர்களின் கலங்கரை விளக்கமாக விளங்கும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக ஒன்றை மட்டும் இறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெண்கள் திருமண உதவித் திட்டம் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். கடந்த ஐந்தாண்டுகால ஆட்சியிலே பெண்களுக்கு திருமண உதவி வழங்கினார்கள், ஒரு பெண் முதலமைச்சராக இருந்து. எவ்வளவு என்றால், சுமார் 49 ஆயிரம்.



பெண்களுக்கு மட்டும் தலா ரூ.5,000 வழங்கியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய கலைஞர் ஆட்சியிலே, இந்த நான்காண்டுகளில் இராயபுரம் தொகுதியிலே மட்டும் 48 இலட்ச ரூபாய் என ஒரே ஒரு தொகுதியில் மட்டும் பெண்களுக்கு நான் நிதி உதவி பெற்றுத் தந்திருக்கிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தையும் அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் மீன் வளத் துறை அமைச்சராக இருந்தவர் செய்யமுடியாத பல நல்ல திட்டங்களை, பல தேவைகளை அந்த மீனவப் பகுதி மக்களுக்கு நம்முடைய கலைஞர் அவர்கள் அறிவித்த அந்த நல்ல திட்டங்களின் மூலம் நான் செய்திருக்கிறேன். ஆகவே தலைவர் அவர்கள் வழங்கிய அந்த நல்ல திட்டங்கள் காரணமாகவும், மேயர் அவர்கள் மாநகராட்சியில் செய்கின்ற சாதனைகள் காரணமாகவும், நான் தொகுதி மக்களுக்குச் செய்கிற நல்ல பணிகளின் காரணமாகவும், இன்று கலைஞர் அவர்களால் தொகுதியில் செல்லப் பிள்ளையாக விளங்குகிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு. கே. தங்கமணி.

***திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பால் வளம், கால்நடைப் பராமரிப்பு, மீன்வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துகளை முன்வைக்க அனுமதித்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

தமிழ்நாட்டில் பால்வளத் துறை, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியங்களாகவும், மாநில அளவில் ஒன்றியங்களின் இணையமாகவும் மூன்று அடுக்குகளாகச் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 17 .ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த 17 ஒன்றியங்களில் 16 ஒன்றியங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டதாக கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதி இருக்கக்கூடிய சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் தேர்தல் நடைபெறாமல்

தள்ளிப் போடப்பட்டு வருகிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான அசாதாரணமான சூழ்நிலைகளோ அல்லது வேறு குறிப்பிடத்தக்க காரணங்களோ எதுவும் இல்லாத நிலையில் சிவகங்கை மாவட்ட ஒன்றியத்தினுடைய தேர்தல் மட்டும் ஏன் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கக் கூட்டுறவு பால்வள அமைப்புகளைப் பொறுத்தவரையில், இன்னும் 84 அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறாத நிலையிருக்கிறது. அதற்கு நிர்வாகக் காரணம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியென்றால் நிர்வாகக் காரணம் என்ன என்பதைப் பற்றி குறிப்பிடவில்லை. அந்த நிர்வாகக் காரணத்தால் இப்போது தனி அதிகாரிகளுடைய நடவடிக்கையின் மூலமாக தொடக்க அமைப்புகளுக்கு பல்வேறு தேக்கமும் நெருக்கடியும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே அப்பேர்ப்பட்ட இடங்களிலே எல்லாம் உடனடியாகத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ்நாட்டில் பால் உற்பத்தியாளர் சங்கங்களில் 27.23 இலட்சம் உறுப்பினர்கள் இருப்பதாகக் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 16.65 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கும் பால் உற்பத்திக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களில் போலி உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே இதைத் தடுக்க வேண்டும். உண்மையான, பால் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களை மட்டும்தான் உறுப்பினர்களாக இந்தச் சங்கங்கள் அங்கீகரிக்க வேண்டுமேயொழிய போலி உறுப்பினர்களை நீக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மத்திய அரசினுடைய தாராளமயமாக்கல் கொள்கை காரணமாக அன்னிய இறக்குமதிக் கட்டுப்பாடுகளை முழுமையாக விலக்கியதன் காரணமாக, பால் பவுடர் உள்பட பால் சம்பந்தப்பட்ட அனைத்துப் பொருள்களுக்கும் இப்போது இறக்குமதி செய்ய கதவு திறந்து விடப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக பால் உற்பத்தி செய்து, தங்களுடைய வாழ்க்கையை நடத்தக்கூடிய ஆயிரக்கணக்கான கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள் வாழ்க்கையும் அதேபோல பால் பண்ணைகளில் பணி



செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்க்கையும் இப்போது மிகப்பெரிய கேள்விக்குறியாக அமைந்திருக்கிறது என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும். பாலை வைத்து வாழ்க்கை நடத்தும் ஏழைகளின் தலையில் விழக்கூடிய இந்த இடியைத் தடுத்து நிறுத்தக்கூடிய அளவில் மத்திய அரசை மாநில அரசு பால் பவுடர் இறக்குமதி கொள்கையைக் கைவிட நிர்பந்தம் செய்து, பால் பவுடரை இறக்குமதி செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆரோக்கியா, கோமாதா, கற்பகா போன்ற பால் விநியோகம் செய்யக்கூடிய தனியார் அமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலமாக தமிழ்நாட்டில் வழங்குகிற பாலில் கலப்படம் அதிகமாக இருக்கிறது. பாலை வாங்கி அதிலே அதிகமான தண்ணீரைச் சேர்த்து அதன்மூலமாக குறைந்த விலையிலே பால் இப்போது தனியார் நிறுவனங்களில் விற்கப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பொறுப்பிலே இருக்கக்கூடிய ஆவின் நிறுவனம் இதன் காரணமாக நலிவடையக்கூடிய ஓர் அபாயம் இருக்கிறது.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள்கூட சென்னையிலே விநியோகிக்கக்கூடிய பாக்கெட் குடிநீரில் இப்போது கலப்படம் அதிகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் மூலமாக நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தண்ணீர்தான் பாலில் கலக்கப்படுகிறது என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும். அந்தப் பாலை இலட்சக்கணக்கான குழந்தைகளுக்குக் கொடுப்பதன் மூலம் ஏராளமான குழந்தைகளுக்கு நோய்கள் ஏற்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே தனியார் பால் அமைப்புகளைத் தடை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

அடுத்து அரசு ஊழியர்களைப் போல, பால் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கையை நம்முடைய மாநில அரசு மேற்கொள்வதோடு, பால்பண்ணை அமைப்பின் ஊழியர்கள் பற்றாக்குறையை ஈடுசெய்ய புதிதாகப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் ஒன்றியத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட 84 ஊழியர்கள், கடந்த 10 ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரந்தரமில்லாத தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். எனவே தினக்கூலியாக வேலை செய்யக்கூடிய அனைத்து தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இப்போது தனியார் பால் விநியோகம் செய்யும் நிலையங்கள் நகரங்களிலே ஏராளமாக இருக்கின்றன. இதைத் தடுக்க ஆவின் மூலமாக சென்னையிலும் மற்றும் பெருநகரங்களிலும் ஆவின் பாலகங்களைத் திறந்து அதிகமாக பால் விற்பனை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மாவட்ட அளவிலான கூட்டுறவு ஒன்றியங்கள் பால் கொள்முதல் செய்துகொண்டு, கிராமத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குப் பணத்தை குறித்த காலத்தில் பட்டுவாடா செய்யாமல் இருக்கக்கூடிய ஒரு தாமதமான சூழ்நிலை இருக்கிறது. இதையும் கவனத்தில் கொண்டு வாரத்திற்கு ஒரு முறை பணத்தை பட்டுவாடா செய்யக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம், எங்கள் மன்னார்குடி மற்றும் எடமேலையூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு மூன்று மாத காலமாக சுமார் 50 இலட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது. மாநிலம் முழுவதும் உள்ள இப்படிப்பட்ட நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு இந்தக் குறையைப் போக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கால்நடைத் துறையில் இப்போது கால்நடை மருத்துவர்கள் இல்லாமல் ஏராளமான காலி இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய சிவகங்கை மாவட்டத்தில்கூட கால்நடை மருத்துவமனைகளில் 27 மருத்துவர்கள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. கால்நடைப் பாதுகாப்பு முகாம்களை அரசு நடத்துகிறது. ஆனால் போதுமான அளவு கால்நடை மருத்துவர்கள் இல்லாத காரணத்தால், மிகப் பெரிய அளவுக்கு, எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு, அந்தத் திட்டம் பலனைத் தரவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் கால்நடை மருத்துவர்கள் கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள்; அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போராடக்கூடிய ஊழியர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கையை நிறைவு செய்யவேண்டியதுதான் மாநில அரசினுடைய பொறுப்பாகும். எனவே அந்த முறையிலே போராடக்கூடிய ஊழியர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



ஆந்திரா, கேரளா மற்றும் மேற்கு வங்கத்தில் இருப்பதைப் போல, கால்நடை - மிருக வதைத் தடுப்புக் காவலர்கள் தமிழ்நாட்டில் சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். இக்காவலர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அதேபோல அந்த அமைப்புக்குச் சொந்தமான நூறு கோடி ரூபாய் சொத்துக்களை அரசே எடுத்துக்கொண்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் இப்போது தமிழ்நாட்டில் கால்நடை மருத்துவர் பணியிடங்கள் ஏராளமாக காலியாக இருக்கின்றன. அரசு இதை கவனத்தில் கொண்டு, காலியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட கால்நடைப் பார்வை நிலையங்களில்கூட இப்போது கால்நடை மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் அவை கேட்பாரற்று கிடக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. இவற்றை கவனத்தில் கொண்டு மருத்துவர்களை தேவையான அளவு நிரப்ப வேண்டும்.

மன்னார்குடி நகரில் 68 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்தி, பெரிய மருத்துவமனையாக ஆக்கிட இவ்வாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மீனளத் துறையைப் பற்றிச் சொல்கிறபோது, இன்று எனக்கு முன்னால் பேசிய த.மா.கா. உறுப்பினர் சொன்னது போல, பாகிஸ்தான் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க மாநில அரசு முயற்சிகளை எடுத்து வருவதாக மரியாதைக்குரிய மீனளத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். அதில் இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கையின் முன்னேற்றம் என்ன என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். உடனடியாக அவர்களை விடுவித்து தமிழகத்திற்குக் கொண்டுவருவதோடு, பாதிக்கப்பட்டிருக்கின்ற, கைது செய்யப்பட்டு சிறையில் வாடக்கூடியவர்களின் குடும்பங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணத்தால், சிறையில் இருக்கிறவர்கள் திரும்பி வருகிறவரை அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவியை மாநில அரசு அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

அடுத்து பழவேற்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள சுமார் 5 ஆயிரம் மீனவர்கள் தொழில் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். எண்ணூர் அனல் மின் நிலையம் மற்றும் நவீன துறைமுகம் அமைப்புப் பணிகளால் கடல் நீர் சூழல் மாசுபட்டு, மீனவர்கள் வேலைவாய்ப்பு இல்லாத நிலைக்கு ஆளாகியுள்ளனர். இந்தத் தொழிலை நம்பியுள்ள சுமார் 40 ஆயிரம் பொதுமக்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய அளவில் அரசு துரிதமான நடவடிக்கை எடுத்து, அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)*

சில தினங்களுக்கு முன்னால், இந்த மாமன்றத்திலே எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மாண்புமிகு சிவபுண்ணியம் அவர்கள் பேசினார்கள். கச்சத் தீவு பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்களை இலங்கைக்குப் பிடித்துச் சென்று, அங்கே ஒருவர் இறந்துவிட்டதாகவும், அதுசம்பந்தமாக மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதைப் பற்றி கேட்டார்கள். ஆனால் இதுவரை அதுசம்பந்தமான முழுமையான விவரம் தெரிவிக்கப்படவில்லை. எனவே அதுசம்பந்தமாகவும் இந்த அவைக்கு விவரம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளம், கால்நடைத் துறை மற்றும் மீன் வளத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு அளித்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்*

*முயற்சி திருவினையாக்கும்*

என்கிற வாக்குகளுக்கிணங்க, 25 ஆண்டுகளாக இடைவிடாது முயற்சி எடுத்து, அய்யன் திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரியிலே திறந்து வைத்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு தமிழக மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.



மதுராந்தகம் ஒன்றியம், ஜானகிபுரம் என்கிற சானூர் கிராமத்திற்கு வருகை தந்து, பால் குளிரூட்டும் நிலையத்தைத் திறந்து வைத்தமைக்காக பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கங்களில் எடுக்கக்கூடிய பால், வாரம் முழுவதும் எடுக்கப்பட வேண்டுமென்று நான் பால் வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் பால் தருகின்றவர்களுக்குப் பட்டுவாடா செய்யக்கூடிய பணம் காலதாமதமாவதால் பாலுக்குரிய பணத்தை அவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மனிதர்களுக்கு வருமுன் காப்போம் திட்டத்தை அளித்ததைப்போல, கால்நடைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளதை வரவேற்கிறேன். மதுராந்தகம் தொகுதியிலே நீலமங்களம், பூதூர், நெல்வாய்ப்பாளையம் மற்றும் செங்காத்தூர் ஆகிய கிராமங்களில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் மிகவும் சிறப்பான முறையிலே நடைபெற்றது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தொகுதி மக்கள் அனைவரும் பாராட்டுகின்றார்கள், வரவேற்கின்றார்கள் என்பதையும் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்கள் மற்றும் கிருத்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு இதுவரை, கால்நடைகளுக்கு 3 ஆயிரம் ரூபாயாகத் தந்த மானியத்தை இந்த ஆண்டு முதல் 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்த தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுராந்தகம் தொகுதியில் 8 குப்பங்கள் உள்ளன. அதில் ஆலிக்குப்பம், கானத்தூர்குப்பம் ஆகிய குப்பங்களுக்கு தார்ச் சாலைகள் இல்லை. மீன் வளத் துறை மூலமாக, அந்தச் சாலைகளை அமைத்துத் தருமாறு நான் மீன் வளத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பரமங்கடி குப்பத்திலே வாழையடி வாழையாக வாழ்கின்ற மீனவர்களுக்கு இதுவரை வீடுகளே கட்டித் தரப்படவில்லை. ஆகவே இந்த ஆண்டு அவர்களுக்கு கண்டிப்பாக வீடுகள் கட்டித் தருவதற்கு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

அடுத்து மீன்பிடி இல்லாத காலங்களில் 1999-2000 ஆண்டில் 1,83,799 மீனவர்களுக்காக, 13 கோடியே 23 இலட்சத்து 35 ஆயிரத்து 280 ரூபாயை நிவாரணமாக வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மீனவர்களுக்குத் தருகின்ற டீசல் மானியத்தை உயர்த்தித் தருமாறு அன்புடன் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

2000-2001 ஆம் ஆண்டில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நினைவுத் திட்டத்தின்கீழ் 4000 வீடுகள் கட்டித் தருவதாக அறிவித்துள்ளார்கள். அந்தத் திட்டத்தை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

மேலும் என்னுடைய தொகுதியிலே நேற்று ஒரு தீ விபத்து நிகழ்ச்சி ஏற்பட்டது. அதுகுறித்து மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அனுமதியைப் பெற்று, நான் இங்கு அதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 17-4-2000 அன்று காலை 10 மணியளவில் மதுராந்தகம் G.S.T. சாலையிலுள்ள (1) வி. ராஜனுடைய மலபார் ஹோட்டல், (2) முத்து பங்க் கடை மற்றும் பொருட்கள், (3) வி. சுந்தரமூர்த்தியினுடைய காய்கறிக் கடை மற்றும் உணவுப் பொருட்கள், (4) ஏழுமலை மெக்கானிக் கடை மற்றும் துணிமணிகள், (5) கோமதி கபிலன் S.T.D. Booth ஆகியவை தீயில் எரிந்து முழுவதும் அழிந்து விட்டன. ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்குமாறு பணிவுடன் நான் கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பினை அளித்ததற்கு நன்றி கூறி என்னுடைய உரையினை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கால்நடை, பால்வளம், மீன் வளம் ஆகிய துறைகளின்மீது நடைபெறுகின்ற மானியக் கோரிக்கை விவாதத்திலே கலந்துகொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.

நேற்றையதினம் கால்நடை மருத்துவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி, சென்னை அண்ணா Arch-க்கு அருகில் போராட்டம் நடத்துவதற்கு அனுமதியையும் பெற்று, அவர்கள் அறவழியிலே போராட்டம் நடத்த முயற்சிக்கிறபோது, அவர்களையெல்லாம் இந்த அரசு கைது செய்து, கோரிக்கைகளை ஏற்க



மறுத்ததோடு மட்டுமல்லாமல், ஜனநாயக ரீதியிலே போராடுவதற்குக்கூட வழியில்லாமல், இரும்புக்கரம் கொண்டு அடக்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த அரசினுடைய சர்வாதிகார மனப்பான்மையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர்களையெல்லாம் இந்த அரசு கௌரவம் பார்க்காமல் அழைத்துப் பேசி, அவர்களுடைய நியாயமான பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்று தமிழகம் முழுவதும் இலவசக் கால்நடை மருத்துவ முகாம்களை இந்த அரசு புதிதாக அறிவித்திருக்கிறது. எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கிராமங்கள்தோறும் இலவச மருத்துவ முகாம் நடத்த வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்தவுடன் எங்களைப் பின்பற்றி, இந்த அரசு அதற்கு முன்னோடியாக வருமுன் காப்போம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அ.தி.மு.க. வினர் அறிவிக்கவிருந்த திட்டத்தை இந்த ஆட்சி அறிவித்தது என்று சொன்னார். எப்போது அவர்கள் அறிவித்தார்கள்? இப்படிப்பட்ட வருமுன் காப்போம் திட்டத்தையோ அல்லது வேறு திட்டத்தையோ அ.தி.மு.க. எப்போதாவது அறிவித்திருக்கிறதா? அதற்குப் பிறகு அரசாங்கம் அறிவித்ததா? அதற்கு முன்பு அரசாங்கம் அறிவித்ததா என்பதை விளக்க வேண்டும்.

*முற்பகல் 10-30*

**திரு. இரா. விசுவநாதன்:** எங்களுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கட்சியினுடைய நிர்வாகிகளை எல்லாம் அழைத்து, இதை நடத்த வேண்டுமென்று கட்சி அலுவலகத்திலே முடிவு செய்து அறிவித்தார்கள். உங்களுடைய உளவுத் துறையை வைத்து நீங்கள் அதைத் தெரிந்துகொண்டு செய்து இருக்கிறீர்கள் என்பதைத்தான் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. செயற்குழுவில் அப்படி அவர்கள் விவாதித்து அறிவித்து இருப்பார்களேயானால், பொதுவாக அது எல்லா பத்திரிகைகளிலும் வரும். இதுவரையிலே அ.தி.மு.க. செயற்குழுவில் விவாதிக்கப்பட்டு, அவர்கள் அப்படி ஒரு திட்டம் நடத்தப்போவதாக எந்தப் பத்திரிகையிலும் வரவில்லை என்பதை மட்டும் நான் தெரிவிக்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வது, கட்சி அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளை அழைத்து இந்த மாதிரி செய்ய வேண்டுமென்று எங்களுக்கு ஆலோசனை சொல்லிக் கொண்டு இருந்தார் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள். உங்களுடைய உளவுத் துறையை வைத்து அதை நீங்கள் தெரிந்துகொண்டு....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஒரு திட்டத்தை அறிவிப்பது என்று சொன்னால், திங்கட்கிழமை நினைத்து செவ்வாய்க்கிழமை அறிவிக்க முடியாது. ஏறக்குறைய மூன்று மாத காலமாவது அந்தத் திட்டம் பற்றி ஆராய்ந்து, அதற்கு எவ்வளவு செலவாகும் என்று நிதித் துறையோடு கலந்துபேசி, பிறகுதான் அந்தத் திட்டத்தை நாட்டிலே அமல்படுத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தச் செயற் குழுவிற்கு 3 மாதங்களுக்கு முன்னாலேயே, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு நிதித் துறை ஒப்புதல் அளித்து, அதற்குப் பிறகுதான் இந்தத் திட்டம் தமிழ்நாட்டிலே அறிமுகப்படுத்தப்பட்டு மக்களால் வரவேற்கப்பட்டு எல்லா இடங்களிலேயும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருமுன் காப்போம் என்பதுபற்றி பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கே.பி. சுந்தராம்பாள் அவர்கள், தன்னுடைய பாடலிலே தெரிவித்து இருக்கிறார். யார் முன்னே சொன்னோம் என்பதைவிட,

வருமுன் காப்பவன்தான் அறிவாளி;
வந்தபின்னே தவிப்பவன்தான் ஏமாளி

என்று பாடலிலே அறிவித்து இருக்கிறார். அதனால் வருமுன் காப்போம் என்பது புதியது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பாடலை இயற்றியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியிலே, நத்தம் Lions Club-ம் கால்நடை மருத்துவர்களும் இணைந்து, இந்தத் திட்டம் வருவதற்கு முன்பாகவே, பல இடங்களில் நாங்கள் எல்லாம் இலவச கால்நடை மருத்துவ முகாம்களை நடத்திக் கொண்டிருந்தோம். அதிலே பேசும்போதுகூட



இப்படிப்பட்ட முகாம்களை Lions Club சார்பாக நடத்திக்கொண்டு இருக்கிறோம்; இதை அரசாங்கம்கூட ஒரு திட்டமாக அறிவித்தால் நன்றாக இருக்கும் என்றுகூட நான் சொன்னேன். அதேபோல எங்களுடைய Lions Club-னுடைய முயற்சியோடு நடைபெற்றுக் கொண்டிருந்த திட்டத்தைப் பார்த்து, அதனுடைய அடிப்படையிலே இப்போது இந்த இலவச கால்நடை மருத்துவ முகாம் ஏற்படுத்தி இருப்பதற்கு நாங்களே ஒரு காரணமாக இருந்து இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதியிலே கால்நடைப் பாதுகாப்புத் திட்டம், Lions Club-வுடன் சேர்ந்து நடத்துவதைப் பார்த்துத்தான் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். இந்தியாவிலேயே யாரும் எந்த மாநில முதல்வரும் சிந்திப்பதற்கு முன்பே, திட்டங்களைச் சிந்தித்து அறிவிக்கின்றவர் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அந்தத் தகவல் தெரியவில்லை என்று கருதுகிறேன். நத்தம் தொகுதியிலே Lions Club சார்பாக இலவச கால்நடை மருத்துவ முகாம்கள் பல நடத்தப்பட்டதற்குப் பின்புதான், இந்த இலவச கால்நடை மருத்துவ முகாமை அரசாங்கம் அறிவித்தது என்பதுதான் உண்மை.

அதற்கு அடுத்தபடியாக மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை "இலவச கால்நடை மருத்துவ முகாம்" என்று சொல்லிவிட்டு... (குறுக்கீடுகள்)

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தான் முதன்முதலாக உலகத்திலேயே கண்ணொளி சிகிச்சை முகாமை அறிவித்தார்கள். அதனுடைய தொடர்ச்சியாகத்தான் Lions Club மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் அதைப் பின்தொடர்ந்தனவே தவிர, இதற்கு மூல காரணம், முழுக் காரணம் தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள் என்பதுதான் உண்மை

**திரு. இரா. விசுவநாதன்:** அதற்கு மூல காரணமாக நாங்கள் இருந்து இருக்கிறோம் என்பதைத்தான் இப்போது சொன்னேன்.

அடுத்தபடியாக, இலவச கால்நடை முகாம் என்ற பெயரிலே நடத்துகின்ற அந்த முகாமிலே, கால்நடைகளுக்காக கானை நோய்த்

தடுப்பூசி என்று வழங்கப்படுகிறது; அதிலே ஒரு தடுப்பூசிக்கு 5 ரூபாய் 25 காசு கட்டணமாக வசூலிக்கிறார்கள். இலவச கால்நடை மருத்துவ முகாம் என்று சொல்லிவிட்டு, அதிலே கட்டணம் வசூலிப்பது...

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 848-க்கும் மேற்பட்ட சிகிச்சை முகாம்கள் நடைபெற்று இருக்கின்றன. 28 இலட்சம் கால்நடைகள் பயன்பெற்று இருக்கின்றன. எல்லா இடங்களிலும் இலவசமாகத்தான் ஊசிகள் போடப்படுகின்றனவேயொழிய, அது இலவச சிகிச்சை முகாம் தானே தவிர, எங்கும் பணம் வசூலிக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஊசிக்கு 3 ரூபாய் 50 காசு என்று எங்கள் பகுதியில்கூட வசூல் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு, பணம் வசூல் செய்வது தெரியும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய திட்டம் இலவசம். எங்கேயாவது அப்படி ஓரிரு முகாம்களிலே பணம் வசூலித்து இருப்பார்களேயானால், அது குறித்து ஆதாரங்களோடு கொடுத்தால், இந்த அரசு கடுமையான நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-35

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலேகூட 3 கால்நடை முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன. எங்கேயும் பணம் வாங்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினருடைய நத்தம் தொகுதியிலே இன்றோ, நாளையோ அந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. அவர் அதற்குச் செல்ல வேண்டும். அங்கே பணம் வாங்கினார்களா என்பதை நிரூபிக்க வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) அவர் பேசட்டும் (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் நேரத்தை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்களே?



**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே எனக்கு வேறுபாடு இருக்கிறது. வருமுன் காப்போம் திட்டம், மாடுகளுக்கு இலவச மருத்துவம் போன்ற இவற்றிற்கெல்லாம் பொதுவாக budget allocation கிடையாது. எனவே, அங்கே ஆகின்ற செலவுகளுக்கெல்லாம், அங்கே வருகிறவர்களிடத்தில் நிர்ப்பந்தப்படுத்தி பணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமாரதாஸ் இப்படி உண்மைக்குப் புறம்பான ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே பதிவு செய்யக்கூடாது. நான் உறுதியாகச் சொல்கிறேன். அரசாணை வேண்டுமானாலும்கூட தரத் தயாராக இருக்கிறேன். வருமுன் காப்போம் திட்டத்திற்காக முதலமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் நிதியொதுக்கி இருக்கிறார்கள். இந்த நிதியொதுக்கிய பிறகுதான் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அது இல்லையென்று அவர் நிரூபிப்பாரானால் அவர் சொல்கின்ற தண்டனையை நான் ஏற்கத் தயார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ், நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் விசுவநாதன் பேசட்டும், அவர் நேரத்தை எல்லாம் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். (குறுக்கீடு) தற்போது அந்த உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். குறுக்கிட்டு நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள். உறுப்பினர் விசுவநாதன் பேசட்டும்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மணிமாறன் அவர்கள் சொன்னார்கள். நான் என்னுடைய தொகுதியில் நடைபெறவிருக்கிற கால்நடை இலவச மருத்துவ முகாமில் கலந்துகொண்ட பிறகு கருத்தினைச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது, ஏற்கெனவே நடைபெற்ற 3 இலவச கால்நடை மருத்துவ முகாம்களில், நான் கலந்துகொண்டு அங்கே நேரடியாக இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். இந்த மாதிரி வசூல் செய்யக் கூடாது, அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டு செல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளிலேயெல்லாம் பேசியிருக்கிறேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலே உள்ள நத்தம் நகர் தனி வட்டமாக இருப்பதால், அந்த நத்தம் நகருக்கென்று ஒரு கால்நடை உதவி

இயக்குநர் அலுவலகத்தினை நீங்கள் புதிதாக உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நத்தத்தில் இருக்கின்ற dispensary-யை hospital ஆக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று உங்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக்கு 5 மருந்தகங்கள், ஏற்படுத்தப்படும் என்று சட்டமன்றத்திலே அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் எங்கள் தொகுதியிலே இதுவரை 2 மருந்தகங்கள்தான் புதியதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலே, நத்தம் ஒன்றியத்தில் லிங்கவாடி கிராமத்திலும், சாணார்பட்டி ஒன்றியத்தில் கம்பளியம்பட்டி கிராமத்திலும் புதியதாக இரண்டு மருந்தகங்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத் துறையைப் பொறுத்தமட்டில், எங்களுடைய மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களுடைய துணைத் தொழிலாக பால் உற்பத்தியைத்தான் நம்பியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, ஏழை கூலித் தொழிலாளர்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், பெண்கள் ஆகியோர் அதிக அளவிலே பால் உற்பத்தியைத்தான் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலுக்கு இதுவரை நியாயமான விலையும் கிடைக்கவில்லை. பாலைக் கொள்முதல் செய்தாலும் 120 நாட்களுக்கு மேற்பட்டும், அதற்குரிய பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் கொடுத்த பாலுக்கு 3, 4 மாதங்கள் ஆகியும் பணம் பட்டுவாடா செய்யவில்லை என்று சொன்னால் அவர்கள் எப்படி இந்தத் தொழிலைச் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பால் உற்பத்தி செய்கின்ற அனைவரும் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலேகூட சாலை மறியல் போராட்டம், உண்ணாவிரதம் போன்ற தொடர் போராட்டங்களை நடத்தி வந்தும் இன்னும் அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

உழவர்களுக்கு இந்த அரசு பெரிய உதவியைச் செய்வதைப்போல, உழவர் சந்தை என்ற திட்டத்தினைக் கொண்டு வந்து, உழவர்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளுக்கு ஏதோ நாங்கள் நியாயமான விலை கிடைக்கச் செய்கிறோம் என்று விளம்பரத்திற்காக ஒரு திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் உள்ளபடியே உழவர்கள் உற்பத்தி செய்கிற பாலுக்கு உரிய விலையும் கொடுக்கப்படவில்லை; கொள்முதல் செய்த பாலுக்கும்



பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இப்படிப்பட்ட அவல நிலையில் விவசாயிகள் இந்த அரசின்மீது அதிருப்தியாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஏமாற்றும் வண்ணம் இந்த அரசு விளம்பரத் திட்டத்தினை, உழவர் சந்தை என்ற திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறது. உள்ளபடியே உழவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலுக்கு உரிய விலையை இந்த அரசால் கொடுக்க இயலவில்லை. ஆனால் அவர்களுக்கு ஏதோ புதிய திட்டத்தை அறிவித்து ஏமாற்றி இருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

அடுத்து மற்றொரு முக்கியமான விஷயத்தை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சரின் மனசாட்சியாகத் திகழக்கூடிய மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு 714 பொருட்களுக்கு வரிச் சலுகை அளித்து, இன்று தாராளமயமாக்குதல் கொள்கையை அமல்படுத்தியிருக்கிறார்கள். அந்த 714 பொருட்களில் பால், பால் உற்பத்திப் பொருட்கள், பால் துணைப் பொருட்கள் ஆகியவற்றிற்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பால் துணைப் பொருட்களையும், பால் பவுடர், வெண்ணெய் போன்ற அனைத்துப் பொருட்களையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஐரோப்பிய நாடுகளான, உலகத்தின் பால் கிண்ணம் என்று சொல்கிறார்களே, டென்மார்க், ஸ்வீடன், நார்வே மற்றும் அமெரிக்கா ஆகிய இந்த 4 நாடுகளில் அவர்கள் ஏராளமாக உற்பத்தி செய்கின்ற பாலுக்கு சந்தை தேடி அலைகிறார்கள். உலகச் சந்தையில் அவர்கள் விற்பதற்கு இடம் தேடி அலைகிற இந்த நேரத்திலே மிகப் பெரிய சந்தை இந்தியாதான் என்று கண்டுபிடித்து, அவர்கள் இந்த அமைச்சரைத் தொடர்பு கொண்டு, நமது இந்திய நாட்டிலே அன்னியப் பொருட்களை டென்மார்க்கிலிருந்து, நார்வேயிலிருந்து, ஸ்வீடனிலிருந்து இறக்குமதி செய்வதற்குச் சலுகை அளித்து, பால் பண்ணைத் தொழிலையே இந்தியாவிலே நசுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு முழு முதற் காரணம் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் என்பதைத்தான் இந்த நேரத்திலே குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அந்த அளவிற்கு மனசாட்சியோடு திகழ்கின்ற - என்னுடைய மனசாட்சி என்று முதலமைச்சர் சொல்கிறார் - ஆனால் மனசாட்சியே இல்லாமல் தமிழகத்திலே இருக்கிற பால் உற்பத்தியாளர்களுடைய தொழிலை இன்று நசுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், முதலமைச்சருடைய

மனசாட்சிதான் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து ஆவின் நிர்வாகத்திலே பல்வேறு முறைகேடுகள். நட்டத்திலே ஏன் இயங்குகிறது என்று சொன்னால்—தனியார் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் எல்லாம் இலாபகரமாகத் தொழில் செய்யும்போது அரசு கூட்டுறவுத் துறையில் நடைபெறுகிற இந்தப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மட்டும் பல கோடி ரூபாய் நட்டத்தில் இயங்குகிறது என்று சொன்னால்—அதற்கு ஒரேயொரு உதாரணத்தை மட்டும் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய முறைகேடான நிர்வாகமும் அங்கு நடைபெறுகின்ற மலிவான ஊழலும்தான் இந்தப் பால்வளத் துறை மிக மோசமான நிலையை அடைவதற்குக் காரணமாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் உங்கள் ஆட்சியில் பல முறைகேடுகள் நடைபெற்றன. இப்போது முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை; ஆதாரத்தோடு காட்டுங்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் நீங்கள் செய்த தவறை ஆதாரத்தோடு சுட்டிக்காட்டியிருக்கிறோம். 10 கோடி ரூபாய்க்குமேல் ஊழல் செய்திருக்கிறார்கள். எந்தெந்தப் பெருந்தலைவர்கள் என்பதைக்கூட நான் சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சக்ரபாணி:** Point of Order, Sir...

**திரு. இரா. விசுவநாதன்:** உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இன்று பால் உற்பத்தியாளர் ஒன்றியம் நசிந்து நலிவடைந்து இருப்பதற்குக் காரணம் முறைகேடான நிர்வாகம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டதால் உதாரணத்திற்காக மட்டும் சொல்ல விரும்புகிறேன். அம்பத்தூர், அயனாவரம் பால் பண்ணையிலிருந்து பால் உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு Transport contract விடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் (குறுக்கீடு) ஒரு நிமிடம் உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்வதை ஒரு நிமிடம் கேளுங்கள். தினந்தோறும் இந்த அவையில் மீண்டும், மீண்டும் சொல்லப்படுவதை நினைவுக்குக் கொண்டு வருகிறேன். ஏதாவது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், பேரவை விதி 93-ன் பிரகாரம் ஆதாரத்தை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டி, அனுமதி பெற்று, அதற்குப் பிறகு சொன்னால்தான் அதற்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அதை விட்டுவிட்டு அந்தந்த நேரத்திலே சொல்வது சரியாக இருக்காது. கேட்ட பிறகு நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன் என்பது சரியாக இருக்காது.

**திரு. இரா. விசுவநாதன்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஊழல் என்று அந்த வார்த்தையைச் சொன்னால்தான் நீங்கள் தடுக்கிறீர்கள். இதிலே தவறு நடைபெற்று இருக்கிறது என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*(திரு. ஆர். சக்ரபாணி, திரு. மு.பெ. சாமிநாதன், திரு. ஆர். சிவானந்தம் ஆகியோர் எழுந்து நின்றனர்)*

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு காட்டுங்கள், எந்த அதிகாரி செய்தார் என்று. ஆனால் திண்டுக்கல்லில் 2 கோடி ரூபாய் அளவிற்கு உங்களுடைய மாவட்டத்திலே உங்களுடைய பெருந்தலைவராக இருந்தவர் ஊழல் செய்திருக்கிறார். தக்க ஆதாரம் இருக்கிறது. சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறோம். வழக்குகளை இப்போது சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் ஏற்கெனவே வழங்கிய தீர்ப்பைச் சொல்கிறேன். எந்தவிதக் குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தாலும், ஆதாரத்தைக் கொடுத்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அனுமதி வாங்கிய பிறகு பேசினால்தான், அது அவைக்குறிப்பில் இடம் பெறும். இல்லாவிட்டால் அது இடம்பெறாது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கேட்டதால் நான் ஓர் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டதற்காக ஓர் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடம். **

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் பேசும்போது ** பொதுவாக ஓர் ஒப்பந்தக்காரர் என்னால் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டால் உடனே பால் விநியோகத்தை நிறுத்திவிட முடியாது. அடுத்து யார் விநியோகிப்பதற்குத் தயாராக இருக்கிறார்களோ, அவர்களுக்கு அந்தப் பணியை ஒப்படைக்க வேண்டியிருக்கும். L1, L2, L3 என்று tender கோருகின்ற நேரத்திலேயே அவர்கள் அந்த மனுவைக் கொடுத்திருப்பார்கள். L1 என்பவருக்கு வேலை கொடுக்கப்பட்டு அவர் செய்யமுடியவில்லை என்று விட்டுவிட்டதற்குப் பிறகு மறுபடியும் இன்னொரு ஒப்பந்தம் கேட்பதற்குக் காலதாமதம் ஆகும். எனவே L2-க்கும் கொடுத்திருக்கலாம். ஆனால் நான் கேட்க விரும்புவது இதனாலே எந்தவொரு அமைச்சரோ அல்லது அதிகாரியோ லஞ்சம் வாங்கிக்கொண்டு அந்தப் பணியை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறாரா? அதற்கான ஆதாரம் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் இந்த அரசு அதற்கு விளக்கம் தரவும், நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருக்கிறது.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குரிய ஆதாரத்தோடு கொடுங்கள். நம்முடைய மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சுகாதாரத் துறை அமைச்சர் சொன்னதைப்போல ஒருவரிடத்தில் ஏதாவது tender கொடுத்திருந்தால் உடனே நிறுத்த முடியாது. மறுபடியும் அதை L2-க்கு அவர்கள் negotiation-ல் கொடுப்பார்களே தவிர, வேறல்ல. ஆதாரம் இருந்தால் கொடுங்கள், கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம்.

**திரு. இரா. விசுவநாதன்:** ஆதாரத்தைக் கையிலே வைத்திருக்கிறேன். வேண்டுமானால் உங்களிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரம் கையிலே வைத்திருக்கிறேன் என்று அங்கே நின்று சொன்னால் எப்படி? பேசுவதற்கு முன்னால் என்னிடம் கொடுத்திருந்தால் அதை அமைச்சரிடம் காட்டி அதற்கான பதிலைத் தயார் செய்யச் சொல்லியிருப்போம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விவரம் தெரியாமல் பேசுகிறார் என்பதற்கு ஒரேயொரு உதாரணம். ** ஆக இவற்றிற்கெல்லாம் ஆதாரம் இருந்தால், உங்களிடத்திலே முன்கூட்டியே கொடுத்து அதை அமைச்சருக்கு நீங்கள் அனுப்பியிருந்தால் பதில் சொல்லமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நான் மீண்டும் சொல்கிறேன். அவையிலே பேரவைத் தலைவர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். First listen to me. ஏற்கெனவே பேரவைத் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆதாரத்தை முன்கூட்டியே காட்டி அனுமதி வாங்கிப் பேசினால்தான், அது அவைக்குறிப்பில் இடம் பெறும். இல்லையென்றால் நீங்கள் இவ்வளவு நேரம் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் இடம் பெறாது.

*முற்பகல் 10-50*

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விவரம் தெரியாமல் சொல்லவில்லை; விவரத்தோடுதான் சொல்லுகிறேன். ** என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான் விவரம் இல்லாமல் சொல்லவில்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் ஒட்டுமொத்தமாகச் சொன்னது எல்லாவற்றையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** இது முறையில்லாதது. இது எப்படி நியாயமாகும்? நான் என்ன தவறாகச் சொல்லியிருக்கிறேன்? நான் ஏதாவது தவறாகச் சொல்லியிருந்தால் நீக்குங்கள். ஊழல் என்று சொன்னால் நீங்கள் சபைக்குறிப்பில் ஏற்ற மறுக்கிறீர்கள். இது எப்படித் தவறாக இருக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். சபை என்றால் சபைக்கு மரபு இருக்கிறது; விதி இருக்கிறது. அந்த விதிப்பிரகாரம் இங்கே எழுப்பியிருந்தால் அதை நான் அனுமதித்திருப்பேன். ஏற்கெனவே Speaker சொல்லியிருக்கிறார். Ruling கொடுத்திருக்கிறார். Speaker-இடம் permission வாங்கிக்கொண்டு இங்கே சொன்னால்தான் அது அவைக்குறிப்பில் இடம்பெறும். இல்லையென்றால் கிடையாது. நீங்கள் அது சம்பந்தமாகப் பேசியது எல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

*(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. சோ. பாலகிருஷ்ணன் ஆகியோர் எழுந்து நின்றனர்)*

**திரு. இரா. விசுவநாதன்:** ஒட்டுமொத்தமாக நீக்குவது முறையல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** பொய்யான தகவல், தவறான தகவல் இருந்தால்தான் நீக்க வேண்டும். ஒட்டுமொத்தப் பேச்சையும் நீக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசியது முழுவதையும் நீக்கவில்லை. அவர் tender தொடர்பாகக் குறிப்பிட்டது மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** இது உறுப்பினர்களுடைய உரிமையைப் பறிப்பதாகும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் பறிக்கவில்லை. ஏற்கெனவே Speaker சொல்லியிருக்கிறார். Speaker சொன்னதை நானும் சொல்கிறேன். ஏற்கெனவே Speaker சொல்லியிருக்கிறார். நானும் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் பேசிய பேச்சு அனைத்தையும் நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கவில்லை என்று சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் ** நீங்கள் அதற்கு ஏற்கெனவே தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். நம்முடைய சட்டமன்ற விதி 93-ன்படி உங்களிடத்திலே ஆதாரம் கொடுத்துவிட்டுத்தான் அதுகுறித்துப் பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதுவரையிலே அவர் பேசிய பேச்சு அவைக்குறிப்பில் இருக்கலாமா என்பதை நீங்கள் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள். ஏற்கெனவே 23 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. இரா. விசுவநாதன்:** குறுக்கீடுகள் இருந்தன. நான் பேசியது 10 நிமிடங்கள்கூட இருக்காது. நான் முதலிலேயே உங்களிடம் சொல்லிவிட்டேன். குறுக்கீடுகள் அதிகமாக இருந்தன. எனவே என்னுடைய நேரத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 23 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு நிமிடம் தருகிறேன். அதற்குள் நீங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** சபைக்குறிப்பிலிருந்து நீக்கும் அளவுக்கு முறைகேடாக நான் ஒன்றும் சொல்லவில்லை. ஊழல், குற்றச்சாட்டு என்று நான் எதையும் சுமத்தவில்லை. நிர்வாகச் சீர்கேடு என்று சொன்னேன். பாதுகாப்பாகத்தான் அந்த வார்த்தையைப் பயன்படுத்தினேன். ஏதாவது ஊழல் என்று சொன்னால் — கிராமத்தில் சொல்லுவார்கள்—முன்னால் போனால் கடிக்கிறது, பின்னால் போனால் உதைக்கிறது என்று. முன்கூட்டியே ஆதாரம் கொடுத்தால் அதில் உண்மை இருக்கிறதா என்று நான் பார்த்துச் சொல்கிறேன் என்று பேச விட மறுக்கிறீர்கள். இப்போது கொண்டுவந்து கொடுத்தால் முன்னாலே அனுமதி வாங்கவில்லை என்று சொல்கிறீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு முன்பு இதுபோல் ஏதாவது கொடுக்கப்பட்டு மறுக்கப்பட்டிருக்கிறதா? யாராவது கொடுத்திருக்கிறீர்களா?

**திரு. இரா. விசுவநாதன்:** எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் இரண்டு நாட்கள் பொறுத்துத்தான் கொடுத்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? உட்காருங்கள். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை, கால்நடைப் பாரமரிப்பு மற்றும் பால் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** சபைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. லா. சந்தானம்:** Point of clarification. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே, விசுவநாதன் மத்திய வர்த்தகத் துறையினுடைய தாராள இறக்குமதிக் கொள்கையின் மூலமாக இங்கு பால் உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து பால் பவுடர் போன்றவை குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்படுவதால் இங்கே இருக்கின்ற உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கின்ற ஒரு நிலையை எடுத்துச் சொன்னார்கள்; அதனுடைய உண்மை நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *10-55*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** Just a Point of Clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர்கள் கருத்துகளை வெளியிடும்போது, இலவச கால்நடை மருத்துவ முகாம்கள் நடக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களும் உடனிருந்து கண்காணிக்க வேண்டும்; கவனத்தில்



கொள்ள வேண்டுமென்ற உண்மை வெளிப்பட்டது. ஆனால் சட்டமன்றம் நடக்கும்போது, என்னுடைய தொகுதியில்கூட, வேறு தேதியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்த பிறகும், இன்றைக்கும், நாளைக்கும் இந்த முகாம்கள் நடந்து கொண்டிருக்கின்றன. குறைந்தபட்சம் விடுமுறை நாட்களிலே இதை நடத்த வேண்டும். சட்டமன்றம் நடக்கின்ற நாட்களிலே நடத்தாமல் சனிக்கிழமையிலே, ஞாயிற்றுக்கிழமையிலே நடத்த வேண்டும் என்ற ஒரு தாக்கீதை அரசு உரியவர்களுக்கு அனுப்புமா? அல்லது சட்டமன்றத்தை விட்டுவிட்டு உறுப்பினர்கள் அங்கே செல்ல வேண்டும் என்று அரசு கருதுகிறதா? சட்டமன்றத்திற்கு வருவது மிக முக்கியமான பணி. சட்டமன்றம் நடக்கும்போது அதை எப்படிக் கண்காணிப்பது? சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்து அந்த முகாம்களைக் கண்காணிக்கும் வகையில், விடுமுறை நாட்களிலே, அவர்களையும் இணைத்துத்தான் இது நடக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த உரிமையை வழங்க வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் பொதுவாக எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் அவருடைய தொகுதியிலே நடைபெறுகின்ற எல்லா முகாம்களுக்கும் செல்ல இயலாது; செல்லவும் முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுவதைப்போல, அவருக்கு எந்த நாளிலே கலந்துகொள்ள முடியும் என்று தெரிவிப்பாரேயானால், ஓரிரு முகாம்களை, அவருடைய தொகுதியிலே, அவர் குறிப்பிட்ட நாட்களிலே நடத்துவதற்கு அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் ஒவ்வொருவராக எழுந்து கேட்டுக்கொண்டே போனால், விவாதம் என்ன ஆவது? (குறுக்கீடு) No, No, No. உட்காருங்கள். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக எனது தொகுதி, தமிழ்நாட்டிலேயே அதிக மீன்பிடிப் படகுகளைக் கொண்ட மிகப் பெரும்

தொகுதியாகும். கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் அங்கே மீன்பிடித் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவர்களுக்குத் தொழில் செய்வதிலே மிகுந்த கஷ்டங்களும், இடர்ப்பாடுகளும் இருந்துகொண்டிருக்கின்றன. காரணம், சிங்கள இராணுவம் அடிக்கடி எல்லை கடந்து வந்து, நமது மீனவர்களைச் சுடுவதாலும், சுட்டுக் கொல்லுவதாலும், படகுகளைப் பிடித்துச் செல்வதாலும், பல்வேறு வகையிலே துன்புறுத்தப்பட்டு, வேதனைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்திலே 23-3-2000 அன்று, நாகூர், பட்டினச்சேரியைச் சேர்ந்த செல்லக்குட்டி என்ற மீனவரை இலங்கை இராணுவத்தினர் சுட்டு, அவர் நாகை மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, அங்கே சிகிச்சை செய்ய முடியாத காரணத்தினால், தஞ்சைக்கு அனுப்பப்பட்டு, மருத்துவ சிகிச்சையிலே இருந்து வருகின்றார். அடிக்கடி இதுபோன்ற தொல்லைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த காலங்களிலே யாரோ சிலர் எல்லையை தாண்டிச் சென்று இதுபோன்ற நிலைக்கு ஆளாக்கிவிட்டார்கள் என்பதற்காக, செல்கின்ற படகுகளெல்லாம் எல்லை தாண்டித்தான் செல்கின்றன என்று நம்முடைய அதிகாரிகள் கருதி, அவற்றை மெத்தனமாக, கவனிக்காமல் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் செய்த தவறுக்காக, அனைத்து மீனவர் படகுகளும் அப்படித்தான் செல்கின்றன என்ற நிலையைக் கொள்வது தவறு. ஆகவே இது குறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, மீனவர்கள் பாதுகாப்பாகத் தொழில் நடத்துவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இலங்கை அரசுக்கு உரிய கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நாகை முதல் வேதாரண்யம், கோடியக்கரை வரையுள்ள பகுதிகள் இலங்கையோடு மிகவும் நெருக்கமாக இருக்கின்ற காரணத்தால் அதன் எல்லைக்கு, கச்சத்தீவுப் பகுதி வரைக்கும் சென்று மீன் பிடிக்க வேண்டிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. அங்கேதான் மீனும் அதிகமாகப் படிகின்றது. கச்சத்தீவுப் பகுதியிலே மீன் பிடிப்பதற்கு நமக்கு உரிமையுண்டு. ஆனால் காலப்போக்கில் அவர்கள் அதை மறுத்து வந்த காரணத்திற்காக, அந்தப் பகுதியிலே நம்முடைய படகுகள் மீன் பிடிக்கச் செல்லும்போது எல்லை தாண்டி வந்துவிட்டது என்று வேண்டுமென்றே சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அதிகாரிகள் அதை கவனத்தில் கொள்வதில்லை. இவர்கள்தான் தாண்டிப் போகின்றார்கள்; டீசல் விற்கப் போகிறார்கள் என்று, யாரோ ஒருவர் செய்ததற்காக எல்லோரையுமே ஒட்டுமொத்தமாகக் குறை செல்லிக்கொண்டு, அமைதியாக இருந்துவிடுகிறார்கள். ஆகவே இத்தகைய மெத்தனப் போக்கைக்கை விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோல 1,000 படகுகள் இருக்கக்கூடிய நாகைப் பகுதியிலே துறைமுகம் இருந்துகொண்டிருக்கிறது. இப்போது துறைமுகத்தை விரிவுபடுத்துகின்ற பணிகளும், அது செயல்படக்கூடிய நிலையும் இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, அங்கே அவசியமாக ஒரு மீன்பிடித் துறைமுகத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் நாட்டின் முன்னேற்றத்திற்கு மீன்பிடிப்பும் வேண்டும், துறைமுகமும் வேண்டும். இரண்டும் ஒருசேர இருப்பதனால், சில பிரச்சினைகள் வருகின்றன. துறைமுகத்திற்கு வருகிற வியாபாரிகள் போன்றவர்களுக்கு இடையூறு இருப்பதனால், அங்கே வர மறுக்கிறார்கள். இதனால் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் என்ற நிலையும், அச்சமும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நாகையிலே மீன் பிடிப்பதற்குத் தனியாக ஒரு துறைமுகத்தை இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் மீன்பிடித் தொழிலிலிருந்து பல நாடுகளுக்கு, பல ஆயிரக் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வரக்கூடிய நிலையிருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பரந்த கடற்கரைப் பரப்பளவு இருந்தும், போதிய அளவிற்கு வருமானம் ஈட்டப்படுவதில்லை. அதற்குக் காரணம் முறையான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில்லை. குறிப்பாக வருடம் முழுவதும் மீன் பிடிக்க நாம் அனுமதித்து விடுகிறோம். இதனால் கடலிலே மீன் வளம் குறைந்து விடுகிறது. எனவே, போதிய மீன் உற்பத்தி இல்லாமல் இருக்கிறது. ஆகவே ஒருங்கிணைந்த ஓர் ஏற்பாட்டைச் செய்து, தமிழ்நாட்டிலே கடற்கரைப் பகுதிகளிலே குறிப்பிட்ட 2 மாத காலத்திற்கு யாரும் மீன் பிடிக்கக்கூடாது என்ற திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்தினால்தான் மீன் வளம் பெருகும்; உற்பத்தியும் பெருகக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஜப்பான் போன்ற நாடுகளிலே அந்தக் காலங்களிலே குஞ்சுகளை உற்பத்தி செய்து கடலிலே விடுவார்கள். அதன்மூலம் பல கோடி ரூபாய் வருமானம் வந்து கொண்டிருக்கும். இதையெல்லாம் நாம் செய்யாமல், மீன் வளத்தைக் காக்க என்ன முயற்சி செய்தாலும் பயன் இல்லை. ஆகவே இதுகுறித்து அரசு உடனடியாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

முற்பகல் 11-00

அதேபோல, முத்துச் சிப்பி வளர்ப்பு. உலகத்திலேயே சிறந்த முத்து என்பது — Gulf — பாரசீக வளைகுடாவில் கிடைக்கக்கூடிய பஸ்ரா முத்துதான். அந்த முத்துதான் இன்று உலகத்திலே கோடிக்கணக்கான ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது. அதனால் உலக சந்தையை தன் கைக்குள்ளே அந்த நாடு வைத்திருக்கிறது. இதற்குப் போட்டியாக இப்போது ஜப்பானைச் சேர்ந்த மீன் வளத் துறை, ஜப்பான் கே.சி. முத்துக்களை விளைவித்துக் கொண்டிருக்கிறது. அந்த முத்துக்களின் மூலமாக இப்போது

வளைகுடாவின் வியாபாரங்கள் தடைப்பட்டு, அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய முத்துக்கள் உலக அளவிலே தரம் பெற்றதாகவும், பஸ்ரா முத்துக்களுக்கு இணையான தரம் பெற்றதாகவும் இருக்கிறது. அதற்கான வாய்ப்புகள் நம்மிடத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. இராமேஸ்வரம் பகுதியில் இரண்டே இரண்டு முத்து வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றையும் தனியாருக்குக் குத்தகைக்கு விட்ட நிலையிலே, அதை மேலும் முறைப்படுத்தி வளர்க்க முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே இதுபோன்ற அன்னியச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய முத்து வளர்ப்பை, ஜப்பான் கேசி. போன்ற முத்துக்களை இங்கே உற்பத்தி செய்து பெருக்க வேண்டும். ஜப்பானோடு கலந்து பேசி, அதன் தொழில் நுணுக்கங்களைப் பெற்று, அந்த முறையிலே நாம், தூத்துக்குடி, இராமேஸ்வரம் போன்ற பகுதிகளிலே முத்துக்களை வளர்ப்போமேயானால், அன்னியச் செலாவணியைக் கோடிக்கணக்கிலே ஈட்ட முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நாகைப் பகுதியிலே சில சமயங்களிலே அதிகமாக மீன்கள் உற்பத்தியாகும்போது, சந்தையிலே அவற்றினுடைய விலை இறங்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அரசு சார்பாக மீன் குளிரூட்டு நிலையத்தை, வாடகை அடிப்படையிலே ஏற்பாடு செய்தால், அரசுக்கு வருமானம் இருக்கும்; அந்தப் பகுதியிலே மீன் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்குப் பலன் தருவதாகவும் இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இலங்கைப் பகுதி மீனவர்களுக்கு, ரேடியம் கலந்த நைலான் வலைகள் வழங்கப்படுகின்றன. அதைக் கடலிலே எடுத்துச் செல்லும்போது, ஒளிர்கிறது; அதன் மூலமாக நிறைய மீன்களைப் பிடிக்கக்கூடிய வாய்ப்பு இருந்து கொண்டிருக்கிறது. அதுபோன்ற நவீன, அதிநவீன வலைகளை நம்முடைய மீனவர்களுக்கும் வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இறால் வளர்ப்பு. இறால் வளர்ப்பைப் பொறுத்தவரையில் நாம் பாதுகாப்பே கொடுப்பதில்லை. இதிலே கண்ட பேர் போராடுகிறார்கள். அதனால், தடைபடுகிறது. முறையாக வளர்க்கக்கூடியவர்களுக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், பெரிய அளவில் அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு தொழில் அது. அதுவும் ஒரு விவசாயம் மாதிரிதான். அதற்குச் சிலரின் தூண்டுதல் காரணமாக — வெளிநாடுகளின்



தூண்டுதலின் காரணமாக — இங்கே பணத்தைப் பெற்று, இறால் பண்ணைகளை ஒழிக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்று சிலர் போராடுகிறார்கள். அதையும் நாம், சில அரசியல் இலாபம் கருதி ஆதரித்துக்கொண்டு, இங்கே இறால் வளர்ப்பைத் தடை செய்வதற்கான ஒரு வழியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய இறால் பண்ணைகளை முறையாக ஆரம்பிப்பவர்களுக்குப் போதிய பாதுகாப்பை வழங்கி, அந்தத் தொழில் பெருகுவதற்கு, இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்கள் பேசும்போது, நாகப்பட்டினம் மற்றும் அதன் கடலோரப் பகுதிகளிலே இருக்கக்கூடிய இறால் வளர்ப்பைத் தடுக்க அன்னிய நாடுகளின் தூண்டுதலோடு போராட்டத்திலே ஈடுபடுவதாகச் சொல்கிறார்கள். அவர் இயற்கைக்கு மாறாகச் சொல்கிறார். அவர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்; அதைப்பற்றித் தெரிந்தவர். இறால் பண்ணை அமைத்து, அதை உற்பத்தி செய்வதன் மூலமாக, குடிநீர் அங்கே மாசுபட்டுப் போகிறது, உப்பு நீர் கலப்பதன் காரணமாக, விவசாய நிலங்கள் முற்றிலும் அழிந்து போய்விடுகின்றன. அந்த இடங்களே மாசு படிந்து, ஒரு கட்டத்திலே மக்களிடத்திலேகூட சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதை அன்னிய கம்பெனிகளின் தூண்டுதலின் பேரிலே, அங்கேயுள்ள விவசாயத் தொழிலாளர்கள் போராடுகிறார்கள் என்கிற மாதிரி ஒரு குற்றச்சாட்டுச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறையாக ஆரம்பிக்கப்பட்ட இறால் பண்ணைகளைப் பற்றித்தான் குறிப்பிட்டேன். இரண்டு முறை நான் அந்த வார்த்தைகளைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஏற்கெனவே கடலோரப் பகுதிகளிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், உவர் நீர் — back waters — தேங்கிக் கிடக்கிறது. அவ்வாறு தேங்கிய நீர் எதற்கும் பயன்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அவ்வாறு உள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அவர்கள் இறால் வளர்ப்பதற்குப் பயன்படுத்துவதில் என்ன தவறு? ஏற்கெனவே இருந்த உப்புத் தண்ணீரை வெளியேற்றி, நாம் பாதுகாத்து வைத்திருக்கிறோமா? விவசாய நிலங்களை மாற்றி, அவற்றில்

இறால் வளர்ப்பது தவறு என்பதில் நானும் உடன்படுகிறேன். அதில் மாற்றுக் கருத்து இல்லை. விவசாய நிலங்களுக்கு அருகிலே இறால் வளர்ப்பது தவறு என்று நானும் கூறுகிறேன். ஆனால் கடற்கரை ஓரங்களிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் உவர் நீர் தேங்கி, ஆயிரக்கணக்கான ஏக்கரிலே வருடந்தோறும் அந்த உப்பு நீர் தேங்கி — back waters-ஆக இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடங்களைத்தான் அணைகளாக அமைத்து, அரசிடம் permission பெற்றுச் செய்வதில் தவறில்லை. அவை விவசாயத்திற்கும் வேறு எவற்றுக்கும் பயன்படாத நிலங்கள். ஆகவே கடல் நீரைப் பாய்ச்சி, அதிலே இறால் வளர்ப்பதிலே எந்தவிதத் தவறும் இல்லை. முறையாக அனுமதி பெற்று முறையாகச் செய்யக்கூடியவர்களுக்கு — எதிர்ப்பு என்று சொன்னால், எல்லாவற்றிற்கும் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாது; முறை தவறி நடப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்; அனுமதி மறுக்க வேண்டும்; அவர்களுடைய பண்ணைகளைக் களைந்து எறிவதில் எந்தவிதத் தவறும் இல்லை. ஆனால் ஒரேயடியாக எல்லாவற்றிற்கும் எதிர்ப்புச் சொல்வதால், அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு இல்லாத காரணத்தால், நமது தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். ஆகவே விவசாய நிலங்களை சிலர் மாற்றினார்கள். காரைக்கால் போன்ற பகுதிகளிலும் மயிலாடுதுறை போன்ற பகுதிகளிலும் அது நடந்தது. அவற்றை நிச்சயமாகக் களைந்து எறிய வேண்டும் என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பாக நடத்தப்படும் பெரும்பாலான மருந்தகங்களிலே மருத்துவர்கள் போதிய அளவிற்கு இல்லை. ஒரு மருத்துவர் சுழற்சி முறையிலே போய்க் கொண்டு வருகிறார். அதைக்கூட மாற்ற வேண்டும். போதுமான அளவிற்கு மருத்துவர்களை நியமிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் பல இடங்களிலே கிளை மருத்துவமனைகளைப் புதிது, புதிதாகத் தொடங்கிக் கொண்டிருக்கிறோம். Mobile Service மாதிரிப் போய்க் கொண்டிருக்கிறது. காலாகாலத்தில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய service கிடைக்கவில்லை. ஆகவே அதற்கு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். போதிய மருத்துவர்களை நியமிக்க வேண்டும். இதைப்பற்றி தினமணி பத்திரிகையிலே மருத்துவ முறை சாராக் கல்விப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று, சான்றிதழ் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று எழுதி இருக்கிறார்கள். அதுபோன்ற நிலைகளை நாம் ஏற்படுத்த வேண்டும். அதை ஏற்படுத்தி கால்நடை



உற்பத்தியிலே போதுமான அளவிற்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். இவற்றிற்கு கால்நடை என்று எப்படிப் பெயர் வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. மனிதனும் காலால்தான் நடக்கிறான். மிருகங்களும் காலால்தான் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் கால்நடை என்று எதற்காகப் பெயர் வந்தது என்று புரியவில்லை. என்னுடைய தொகுதியிலுள்ள வடுகச்சேரி பகுதியிலே கிளை மருந்தகம் கடந்த காலத்திலே இந்த அரசாலே தொடங்கப்பட்டது. அது மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது. தினம், தினம் ஆயிரக்கணக்கான கால்நடைகள் அங்கே வந்து மருத்துவப் பலன்களைப் பெற்றுச் செல்கின்றன. இதைக் கவனத்தில் கொண்டு இந்தக் கிளை மருத்துவமனையை முழுநேர மருந்தகமாக upgrade செய்வதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது வடுகச்சேரி கிராமம்.

தெற்குப் பகுதியிலே பரவை எனப்படும் பகுதியில் உள்ள பெரும்பாலானவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்கள் தோட்ட விவசாயிகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே நெல் சாகுபடி மிகவும் குறைவு. அவர்கள் பெரும்பாலும் கால்நடைகளை நம்பிப் பிழைக்கக்கூடிய நிலையில் உள்ளனர். அந்தச் சுற்றுப் பகுதியிலே மருத்துவமனை கிடையாது. கடந்து வந்தால் இந்தப் பக்கம் நாகப்பட்டினம் இருக்கிறது. ரொம்ப தூரம் வேளாங்கண்ணியைத் தாண்டிப் போக வேண்டும். அதுமாதிரி நிலைமை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறேன், மனு கொடுத்து இருக்கிறேன். தெற்குப் பகுதியிலே கிளை மருந்தகம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியிலே நாம் ஆவின் வைத்திருக்கிறோம். அது மிகவும் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் குஜராத்தில் இருக்கின்ற Anand Milk Dairy போதிய வருமானம் ஈட்டிக் கொண்டு இருக்கின்ற நிலையிலே, அதை எப்படிச் செய்கின்றார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்த்து, நாமும் அந்த முறையைப் பின்பற்ற வேண்டும். இல்லை என்று சொன்னால் இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டும். ஏனென்று சொன்னால் ஒரு பக்கம் பால் உற்பத்தியாளர்கள் விலையை . . .

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குஜராத்தைப்போல் நாம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால் பால் விற்பனை விலை அங்கே ஒரு லிட்டருக்கு ரூ.12. அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அதாவது ஒரு பக்கம் பாலை உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகள், பாலுக்கு உற்பத்தி விலையைக் கூட்டித் தர வேண்டுமென்கிறார்கள். வாங்கக்கூடியவர்கள் குறைத்த விலையை உயர்த்தக் கூடாது என்கிறார்கள். ஏன் நமக்கு இந்த இரண்டும் கெட்டான் நிலை. முடிந்த வரையில் அரசு தலையிட்டு வம்பில் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதே நலம். அந்த வகையிலே முறையான நடவடிக்கை எடுத்து, தேவையானவற்றை commercial ஆகச் செய்ய வேண்டும். அதற்காக யாரிடத்திலேயோ பணத்தைப் பிடுங்கி, யாரிடத்திலேயோ கொண்டு போய்க் கொடுப்பதுபோல, வருடத்திற்கு 30 கோடி, 40 கோடி ரூபாய் என்று அந்தத் துறைக்கு வழங்கினாலும், மக்களுக்குத்தான் நஷ்டத்திற்கு மேல் நஷ்டம் சேர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே தெளிவான கொள்கையை வகுக்க வேண்டும். பாலுக்கு நிரந்தரமான விலையை வைக்கக் கூடாது. அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய நேரத்திலே, தானாக விலை குறையும். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன். குறைந்த உற்பத்தி இருக்கக்கூடிய நேரத்திலே தானாக விலை கூடும் என்ற நிலையிலே சுதந்திரம் பெற்ற ஒரு அமைப்பாக அந்த நிறுவனத்தை மாற்றி, அதை முழுமைப்படுத்திச் செயல்படுத்த, செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளம், கால்நடை மற்றும் மீனளத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஏன் என்று சொன்னால், மிகவும் வற்புறுத்தி வாங்கப்பட்ட நேரத்தை குறுக்கீடுகளில் செலவழிக்க விரும்பவில்லை. எனவே எனது தொகுதி சம்பந்தப்பட்ட சில கோரிக்கைகளை மட்டும் வைத்து நான் இங்கே என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறையைப் பொறுத்த வரையில் எனது தொகுதியிலுள்ள, சேத்தியாத்தோப்பிலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் மிகவும் சிறப்பாக இயங்கி வந்து கொண்டிருந்தது. ஆனால் தற்சமயம் அதன் கொள்முதல் அளவைக் குறைத்து, அதனுடைய செயல்பாட்டைக் குறைத்து, விழுப்புரத்திற்கு இயந்திரங்கள் எல்லாம் மாற்றப்பட்டு வருவதாக எனக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. ஏற்கெனவே இதுகுறித்துக்கூட சட்டமன்றத்திலே நான் கேள்வி நேரத்திலே கேட்டபோது, மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு நிலைமை இருந்தால் அதை மாற்றி அமைப்போம் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு வந்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையிலே பார்க்கும்போது மீண்டும் விழுப்புரத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. எனவே அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்திலே கொண்டு, பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்தி, இன்னும் அதிகமாகக் கொள்முதல் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடை மருந்தகத்தைப் பொறுத்தவரையில், கால்நடை மருந்தகம் தொகுதிக்கு 5 வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் என் தொகுதியிலே 3 இடங்களுக்கு மட்டும்தான் வழங்கப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாசர் அவர்கள், கால்நடைத் துறை அமைச்சர், தொகுதிக்கு 5 மருந்தகங்கள் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கால்நடைக் மருந்தகம் என்று சொல்லவில்லை. தமிழ்நாடு முழுவதும் 2126 கால்நடைக் கிளை நிலையங்கள் ஏற்கெனவே இருந்து வருகின்றன. இந்தக் கோரிக்கைகளை வைத்து 2126 கிளை நிலையங்களுக்கு இணையான, பார்வைக் கிளை நிலையங்கள்தான், 2126 தோற்றுவிக்கப்பட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைக்கேற்ப, தொகுதிக்கு 5 பார்வைக் கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

*முறபகல் 11-10*

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிக் கால்நடை பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்பட்டாலும், எங்கள் தொகுதியிலே இருக்கக்கூடிய வடகரைக் குளம் கிராமத்திலும், புளியமங்கலத்திலும் இதை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீன் வளத் துறையைப் பொறுத்தவரையில், எனது தொகுதியிலே சட்டத்திற்குப் புறம்பாக இறால் பண்ணைகள் பல இருக்கின்றன. இதனால் விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. அதேபோல குடிநீர் எல்லாம், உவர் நீராக மாறி, நிலத்தடி நீர் குடிப்பதற்கு லாயக்கில்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலையை அரசு மாற்ற முயற்சி செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், தனிப்பட்ட முதலாளிகள் கொள்ளை இலாபம்

பெறுவதற்காக, தங்களுடைய சுய இலாபத்திற்காக, பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய அளவிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கொடிப்பள்ளம், பின்னத்தூர் பகுதியிலே, ஊருக்குப் பக்கத்திலே, உப்பனாற்றுக் கரையிலே இருக்கக்கூடிய இறால் பண்ணைகள் எல்லாம், மிகவும் மோசமான நிலையை அந்த கிராமங்களிலே உருவாக்கியிருக்கின்றன. நிலத்தடி நீர் குடிப்பதற்கு லாயக்கில்லாமல் போய்விட்டது. பக்கத்திலே இருக்கக்கூடிய விவசாய நிலங்கள் எல்லாம், விவசாயம் செய்ய முடியாத, உவர் நிலங்களாகிவிட்டன. அதுமட்டுமல்ல. பரங்கிப்பேட்டையிலே, ஊருக்கு வெளியிலேயும், ஊருக்கு அருகிலேயும், இத்தகைய நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால், அதைச் சுற்றி இருக்கிற விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அரசு இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள, பரங்கிப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக, பெங்களூரிலிருந்து வந்து ஆய்வுகள் எல்லாம் நடத்திச் சென்றார்கள். எனவே அங்கு மீன்பிடித் துறைமுகத்தை உருவாக்கித் தரவேண்டும். ஏனென்று சொன்னால், இவர்கள் மீன்பிடிக்க வேண்டும் என்று சொன்னால், ஒன்று பழையாறு செல்ல வேண்டியிருக்கிறது அல்லது கடலூர் செல்ல வேண்டியிருக்கிறது. இவர்கள் படகுகளை அங்கே கொண்டு போய் நிறுத்துவதனால், அங்கே இருக்கக்கூடிய மீனவர்களோடு பிரச்சினைகள், தகராறுகள் ஏற்படுகின்ற காரணத்தால், இந்த நிலையைப் போக்குகின்ற வகையிலே மீன்பிடித் துறைமுகத்தை, எங்கள் புவனகிரி தொகுதியிலே, வெள்ளாற்றின் முகத்துவாரத்திலே அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து மீன் உலர்த்தும் இடமும், மீன்பிடி வலைகள் பின்னக்கூடிய ஒரு கூடமும், எங்கள் மீன்பிடி கிராமங்களான, சாமியார்பேட்டை, புதுப்பேட்டை, பரங்கிப்பேட்டை மற்றும் முரசலோடை பகுதிகளிலே, நீங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இறால் பண்ணைகளைப் பொறுத்தவரையில், தங்களுடைய வசதிக்கேற்ப இறால் பண்ணைகள் அமைக்கின்றபோது, ஆற்றங்கரைகளின் உயரத்தைவிட, இவர்கள் அமைக்கும் குட்டைகளின் கரை உயரமாக இருக்கின்ற காரணத்தால், வெள்ளம் வரும்போது, ஆற்றங்கரையில் இருக்கக்கூடிய கரைகள் எல்லாம் அடித்துச் செல்லப்படுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், ஊருக்குள்ளே வெள்ளம் வந்து, அந்தப்



பகுதியிலே இருக்கக்கூடிய, மேற்கு பின்னத்தூர் என்று சொல்லக்கூடிய கிராமத்திலே விவசாய நிலங்கள் எல்லாம் பாழ்பட்டுப் போகின்றது. எனவே இதைத் தடுக்கின்ற விதத்திலே, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பினைத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான மீன்வளம், பால்வளம் மற்றும் கால்நடைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக, எனது கருத்துகளைச் சொல்ல வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே ஏறக்குறைய 1000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை கொண்ட மீனவ கிராமங்கள் உள்ளன. இந்தியாவிலே உற்பத்தியாகின்ற மீன்களிலே, ஏறக்குறைய 15 சதவிகிதத்தை உற்பத்தி செய்கின்ற நிலையிலே தமிழகம் இருக்கிறது. அதோடு இந்தியாவிலிருந்து அயல்நாட்டிற்கு அனுப்பப்படுகின்ற கடல் மீன்வளப் பொருட்களைப் பொறுத்தவரையில் அதிகமான அளவிலே தமிழகத்திலிருந்து அனுப்பப்படுவதால், தமிழகத்திலே இருக்கின்ற மீனவ கிராமங்களுக்கு அதிக வருவாயும், அதிக அந்நியச் செலாவணியையும் பெற்றுத் தருகின்ற, இந்த மீனவ மக்களுக்கு, அரசு மிகக் குறைந்த சலுகைகளை வழங்குகிறது. தமிழகத்திலே உள்ள ஏறக்குறைய 556 மீனவ கிராமங்களில் சுமார் 6 இலட்சத்து 70 ஆயிரம் மீனவ மக்களில், இரண்டு இலட்சத்து, 72 ஆயிரம் மீனவ மக்கள் மீன்பிடித் தொழிலை முழு நேரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மீனவ மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்களுடைய அடிப்படை வசதிகளைக் கூடுதலாக்குவதற்கும், இந்த அரசு இன்னும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, மீனவ கிராமங்களுக்கு சிங்காரவேலர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 4000 வீடுகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே இதுவரை வீடுகளே கட்டப்படாமல் எண்ணற்ற மீனவ கிராமங்கள் இருக்கின்றன. குறிப்பாக கொடுக்கப்பட்ட கிராமங்களுக்கே மீண்டும் வீடுகள் கொடுக்கப்படுவதால், பல்வேறு கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக எனது தொகுதியிலும் பல்வேறு

கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. எனவே தமிழகத்திலே இதுபோன்ற வீடுகளற்ற எண்ணற்ற கிராமங்களுக்கு சிங்காரவேலர் வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

சாலை வசதி குறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலே எதுவும் குறிப்பிடாதது வருத்தத்திற்குரியது. தமிழகத்திலே உள்ள ஏறக்குறைய 556 மீனவ கிராமங்களிலே, இந்த அரசு பொறுப்பினை ஏற்ற 4 ஆண்டுகாலத்திலே முதலாம் ஆண்டிலே சாலை வசதிகள் செய்து கொடுத்தாலும்கூட, அடுத்த 3 ஆண்டுகளிலே எவ்வித இணைப்புச் சாலை வசதிகளும் செய்யப்படவில்லை. இதுகுறித்து அந்த மீனவ கிராமங்களைச் சார்ந்திருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களைத் தொடர்பு கொண்டபோது, அது மீன்வளத் துறையைச் சார்ந்த சாலை என்பதால், அவர்களும் புறக்கணித்து விடுகிறார்கள். எனவே அந்தப் பகுதியில், இந்த நிதி ஆண்டிலே அதிக சாலைகளை மேம்பாடு செய்ய வேண்டும். எனது தொகுதியிலே சென்ற ஆண்டு 14 மீனவ கிராமங்களுக்கு 14 கிலோ மீட்டர் சாலையைப் போடுவதற்காக, திட்ட மதிப்பீடுகள் எல்லாம் அனுப்பப்பட்டன. ஆனால் இதுவரை எந்தப் பணியுமே தொடங்கப்படவில்லை. எனவே இந்த ஆண்டு மீனவ கிராமங்களுக்கு சாலை வசதிக்கு நிதிஆதாரம் ஒதுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே ஆண்டு முழுவதும் மீன்கள் பிடிக்கப்படுகின்ற காரணத்தினாலே, மீன்வளம் குறைந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரளத்திலே ஆண்டுக்கு 3 மாத காலம் மீன்பிடித் தொழிலைத் தடை செய்திருக்கிறார்கள். அவ்வாறு தடை செய்கின்ற நேரங்களிலே, அங்கே மீன்கள் எல்லாம் இன விருத்தி செய்வதோடு, அந்தப் பகுதியிலே 3 மாத காலம் வேலைவாய்ப்பு இழந்திருக்கின்ற மீனவ மக்களுக்கு, மீன்கள் சார்ந்த உப தொழில்கள் செய்வதற்கு அந்த அரசு அவர்களுக்கு உதவுகிறது. அதுபோல தமிழகத்திலும் ஆண்டுக்கு 3 மாத காலம் மீன் பிடிப்பதற்குத் தடை செய்யப்பட்டால் மீன்கள் உற்பத்தி அதிகமாவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இதற்கு தமிழகத்திலே இருக்கிற மீனவர்களும் ஒப்புதல் அளிக்கவிருக்கின்றார்கள். எனவே இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீன் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலே ஆண்டுக்கு 3 மாத காலம் மீன் பிடிப்பதைத் தடை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



தற்போது விபத்திலே இறக்கின்ற மீனவர்களுக்கெல்லாம் மீனவர்கள் விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்கப்பட்டிருந்தாலும், பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்கள் நிவாரணத் தொகை கிடைக்க ஏறக்குறைய 4, 5 ஆண்டுகாலம் பொறுத்திருக்க வேண்டியிருக்கிறது. மீனவக் குடும்பங்களுடைய தலைவர் இல்லாத காரணத்தால் அந்தக் குடும்பங்கள் ஒருவேளை சாப்பாட்டிற்கேகூட கஷ்டப்படுகின்ற அவல நிலையெல்லாம் இருக்கின்றது. இதை அரசு கருத்திலே கொண்டு, குறுகிய காலத்திலே அந்த மக்களுக்கு நிவாரணத் தொகையை வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மீனவர்கள் ஆண்டுதோறும் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதைப் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே இத்தனை மீனவர்கள் இறந்திருக்கின்றார்கள், இத்தனை மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று ஒரு பட்டியலிட்டுக் காட்டி இருக்கின்றார்கள். ஆண்டுதோறும் இது வாடிக்கையாக இருக்கிறது. எனவே மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து உடனடியாக இதற்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்துகின்ற வகையிலே தமிழக மீனவர்களுக்கு நல்லதொரு பாதுகாப்பை ஏற்படுத்துகின்ற வகையிலே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது தமிழகத்திலே இருக்கின்ற விசைப் படகு மீனவர்களுடைய நிலைமை மிக மோசமாக இருக்கிறது. இன்றுள்ள டீசல் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வு ஆகியவற்றையெல்லாம் கருத்திலே கொண்டால், விசைப் படகு மீனவர்கள் மிக மோசமான நிலையிலேயும், கஷ்டமான சூழ்நிலையிலேயும் இருக்கின்றார்கள். எனவே மாநில அரசு விசைப் படகுகளுக்கு மற்றும் கட்டுமரங்களுக்கு உபயோகப்படுத்துகின்ற டீசல் விலையின் விற்பனை வரியை முழுமையாக இரத்து செய்தால் நல்லது. மத்திய அரசு முழு மானியம் வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. எனவே அரசு இதற்கு தக்க நடவடிக்கை எடுத்து தமிழக மீனவர்களுக்கு முழு மானியம் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை அருகே இருக்கின்ற பழவேற்காடு பகுதியிலே ஏறக்குறைய 29 மீனவர் கிராமங்களைச் சார்ந்த சுமார் 40,000 மீனவர்களுடைய வாழ்வு இன்று கேள்விக்குறியாக இருக்கின்றது. எண்ணூரிலே இருக்கின்ற அனல் மின்நிலையத்திலிருந்து வெளியாகும் கழிவு நீராலும் எண்ணூரிலே செயற்கைக்கோள் துறைமுகப் பணி நடப்பதாலும், அங்கே தொடர்ந்து மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்குத் தடை இருக்கின்றது. இதை அரசு கருத்திலே கொண்டு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற 40,000 மீனவர்களின்

வாழ்க்கையைக் கருத்திலே கொண்டு, எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் துறைமுகத்திலேயும் அவர்களுக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள மல்லிப்பட்டினம் மீன்பிடிக் களம் மிக மோசமான நிலையிலே பழுதடைந்திருக்கிறது. அங்கே தினந்தோறும் சுமார் 500 விசைப் படகுகள் வந்து செல்கின்றன. தற்போது அந்த விசைப் படகுகள் எல்லாம் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே, மல்லிப்பட்டினம் மீன்பிடிக் களத்தை வருங்காலத்திலே சகல வசதிகளும் கூடிய பெரிய மீன்பிடித் துறைமுகமாக மாற்றித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்திலே மீனவர் பகுதியான பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி தொகுதிகளிலே இருக்கின்ற மீனவ மக்கள், அரசின் மீன்வளத் துறை அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே பட்டுக்கோட்டையில் மீன்வளத் துறையினுடைய இணை இயக்குநர் அலுவலகத்தைத் தொடங்குவீர்களேயானால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்களுக்கு இன்னும் சிறப்பாகப் பயன்படுவதற்கு ஏதுவாக இருக்கும்.

அதுபோல நாட்டுப் படகு மீனவர்களுக்கு தற்போது நைலான் வலைகள் எல்லாம் மானிய விலையிலே வழங்கப்படுகின்றன. ஆனால் விசைப் படகு மீனவர்களுக்கு வழங்குவதில்லை. அதையும் விசைப் படகு மீனவர்களுக்கு மானிய விலையிலே வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

பேராவூரணி பகுதியில் ஒரு மீனவர் அங்காடி தொடங்க வேண்டும். இந்தியா சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளாகியும், கல்வியிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கியிருக்கின்ற மீனவ சமுதாய மக்களுக்கு, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை வழங்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் இன்று தமிழகத்தில் பால் உற்பத்தி உயர்ந்து கொண்டிருந்தாலும் பால் விற்பனையிலே அரசுக்கும் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கும் போட்டி ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்திலே உள்ள பால் உற்பத்தியாளர்களிடையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குப் பால் வழங்கும் ஆர்வம்



தற்போது குறைந்துகொண்டிருக்கிறது. காரணம் பால் வழங்கியதற்கான பணம், உரிய காலத்திலே வழங்கப்படுவதில்லை. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 18,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகை ஏறக்குறைய 25 சதவீதம்தான். அதனாலே பால் உற்பத்தியாளர்கள் சில நேரங்களில் ஒன்றியங்களுக்கு பால் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். மேலும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணம் ஏறக்குறைய ரூ.2 கோடி நிலுவையிலே இருக்கிறது. இந்தப் பணம் கொடுக்கப்படாததால் பால் உற்பத்தியாளர்கள் மிகவும் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்றார்கள். இதுகுறித்து அரசு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்று நிலுவையிலே உள்ள ரூ. 2 கோடியை விரைவிலே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பால் விற்பனையாளர்களுக்கு பால் விலையை உயர்த்துகின்றபோது லிட்டர் பாலுக்கு மானியமாக 50 காசு வழங்குவதற்காக தமிழக முதல்வர் அவர்கள் ரூ.30 கோடியை அறிவித்தார்கள். ஆனால் இதுவரை பால் ஒன்றியங்களுக்கு ரூ. 5 கோடிதான் அனுப்பப்பட்டிருக்கிறது. மீதமுள்ள ரூ.25 கோடியை இன்னும் வழங்கவில்லை. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் எந்தவித மானியமும் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே அவற்றை விரைவிலே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பேராவூரணி பகுதியிலே பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடைப் பராமரிப்புத் துறையைப் பொறுத்தமட்டில் பல்வேறு கால்நடை மருந்தகங்கள் ஆண்டுதோறும் மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருந்தாலும்கூட தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு இதுவரை போதிய மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. ஏனென்று கேட்டால் மருத்துவர்களின் பணி உயர்வைப் பொறுத்தே, மருத்துவர்கள் நியமிக்கப்பட இருக்கின்ற காரணத்தாலே அவர்கள் எல்லாம் காலதாமதமாக நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே கால்நடை மருத்துவமனைகளுக்குக் காலதாமதம் இல்லாமல் மருத்துவர்களை நியமிப்பதோடு விரைவிலே கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்த இடங்களில் பார்வைக் கிளை நிலையங்கள் எல்லாம் தற்போது

திறக்கப்பட்டிருந்தாலும்கூட அவையெல்லாம் செயல்படாமல் இருக்கின்றன. காரணம், அந்தப் பகுதியில் இருக்கின்ற கால்நடை மருந்தகங்களில் பணியாற்றுகின்ற மருத்துவ அலுவலர்களே, அங்கேயும் பணிபுரியச் செல்வதால், அவர்கள் அந்தப் பணியிலே ஆர்வம் கொள்ளாமல் இருக்கிறார்கள். எனவே அத்தகைய கால்நடை பார்வைக் கிளை நிலையங்களுக்கும் தனியாக, கூடுதலாக மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இன்று தமிழகத்தில் ஏறக்குறைய 10 ஆண்டுகளாக தமிழக அரசினுடைய மருத்துவ அலுவலர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி, மத்திய அரசுக்கு இணையாகத் தங்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டுமென்று போராடி வருகிறார்கள். அவர்கள் ஜனநாயக முறையில் போராடியிருந்தாலும் அவர்கள் எல்லாம் நேற்று கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை விரைவிலே இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும். எனது தொகுதியிலே இருக்கின்ற முதுகாடு, ராஜாமடம் மற்றும் ஒட்டங்காடு பகுதிகளிலே, புதியதாக கால்நடை மருந்தகம் தொடங்கப்பட வேண்டும். திருச்சிற்றம்பலத்திலே இருக்கின்ற கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன்.

*** திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்புத் துறை, பால் வளத் துறை, மீன் வளத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கேற்கின்ற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறையின் பரிணாம வளர்ச்சியில், இந்தியாவிலேயே முதன்முதலாக கால்நடைப் பல்கலைக்கழகம் கண்ட மாநிலம் நம் தமிழகம்தான். அதனை உருவாக்கிய பெருமைக்குரியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். வாய் பேசா கால்நடைச் செல்வங்களின் நலன் காக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கால்நடைப் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் இப்போது கிராம மக்களின், குறிப்பாக ஏழை விவசாயிகளின் வரவேற்பைப் பெரிதும் பெற்றுள்ளது. மாவட்டத்தில் எந்த ஒன்றியங்களில் எந்த கிராமங்களில் நடைபெறும் என்பதை முன்கூட்டியே தெரிவித்தபின் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன.



திருவையாறு தொகுதியில் புதுக்குடி, புனவாசல், இளங்காடு, கண்டமங்கலம் ஆகிய கிராமங்களில் மிகச் சிறப்பாக நடந்துள்ளன. ஒவ்வொரு முகாமிற்கும் சராசரியாக 1,500 கால்நடைகள் சிகிச்சைக்கு வருகின்றன. 18-1-2000 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டத்தின்கீழ் 10-4-2000 வரை மூன்று மாத காலத்திற்குள் தமிழகத்தில் 805 முகாம்களை நடத்தி சாதனை படைத்துள்ளனர். கால்நடைத் துறை அதிகாரிகள், மருத்துவர்கள் மிகச் சிறப்பாக இந்தப் பணிகளைச் செய்கிறார்கள். அவர்களைப் பாராட்டுகிறேன். கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவப் பணி செய்வதன் மூலம் நம்முடைய அரசுக்கு பொது மக்களிடம் நல்ல பெயரைப் பெற்றுத்தரும் கால்நடை உதவி மருத்துவர்களின் கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுகிறேன்.

*முற்பகல் 11-25*

தஞ்சை மாவட்ட விவசாயிகளிடம் உழவு மாடுகள், கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் அதிகமாக உள்ளன. திருவையாறு தொகுதியில் 5 கால்நடை மருந்தகங்களே உள்ளன. 11 கிளை நிலையங்கள் உள்ளன; 11 பார்வைக் கிளை நிலையங்கள் உள்ளன. தஞ்சை மாவட்டத்திலே திருக்காட்டுப்பள்ளி கால்நடை மருந்தகத்தில்தான் கால்நடைகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல் அதிகமாகச் செயல்படுத்தப்படுகிறது. நாளொன்றுக்குச் சராசரியாக 30 கால்நடைகளுக்குச் செயற்கைக் கருவூட்டல் நடைபெறுகிறது. 80-க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சைக்காக தினமும் வருகின்றன. எனவே திருக்காட்டுப்பள்ளி கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தி கால்நடை மருத்துவமனையாக உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருக்காட்டுப்பள்ளி கால்நடை மருந்தகக் கட்டடம் இடிந்து பாழடைந்துள்ளது, உபயோகப்படுத்தும் நிலையில் இல்லை. எனவே புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவையாறு ஒன்றியத்தில் அதிகமாகக் கால்நடைகள் உள்ள புனவாசல், மகாராஜபுரம் ஆகிய கிராமங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பூதலூர் ஒன்றியத்தில் அதிகமாகக் கால்நடைகள் உள்ள இளங்காடு, ஒரத்தூர் ஆகிய இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். செங்கிப்பட்டி, பூதலூர் கால்நடை மருந்தகங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. புதிய மருந்தகக் கட்டடம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உழவு மாடுகள், கறவை மாடுகளோடு பூதலூர், செங்கிப்பட்டி மானாவாரிப் பகுதியில் அதிகமாக ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆடுகளுக்கு நீல நாக்கு தொற்று நோய் வந்து பல ஆயிரம் ஆடுகள் இறந்துபோயின. இந்த நோய் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியில் நோய்க்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டதா? கர்நாடக மாநிலத்திலுள்ள ஆராய்ச்சி நிலையத்திலேயிருந்து அறிக்கை வர வேண்டுமென்று கூறினார்கள். இறுதி அறிக்கை வந்துள்ளதா? எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசி (Innoculation) போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்வைக் கிளை நிலையங்களை, மனேயேறிப்பட்டி, வீரசிங்கம்பேட்டை ஆகிய கிராமங்களில் தொடங்க கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் ஈச்சங்கோட்டையில் கால்நடைப் பண்ணைக்கு சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. அயல்நாடுகளில் உள்ள பலவகை மாடுகள் அங்கே வளர்க்கப்படுகின்றன. எனவே புதிய கால்நடைக் கல்லூரி ஒன்று அங்கே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்களில் போதிய கால்நடை மருத்துவர்களை, பயிற்சி பெற்ற Livestock Inspector-களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கால்நடை விரிவாக்கப் பணியை ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்படைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ஒன்றியங்களின் மூலம் தேவையான துணை நிலையங்களுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை நிதியிலிருந்து புதிய கட்டடங்களைக் கட்டித் தந்துள்ளார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பால்வளத் துறையைப் பொறுத்தவரையில், பால்வளத் துறை கடந்த ஆட்சியில் சிலருக்கு வளமான துறையாக மாறியது. விளைவு, பால்வளத் துறை இன்றைய நிலையில் சீர்கெட்டுள்ளது. இந்த நிலையினைச் சரி செய்வதே துறைக்குப் பெரும் பணியாக உள்ளது. தவறு செய்தவர்கள் தப்ப முடியாது என்பதற்கு பால் ஊழல் வழக்கில் தண்டனை பெறாவிட்டாலும், வேறொரு வழக்கில் தண்டனை பெறும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. பால் விலையை ஏற்றி தமிழக மக்களின் குறிப்பாக ஏழைகளின் வயிற்றில் அடித்து விட்டது இந்த அரசு என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரும் அதே கட்சியின் மற்றொரு மாண்புமிகு உறுப்பினர் பால் உற்பத்திக்கு நியாயவிலை தராமல்



விவசாயிகளின் வயிற்றிலே அடிக்கிறது இந்த அரசு என்றும் இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டார்கள். பால் விலையை ஏற்றுவதற்கும் எதிர்ப்பு, பானை உடைப்புப் போராட்டத்திற்கும் ஆதரவு என்ற இரட்டை நிலையை இவர்கள் எடுக்கின்றனர். குறள் வழி நடக்கும் கலைஞரின் அரசு, நுகர்வோர்களுக்கு நியாயமான விலையும் பால் உற்பத்தியாளர்களுக்கு ஆதாயமான விலையும் வழங்கி இன்றையதினம் சிறப்பாக இந்தத் துறை விளங்கி வருகிறது.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தில் கடந்த ஆட்சியில் தவறான நிர்வாகத்தால் முறையான கணக்கின்றி பெரும் நட்டத்தில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம் இருந்தது. பால் உற்பத்தி செய்தவர்களுக்கு பால் பணத்தை வழங்கவில்லை. உற்பத்தியாளர்களுக்கு அதிகமான பண பாக்கியை வைத்துவிட்டுச் சென்றார்கள். புதிய நிர்வாகம் பொறுப்பேற்றபின் நிர்வாகச் சீர்திருத்தம் செய்து ஊழல் ஊற்றுக்கண்கள் அடைக்கப்பட்டு இப்போது இலாபம் பெறும் நிலையில் தஞ்சை மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சிறப்பாகச் செய்து வருகிறது. எனவே பால் உற்பத்தியாளர்களுக்குப் போதிய நிதியை, நமது துறை வழங்கி பால் பாக்கியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் மாறிவரும் மனித உணவுத் தேவையில் மீன் உணவு அதிகமாகத் தேவைப்படுகிறது. மீன் உற்பத்திக்கு மீன்வளத் துறை சிறப்பான உதவிகளைச் செய்து வருவதைப் பாராட்டுகிறேன். உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் தொகுதி அணைக்கரையிலும் குத்தாலம் தொகுதி திருவாவடுதுறையிலும், திருவையாறு தொகுதி கல்லணை, தோகூர், மணல்மேடு, திருக்காட்டுப்பள்ளி ஆகிய கிராமங்களிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல உள்நாட்டு மீனவர்களுக்கு மானிய விலையில் வலை மற்றும் மீன் குஞ்சுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்கள் அனைவருக்கும் insurance வசதி செய்து தரவும், இதற்கான premium தொகையைக் கூட்டுறவுச் சங்கங்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேளாண்மைக் கல்லூரி மற்றும் Marine Biology பாடப் பிரிவுகளில் முன்னுரிமை அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் எனக் கேட்டு, மிகச் சிறப்பாக

மானியங்களைத் தந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

*முற்பகல் 11-30*

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I thank you on behalf of B.J.P. for giving me the opportunity to speak in support of my cut motions given already regarding Animal Husbandry, Dairy Development, Milk Supply Schemes and Fisheries Department for the year 2000-2001. Animals are the main sources of subsidiary income to the agriculturists in Tamil Nadu and throughout India. Working bulls do major portion of the work of ploughing and transporting. Lot of animal power is being used in Tamil Nadu. Sir, milch animals, sheep, goat, piggery, horse, poultry etc., are the main sources of income to the agriculturists and also a main source of organic manure. Actually yesterday some of our friends were talking about the spoiling of land by using chemical fertilizers. Organic manure is the best manure to grow good vegetables and food crops.

Our Hon'ble Chief Minister has started "Varumun Kappom Thittam" i.e. and opened cattle health centres and nearly 5,000 rupees have been allotted to each centre and these centres are doing extremely well in all the villages throughout the State. I came to understand that about nearly 805 camps have already been conducted, out of 4,620 health camps to be conducted in Tamil Nadu. I want to stress one more thing Sir. Really the ``Varumun Kappom Thittam" is an excellent scheme. Previously, Ashoka Chakravarthy was the man who had started hospitals even for the birds. Afterwards, we were not concerned with birds and animals. On humanitarian consideration they had started hospitals at that time. Likewise, our Hon. Chief Minister Dr. Karunanidhi's ``Varumun Kappom Thittam" is also a very good scheme in our State. He thought that even the animals must be taken care of in our State.

Coming to other point, Sir, artificial insemination is to improve the standard of milch animals, and there are frozen semen banks at Echampatti, Abhisekapatti, Hosur and Udhagamandalam and the training centre for agri-culturists in Hosur implementing embryo transfer technology at Echankottai and Hosur helps to produce good calves. This technology should be extended vigorously to improve the yield of milch animals.



I came to understand that this is an excellent scheme started in Hosur and Echankottai and best animals can be produced out of this scheme. I request the Hon'ble Minister to see that these kind of centres are extended to all other places by improving Jersey, Holstein, Fresian and Sindi cows.

To control foot and mouth disease, lot of steps have been taken and implemented successfully and they are able to control such diseases. By doing this we can improve the yield of milch animals.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்) தலைமை]

Coming to sheep, Sir, Dharmapuri district is a drought prone area. Lot of sheep societies were there previously; but now, there are no sheep societies. Ladies can very easily rear sheeps. I request you to see that sheep societies are formed in Hosur and Dharmapuri areas where lot of grazing grounds are available.

For goat development and piggery, all things are being taken care of and I want to thank the former Minister for Animal Husbandry for having sanctioned Rs.5 lakhs for starting a horse - breeding station at Hosur. Sir, now, I came to understand that in the last year also Rs.26 lakhs had been sanctioned to rear horses in Hosur Cattle Farm. About 150 years back, Hosur cattle farm was the main source for producing horses for military use. So, we have to revive that now and you must see that good horses are reared there, because that place is having good climatic conditions and rearing facilities. I request you to see that horse breeding station is extended further.

*முற்பகல் 11-35*

I came to understand that Veterinary Assistant Surgeons are being paid a very low salary of about Rs.5,000/-. Our Government was kind enough to give salary equivalent to Central Government employees. Animal Husbandry graduates working under the Central Government are now drawing Rs.8,000/-. But, we are paying only Rs.5,000/-. I request you to see that this anomaly is rectified. I came to understand that they had staged a demonstra-tion yesterday to bring the anomaly to the notice of the Government. I request you to see that this anomaly is removed and they are paid Rs.8,000/- on par with the Central Government employees.

Actually, lot of dispensaries have to be opened in Tamil Nadu for improving cattle health. I request you to see that the veterinary sub-centre at Uddanapalli in my constituency is upgraded. The Honourable Member from Padmanabapuram constituency has requested me to ask for upgrading the Parasari veterinary sub-centre into veterinary dispensary in his constituency of Padmanabapuram in Kanniyakumari district. I request you to consider this also, Sir.

Coming to the other point, I would like to state that a lot of casual labourers are working in Hosur Cattle Farm and some of them are working for over 10 years. They have not been given permanent posts. Sir, I request you to consider their case and see that casual labourers who are working for more than two years are given preference and made permanent in the Hosur Cattle Farm.

Hosur Cattle Farm is spread over an area of 1,500 acres and I am told that it is a research station. It is not useful to the people in the sorrounding villages. People also do not know as to what is happening there. I request that they must adopt the villages within an area of 10 kilometres in and around Hosur Cattle Farm. The people should know as to what is going on there. They should extend those facilities to the villages, Sir.

Coming to the other point, viz dairy development, white revolution has taken place in Tamil Nadu and we stand in the second place. I am very happy that the Hon. has taken a lot of steps for dairy development, through Milk Co-operatives based on `Anand' model. I am very proud to say that we are in the second place. But, we should come to the first place atleast in the next year. There is lot of potential to produce more milk in Tamil Nadu. It has to be explored and we must see that Tamil Nadu comes to the first place in the entire nation. That is possible. I request the Hon. Minister to explore the possibilities and to see that we become the foremost state in India.

I am very happy to see that Backward classes and SC/ST people have been given subsidies to purchase milch animals. Cattle feed plant is also there (The Gong was sounded). I will conclude within two minutes, Sir. Cost of inputs in the production of milk has increased. So, the procurement price should also be increased. For cow milk, you must give atleast ten rupees per



litre. Even water is sold at the rate of Rs.10/- per bottle. So, Rs.10/- must be given for procurement of milk, Sir.

I have requested the Honourable Minister to sanction one milk co-operative society at Madinayakanapalli. It has not been considered. I have asked for only one. So, I request you to see that it is sanctioned Sir.

In the Dairy Department, during last year, some temporary workers were made permanent. Some others have not been given permanent jobs. I request you to consider the case of those who have worked for more than one or two years.

As regards Fisheries Department, we are having 1,000 kilometres of coastline and 1/4th of the marine exports are from Tamil Nadu. (The Gong was sounded).

**HON. CHAIRMAN (THIRU KUTTALAM P. KALYANAM):** Please conclude.

**THIRU B. VENKATASAMY:** Only one minute, Sir. I welcome the introduction of mechanised boats. Lot of State and Central schemes are being implemented in the State for the welfare of fishermen. I welcome the establishment of `Meenavar Angaadi' at ten places with modern facilities. Really, it is very good. At the same time, inland fisheries should be expanded to augment the agricultural income. Fishermen insurance scheme is also appreciable.

Regarding trawler operations, I wish to reiterate my cut-motion, regarding the need to supply deep sea fishing boats to fishermen. It is essential. I am very happy to note that three deep sea fishing trawlers are being operated and that we were able to fetch a revenue of Rs.193.90 lakhs during 1999-2000. I request the Hon. Minister to see that more deep sea fishing trawlers are operated so that the income of the Fisheries Department could be increased.

Thank you very much for giving me this opportunity, Sir.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு டி. மணி.

*முற்பகல் 11-40*

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முக்கியமான மூன்று மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திலே பேச இன்று போதுமான நேரம் ஒதுக்கப்படவில்லை என்பதை முதலிலே நான்

அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இரண்டாவது, சனிக்கிழமைகளில் கூட அவையை வைக்காமல் பல நாட்கள் தள்ளிவைப்பதன் காரணமாக, இவற்றில் உரிய கவனம் செலுத்தமுடியாத ஒரு நிலை பொதுவாக இந்த மானியங்களைப் பொறுத்தவரையில் இருக்கிறது என்பதையும் அரசினுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன்.

குறிப்பாக மீன் வளத் துறையைப் பொறுத்தவரையில் 10 இடங்களில் மீன் அங்காடிகள் ஆரம்பிக்கப்போகிறீர்கள். அது நல்ல அம்சம்தான். ஆனால் அங்கே வருகின்ற மீன் பூராவும் விற்பனை செய்வதற்கான உரிய உத்தரவாதம் அதிலே உண்டா என்பது இன்று ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனென்றால், இரண்டு தினங்களுக்கு முன்னாலே இதுசம்பந்தமான அதிகாரிகளுடன் நான் விவாதிக்கும்போது எங்களுடைய ஊரிலே ஒரு மீன் அங்காடி ஆரம்பிப்பதற்கு இடங்களையெல்லாம் பார்வையிட்டபின், சில விவரங்களைக் கேட்டபோது, அதற்கு உரிய உத்தரவாதம் இல்லாததுபோல் எனக்குப் பட்டது. எனவேதான் அந்தக் கருத்தை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

மீன் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் மீனைப் பதப்படுத்தி வைக்க நவீன சேமிப்புக் கிடங்குகள் போதுமானதாக இல்லை. அவை வேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை. மீன் வளர்ச்சிக் கழகத்தினால் இத்தனை நாளும் நடத்தப்பட்டுவந்த தொழிற்சாலையில் இயந்திர விசைப் படகுகளுக்கு body கட்டிக்கொண்டிருந்தார்கள். அது மூடப்பட்டு உள்ளது. மீன் வளர்ச்சிக் கழகத்தின் ice plant மூடப்பட்டுள்ளது. கழகத்திற்குச் சொந்தமான நான்கு மீன்பிடிக் கப்பல்களில் தஞ்சை என்ற கப்பல் பல காலமாகப் பயன்படுத்த முடியாமல் அழிந்து போகும் நிலையில் உள்ளது. எஞ்சியுள்ள கப்பல்களில் பிடித்து வரும் மீன், சரிவர எடை போடாத நிலையும், சரியாக விலை கிடைக்காத நிலையும் உள்ளது. குமரி மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான மூன்று விசைப் படகுகள் வீணாகக் கிடக்கின்றன. சமீபத்தில் 25 இலட்ச ரூபாய் செலவில் இன்னொரு படகைத் தயார் செய்தார்கள். அதுவும் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

அதோடு காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிக்க நான்கு இயந்திர விசைப் படகுகள் தகுதியாக இருக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, பாராட்டக்கூடிய விஷயம். ஆனால் அதற்குத் தகுதியான ஓட்டுநர்களை நியமனம் செய்யவில்லை என்று தெரிகிறது. அதன் மதிப்பீடுகளும் சரியாக இல்லை என்று தெரிகிறது.



மீனவர்களுக்கு அளிக்கும் டீசல், மண்ணெண்ணெய் பற்றி பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த மானிய விலை போதுமானதாக இல்லை. அந்த மானியம்கூட காலாகாலத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், படகுகளில் பொருத்தும் engine-களை, மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, கட்டுமரம். இன்னொன்று படகு. அதற்கு மேல், இவை இரண்டையும் பயன்படுத்தாமல், இன்றைய காலகட்டத்தில்கூட, படகைக்கொண்டு சென்று, கயிற்றால் இழுக்கின்ற கரைமடி என்று சொல்வார்கள், அந்த சம்பிரதாயம் இன்றும் இருக்கிறது. இவர்களுக்கெல்லாம், மீன் எந்த அளவுக்குக் கிடைக்கிறது என்று பார்த்தால், எல்லா நாட்களும் மிகச் சொற்பமாகத்தான் கிடைக்கிறது. Season-ல் மட்டும்தான் கொஞ்சம் அதிகம் மீன் கிடைக்கும். எனவே இந்தப் படகுகளில் பொருத்தும் engine விலை இடத்திற்கு இடம் மாறுபட்டு உள்ளதாகத் தெரிகிறது. கம்பெனியிடமிருந்து வாங்குகிறபோது, எந்த விலை கொடுத்து நாம் வாங்குகிறோமோ அதே விலையில் மீனவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வழிவகைகளை அரசாங்கம் செய்வதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீனவர்களுக்குக் கட்டித் தரும் வீடுகள் தரமான வீடுகளாக இருக்க வேண்டும் என்பதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. இலட்சக்கணக்கான ரூபாய் இதற்காக இந்த அரசு செலவிடுகிறதா என்று கேட்டால் செலவு செய்கின்றது. சமீபத்திலே நீரோடித் துறையில், கன்னியாகுமரி மாவட்டத்தின் கடைசி எல்லையில், கடந்த வாரத்திற்கு முன்னால் இரண்டு நாட்கள் மழை பெய்தது. அந்த மழையில் பத்து வீடுகளின் மேல் கூரை பூராவும் உடைந்துபோன நிலையில் ஆகிவிட்டது. எனவே கட்டிக்கொடுக்கின்ற வீடுகள் தரமாக இருக்க வேண்டும். அந்த வகையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சில கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இதைச் செய்கிறார்கள். அதிலேகூட பல தவறுகள் நடைபெறுகின்றன. ஏனென்றால் அந்த இடம் மீனவர்களுக்குச் சொந்தமான இடம் இல்லை. அந்த இடத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், அங்கே இருக்கின்ற Church நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எனக்குத் தெரிந்தவரையில் சின்னத்துறை கிராமத்திலே ஏறத்தாழ 3,000 ரூபாய் வரையில் இடைத் தரகு கொடுத்தால் மட்டும்தான் அந்த இடம்

கிடைக்கிறது என்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அப்படியானால் அந்த வீடுகளுடைய லட்சணம் எப்படி இருக்கும்? ஏற்கெனவே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினுடைய முதல் கட்டமாக அந்தப் பஞ்சாயத்தில் கட்டப்பட்ட வீடுகளில் உள்ளே பிரவேசிக்கவும் முடியாது, உள்ளே தங்கவும் முடியாது என்ற அளவிலேதான் செய்திருக்கிறார்கள். அதை என்ன என்று பரிசீலனை செய்யவேண்டும். தரமான வீடுகளைக் கட்டித் தரவேண்டும். அந்த மாவட்டத்தில், நான் ஏற்கெனவே குறிப்பிட்ட மாதிரி, நீரோடித் துறையிலும், மார்த்தாண்டம் துறையிலும், சின்னத் துறையிலும் இப்போது வந்திருக்கின்ற திட்டத்தின்படி நூற்றுக்கும் அதிகமான வீடுகளைக் கட்டித் தரவேண்டும்.

முற்பகல் *11-45*

அடுத்து மீன் வளத்தைப் பெருக்குவதற்கான ஆராய்ச்சி நிலையங்கள் சரிவர இயங்கவில்லை எனத் தெரிகிறது. மீன்பிடித் துறைமுகங்கள் நம்முடைய மாநிலத்திலே நான்கு இருக்கின்றன. கேரளாவிலே 14 சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் வைத்திருக்கிறார்கள். பெருவாரியாக மீன்களைப் பிடிக்கிறார்கள், ஏற்றுமதி செய்கிறார்கள், உள்நாட்டுத் தேவைக்கும் வருகிறது. நம்முடைய பகுதியிலும் அதிகப்படியான மீன்பிடித் துறைமுகங்கள் வேண்டும். குறிப்பாக தேங்காய்ப்பட்டினத்தின் அருகிலே அதனுடைய survey எல்லாம் முடிந்து இரண்டு ஆண்டுக்காலம் பூர்த்தி ஆகிவிட்டது. குளச்சலிலே அதனுடைய survey நடைபெறுவதாகக் கூறுகிறார்கள். இதையெல்லாம் சொல்வது இன்றைக்கு நேற்றைக்கு அல்ல. கிட்டத்தட்ட 1980-லிருந்து தகவல்களாக சொல்லப்படுகின்றன. ஆனால் பிரச்சினை தீர்வுக்கு வரவில்லை. எனவேதான் இந்த இரண்டு பகுதிகளிலும் சிறிய மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பதன் மூலமாக நம்முடைய மீன் உற்பத்தியை பெருக்கிக்கொள்வதற்கும் மீனவர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கும் சாத்தியமான நிலை ஏற்படும்.

அடுத்து உள்நாட்டு மீன் உற்பத்தி குறைந்து போய் உள்ளது. பல்வேறு நீர்தேக்கங்களிலே, குளங்களிலே 5, 6 வருடங்களுக்கு முன்பு பார்த்தோம் என்று சொன்னால், நாம் மீனை வளர்க்கின்ற சம்பிரதாயம் மிக விமர்சையாக நடந்தது. ஆனால் தற்போது பேச்சிப்பாறையை எடுத்துக்கொண்டாலும் சரி, பெருஞ்சாணியை எடுத்துக்கொண்டாலும் சரி, சிற்றாறு 1, 2-ஐ எடுத்துக்கொண்டாலும் சரி, சிற்றாறு 2-லே 4 ஆண்டுக்காலமாக மீன் குஞ்சுகளைக் கொண்டு வந்து வளர்த்து, அந்தக் காயலிலே, அணைக்கட்டிலே விடுகின்ற சம்பிரதாயம் என்பது நின்று போய் இருக்கிறது. இதனால் நம்முடைய மீன் வளம் குன்றிப் போய்



இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். அதேபோன்றுதான் கடலிலே மீன் பிடிக்க சில காலக்கெடு விதிக்க வேண்டும். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மீனை விருத்தி செய்ய வேண்டுமானால் ஒரு மாத காலம் அல்லது இரண்டு மாத காலம் கடலிலே மீன் பிடிப்பதைக் தடை செய்கின்ற சம்பிரதாயத்தை நாம் மேற்கொண்டால்தான் அது சாத்தியமாகும். அது எந்த மாதம், எந்தக் காலம் என்பதைக் கண்டறிவதோடு, அந்தக் காலகட்டத்திலே மீனவர்களுக்குத் துன்பம் இல்லாமல், அவர்களுக்கு ஏதாவது உதவியை செய்யக்கூடிய ஒரு நிலையையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

குளங்களிலே வற்றாத குளங்கள் இருக்கின்றன. 3 ஆண்டுகாலம் தண்ணீர் இருக்கின்ற குளங்களிலே மீனைப் பெருக்குவதற்கான திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீன் வளத் துறை சம்பந்தமாகப் பேசும்போது ஏற்கெனவே கடலுக்குள்ளே செல்கிறபோது தூண்டில் வளைவு வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டகாலமாக வைத்திருக்கிறோம்; ஆனால் அதைச் செய்ய முடியாத நிலையிருக்கிறது. அதற்குப் பதிலாக கடலிலேயே சுவரைக் கட்டுவது, கடலிலே கல்லைப்போடுவது என்பதில்கூட அந்தக் கல் கூட 4 ஆண்டுகளைத் தாண்டுகிறபோது அமுங்கி விடுகிறது. அதற்கு மேலே கல்லைப் போட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே நீரோடியிலிருந்து இரையும்மன்துறை வரையிலும் போட்டு அமுங்கி இருக்கிற பகுதியிலே மீண்டும் கல்லைப் போடுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடல் அரிப்பைத் தடுப்பதன் மூலமாக மீனவர்களை நாம் அதிகமாக பயன்படுத்தி, மீன் பிடிக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பால் வளத் துறையைப் பொறுத்தவரைக்கும், பாலை நம்முடைய தேவைக்கு மேலே நாம் உற்பத்தி செய்கிறோமா என்பதற்கான விவரங்களை சரிவரச் சொல்ல முடியவில்லை. இருந்தாலும்கூட, தமிழ்நாட்டினுடைய தேவைக்கேற்ப நாம் பாலை உற்பத்தி செய்கின்றோம் என்று வைத்துக் கொண்டாலும், அதற்குத் தேவையான மேல்தரமான கறவை மாடுகளை எந்த அளவிற்கு நம்முடைய விவசாயிகளுக்கு நாம் தருகிறோம்? இது கால்நடைத் துறைக்கும், நம்முடைய பால் வளத் துறைக்கும் கிட்டத்தட்ட சம்பந்தமானது. அந்த அளவிலே நாம் பார்க்கிறபோது, விவசாயிகளுக்கு மானிய விலையிலே நாம் கறவை

மாடுகளைத் தருதவன் மூலமாக அதிக அளவில் பாலை உற்பத்தி செய்வதற்கு நல்ல வாய்ப்பினைப் பெற முடியும்.

இரண்டாவது, விலைவாசி ஏற்றம் என்பது எல்லா மட்டங்களிலும் உயர்ந்தாலும்கூட, இந்தக் கால்நடைகளுக்கு அல்லது கறவை மாடுகளுக்குத் தருகின்ற தீவனம் என்பது குறைந்த விலையிலே, மானிய விலையிலே வழங்குவதற்கான நடவடிக்கை வேண்டும். அதன் மூலமாகத்தான் இந்த விவசாயிகளைப் பாதுகாக்க முடியும்.

அடுத்து இரண்டு தரமான நிலையிருக்கிறது. ஒன்று, பால் விலை குறைந்து போய் இருக்கிறது என்று விவசாயிகளும், பாலை வாங்குவதற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது என்று பயனாளிகளும் சொல்வதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இவர்களை பாதிக்காத அளவில் ஒரு கொள்கையை நாம் வகுக்க வேண்டும். அந்த அடிப்படையிலே அரசு சிந்தனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்தத் துறை இருக்கிறது. அதிலே கடையால்மூடு என்ற பகுதியிலே ஒரு பெரிய மையம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான லிட்டர் பால் வரவழைக்கின்றார்கள். ஆனால் அந்த ஊரிலிருந்து மேட்டுப்பாங்கான பகுதியிலே, மலைப் பகுதியிலே 18 கிலோ மீட்டருக்கு மேலே இருந்துதான் அந்த விவசாயிகள் பாலை கடையால்மூடுக்குக் கொண்டு வரவேண்டும். எனவே ஒரு சிறிய வாகனத்தை, குறைந்தபட்சம் ஒரு ஆட்டோவையாவது தந்து உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. டி. மணி:** தயவுசெய்து இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** பல கோரிக்கைகள் வைத்தோம். இதுவரையிலே நடைபெறாத சூழ்நிலை உள்ளது. எனவே அந்த வகையிலே கடையால்மூடு பால்வள கூட்டுறவு மையத்திற்கு வேண்டிய உதவியைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அரசாங்கம் பல உதவிகளைச் செய்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கால்நடை மருந்தகத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்தார்கள்.



அரசாங்கத்திலிருந்து அதற்குத் தேவையான 4 இலட்சம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்தார்கள். 1-1/2 ஏக்கர் புறம்போக்கு நிலத்தைச் சுட்டிக்காட்டிய பின்னரும் அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, கால்நடை மருந்தகத்தைக் கட்டுவதற்கான வாய்ப்பை இன்னும் தராத சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்று கொல்லங்கோடு கிராமம் ஏறத்தாழ 30 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பகுதி. அங்கே நிலம் இருக்கிறது. ஒரு கட்டடம் இருக்கிறது. எனவே புதிய அறிவிப்பின்படி ஒரு கால்நடை மருந்தகத்தை அங்கே அமைத்திட வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பால்வளம், கால்நடை மற்றும் மீன் வளத் துறை மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு தந்திருக்கிற எங்களுடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, ஓரிரு கருத்துகளைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். என்னுடைய வேடசந்தூர் தொகுதியிலே வடமதுரை, வேடசந்தூர் மற்றும் குஜிலியம்பாறை ஆகிய மூன்று ஒன்றியங்களும், வேடசந்தூர், எரியோடு. அய்யலூர், வடமதுரை மற்றும் பாளையம் ஆகிய ஐந்து பேரூராட்சிகளும் இருக்கின்றன. கால்நடைகளுக்காக நடத்தப்படும் வருமுன் காப்போம் விழாக்களில் பத்து விழாக்களுக்கு நாங்கள் சென்றிருக்கிறோம். குறிப்பாக லந்தக்கோட்டையில் முதன்முதலில் நடைபெற்ற கால்நடை விழாவிற்கு சென்றிருந்த நேரத்தில் சுமார் மூவாயிரம் கால்நடைகள் வந்தன. பசு, எருமை மாடு, செம்மறி ஆடு, வெள்ளாடு, கோழிகள் என்று மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் வந்தன. 50-க்கும் மேற்பட்ட கால்நடை மருத்துவர்கள் முகாமிட்டு சிறப்பான முறையிலே அந்தத் திட்டத்தை நடத்தினார்கள்.

இங்கு நத்தம் தொகுதி உறுப்பினர் பேசுகிறபோது, அந்தத் திட்டத்தை நாங்கள்தான் அறிமுகப்படுத்தினோம் என்று சொன்னார். நான் அவருக்கு ஒன்றைச் சொல்ல வேண்டும். நத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொள்கிறார் என்று மருத்துவர்கள் மூலம் நானும் அறிந்துகொண்டேன். ஆனால் நடக்கிற திட்டத்திற்காக, மனதார தமிழக முதலமைச்சரைப் பாராட்டாமல், இந்தத் திட்டத்தை நாங்கள்தான் கொண்டுவந்தோம் என்று திரு. விசுவநாதன் சொல்வதை நான் வன்மையாக மறுக்கிறேன்.

பால்வளத்தைப்பற்றிப் பேசினார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் 14 ஒன்றியங்கள் இருக்கின்றன. மூன்று நகரங்கள் இருக்கின்றன. 14 ஒன்றியங்களில் உள்ள சங்கங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அந்தப் பால் வளச் சங்கத்தினுடைய தலைவர் இராசாங்கம் என்பவர் மூன்று கோடி ரூபாய் கொள்ளையடித்து இருக்கிறார் . . .

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு. விசுவநாதன், அவர் கருத்தைச் சொல்லட்டும், பேசி முடித்த பிறகு சொல்லலாம்.

**திரு. இரா. விசுவநாதன்:** நாங்கள் பேசும்போது ஆதாரம் இருக்கவேண்டுமென்று சொல்கிறீர்கள். அவர் பேசும்போது ஆதாரம் இருக்க வேண்டாமா? அவர் சொல்வதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

*(திரு. சொ. கருப்பசாமி எழுந்து நின்றார்)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** நீங்கள் இரண்டு பேர் பேசினால் எப்படி? (குறுக்கீடு) உங்கள் கட்சியிலிருந்து ஒரே நேரத்தில் இரண்டு உறுப்பினர்கள் பேசினால் எப்படி?

*முற்பகல் 11-55*

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சபையில் இல்லாதவரைப் பற்றி ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டு சொல்வதை ஒரு முன்னுதாரணமாக நீங்கள் அனுமதித்தால், நாங்களும் இதற்குத் தயார் என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வருங்காலத்தில் நாங்களும் சபையில் இல்லாதவர்களைப் பற்றி ஆதாரம் இல்லாமல் எந்தக் குற்றச்சாட்டைச் சொல்லும்போதும் நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம். எனவே சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. மணிமாறன்:** Point of Order.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** திரு. இரா. மணிமாறன்.



**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கையில் நான் பேசுகின்றபோது இந்தக் குற்றச்சாட்டை வலியுறுத்தி சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டு, குற்றப் பத்திரிகையும் பெற்று வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினருடைய கூற்றுப்படி வழக்கில் இருக்கின்ற ஒரு பிரச்சினையை, நீதிமன்றத்தில் இருக்கின்ற ஒரு விஷயத்தை, சபையிலே உறுப்பினராக இல்லாத ஒருவரைப் பற்றி இங்கே விவாதிக்கலாமா என்பதுதான் நான் கேட்க விரும்புவது. ஆகவே அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** அவர் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று சொல்கிறார்.

**திரு. இரா. விசுவநாதன்:** நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது. சபையில் இல்லாதவரைப் பற்றி எப்படிப் பேசலாம்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** இல்லை. வழக்குக்குள்ளே அவர் போகவில்லை. குற்றச்சாட்டு இருக்கிறது என்று சொல்கிறார். (குறுக்கீடு) உட்காருங்கள்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய உறுப்பினர் சீ.வெ. கிருஷ்ணன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். அதை இப்படிச் சொல்லலாமா என்று கேட்கிறார் நம்முடைய விசுவநாதன் அவர்கள். நம்முடைய மணிமாறன் அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னார். அவர் நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப் பற்றிய விவரங்களுக்குள் போய்ப் பேசவில்லை. ஆனால் ஏற்கெனவே தவறு செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது என்று சொல்வதிலே தவறே கிடையாது. எனவே இதற்கு முன்னுதாரணமும் தேவையில்லை. இதுதான் மரபு. இதுதான் விதி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. குத்தாலம் பி. கல்யாணம்):** விசுவநாதன், நீங்கள் உட்காருங்கள், திரு. கிருஷ்ணன், நீங்கள் அடுத்த

பிரச்சினைக்குப் போங்கள். (குறுக்கீடு) விசுவநாதன், நீங்கள் உட்காருங்கள். அதற்குத்தான் இப்போது விளக்கம் சொல்லிவிட்டாரே அமைச்சர். உட்காருங்கள். திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து பால் சங்கங்களும் பூட்டப்பட்டு, நம்முடைய தமிழக முதல்வர் அண்ணன் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், நம்முடைய பால் வளத் துறை அமைச்சர் அன்பிற்குரிய அண்ணன் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், இந்தச் சங்கங்கள் திறக்கப்பட்டு முறையாக நடந்து வருகின்றன என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் நடத்தப்படும் வருமுன் காப்போம் திட்டம் எங்களுடைய தொகுதியிலே புதுரோடு, வேடசந்தூர், எரியோடு, வடமதுரை ஆகிய பல்வேறு நகரங்களிலே சிறப்பான முறையிலே நடைபெற்றது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடை மருத்துவமனை துணை நிலையங்களுக்குக் கூடுதல் மருந்து வழங்கிடுமாறு இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

என்னுடைய தொகுதியிலே வடமதுரை, வேடசந்தூர், குஜிலியம்பாறை, என மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. குஜிலியம்பாறை ஒன்றியத்திலே ஒரே ஒரு கால்நடை மருத்துவமனைதான் இருக்கிறது. பி.கூடலூருக்கு ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டுமென சென்ற ஆண்டே அமைச்சரிடத்திலே கேட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே ஒரே ஒரு மருத்துவமனை இருக்கின்ற ஒன்றியம் குஜிலியம்பாறை ஒன்றியம்தான். எனவே முன்னுரிமை தந்து, இந்த ஆண்டு கால்நடை மருத்துவமனை வழங்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கிராமங்களிலே ஒரு பஞ்சாயத்துக்கு ஒன்று என்று எருமைக் கிடாக் கன்றுகளை லந்தக்கோட்டையிலே மானிய அடிப்படையிலே வழங்கினார்கள். அந்தக் கிடாக்கன்றுகள் சிறப்பாக இருக்கின்றன. அதாவது மருத்துவமனை இல்லாவிட்டாலும் அந்தத் திட்டம் வரவேற்கத்தக்க திட்டமாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே நம்முடைய கால்நடைத்



துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒன்று என்று மானிய முறையிலே நீங்கள் வழங்கிட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய பால் வளத் துறையில் பால் பணம் பட்டுவாடா செய்வதில் கொஞ்சம் தாமதம் இருக்கிறது. பால்வளத் துறையிலே நஷ்டம் வந்தாலும் இந்த மானியத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, சென்ற ஆண்டு சட்டமன்றத்திலே பால் விலையை உயர்த்தாமல் மானியத்தை அரசே ஏற்றுக்கொண்டு, அறிவித்தார்கள். அதற்கு நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய மாவட்டத்திலே பாக்கி இருக்கிற பணத்தைச் சீக்கிரம் கொடுத்திட நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேடசந்தூர் தொகுதியிலே, அழகாபுரிக்குப் பக்கத்திலே குடகனாறு இருக்கிறது. குடகனாறு அணையிலே நல்ல மீன்கள் வருகின்றன. எனவே அழகாபுரியிலே ஒரு மீன் வள அங்காடி அமைத்துத்தர வேண்டுமென்று மீன் வளத் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டு, இந்த மானியத்திலே பேச வாய்ப்பு தந்த உங்களுக்கு நன்றி தெரிவித்து, உரையை நிறைவு செய்கிறேன்.

நண்பகல் *12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டி வைத்தேன்
ரெண்டு குளம் பாழ், ஒரு குளத்திலே தண்ணியே இல்லை
தண்ணி இல்லா குளத்திலே மண் எடுத்தவர் மூணு பேரு
ரெண்டு பேரு நொண்டி, ஒருவனுக்குக் கையே இல்லை
கையில்லா குசவன் செஞ்ச சட்டி மூணு சட்டி
ரெண்டு சட்டி வேகலை, ஒரு சட்டி பச்சை,
வேகாத சட்டியிலே போட்ட அரிசி மூணு அரிசி
ரெண்டு அரிசி பச்சை, ஒரு அரிசி வேகவே இல்லை

வேகாத சோற்றுக்கு மோர் கொடுத்தது மூணு எருமை
ரெண்டு எருமை மலடு, ஒரு எருமை ஈனவே இல்லை
ஈனாத எருமைக்கு விட்ட காடு மூணு காடு
ரெண்டு காடு சொத்தை, ஒணுலே புல்லே இல்லே
புல் இல்லா காட்டுக்கு வெள்ளி பணம் மூணு பணம்
ரெண்டு வெள்ளி கள்ள வெள்ளி, ஒண்ணு செல்லவே இல்லை
செல்லாத பணத்துக்கு நோட்டக்காரன் மூணு பேரு
ரெண்டு பேரு குருடன், ஒருத்தனுக்குக் கண்ணே இல்லை
கண்ணில்லா நோட்டக்காரனுக்கு விட்ட ஊரு மூணு ஊரு
ரெண்டு ஊரு பாழ் ஒரு ஊரிலே குடியே இல்லை.

அதுபோல தமிழகத்திலே இருப்பது 1064 கால்நடை மருந்தகங்கள். அவற்றில் 500 மருந்தகங்களிலே மருத்துவரே கிடையாது. உதவி மருத்துவர், உதவி ஆய்வாளர், கால்நடைக் கிளை நிலைய உதவி ஆய்வாளர் பணியிடங்கள் மொத்தம் 2126. அவற்றில் ஆயிரம் பணியிடங்களிலே ஆளே கிடையாது. இதற்கிடையிலே, கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் எதையோ நினைத்துக் கொண்டு எதையோ இங்கு ஆரம்பத்திலே படித்தார்கள். (சிரிப்பு) அதைச் சொல்லிவிட்டேன். அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தார்கள் என்று ஏற்கெனவே சொன்னேன். அதைப்போல நம்முடைய உறுப்பினர் அவர்கள் கால்நடைக் கிளை நிலையங்களில் ஆய்வாளர்களே இல்லையென்றும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைக் கிளை நிலையங்களில் ஆயிரம் இடங்களில் உதவி ஆய்வாளர்கள் இல்லையென்றும் சொன்னார்கள். தமிழ்நாடு முழுவதும் உள்ள 2126 கிளை நிலையங்களில் சுமார் 600 பேர்கள்தான் கால்நடைக் கிளை நிலையங்களில் இல்லை. கடந்த 10 ஆண்டுகாலமாகப் போராடி, ஆய்வாளர் பயிற்சி எடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியும் எடுக்காமல் தலைவர் கலைஞர் அவர்களால்தான் முதன்முதலாக சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டு, கால்நடைத் துறையிலே பணியாற்றக்கூடிய இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் எல்லாம் கால்நடை ஆய்வாளர் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டு, வேலைவாய்ப்புத் துறை மூலமாக 125 பேர் பயிற்சிக்கு எடுக்கப்பட்டு, பயிற்சியளிக்கப்படுகிறார்கள். அதைப்போல கால்நடை மருத்துவர்கள் இல்லையென்று சொன்னார்கள். கடந்த பத்தாண்டு காலத்திலே ஒரு கால்நடை மருத்துவர்கூட இந்தத் துறையின்



சார்பாகப் பணி நியமனம் செய்யப்படவில்லை. தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வந்தபின்பு, இந்த நான்கு ஆண்டு காலத்திலே 174 கால்நடை மருத்துவர்களைத் தேர்வாணையத்தின் மூலமாக நியமனம் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும் 42 கால்நடை மருத்துவர்களைத் தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** இப்போது மாதம் ஒன்றுக்கு ஒன்றியத்திற்கு ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, கால்நடைப் பாதுகாப்பு வார விழா நடைபெறுகிறது. (குறுக்கீடு) ஆம். கால்நடைப் பாதுகாப்பு விழா - விழா எதற்குத்தான் எடுப்பது என்றில்லை. கால்நடைக்குச் சுகமில்லை, உடல்நிலை சரியில்லை என்றால் அந்தக் கால்நடைக்கு மருந்து கொடுக்கப் போவதற்கு விழாவா. ஐயா! நாட்டிலே எதற்குத்தான் விழா எடுப்பது என்று இல்லையா? அப்படியே ஓர் ஒன்றியத்திலே ஒரு விழா எடுத்தால்— ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால் 240 கிராமங்கள் இருக்கின்றன ஐயா! ஒரு மாதத்துக்கு ஒரு கிராமத்தில் நீங்கள் கால்நடைப் பாதுகாப்பு விழா எடுத்தால், கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு...

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்குத்தான் விழா எடுப்பது என்றில்லை என்று சொன்னார்கள். மேளாக்கள் நடத்திய இயக்கங்கள் அந்தக் காலத்திலே உண்டு. கும்ப மேளாக்கள், கடன் மேளாக்கள் என்று மேளாக்கள் நடத்தியது. இது விழா அல்ல. திட்டம். சிறப்புத் திட்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பு முகாம் நடத்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அடுத்து கால்நடை மருந்தகங்களுக்கு கால்நடைகளை அழைத்துச் சென்றால், அங்கே கால்நடைகளுக்கு மருந்துகள் இல்லையென்று உதவி மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஏனென்று கேட்டால், தருகின்ற மருந்துகள் நான்கு மாத காலத்திற்குத்தான் இருக்கிறது என்கிறார்கள். அது உண்மைதான். காரணம், கால்நடைப் பாதுகாப்பு விழா நடத்துவதற்கு மருந்துக்கு என்றே மூவாயிரம் ரூபாய் அரசு கொடுக்கிறது என்றால் ஏற்கெனவே மருந்தகத்தில் . . . .

பிற்பகல் 12-05

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கால்நடைத் துறை

மொத்தத்திற்குமே மருந்திற்காக அளிக்கப்பட்ட தொகை 5 கோடி ரூபாய்தான். இப்போது அதை 9½ கோடி ரூபாயாக உயர்த்தி தமிழ்நாடு முழுவதும் கால்நடை மருந்திற்காகத் தந்து இருக்கிறோம். அதைப்போல கால்நடை சிறப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கீடே செய்யவில்லை என்று இங்கே ஏற்கெனவே சொன்னார்கள். 2 கோடியே 31 இலட்சம் ரூபாயை சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாட்டுக்கு மருந்து வேண்டும் என்று சொல்லி மருந்தகத்திற்குப் போனால், அங்கே Doctor இல்லை. Doctor எங்கே என்று கேட்டால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1998-லே மத்திய அரசு மாதிரி எங்களுக்கும் ஊதியம் தருவதாகச் சொல்லி உறுதியளித்தார்கள்; அதை ஒத்தி வைத்திருக்கிறேன்; திரும்பத் தருவேன் என்று சொன்னார்கள். அதை திரும்பத் தராததனால், அரசு ஏமாற்றியதால், போராட்டத்திற்குச் சென்றுவிட்டார்கள் என்று கூறுகின்றார்கள். எப்போதாவது ஒரு நாள் மருத்துவர் அங்கே இருக்கிறார். அப்போது ஆடு, மாட்டைக் கொண்டுபோனால் ஐயா, 4 மாதத்திற்குத்தான் மருந்து இருந்தது; அது தீர்ந்துபோய் விட்டது. இன்னும் 8 மாதம் கழித்து வா என்கிறார்கள். 8 மாதம் கழித்து மாட்டைக் கொண்டுபோனால், ஐயா, மருந்து இருக்கிறது; ஆனால், மாட்டுக்கு மருந்து இல்லை; கோழிக்குத்தான் மருந்து இருக்கிறது என்கிறார்கள். ஏனய்யா, ஆடு, மாடு தானே நம்முடைய மாவட்டத்திலே இருக்கிறது; நீ கோழிக்கு ஏன் மருந்தை வைத்து இருக்கிறாய் என்று கேட்டால், ஐயா, வாங்கிய கடையிலே கோழிக்கு மட்டும்தான் மருந்து இருந்தது; அதனாலே கோழிக்கு மட்டும்தான் மருந்தை வாங்கி வந்து இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். எனவே அந்தந்த ஊரில் இருக்கக்கூடிய உதவி மருத்துவரிடம் என்னென்ன மருந்து வேண்டும் என்று கேட்டு அதற்குத்தக்கபடி மருந்தை வாங்குவதில்லை. யார் cheap-ஆகக் கொடுக்கிறார்களோ அவர்களிடம் மருந்தை வாங்கிவிடுவார்கள். துக்ளக்கில் கூட தெளிவாகச் சொன்னார்கள். வெளியே வாங்கினால் 50 ரூபாய்; அதை அரசு 100 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் ஊழல் என்று சொன்னால், என்னிடம் சொல்ல வேண்டும் என்பீர்கள்; உங்களிடம் வந்து சொன்னால், இதிலே உண்மை இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்பீர்கள்; உண்மை இருக்கிறதா என்று பார்த்தால் அதற்குள்ளே இந்த மானியமே முடிந்து போய்விடும். திரும்ப நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம்



கொடுத்தால், கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தால், மானியமே முடிந்து போச்சு; இனி தமிழ்நாட்டிலே பேசி என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொல்லிவிடுவீர்கள். அதையும் மீறி எதையாவது நாங்கள் குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டோம் என்றால், அது அவைக் குறிப்பில் ஏறாது என்பீர்கள்; மீறி ஏறிவிட்டால், உங்கள் மேலே நடவடிக்கை.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே உங்கள் ஆதாரம் எல்லாம் முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டுகிற மாதிரி இருக்கக் கூடாது; அதற்காகத்தான். (சிரிப்பு).

**திரு. மு. அப்பாவு:** அதையும் மீறி, தப்பித் தவறி பேசிவிட்டால், நீதி வழங்குவீர்கள், தண்டனை வழங்குவீர்கள். என்னமோ உங்களுக்கு ** வழங்கக்கூடிய அதிகாரம் மட்டும் இல்லை என்று நினைக்கிறேன். அந்த அதிகாரம் மட்டும் இருந்திருந்தால், நீங்கள் என்ன பாடுபடுத்தி இருப்பீர்களோ தெரியவில்லை. சரி, இருந்தாலும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் இந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற வேண்டும். இது அவையை அவமதிக்கிற மாதிரி இருக்கிறது; எங்கள் உரிமையை மீறுகிற மாதிரி இருக்கிறது. அதை நீங்களே திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** ** என்கிற வார்த்தைகளைமட்டும் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

அடுத்து குஜராத்தை எடுத்துக்கொண்டால், அங்கே Anand Milk Union Limited-ல் உள்ள எல்லா பால் உற்பத்திச் சங்கங்களுக்கும் wireless கருவி கொடுத்து இருக்கிறார்கள். ஒரு மாட்டுக்குச் சுகமில்லை என்று wireless-ல் கூப்பிட்டால், உதவி மருத்துவர் ஒருவர் உடனடியாக அந்த இடத்திற்குப் போகிறார். ஒரு மாடு இறந்து போய்விட்டால், 24 மணி நேரத்திற்குள் உடனே மாற்று மாடு கொடுத்துவிடுகிறார்கள். நேற்றும் காலையிலும் எடுத்த பாலுக்கு, சாயங்காலம் போனால் உடனே பணம் பட்டுவாடா செய்கிறார்கள். ஆனால் இங்கு 4 வாரம், 5 வாரம் ஆனதற்குப் பிறகும் கூட பாலுக்குப் பணம் பட்டுவாடா செய்யவில்லை. சரி, உற்பத்தி செய்கிற பாலையாவது முழுமையாக எடுக்கிறீர்களா? அதையும் எடுக்கமாட்டேன் என்கிறீர்கள். வாரத்தில் 2 நாட்கள் பாலை எடுக்க முடியாது என்கிறீர்கள்.

**உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொண்டதால், அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட என்னிடத்திலே தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பாலை உடனே எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். எந்தப் பாலையும் எடுக்காமல் இதுவரை நிறுத்தியதே கிடையாது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உற்பத்தியாகிற அனைத்துப் பாலையும் கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அந்தவகையில், நமக்குத் தேவை 14 இலட்சம் லிட்டர் பால் என்றாலும்கூட, 14 இலட்சத்து 65 ஆயிரம் லிட்டர் பாலைக் கொள்முதல் செய்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** வேலூரிலே விவசாயிகள் அடிக்கப்பட்டு, ரத்தக் களரி என்று பத்திரிகையிலே பார்த்தேன்; அதைப்பற்றித்தான் சொல்கிறேன். ஆனால் எங்கள் மாவட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் சொன்ன உடனே செய்துவிட்டார்கள். அதற்கு ரொம்ப நன்றி.

அடுத்து தமிழகத்திலே பால் பவுடர் உற்பத்தி செய்வதற்கு 60 ரூபாய் ஆகிறது. இப்போது தாராளமயமாக்கல் கொள்கை பற்றி மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோல, தாராளமயமாக்கப்பட்டதால், வெளிநாட்டிலிருந்து குஜராத் சேட்டுகள் எல்லாம் ஒரு கிலோ பால் பவுடரை 50 ரூபாய்க்குக் கொள்முதல் செய்கிறார்கள். அதை 55 ரூபாய்க்கு விற்கிறார்கள். இங்கு நம்முடைய உற்பத்திச் செலவு 60 ரூபாய் ஆகிறது. நாம் அதைப் பெரும்பாலும் கல்கத்தாவிற்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். கல்கத்தாவில் இப்போது 55 ரூபாய்க்கு வாங்குகிறார்கள்; நாம் 65 ரூபாய்க்குக் கொடுக்கும்படியாக இருக்கிறது. அதனால் இன்னும் 2, 3 வருடங்களில் ஒரு கால்நடைகூட இங்கே இருக்காது ஏனென்றால் நாம் உற்பத்தி செய்வதை வாங்கக்கூடிய அளவுக்கு விலை இல்லை; விலை மிக அதிகமாக இருக்கிறது. அமெரிக்கா போன்ற வெளிநாட்டிலிருந்து பால் பவுடரை மிகக் குறைந்த விலையில் கொண்டுவருகிறார்கள்.

அதேமாதிரி கோழிகளை எடுத்துக்கொண்டால், அமெரிக்காவிலிருந்து ரொம்ப சௌகரியமாக இன்னும் ஒரு வருடத்திற்குள் கொண்டுவந்து இறக்கிவிடுவார்கள். நாமக்கல் பகுதியில் இருக்கிற கோழிப் பண்ணைகளுக்கு எல்லாம் மூடு விழாதான் நடக்கிறது என்பதை இந்தநேரத்திலே கூறிக்கொள்கிறேன். 1996 ஆம் ஆண்டு நம்முடைய ஆவினுக்கு மொத்த நட்டம் வெறும் 90 கோடி ரூபாய். 4 வருடங்கள் கழித்து இப்போது 200 கோடி ! ரூபாய். 110 கோடி ரூபாய் இப்போது



அதிகமாக நட்டம் வந்திருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், ஏற்கெனவே 1996-க்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே ஊழல் செய்தவர்கள் மீது 8(1) enquiry— விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அப்படி 8 (1) enquiry-ல் உள்ள 18 பேர்களும் முக்கியமான பதவிகளில் key post-ல் இருக்கிறார்கள். ஆகவே இன்னும் நட்டம் தொடருமா, குறையுமா என்பதைத் தெரிந்துகொள்ள இதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 12-10*

ஆவின் பாலை நிரப்புவதற்காகப் பாலிதீன் வாங்குகிறார்கள். அதை வெளி மாநிலத்திலிருந்து வாங்குகிறார்கள். அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோராமல் 1½ வருடமாக continue பண்ணுகிறார்கள். அமைச்சர் பால் வடியும் முகத்தோடு உடைய நல்ல அமைச்சர். ஒப்பந்தப்புள்ளி கோராமல் இதனை ஏன் 1½ வருடமாக நீட்டித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இதனால் 3 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அரசினுடைய தவறான...

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலம், நம்முடைய மாநிலம், 50 சதவீதம் 50 சதவீதம் என்ற ஒப்பந்தப்படிதான் பாலிதீன் வாங்கப்பட வேண்டுமென்ற வகையில், நட்டம் ஏற்படாத வகையில்தான், negotitation செய்துதான் அது கடந்த 1½ வருடமாக வாங்கப்பட்டிருக்கிறது. 20-4-2000 அன்று tender விடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தெந்த துறைகளிலெல்லாம் tender விடாமல் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி, ஏற்கெனவே அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் வைத்த அறிக்கையிலே சொன்ன மாதிரி, எல்லா அமைச்சர்களும், tender இல்லாமல் எவற்றையெல்லாம் நீட்டித்திருக்கிறார்களோ, அவ்வளவையும் விதி 110-ன்கீழ் அறிக்கையாகத் தந்து, விளக்கம் தந்தால் நன்றாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

ஆவின் மாட்டுத் தீவனத்தைக் கால்நடைகள் தின்றால் 10 லிட்டர் பால் கறப்பதற்குப் பதிலாக 5 லிட்டர் பால்தான் கறக்கின்றன. அவ்வளவு தரம் குறைந்ததாக இருக்கிறது. ஆகவே தரமான கால்நடைத் தீவனம் வழங்கப்பட வேண்டும்.

31-3-1997-லே நம்முடைய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு 13,15,474 ரூபாய் பெறுமானமுள்ள பொருள் இருப்பு குறைவாக இருக்கிறது என்று ஆய்விலே கண்டறியப்பட்டிருக்கிறது. அதை யார் செய்தார்கள்? என்ன செய்தார்கள்? அவர்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துக்கொள்கிறேன்.

450 நாட்களுக்கு மேலாக தினக் கூலி ஊழியர்களாக உள்ளவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18-5-1998 அன்று மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசும்போது அறிவித்தார்கள். நெல்லை ஆவினில் 93 பேர்கள் பல ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படாமல் இன்று வரையில் இருக்கிறார்கள். அமைச்சர் சொன்னதுபோன்று, இந்த அரசு சொன்னதைச் செய்யும் என்று, patent right வாங்கி வைத்திருக்கின்ற காரணத்தால் 93 பேர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாகிஸ்தான் சிறையில் உள்ள 19 தமிழக மீனவர்களில் 2 பேர்கள் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள். அந்த 19 பேர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய மரியாதைக்குரிய வைகோ. அவர்கள் நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. நம்முடைய அரசு வேகமாகச் செயல்பட்டு, மத்திய அமைச்சரை அழைத்துச் சென்றாவது பேசி, விரைவிலே அந்த 19 மீனவர்களையும் பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்து விடுகிறேன்.

உவரியிலே தூண்டில்வளைவு கட்டித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருந்தார்கள். அதற்காக 197 இலட்ச ரூபாய்க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் லூர்தம்மாள் சைமன் அவர்கள் இருந்தபோது அங்கே கரைக்குத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. அது அரித்துச் செல்லப்பட்டு விட்டது. அதை விரைவிலே கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரியதாளை, கூடுதாளை, கூட்டப்பனை, கூத்தங்குழி, இடிந்தகரை, பெருமனல், கூட்டப்புளி ஆகிய பகுதிகளிலும் விரைவிலே தூண்டில்வளைவு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலே உதவி இயக்குநர் அலுவலகத்தை 2 மாதங்களுக்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைப்பதற்கு வருவதாகச் சொன்னார்கள். அன்று அவர்கள் வர முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைந்ததும்



அதனைத் திறந்து வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைந்ததும், விரைவிலேயே, நெல்லை மாவட்டத்தில் மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை இராதாபுரத்திலே திறந்து தருவதற்கான ஒரு நல்ல செய்தியை இங்கே அமைச்சர் அவர்கள் இப்போது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்களாகின்றன. (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை குறித்த 21 ஆம் எண் மானியக் கோரிக்கைமீது எனக்கு இந்த மாமன்றத்தில் பதில் அளிக்க வாய்ப்பினைத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முதற்கண் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

இந்தியாவிற்கு எடுத்துக்காட்டாக பல நல்ல திட்டங்களைத் தீட்டி வருகின்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1975-76 ஆம் ஆண்டு தமிழகத்தில் மீனவர்களுக்காக இலவசமாக வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதன் அடிப்படையில் 1975-76 லிருந்து 1996 மே வரைக்கும் தமிழகத்திலே மீனவர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் 20,608 ஆகும். இதில் 1975-76, 1989-90, 1990-91 இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் டாக்டர் கலைஞர் அவர்களால் 7,651 வீடுகள் மீனவர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மற்ற 18 ஆண்டு காலத்தில் 12,957 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டு, மீனவர்கள்மேல் அதிக பற்று, பாசம் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்களால் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த சிந்தனைச் சிற்பி பெயரால் இலவச வீடுகள் கட்டும் திட்டத்தில் ஒவ்வோர் ஆண்டுக்கும் 4,000 வீடுகள் என்ற வீதத்தில் 5 ஆண்டுகளுக்கும் 20,000 வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இந்த 4 ஆண்டுகளில் 16,000 வீடுகள் கட்டும் திட்டத்தில் 12,603 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்ற வீடுகள் கட்டுகின்ற பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. அதுமட்டுமல்லாமல், கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டி முடிக்காமல் விட்டுச் சென்ற 4,132 வீடுகளையும் இந்த ஆட்சியிலே நாங்கள் கட்டி சாதனை படைத்திருக்கிறோம். ஆக மொத்தம் 37,343 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதில் கலைஞர் ஆட்சிக் காலத்தில் மட்டும் 24,386 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டிலும் 4000 வீடுகள் மீனவர்களுக்காகக் கட்டப்பட உள்ளன.

மீன் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று இங்கே உள்ள உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு ஆலோசனைகளைத் தந்திருக்கிறார்கள். மீன் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் 25-3-2000 முதல் சுருக்கு மடி, இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சுருக்கு மடி, இரட்டை மடி வலைகளால் மீன் வளம் பாதிக்கப்படுகிறது. ஆகவே மீன் வளத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் விசைப் படகு மீனவர்களும், கட்டுமரம், வள்ளம் போன்ற மீனவர்களும் இதுபோன்ற வலைகளைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு அரசு ஓர் ஆணை பிறப்பித்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் 45 நாட்கள் விசைப் படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதற்குத் தடை விதித்தால் மீன்வளம் அதிகமாக இருக்கும் என்று மத்திய அரசு நமது தமிழக அரசுக்கு கொள்கை அளவில் வலியுறுத்தி வருகிறது. அதையும் இந்த அரசு நடைமுறைப்படுத்த பரிசீலித்து வருகிறது. ஏப்ரல், மே மாதங்களில் 45 நாட்கள் விசைப் படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாமல் இருந்தால் மீன் வளம் அதிகரிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட உள்ளது என்பதையும் உங்கள் மத்தியிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு கடல் மீன் பிடிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன்படி விதிகளைச் செவ்வனே நடத்துவதற்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ. 449.95 இலட்சம் செலவில் 5 அதிவேக ரோந்துப் படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ரோந்துப் படகுகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழகான பெயர்களைச் சூட்டித் தந்து, 16-11-1999 முதல் அவை இயக்கப்படுகின்றன. அந்தப் படகுகளுக்கு நீலம், கயல், பவளம், முத்து, வலம்புரி என்று பெயரிடப்பட்டு, ஒவ்வொரு பகுதியிலும் மீனவர்களைப் பாதுகாக்க, மீனவர்கள் எல்லையைத் தாண்டிச் செல்லாமல் இருக்க மற்றும் புயல் காலங்களில் அவர்களை மீட்டு வருவதற்காக- இந்தப் பணிகளைச் செவ்வனே செய்வதற்காக இந்தப் படகுகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு, மீனவர்களைப் பயிற்றுவிப்பதற்காக 43½ அடி படகு 25 இலட்ச ரூபாய் செலவில் கன்னியாகுமரியிலே இயக்கப்பட இருக்கிறது. அந்தப் படகுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் குமரி என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். மீனவர்கள் ஆழ்கடலில் இருக்கின்ற மீன்களை இனம் கண்டுகொண்டு அவர்கள் அந்த மீன்களைப் பிடித்து வருவதற்கு இந்தப் பயிற்சிப் படகு அங்கே இயங்க இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-20

***மீனவ மக்களின் மக்கள்தொகை கணக்கெடுப்பு:*** 1986 ஆம் ஆண்டு மீனவ மக்களின் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடந்தது. இந்த அரசு வந்தபின் இப்போது 1999-2000 ஆம் ஆண்டு மீனவ மக்களின் கணக்கெடுப்பிற்காக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்து அந்தப் பணி முடிவடைந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மீன் இறங்கு தளங்கள்:*** மீனவ மக்கள் கொண்டு வருகின்ற மீன்களைச் சுத்தமான முறையில் கையாள வேண்டுமென்ற எண்ணத்திலும்- சர்வதேச அளவில் மீன்களுக்கு நல்ல விலை இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும்—இந்த மீன்களைச் சுத்தமாகக் கையாள வேண்டும் என்ற எண்ணத்திலும்—பல வசதிகளுடன் கூடிய இறங்கு தளங்கள் மத்திய அரசு, மாநில அரசு நிதி உதவியுடன் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 10 இடங்களும் அறிவிக்கப்பட்டு, அதில் முதல் கட்டமாக புன்னக்காயலில் பணி தொடங்கப்பட்டு இருக்கிறது. மற்ற பகுதிகளிலும் விரைவிலே பணி ஆரம்பிக்கப்படும்.

***மீனவர் அங்காடி:*** மாண்புமிகு முதல்வர் அவர்கள் உழவர் சந்தையைத் தந்தவர்கள். மீனவர்களுக்காகவும் இந்த அங்காடியைத் தந்து இருக்கின்றார்கள் என்றால் மீனவர்கள் தங்கள் மீனைக் கொண்டு வந்து ஓரிடத்தில் விற்று அதிக லாபம் பெறுவதற்கும் சகல வசதிகளுடன் கூடிய, அதாவது மீனைக் கெடாமல் வைத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கு வசதிகள் எல்லாம் செய்து தந்து, மீனவர்கள் அதிக லாபம் பெறுவதற்கு இந்த அங்காடியை மீனவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். இது 10 இடங்களில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதற்காக மீனவ மக்கள் சார்பாக முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***குழுக் காப்புறுதித் திட்டம்:*** இந்த குழுக் காப்புறுதித் திட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு மீனவர்கள் இறந்தால் மத்திய, மாநில அரசுகள் premium செலுத்தி, அதில் 25,000 ரூபாயும், பகுதி ஊனம் அடைந்தால் 12,500 ரூபாயும் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து மீனவர்களுக்கு மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து premium செலுத்தி 35,000 ரூபாயாக மீனவர்கள் விபத்தில் இறந்தால் வழங்கப்படுகிறது. இந்த 35,000 ரூபாய் மீனவர்களுக்குப் போதாது என்பதால் தமிழக அரசின் தனி ஒரு திட்டமாக மேலும் 15,000 ரூபாய் சேர்த்து

50,000 ரூபாயாக வழங்கப்படுகிறது. ஊனம் அடைந்தால் அவர்களுக்கு 25,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் மீனவர்கள் விபத்துக் காலத்தில் இறக்கின்ற தருவாயில் வழங்குவதற்கே 4 வருடங்கள் ஆகின்றன என்று இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள், முதல் கட்டமாக 15,000 ரூபாயை இந்த அரசு வழங்குகிறது. மீண்டும் இதுகுறித்து மத்திய அரசுக்குச் சென்று, உரிய சான்றிதழ்கள் எல்லாம் அனுப்பப்பட்டு, மத்திய அரசிடமிருந்து வந்தபின்தான் இந்தத் திட்டத்தில் மீதம் உள்ள ரூ.35,000 வழங்கப்படுகிறது. ஆகவே சிறிது காலதாமதம் ஆகிறது. 4 ஆண்டுகள் அல்ல. சற்றேறக்குறைய 6 மாதங்களாவது ஆகிறது என்பதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இதில் பயனடைவோர் 2,97,657 மீனவர்கள் ஆவார்கள்.

**சேமிப்பு நிவாரணத் திட்டம்:** இந்த சேமிப்பு நிவாரணத் திட்டத்தில் மீனவர்களும் தமிழக அரசும் மத்திய அரசும் சேர்ந்து 45 ரூபாய், 45 ரூபாய் வீதம் அவர்கள் 8 மாத காலம் செலுத்தினால்—அவர்களுக்கு 3 மாத காலம், கடலுக்குள் செல்லமுடியாத சூழ்நிலையில் 3 மாதத்திற்கு 1080 ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் பயன் பெறுபவர்கள் மீனவச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும். கடல் தொழில் செய்பவராக இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் 1999-2000-ல் 1.84 லட்சம் மீனவர்கள் பயனடைந்தார்கள். அதற்காக 13.23 கோடி ரூபாய்க்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

**மீனவர்களுக்கும், மீனவ மகளிருக்கும் விபத்துக் குழு காப்புறுதித் திட்டம்:** இந்த விபத்துக் குழு காப்புறுதித் திட்டம் 1998-99 ஆம் ஆண்டு மீனவர்கள் 24 ரூபாய் சந்தா செலுத்தினால் 1 லட்ச ரூபாய் என்றும் அதில் டாக்டர் கலைஞர் அவர்கள் மீனவர் மகளிரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னதற்கிணங்க, மகளிர் 20 ரூபாய் செலுத்தினால் போதும், அவர்கள் விபத்துக் காலத்தில் இறக்கும் தருவாயில் அவர்கள் குடும்பத்திற்கு 1 லட்ச ரூபாயும் வழங்கப்படுகிறது. பகுதி ஊனம் அடைந்தால் அவர்களுக்கு 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதுவரையில் 1,18,793 பேர் இதில் பயனடைந்து இருக்கிறார்கள். மீனவர் மகளிர் 12,942 பேர் இதில் சேர்ந்திருக்கிறார்கள். மேலும் இந்தத் திட்டத்தில் புதிதாக ஒரு திட்டமும் சேர்க்கப்பட்டு இருக்கிறது. 1 லட்ச ரூபாய், என்றால், மீனவர்கள் 60 ரூபாய் வருடத்திற்குச் செலுத்தினார்களானால், மீனவர்கள் இறப்புக் காலத்தில் அவர்களது குடும்பத்திற்குப் போதாது அவர்கள் விபத்துக் காலத்தில் 2.50 லட்ச ரூபாயும், மீனவ மகளிர் 50



ரூபாய் வருடத்திற்குச் செலுத்தினார்களானால் அவர்களுக்கு 2.50 லட்ச ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்த இரண்டு திட்டங்களிலேயும் மீனவர்கள் சேர்ந்து கொள்ளலாம் அல்லது ஏதாவது ஒரு திட்டத்திலும் சேர்ந்து கொள்ளலாம். இந்தத் திட்டத்திலே ஊனம் அடைந்தால் அதற்குத் தகுந்தாற்போல் நிவாரணம் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12-25

திருமங்கலம், விழுப்புரம் போன்ற பகுதிகளில் உள்நாட்டு மீன் பிடிப்பைத் தீவிரப்படுத்துவதற்காக உள்நாட்டு மீன்பிடிப்பு மற்றும் விற்பனைத் திட்டத்தின்கீழ்—இங்கே சிற்றாறு பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னார்கள். சிற்றாறு அணையில் தற்போது பழுது நீக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் அதில் மீன் குஞ்சுகள் எல்லாம் விடப்பட்டு மீன்கள் வளர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பல்வேறு பகுதிகளிலே இதுபோன்ற தொட்டிகள் எல்லாம் பழுதடைந்து இருப்பதன் காரணமாக—இப்போது புதிதாக மிதவைக் கூண்டுகளில் மீன் குஞ்சுகளை வளர்த்து விடுவதற்காக, 60 மிதவைக் கூண்டுகள் வாங்குவதற்கு 4.06 இலட்சம் ரூபாய்க்கு இந்த அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்த மீன்களைக் குளங்களில் கொண்டுபோய் இருப்பு செய்வதற்கும், மீன்களைப் பிடிப்பதற்கும் மற்றும் மீன்களைப் பத்திரமாகக் கண்காணிப்பதற்காகவும் கண்ணாடி நாரிழையிலான பரிசல்கள் 20 வாங்குவதற்கு 2.40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

மீனவ மகளிருக்கு அலுமினியப் பாத்திரங்கள், பாதி மானிய விலையில் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு இதுவரையில் 7500 மீனவ மகளிருக்கு அலுமினியப் பாத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பாத்திரங்களுக்கு மீனவ மகளிரிடையே நல்ல வரவேற்பு இருந்ததால் நடப்பு நிதியாண்டிலும் இரண்டாயிரம் மகளிருக்கு 3.00 இலட்சம் ரூபாய் அலுமினியப் பாத்திரங்கள் வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மதுரையில் பனிப்பொறி நிலையம் ஒன்று பழுதுபட்டு இருப்பதால் அந்தப் பனிப்பொறி நிலையத்தைச் சீர்படுத்தி அதனை மதுரை மண்டல உதவி இயக்குநர் அலுவலகமாக மாற்றுவதற்கு 6.00 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இன்னும், பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் உள்பொருத்தும், வெளிப்பொருத்தும் இயந்திரம் வழங்குவதற்கு 50 சதவிகித மானியத்தில், 12 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தில் இதுவரை, 12,837 இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு மீனவர்களுக்கு எந்த அரசுமே செய்யாத அளவிற்கு இந்த அரசு புதிதாகத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதன்படியே, நமது முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே, உள்நாட்டு மீனவர்களுக்கு முதன்முதலாக வீடு கட்டும் திட்டத்தில் 32 ஆயிரம் ரூபாய் செலவில் ஆயிரம் வீடுகள் மீனவர் சங்கத்தின் மூலம் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். இது உள்நாட்டு மீனவர்களுக்கு எந்த அரசுமே அறிவிக்காத ஒரு புதுத் திட்டமாகும். அதுமட்டுமல்லாமல், 1999-2000 ஆண்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு வலை வாங்குவதற்காக, ஒரு மீனவருக்கு 2500 ரூபாய் மானியத்தில், 500 மீனவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்டு, அதில் 492 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மிதி வண்டிகள் (Cycles) வாங்குவதற்கு, 450 ரூபாய் மானியம் வீதம் 202 பேர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. பாதி விலையில், 50 சதவீத மானியத்தில் அலுமினியப் பாத்திரங்கள் மகளிருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. 353 பேர்களுக்கு இந்தப் பாத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், மத்திய தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் உள்நாட்டு மீனவர்களுக்குத் திட்டங்கள் தீட்டுவதற்காக 589.67 இலட்ச ரூபாய் அளவில் திட்டங்கள் தீட்டப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வண்ண மீன் உற்பத்திக்காகச் சென்ற நிதிநிலை அறிக்கையில் 10 இலட்ச ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்திருந்தது. திருமூர்த்தி, ஆழியாறு போன்ற பகுதிகளில் வண்ண மீன் வளர்க்கும் திட்டம் உருவாக்கப்பட்டு, 21 வகையான வண்ண மீன்கள் சென்னையிலே விற்கப்பட இருக்கின்றன என்பதை உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன்.

அடுத்து டீசல் மானியம். டீசல் மானியத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு 80 சதவீதமும், மாநில அரசு 20 சதவீதமுமாகச் சேர்த்து விசைப் படகு மீனவர்களுக்கு இந்த மானியத்தை வழங்கி வந்தது.



டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 1990-91 ஆம் ஆண்டில்தான் மத்திய அரசு இந்தத் திட்டத்தை அறிவித்தது. அதன்பின் வந்த 5 ஆண்டு காலத்தில் ஒரே ஒரு முறைதான் அந்த அரசு இதை வழங்கியது. ஆனால் இந்த அரசு வந்தபின், ஒவ்வோர் ஆண்டும் அதற்குரிய மானியத்தை நாங்கள் மத்திய அரசிடமிருந்து பெற்று மீனவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். பாரம்பரிய மீனவர்களுக்கும் மண்ணெண்ணெய் வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது. அந்தத் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

பாகிஸ்தானில் வாடுகின்ற மீனவர்கள், இலங்கையில் வாடுகின்ற மீனவர்களைப்பற்றியெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். இலங்கையில் உள்ள மீனவர்களைப் பொறுத்தவரையில், அங்கேயிருக்கின்ற 17 மீனவர்களில் ஒருவர் இறந்துவிட்டார், அவரைப் பற்றிச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். இறந்தவரை அடக்கம் செய்வதற்காக, விமானத்தின் மூலமாக திருச்சிக்கு அனுப்பப்பட்டு, திருச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மீன் துறையின் உதவி இயக்குநர்களின் உதவியுடன் அந்த மீனவரின் மனைவி கேட்டுக்கொண்ட கோவில்பட்டி, இலுப்பையூரணி என்ற இடத்திற்கே நாங்கள் கொண்டுசென்று கொடுத்து, அந்த இறுதிச் சடங்கை முடித்திருக்கிறோம். மீதமுள்ள மீனவர்களை மீட்டுவருவதற்கு உடனுக்குடன் மத்திய அரசிற்குத் தெரிவித்து, மத்திய அரசின் கவனத்தை ஈர்த்து, இலங்கைக்கு நாங்கள் தெரிவித்து அவர்களைக் கூடியவிரைவில் மீட்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதற்கான கடிதத்தையும் எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன்.

பாகிஸ்தான் மீனவர்களைப் பொறுத்தவரை, 10-4-2000 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, 8-வது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றதற்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக தொலைபேசியிலே தொடர்புகொண்டவுடன், அந்த வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்ட நம்முடைய முதல்வர் அவர்கள், அந்த வாழ்த்துக்களுடன்மட்டும் இருந்துவிடாமல், இந்த மீனவர்களின்

பிரச்சினையையும் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, தீவிரமாக முயற்சி செய்து, அவர்களும் நடவடிக்கை எடுத்து, அவர்களை மீட்டுவர வேண்டுமென்று அந்தத் தருணத்திலேயும் கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க தமிழக அரசும், மத்திய அரசும் வெளி விவகாரத் துறையின் மூலமாக மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகளின் காரணமாகவும் மீனவர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கடிதம் மூலமாகவும், தொலைபேசியிலும் தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டதாலும், பாகிஸ்தானில் காவலில் வைக்கப்பட்டுள்ள 19 மீனவர்கள் பாகிஸ்தானிலுள்ள கராச்சியிலிருந்து 23-4-2000 அன்று காலை 4-45 மணிக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஐ.சி.632 மூலம் மும்பை விமான நிலையத்திற்கு அனுப்பப்படுவார்கள் என்றும், பின்பு மும்பை விமான நிலையத்திலிருந்து, அன்று காலை 9-20 மணிக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஐ.சி.671 மூலம் சென்னை விமான நிலையத்திற்கு அனுப்பப் படவுள்ளதாகவும் மத்திய அரசு வெளிவிவகாரத் துறையின் `Fax' செய்தி, நேற்றையதினம், 17-4-2000 அன்று மாலை பெறப்பட்டது. மும்பைக்கு வந்துசேரும் 19 மீனவர்களையும் சென்னைக்கு அழைத்து வருவதற்காக சென்னையிலிருந்து மீன் துறையின் துணை இயக்குநர் ஒருவரை மும்பைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 19 மீனவர்களும் மும்பையிலிருந்து 23-4-2000 அன்று காலை 11-05 மணிக்கு சென்னைக்கு வந்து சேரும் வகையில் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று மத்திய அரசின் செய்திக் குறிப்பிலிருந்து எங்களுக்குத் தகவல் வந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தகவலின் அடிப்படையில், நிச்சயமாக மீனவர்களை மீட்டுவிடுவோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்காக எவ்வளவு முயற்சி செய்தார்கள் என்பதை நினைவுகூர்ந்து மீனவ மக்கள் சார்பாக அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன்.

அடுத்து புதிய திட்டங்கள். புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள்.

விபத்துக் காலத்தில், மீனவ ஆண்கள் மட்டுமே இறக்க மாட்டார்கள். பெண்களும் இறப்பார்கள் என்று கருதி, பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள், மீனவ மகளிருக்கும் தமிழக அரசே காப்பீடு செய்து, அதற்கான Premium செலுத்தி, விபத்தில் இறக்கும் காலத்தில் மீனவ மகளிருக்கு 15,000 ரூபாய் அளிப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். பகுதி ஊனம் அடைந்தால் 7,500 ரூபாயும் அளிக்க இருக்கிறார்கள். ஆகவே அதற்கும் மீனவ மகளிர் அனைவரும் நன்றிக்

223306



கடன் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மீனவக் குடும்[illegible] இருக்கின்[illegible] சூழ்நிலையை, அவர்கள் வருமானத்தில் பின்னடைந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு மீனவ சங்கத்தில் உள்ளவர்களின் குடும்பத்தினர் யாராவது இறந்தால் அவர்களுக்கு இறுதிச் சடங்கு செய்வதற்காக 500 ரூபாய் வழங்குவதற்கும் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்பதை உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொண்டு, இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை டாக்டர் கலைஞர் அவர்கள் மீனவர்களுக்காகத் தந்திருக்கிறார்கள்.

பல உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் தந்திருக்கிறீர்கள். இந்த வெட்டுத் தீர்மானங்கள் மட்டுமல்லாமல், கோரிக்கைகளும் பல தந்திருக்கிறீர்கள். இந்த வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில், நான் அவ்வளவையும் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்ததில், பலவற்றை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் கருத்துகளை நாங்கள் கேட்டிருக்கிறோம். அந்தக் கருத்துகளை மனதில் வைத்துக்கொண்டு, வருங்காலங்களில், மீனவ சமுதாயத்திற்கு இந்த அரசு, இந்தத் துறை பாடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அரசு கோரிய தொகையை வழங்குமாறு கேட்டு, எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-35*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 19 மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலேயிருந்து மீட்டு வருவதற்காக எடுத்திருக்கிற முயற்சிகளுக்கு நன்றி. பாராட்டுக்கள். அவர்கள் நலமாக வந்து சேர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த பெருமுயற்சிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, மீனவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் கடலிலே மீன் பிடிக்கச் செல்கிறபோது, அங்கே விபத்துகள் மூலம் காலமாகிவிடுகிறார்கள். அவர்கள் உடலைக் கொண்டுவந்து, மீண்டும் பிரேதப் பரிசோதனை செய்யப்படும் என்று சொல்கிறபோது, ஒரு பரபரப்பான சூழ்நிலை அந்தப் பகுதியிலே ஏற்படுகிறது. எனவே அப்படித் தவறி விட்டவர்களுக்கு பிரேதப் பரிசோதனை இல்லாமல், அவர்களை அடக்கம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

D V21',31' P60 P00.97.1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒரு மருத்துவர். உங்களுக்குத் தெரியாததல்ல. அவர்களுக்குக் கடலிலே விபத்து நடந்தாலும் சரி, தரையிலே விபத்து நடந்தாலும் சரி, பிரேதப் பரிசோதனை கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த நிதியைத் தருவதால், நிச்சயமாக அந்தச் சான்றிதழ் வேண்டும். அப்படி அவர்கள் கடலிலே இறந்தவர்கள் என்றாலும், அந்தப் பகுதிக்கே மருத்துவர்கள் வந்து, ஒரு ஆய்வை நடத்தி, ஒரு சான்றிதழ் தந்துவிடுகிறார்கள். அதுதான் நடக்கிறது. ஆனால் உறுப்பினர் கருதுவதுபோல, அவர்களின் உடல் வந்தவுடன், அதனை மருத்துவமனைக்கே கொண்டு செல்லத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"ஓங்க லிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்-ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் ஒன்று-ஏனையது
தன்னே ரிலாத தமிழே"

அந்த அன்னைத் தமிழை வணங்கி,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்ற புறநானூற்று வரிகளுக்கு ஒப்ப, உலக உயிர்களைக் காத்து வருவது, நெல்லும், நீரும் மட்டுமல்ல; பரந்த உலகின் நிலப்பரப்பில், நாட்டை ஆளுகின்ற சிறந்த ஆட்சித் தலைவர்களின், மன்னர்களின் சிறந்த காவற் சிறப்பாலேயே இந்த உலகம் நிலைபெறுகிறது.

சமூக நீதிகள் காக்கப்படுவது, தனி மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவது, சமுதாய ஒற்றுமைகள் உறுதிபடுத்தப்படுவது, பெண்கள், அறவோர் போற்றப்படுவது, ஏழையெளியவர்களின்பால் கனிவான பார்வை, ஏற்றத்தாழ்வற்ற சமுதாய ஒப்புரவு, அறியாமை, வறுமை, பசிப் பிணி போக்கும் வளமார் செயல் திட்டம், குற்றம் களைதல்,



கொடியோரைத் தண்டித்தல், இவையெல்லாம் குடிதழுவிக் கோலோச்சும் மாநில மன்னனின் முறைசெய்து காப்பாற்றும் காவற் சிறப்பின் இலக்கணங்கள். நான் சொன்ன இந்த அரச நீதிகள் எல்லாம், மக்கட் பண்புகள் எல்லாம், ஜனநாயக நெறிமுறைகள் எல்லாம், இன்றையதினம் ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பவையாக இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கின்றன என்று சொன்னால், அதற்கு ஒரேயொரு காரணம், தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, போர்க்களங்களே வாழ்க்கையாக அமைத்துக்கொண்ட தமிழினப் போராளி, தன்னிகரற்ற தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இந்தநேரத்திலே சொல்லிக்கொண்டு, இந்த மாமன்றத்திலே, ஐந்தாவது முறையாக, மானியக் கோரிக்கையை அளிப்பதற்கான வாய்ப்பினைத் தந்தமைக்காக, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கால்நடை வளர்ப்பு மானியக் கோரிக்கை எண் 22, கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக என்னுடைய பதிலுரையை இங்கே அளிக்கிறேன்.

அய்யன் வள்ளுவனாம் குறளோனுக்குச் சிலை வடித்தது மட்டுமல்ல; குறள் வழி அரசாகவே இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்பதற்கு ஒப்ப, உழவர் சந்தை திட்டங்கள்;

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்பதற்கு ஒப்ப, பெரியார் நினைவு சமத்துவபுர திட்டங்கள்;

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பதற்கு ஒப்ப, வருமுன் காப்போம் திட்டங்கள்; வாழ்வொளித் திட்டங்கள்;

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

என்பதற்கு ஒப்ப, மக்களுக்கு மட்டுமல்ல; வாய் பேசா உயிரினங்களாகிய கால்நடைகளுக்கும் நலம் பேணும் ஒப்பரிய திட்டம்தான், மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்புக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம். இந்தக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு இந்தத் துறையின் சார்பாக உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூறாண்டு கால வரலாறு உடையது, இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறை. இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறையினுடைய வரலாற்றில் ஒப்பரிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்குப் பின்பு, புத்தாயிரம் ஆண்டில், புத்துணர்ச்சியும், புத்தெழுச்சியும் பெற்று, மஞ்சி விரட்டிலே பாய்ந்தோடுகின்ற மயிலைக் காளையைப் போல், இந்தத் துறை சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

*பிற்பகல் 12-40*

கால்நடைகள், செல்வங்கள். காடுகள் கழனிகள் எப்படி நமக்குச் செல்வங்களோ, அதைப்போல கால்நடைகளும் நமக்குச் செல்வங்கள் என்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றத்தில் 18-1-2000 நாளன்று இந்தக் கால்நடைச் சிறப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றுகின்றபோது நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கால்நடைகள் செல்வங்கள்தான் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளை இங்கே சொன்னார்கள். அவர் அறிவித்த இந்தக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் என்பது தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், திங்கள்தோறும், தொலைதூரங்களில் இருக்கும் கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள், கிளை நிலையங்கள் இல்லாத பகுதிகளில் இருக்கின்ற கால்நடைகளுக்கு, தொலைதூரங்களிலே இருக்கின்ற கால்நடைகளுக்கு சிகிச்சை செய்கின்ற சிரமத்தைக் குறைப்பதற்கு ஏதுவாக இந்த இலவச சிகிச்சை முகாம்கள், சிறப்புக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டங்கள் பயன்பட்டு வருகின்றன. இன்றையதினம் பல்வேறு இடங்களில் 846 சிகிச்சை முகாம்கள் தமிழ்நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இங்கே சொன்னார்கள்; விழா, விழா என்று சொன்னார்கள். இது விழா அல்ல. சிகிச்சை முகாம். இதுவரை ஆட்டினம், கோழியினம் மற்றும் இதர இனங்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைப் பணி 2,66,953; ஆண்மை நீக்கப்பணி 23,503; செயற்கை முறை கருவூட்டல் 11,089; சினைப் பரிசோதனை 60,661; மலட்டுத்தன்மை சிகிச்சை 59,918; குடற்புழு நீக்கம் 13,79,955; தடுப்பூசிப் பணிகள் 11,29,962. இந்த சிகிச்சை முகாம்களில்



பயனடைந்த மொத்தக் கால்நடைகளின் எண்ணிக்கை 29,32,041. இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.2.31 கோடி.

இந்தக் கால்நடைச் செல்வங்கள் தொன்றுதொட்டு மக்களுடைய பயன்பாட்டில் சிறப்பாக விளங்கி வந்து கொண்டிருக்கின்றன. வேளாண் பெருமக்களுக்கு எல்லா நிலைகளிலும் உறுதுணையாக இருந்து வந்து இருக்கின்றன. வண்டியிழுப்பதற்கும், உழவு செய்வதற்கும், புரத சத்துமிக்க உணவு வகைகளான பால், முட்டை, இறைச்சி போன்ற பொருட்களைத் தருவதற்கும், கால்நடைகளிலிருந்து கிடைக்கின்ற உபரிப் பொருட்களான தோல், எலும்பு, ரோமம், சாணம் போன்ற பொருளாதாரமிக்க பொருட்களைத் தருவதற்கும் இந்தக் கால்நடைகள் சிறப்பாகப் பயன்படுகின்றன. கிராமியப் பொருளாதாரத்தில் கால்நடைகள் சிறப்பான பங்கை வகிக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் கால்நடை வளர்ப்பு என்பது பண்டு தொட்டு ஒரு துணைத் தொழிலாக இருந்து வந்த நிலை மாறி, இப்போது தனித் தொழிலாக உருவெடுத்து, தோல் பதனிடுதல், முட்டைப் பொருட்கள் உற்பத்தி செய்தல், கோழிப் பண்ணை வைத்தல், பால் பண்ணை வைத்தல் போன்ற பல்வேறு தொழில்களாக வடிவெடுத்து இன்றையதினம் படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கும் வேலைவாய்ப்பை அளிக்கின்ற ஒரு நிலையை உருவாக்கி இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

ஆடுகள், மாடுகள், எருமைகள், கோழிகள், நாய்கள், பன்றிகள் போன்ற கால்நடைகளின் வளர்ச்சிக்கும், மருத்துவப் பாதுகாப்பிற்கும் மிகுந்த பயனை விரைந்து தரக்கூடிய உயர்ந்த ரகக் கலப்பினப் பெருக்கங்களை இனப்பெருக்கம் செய்வதற்கும் இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறை சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டு வருகின்றது. நோய்த் தடுப்புப் பணிகள் செய்தல், நோய்ப் புலனாய்வு செய்தல், செயற்கை முறை கருவூட்டல், சினைப் பரிசோதனை, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், மலட்டுத்தன்மை நீக்கம் போன்ற காரியங்களும், ஈனியல் சம்பந்தமான அறுவைச் சிகிச்சைகளும், அறுவைச் சிகிச்சை முறைகளும் செய்யப்படுகின்றன. இதுமட்டுமல்லாது பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், பல்வேறு ஒருங்கிணைந்தத் திட்டங்களை எல்லாம் இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறை சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டு வருகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறை மானியத்தின்மீது இன்றையதினம் 13 மாண்புமிகு உறுப்பினர்கள் சிறப்பாகப் பேசினார்கள். அப்படிப் பேசுகின்றபோது, கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் புதியதாகத்

தொடங்க வேண்டுமென்றும், மருந்தகங்கள், மருத்துவமனைகளுக்கு கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டுமென்றும், கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களிலே கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், கால்நடைகள் வாங்குவதற்கு கடன் வழங்க வேண்டுமென்றும் சொன்னார்கள்.

அடுத்து, கால்நடை மருத்துவர்கள் நேற்றையதினம் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். மாநில அரசினுடைய ஐந்தாவது ஊதியக்குழு நியமிக்கப்பட்டபொழுதே, அந்த ஊதியக் குழுவில் கால்நடை உதவி மருத்துவர்கள், வேளாண் அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் எல்லாம் ஒரே ஊதியத்தினுடைய சமநிலையிலே வைத்துப் பரிசீலிக்கப்பட்டது. அதற்குப் பின்னால், ஒரு நபர் குழுவிலே, அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டபொழுதும் பரிசீலிக்கப்படவில்லை. இப்போது, ஒரே நிலையில், ஊதிய சம நிலையில் கால்நடை உதவி மருத்துவர்கள், வேளாண் அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள் இருக்கின்ற காரணத்தினால், இவர்களுக்கு எல்லாம் அளிக்கும்போது ஒட்டுமொத்தமாக நிதிச் சுமை ஏற்படும் என்று நிதித் துறையின் சார்பிலே மறுக்கப்பட்டபின்பும், சென்னை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். 16 பேர்கள் வழக்குத் தொடுத்து, நீதிமன்றத்திலே அந்த வழக்கு இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

அடுத்து இந்த மாமன்றத்தில், 1-3-2000 அன்று உரையாற்றிய மேதகு ஆளுநர் அவர்கள்.

பிற்பகல் 12-45

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையில், நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் அவர்கள், கால்நடை உதவி மருத்துவர்களுக்கு, மத்திய அரசுக்கு இணையான சம்பளத்தைக் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் கவனத்திலே கொண்டு அந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13-4-1998 நாளிட்ட ஆணையின் வாயிலாக, கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ரூ. 2000-60-2300-75-3200-100-3500 என்றிருந்த ஊதிய



நிலை மாறி, ரூ. 6500-200-10500 என்ற ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே அந்த ஊதியக் குழுவிலே, உதவிப் பொறியாளர்கள், வேளாண் அலுவலர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள் எல்லாம் ஒரே நிலையில் பரிசீலிக்கப்பட்டு, ஒரே ஊதிய சமநிலையில் வைக்கப்பட்டனர். எனவே அந்த அளவில்தான் ஊதியக் குழு பரிசீலித்தது என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு clarification....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஓர் அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்களுடைய சம்பளத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறியாளர்கள் போன்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, சம நிலையில்தான் இது பரிசீலிக்கப்பட்டது என்று கூறினார்கள். ஏற்கெனவே இந்த அவையிலேயே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட, மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை வழங்குவதற்கு பரிசீலிக்கப்படுவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, அவர்கள் மனம் மகிழத்தக்க வகையிலே, நிச்சயமாக இது பரிசீலிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசுக்கு இணையான சம்பளத்தை கால்நடை மருத்துவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேச்சில் மாற்றம் இல்லை. பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னோர் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் இப்படி அனுமதி கேட்டுக்கொண்டேயிருந்தால் நேரமாகிவிடும். (குறுக்கீடு) அமைச்சர் பேசி முடிக்கட்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** 1-3-2000 அன்று இந்த மாமன்றத்தில் உரையாற்றிய மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்:

"கால்நடைச் செல்வத்தின் தரத்தையும் வளத்தையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள இந்த அரசு, மாநிலத்தில் உள்ள சுமார் 2 கோடி கால்நடைகளின் நலத்தைப் பாதுகாக்க, தொலைநோக்குப் பார்வையுடன் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்கியுள்ளது. கால்நடை மருந்தகத்தை எளிதில் சென்றடைய வசதியில்லாத தொலைதூரத்திலுள்ள கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்டு, அந்தக் கிராமப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கும் வகையில் சிறப்பு கால்நடைப் பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் கால்நடை வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் ஒரு புதிய கொள்கையை மாண்புமிகு முதலமைச்சரின் வேண்டுகோளைத் தொடர்ந்து மாநிலத் திட்டக்குழு வகுத்துக் கொண்டிருக்கின்றது" என்பதனை அரசின் கொள்கையாக வெளியிட்டார்கள்.

அதற்கொப்ப 12-4-2000 அன்று மாநிலத் திட்டக் குழுவால், கால்நடைத் துறையின் உயர்மட்ட அலுவலர்களோடு ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, இதற்காகத் தயார் செய்யப்பட்ட விளக்கக் குறிப்புகள்மீது ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், கால்நடை ஆய்வு பற்றிய கண்காணிப்பும் நோய் ஆய்வு செய்து அறிவிக்கப்படும் முறைகளும் நவீனமயமாக்குதல்; ஏற்றுமதி வாய்ப்புகள் பெருகும் வகையில் நோய் புலனாய்வும், நோய்த் தடுப்பு முறைகளும் மேற்கொள்ளுதல்; கால்நடை சிகிச்சையில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் நோய் கண்டறியவும், நோய் சிகிச்சைக்கும் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள கால்நடை நிலையங்களில் உரிய நவீன வசதிகள் செய்து தருதல்; இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையத்தில் உள்ளீட்டு வசதிகள் உயர்த்தப்பட்டு, பன்னாட்டு தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் பெறும் வகையில் நோய்த் தடுப்பு மருந்துகள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்குத் தயாரித்தல்; கருமாற்றத் தொழில்நுட்பம் கால்நடைப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டு, கால்நடைகள் உற்பத்தித் திறன் உயர்த்தப்படுதல்; ஒருங்கிணைந்த சினைப்பருவம் அறிவியல் முறைப்படி கொண்டு வரப்பட்டு செயற்கை முறை கருவூட்டல் நடைபெறாத பகுதிகளில் பெரும்பான்மை கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் செய்தல்; இறைச்சிக்காகவே பெரும்பாலும் வளர்க்கப்படும் செம்மறி மற்றும் வெள்ளாடு கலப்பு இனப்பெருக்கம் மேற்கொள்வது மற்றும் கோழி வளர்ப்பு பரவலாக்கப்படுதல்; புரதப் பற்றாக்குறை இல்லாத அளவில் செயல்பாடுகள் வளர வேண்டிய



அவசியத்தைக் கருத்தில் கொள்ளுதல் ஆகியன குறித்து வரைவுத் திட்டம் தயாரிக்க மாநிலத் திட்டக் குழுவினால், தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சி குறித்து கால்நடைத் துறையின் பங்களிப்புக்கு இடமளித்து 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பிற்பகல் 12-50

திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டியில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையை மேம்படுத்தி தென்மாவட்டங்களில் உள்ள கால்நடைகளின் தரத்தினை உயர்த்திடவும், ஆடுகள் வளர்ப்பு மையம் ஒன்றை ஏற்படுத்திடவும், அதிகப் பயன் நல்கிடும் கோழியினங்களை அப்பகுதிகளில் உள்ள கோழி வளர்ப்போருக்கு வழங்கிட மையம் அமைத்திடவும், கால்நடைகளை அதிக அளவில் தாக்கிடும் நீலநாக்கு நோயினைச் சமாளிக்க வட்டார ஆய்வுக்கூடம் ஏற்படுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் அறிவித்தார்கள். அதனையொட்டி சில திட்டங்களைச் செயல்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். அவற்றை இறுதியில் தெரிவிக்கவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடைப் பராமரிப்புத் துறை. கால்நடைச் செல்வங்களைப் பாதுகாக்க பன்முக மருத்துவமனைகள் 3, பெரு மருத்துவமனைகள் 24, மருத்துவமனைகள் 141, கால்நடை மருந்தகங்கள் 838, கிளை நிலையங்கள் 2,126, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கால்நடை விரிவாக்க அலுவலர்களால் கால்நடை சிகிச்சைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு நடமாடும் ஆய்வுக்கூட மருந்தகங்கள் 4 வாகன வசதியோடு கூடியது 383. நடமாடும் மருந்தகப் பிரிவு இதர வகை 54, வேலூர்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் பேசி முடித்துவிடட்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மைக் குழுவினால் தமிழகத்திலே

2,722 கால்நடை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தாயிரம் ஆண்டிலே தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கின்ற புதிய கால்நடை மருந்தகங்கள் எத்தனை, மருத்துவமனைகள் எத்தனை என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இந்த 2,722 என்ற இலக்கினை நாம் எப்போது எட்டப் போகிறோம்? இந்தப் புத்தாயிரம் ஆண்டிலே எந்த ஒரு புதிய மருந்தகமும் திறக்கப்படுகிற செய்தி இந்த அறிக்கையிலே இல்லை. இந்த 2,722-க்கு 1,006 தான் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறது. எப்படி இந்த அரசு சரி செய்யப் போகிறது என்பதனை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு ஆட்சியிலே தொடங்கப்பட்ட புதிய மருந்தகங்கள் 106. இந்த நான்காண்டு காலத்தில் தொடங்கப்பட்ட கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் 173. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாயிரத்து சொச்சம் மருந்தகங்கள் மத்திய அரசினுடைய கொள்கைப்படி திறக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். படிப்படியாக நிதி நிலைமைக்கு ஏற்ப, அவை திறக்கப்படும். அதனுடைய முன்னோடியான திட்டம்தான் இப்போது விரைவுபடுத்தப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல்...

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இந்த ஆண்டு ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** நிதி நிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இந்த ஆண்டு ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** அதையெல்லாம் பின்னால் என்னுடைய பதிலுரையில் பார்த்துக்கொள்ளலாம்; அறிவிப்பிலே பாருங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** எந்தவொரு மருத்துவமனையும் திறக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் பேசி முடிக்கட்டும்.



**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** வேலூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு நவீன விஞ்ஞான ஆய்வுக்கூட உபகரணங்களைக் கொண்டு நோய ஆய்வுப்பணி மேற்கொள்ள நடமாடும் ஆய்வுக்கூடங்கள் 4, கருவூட்டல் நிலையங்கள் 3,572 ஆகியவை கால்நடைகளின் சிகிச்சைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அதேபோல் புதிய பெரு மருத்துவமனைகள், மருத்துவமனைகள், மருந்தகங்கள், பார்வைக் கிளை நிலையங்களைப் பொறுத்தவரையில் கடந்த 4 ஆண்டு காலத்தில் தோற்றுவித்த அளவு, கடந்த 10 ஆண்டுகாலத்திலே யாரும் செய்ய முடியாத சாதனையாக, 173-ஐத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், மிகப் பெரிய சாதனையைச் செய்து தலைவர் கலைஞர் அவர்கள்தான் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் புதிய வேலைவாய்ப்புகள். நான் ஏற்கெனவே சொன்னேன், கடந்த 10 ஆண்டு காலத்திலே ஒரு கால்நடை மருத்துவர்கூட பணி நிரந்தரம் செய்யப்படவில்லை, எடுக்கப்படவில்லை இந்தத் துறையின் சார்பாக என்று. தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி ஏற்பட்ட பின்பு 1998-99 ஆம் ஆண்டு 174 கால்நடை மருத்துவர்கள் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கின்ற ஒரே ஆட்சியும், தலைவர் கலைஞருடைய ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் கால்நடைப் பண்ணைகள். நீண்ட காலமாக தினக் கூலிப் பணியாளர்களாக இருந்த 1,185 நபர்களை 10 ஆண்டு காலத்திற்கு மேலாக பணிபுரிந்தவர்களில் 877 பேருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணி நிரந்தரம் செய்ய ஆணையிட்டு, அவர்கள் 1997-98 ஆம் ஆண்டில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட ஆட்சியும் தலைவர் கலைஞருடைய ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல இறந்துபோன 181 அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்புத் தந்ததும் இந்தத் தலைவருடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இந்த 4 ஆண்டு காலத்திலே செய்த சாதனைகளை எடுத்துக்கொள்வோமானால், செல்லப் பிராணிகளான நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே மருத்துவத்திற்கு அனுமதிக் கட்டணமாக ரூபாய் 5 வசூலிக்கப்பட்டு வந்தது. 1996-லே தலைவர் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பின்பு அந்த 5 ரூபாய் கட்டணத்தை முதன்முதலாக இரத்து செய்தார்கள்.

பிற்பகல் 12-55

கால்நடை ஒன்றுக்கு குடற்புழு நீக்கத்திற்கு ரூ.1 வீதம் வசூலிக்கப்பட்டு வந்தது கடந்த ஆட்சிக் காலத்திலே. தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு அந்த ஒரு ரூபாயை இரத்து செய்ததன் அடிப்படையில், 3,62,37,000 கால்நடைகள் இந்தத் திட்டத்தினால் பயன்பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு, கோவை மாவட்டங்களில் ஐரோப்பிய பொருளாதாரக் குழும நிதியுதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, கோவை மாவட்டத்தில் 120 பயனாளிகளும், ஈரோடு மாவட்டத்தில் 142 பயனாளிகளும், ஆக மொத்தம் 262 பயனாளிகள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பயனடைந்துள்ளனர்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள சுமார் 3,000 கிடேரிக் கன்றுகளுக்கு தாது உப்புகள் இலவசமாக வழங்கப்பட்டன. இத்திட்டத்திற்காக அரசு செலவிட்ட தொகை ரூ.5.4 இலட்சம் ஆகும்.

திருச்சிராப்பள்ளி, கரூர் மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றுக்கு 20 பயனாளிகள் வீதம் 400 பேருக்கு ஆட்டுக் கிடாக்கள் வழங்கப்பட்டு, இத்திட்டத்திற்காக அரசு செலவிட்ட தொகை ரூ.8.70 இலட்சம் ஆகும்.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உபரி வைக்கோலை ஊட்டச் சத்துள்ளதாக மாற்ற செயல் விளக்கப் பண்ணைகள் அமைத்து, மாவட்டத்திற்கு தலா 250 விவசாயிகள் வீதம் 1,000 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். இதற்காக அரசால் செலவிடப்பட்ட தொகை ரூ. 5 இலட்சம் ஆகும்.

கால்நடை மருத்துவமனைகளுக்கு தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் வளர்க்கப்படும் பசுவினங்களுக்கு கலப்பினக் கருவூட்டல் செய்திட ரூ.15 இலட்சம் செலவில் 300 பொலி காளைகள் முற்போக்கு விவசாயிகளுக்காக வழங்கப்பட்டிருக்கின்ற ஆட்சியும் இந்த ஆட்சிதான்.

ஓசூர் பண்ணையில் குதிரையினப் பெருக்கத்திற்காக 2 ஆண் குதிரைகளும், 11 பெண் குதிரைகளும் வாங்க ரூ.9 இலட்சம் செலவிடப்பட்டது. தற்போது இப்பண்ணையில் 4 ஆண் குதிரைகளும், 11 பெண் குதிரைகளும், 5 குட்டிக் குதிரைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



டென்மார்க் நாட்டு நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம். டேனிடா நிதியுதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம், 1-8-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஆறு ஆண்டுகால அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் இரண்டாவது கட்டமாக 1-12-1997 முதல் 7 ஆண்டு காலத்தில் 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ரூ.27.50 கோடி செலவில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை 188 தொடர் பணியாளர் தம்பதிகளுக்கும், 4,146 விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டன.

1999-2000 ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் வெறி நாய்க்கடி மருந்து ரூ.4.35 இலட்சம் செலவில் வாங்கி, சிகிச்சையளித்திட இருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையில் ஏற்காடு மலை, அருணூத்து மலை, பச்சை மலை, கல்ராயன் மலை, கொல்லி மலை, சித்தேரி மலை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை ஆகிய இடங்களில் வாழும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு இத்திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மானியத்திலும், விழுப்புரம், கல்ராயன் மலைப் பகுதிக்கு மட்டும் 75 விழுக்காடு மானியத்திலும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.68.99 இலட்சம் செலவில் 150 பயனாளிகளுக்கு கறவை மாடுகளும், 240 பயனாளிகளுக்கு ஆடு அலகுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல் மலைவாழ்ப் பகுதித் திட்டம். சிகிச்சைப் பணிகள், பால் உற்பத்தி, முட்டை உற்பத்தியிலும் பல்வேறு சாதனைகளை அளித்திருக்கின்ற ஆட்சிதான் தலைவர் கலைஞருடைய ஆட்சி. அதேபோல இராணிப்பேட்டையைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இராணிப்பேட்டையிலே அமைந்துள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் 7 வகையான நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகளையும், 11 வகையான வைரஸ் நோய்த் தடுப்பு மருந்துகளையும், நோய் கண்டறியும் சாதனங்களோடு உற்பத்தி செய்து வருகிறது.

1999-2000 ஆண்டில் மொத்தம் ரூ.2,53,40,000 மதிப்பில் 5 கோடியே 99 லட்சம் டோசஸ் பல்வகை நோய்த் தடுப்பு ஊசீர் மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டன. இவற்றில் ரூ.1,95,16,141 மதிப்புள்ள 3,07,25,000 டோசஸ்

பல்வகை நோய்த் தடுப்பு ஊநீர் மருந்துகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. மேலும் 2,76,62,261 டோசஸ் பல்வகை நோய்த் தடுப்பு ஊநீர் மருந்துகள் வெளிச் சந்தையில் ரூ.44,70,169-க்கு விற்பனை செய்யப்பட்டன.

கால்நடைப் பண்ணைகள் சுமார் 11 செயல்பட்டு வருகின்றன. கால்நடைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், கால்நடை மருத்துவம், விலங்கின அறிவியல் மற்றும் மீன் வளம் போன்ற பல்வேறு நிலைகளில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகின்றது. கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில், தலைவர் கலைஞர் ஆட்சியில் மூன்று ஆண்டு காலத்தில் மாணவர்களின் பருவக் கட்டணத்தை ரூ.1500-லிருந்து ரூ.1000-ஆகக் குறைத்தார்கள். பி.வி.எஸ்சி. இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களுக்கான-பயிற்சிக்கான உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.250 ஆக இருந்ததை ரூ.750 ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். கிராமப்புற மாணவர்களுக்கு பி.வி.எஸ்சி. பட்டப் படிப்பில் சேர 15 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்படவும், பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த முதல் மதிப்பெண் பெறும் 10 மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கவும் கருணையோடு ஆணையிட்டார்கள்.

*பிற்பகல் 1-00*

மாணவர்கள் கல்வி உதவித் தொகை. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 950 மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் 20 இலட்சம் அளவில் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போல கால்நடைப் பல்கலைக்கழகத்திற்கு பட்டுக்கோட்டை அழகிரியின் பெயரால் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்து அறக்கட்டளை ஒன்று தொடங்கப்பட்டு அதன் வழியே கிடைக்கப்பெறும் வட்டித் தொகை மூலம் சிறந்த மாணவர்களுக்கு கல்வி பயில முழு உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டு இன்றையதினம் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 16 மாணவர்களும், நாமக்கல்லில் 12 மாணவர்களும், தூத்துக்குடியில் 5 மாணவர்களும் ஆக மொத்தம் 33 மாணவர்கள் உதவித் தொகை பெற வழி வகுத்து உள்ளார்கள். அதைப்போல இன்னும் பல்வேறு நலத் திட்டங்களை, செயற்கரிய சாதனைகளை இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறை செய்திருக்கிறது. இந்தத் துறையில் சில அறிவிப்புகளை இங்கே நான் சொல்ல இருக்கிறேன்.

ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள பயன் தராத கால்நடைகளுக்குப் பதிலாக புதிய கால்நடைகள் வாங்குதல் ரூ.5.98



இலட்சம் இந்த ஆண்டில் ஆணையிடப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கிறது.

கால்நடை தீவன மேம்பாடு வழங்குதல் திட்டம். கால்நடை தீவனப் பெருக்கத்திற்காக ரூ.3.70 இலட்சம், அதைப்போல கால்நடை மருத்துவப் பணிகள், 15 மண்டல அலுவலகங்களின் நிருவ கத் தகவல் ஏற்பாட்டு முறையை நவீனப்படுத்துவதற்காக ரூ.15.50 இலட்சம்.

செயற்கை முறை கருத்தரிப்பு, நோய்க் கிருமிகளை நீக்குதல், தடுப்பூசி போடுதல் போன்ற கால்நடை வளர்ப்பு நடைமுறைகள் பற்றி இரண்டு மாவட்டங்களில் உள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல், ரூ.2.57 இலட்சம்.

ஊசி மருந்துகள் தயாரிக்கும் வகையில் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் தற்போதுள்ள மருந்தாக்கு ஆய்வுக்கூடப் பிரிவில் மேம்பாடு செய்வதற்கான திட்டங்கள், ரூ.10.00 இலட்சம். துறைக் கையேட்டினைத் திருத்தியமைத்தல், ரூ.3.75 இலட்சம்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நுண்ணுயிரியல் துறையில் ஆட்டு கொள்ளை நோய்க்கான வீரியம் குறைக்கப்பட்ட உயிர் நச்சுயிரிகளைக் கொண்ட தடுப்பூசியினைத் தயாரித்தல்; களநிலைகளில் அதன் மதிப்பீடு மற்றும் தர நிர்ணயம் அளித்தல் ரூ.11.95 இலட்சம். ஆக மொத்தம் 53.44 இலட்சம் ரூபாயை கருணையோடு அளித்திருக்கிறார்கள்.

அதைப்போல தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக நீதி அரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் சொன்ன அறிக்கையின்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதையொட்டி ஒரு புதிய திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு இந்த ஆண்டு அபிசேகப்பட்டி பண்ணையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது.

கம்பளி இன சோக்லா ஆடுகளை மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் 660 பயனாளிகளுக்கு ஆண்டுதோறும் வழங்கிடவும் அதேபோன்று வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள 300 விவசாயிகளுக்கு அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் ஒவ்வோர் ஆண்டும் 15 நாட்கள் கால்நடை வளர்ப்பு குறித்த பயிற்சி அளித்தும், பயிற்சி முடிந்தவுடன் ஒரு பயனாளிக்கு ஒரு கிடாவும் 4 பெட்டை ஆடுகளும் மூன்றில் ஒரு பங்கு மானிய விலையில் ஆண்டுதோறும் வழங்கிடவும், மேலும் தென்

மாவட்டங்களிலுள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில் புறக்கடை கோழி வளர்ப்பு மூலம் வருவாய் கிடைக்க வழி செய்திட ஒரு பயனாளிக்கு 10 கிரிராஜா கோழிக் குஞ்சுகள் வீதம் ஆண்டொன்றுக்கு 2400 பயனாளிகளுக்கு வழங்கிடவும், தென் மாவட்டங்களில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நீலநாக்கு நோய் தோன்றி பெரும் பாதிப்பு ஏற்படுத்த முக்கியக் காரணமாயிருந்த கூலிகாயிட்ஸ் என்ற ஒருவகை கொசுக்களை ஒழித்து ஆடுகளை நீலநாக்கு நோய் பாதிக்காத வண்ணம் கொசு ஒழிப்பு மருந்துகளை ஆடுகள் நிறைந்த பகுதிகளில் தெளிக்கவும், நீலநாக்கு நோய் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், மேலும் திருநெல்வேலி அபிசேகப்பட்டிப் பண்ணையில் நீர்ப்பிரி முகடு வசதிகளை செய்வதற்காகவும் மொத்தம் 82 இலட்சம் ரூபாயும் அதைப்போல இப்போது தென் மாவட்ட மக்களுடைய பொருளாதார வளர்ச்சிக்காக நீதி அரசருடைய அறிக்கையை அடுத்து இந்தக் கால்நடைப் பராமரிப்புத் துறையில் கருணையோடு அந்தப் பகுதி மக்களுக்காக அளித்த தொகைக்கு அந்தப் பகுதி மக்கள் எல்லாம் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பு மருந்திற்காக சென்ற ஆண்டு ரூ. 4.3 இலட்சம் வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து இந்த ஆண்டு 29 மாவட்டங்களுக்கும் வெறி நாய்க்கடி மருந்துகளை இருப்பு வைப்பதற்காக ஆணையிட்டுள்ளார்கள்.

மொத்தத்தில் அனைத்துத் துறைகளிலும் ஆற்றல் முத்திரைகளைச் செய்திருக்கின்ற நம்முடைய தலைவர் அவர்கள் 76 ஆண்டுகால வாழ்க்கை வரலாற்றில்

'எண்ணற்ற இன்ப துன்பங்களை நுகர்ந்து
ஏராளமான வெற்றி தோல்விகளைப் பகிர்ந்து
தொலைவிலே இருந்தாலும் தொய்வின்றிப் பழகி
நன்றிப் பெருக்காளர் நயங்கண்டு தெளிந்து
நெருக்கத்தில் இருந்தாலும் துரோகிகளைப் புரிந்து
துதிபாடித் துதிபாடிச் சுதிவிட்டுத்தமை நீங்கி மதி கெட்டு
அதிதூரம் மறைந்துமே போனாலும்
கதியென்று வரும்போது கண்ணீரைத் துடைத்து
கருணைப் பொழிவோடு கைகோர்த்து கனிந்து
தமிழ் என்னுஞ் சொல்லுக்குத் தலைப்பாகி நின்று
தலைப்பின்றித் திரிந்திட்ட தமிழ்தேச மாந்தர்க்கு மலைப்பாகி



இனங்காக்கத் தனலாகக் கனன்று
பெரியாரை அண்ணாவை பேச்சில் மட்டல்லாமல்
உயிரோட்டக் கொள்கையாய் உணர்விலே பயின்று
சாமானிய மக்களின் வாழ்வில் நம்பிக்கைகளை வளர்த்து
சாமானிய மக்களின் பேராதரவையும் பெரும்நம்பிக்கையையும் பெற்று
நான்காவது தடவையாக இன்று முதலமைச்சராக பொறுப்பு ஏற்றது மட்டுமல்ல.
சாமானிய மக்களுக்காக அல்லும் பகலும் உழைத்து
ஐந்தாவது முறையாகவும் இங்கே முதலமைச்சராக
பொறுப்பேற்று வர இருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள்
பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க, வாழ்க'! (மேசையைத் தட்டும் ஒலி)

என்று வாழ்த்தி இந்தத் துறையின் சார்பாகத் தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று—இங்கே தந்திருக்கின்ற கருத்துகளை எல்லாம் எதிர்காலத்திலே அவை உரம் ஏறிய கருத்துகளாகக் கொண்டு நான் நிறைவேற்றுவேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு—அரசு கோரிய தொகையை ஒதுக்கித்தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி வணக்கம்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) இல்லை, நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஒரேயொரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே மணி *1-05* ஆகிவிட்டது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புத்தாயிரம் ஆண்டின் முதல்நாள் முக்கடல் சூழும் குமரிமுனையில் முப்பால் யாத்த அய்யன் திருவள்ளுவருக்கு வானுயர் சிலை நிறுவி வான்புகழ் படைத்திட்ட ஐந்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, ஐந்தாவது முறையாக பால்வளத் துறை மானியத்தின் மீதான விவாதத்திற்கு இம்மாமன்றத்தில் பதிலுரையாற்றுகின்ற நல்லதொரு வாய்ப்பினை எனக்கு வழங்கிய, தமிழக மக்களின் நல்வாழ்விற்கு தொலைநோக்குத் திட்டங்களை வழங்கி, இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லா மாநிலத்தவரும் பாராட்டும் வண்ணம் செயலாற்றி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தமிழ்நாட்டில் சுமார் 42 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1958 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பால்வளத் துறையானது, 1981 ஆம் ஆண்டில் குஜராத் மாநிலம் ஆனந்த் நகரில் செயல்பட்டுவரும் அமுல் பாணியில் மூன்றடுக்கு முறையிலான கூட்டுறவு அமைப்பாக மாற்றப்பட்டு மூன்றடுக்கு முறையில் செயலாற்றி வருகிறது.

கிராம அளவில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களாகவும், மாவட்ட அளவில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களாகவும், மாநில அளவில் ஒன்றியங்களை ஒருங்கிணைத்து, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமாகவும் வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

பால்வளத் துறையானது, பாலை உற்பத்தி செய்யும் விவசாயிகளும், அந்தப் பாலை விநியோகம் செய்திடும் விற்பனையாளர்களும், ஆவின் பால் அருந்தி மகிழ்ந்திடும் நுகர்வோர்களும், இணைந்து நாள்தோறும் காலை, மாலை இரண்டு வேளையும் செயலாற்றும் சிறப்புக்குரிய அமைப்பாகும் என்பது பெருமைக்குரியதாகும்.

பால்வளத் துறையின் தலையாய குறிக்கோள்களான, தமிழ்நாட்டின் கிராமங்களில் வசிக்கும் பால் உற்பத்தியாளர்களாகிய ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்குக் கட்டுப்படியாகும் நியாயமான விலை கிடைத்திடவும், நுகர்வோருக்கு சீரான முறையில் சுகாதாரமான, தரமான, பால் மற்றும் பால் உப பொருட்கள் நியாயமான விலையில் கிடைத்திடவும் தலைவர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இத்துறை நேர்மையாகவும், தூய்மையாகவும் செயலாற்றி வருகிறது.

நமது முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களால் பெயர் சூட்டப்பட்டு, தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு நுகர்வோரின் நாவின் சுவை கூட்டிடும் சொல்லாக ஆவின் திகழ்கிறது.

தற்போது சென்னை நீங்கலான 28 மாவட்டங்களுக்கும் சேர்த்து, மாவட்ட அளவிலான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், 17 மட்டும் நிர்வாக வசதிக்காக ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

தற்போது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்



ஆகியவற்றை கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், 1988 மற்றும் பால் கூட்டுறவுகளின் துணை விதிகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய முக்கிய பணிகளை பால் பெருக்குத் துறை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் தற்போது 10,554 முதன்மைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

கால்நடைகளுக்கு செயற்கைக் கருவூட்டல் கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்படுகிறது. 1999-2000 ஆண்டில் உறைவிந்து மூலம் 10.55 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த நிதியாண்டில், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் நடமாடும் கால்நடை சிகிச்சைப் பிரிவிலுள்ள நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் மூலம் 8.80 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

செயற்கைக் கருவூட்டலின் பயனாக கடந்த நிதியாண்டில் 1 லட்சத்து 13 ஆயிரத்து 446 வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு 14 இலட்சத்து 60 ஆயிரம் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் TADHCO நிறுவனம் மூலம் வழங்கப்படும் கறவை மாடுகளுக்கான மானியம் 3,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு கறவை மாடு வாங்குவதற்காக மானியத்துடன்கூடிய கடன் தொகை 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாகக் கடந்த நிதியாண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1-10

பால் விற்பனை விலை குறித்து சில விவரங்களைத் தங்களின் கவனத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். 3 சதவிகித கொழுப்புச்சத்து மற்றும் 8.5 சதவிகித இதரச் சத்து நிறைந்த பதப்படுத்திய பால் லிட்டர் ஒன்றுக்கு பிற மாநிலங்களில் விற்பனை செய்யப்படும் விலை விவரம் பின்வருமாறு:

கர்நாடகா - 11.00 ரூபாய்; குஜராத் - 12.00 ரூபாய்; கேரளா - 13.00 ரூபாய்; ஆந்திரா - 13.00 ரூபாய்; புதுடில்லி - 13.00 ரூபாய்; சண்டிகார் - 13.00 ரூபாய்; மகாராஷ்டிரா - 13.00 ரூபாய்; மேற்கு வங்காளம் - 13.00 ரூபாய்; ஆனால் தமிழ்நாட்டில் இதே தரமுள்ள பால் விலை லிட்டர் ஒன்றுக்கு 10 ரூபாய் 50 காசுகள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று 4.5 சதவிகித கொழுப்புச்சத்து, 8.5 சதவிகித இதரச் சத்து நிறைந்த பாலை இப்போது நாம் விற்பது 13 ரூபாய்க்கு. ஆனால் தனியார் விற்பது 16 ரூபாய்க்கு. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பால் விலை ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். இது என்ன நியாயம் என்று மாண்புமிகு ஞானசேகரன் போன்றவர்களை எல்லாம் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 7 ரூபாய் 51 காசிலிருந்து 9 ரூபாயாக நியாயமான முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் உயர்த்தி வழங்கியதன் காரணமாக கடந்த 18 ஆண்டு காலத்தில் பால்வளத் துறையின் வரலாற்றில் மைல்கல்லாக கடந்த நிதியாண்டில் நாளொன்றுக்கு சராசரியாக 16 இலட்சத்து 65 ஆயிரம் லிட்டர் என்ற அளவில் பால் கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளது.

மாவட்டங்களில் உற்பத்தியாகும் எல்லாப் பாலையும் மறுக்காமல் கொள்முதல் செய்ய வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் உத்தரவிடப்பட்டதால், உபரி பாலை பால் பொருட்களான பால் பவுடர், வெண்ணெய், நெய்யாக மாற்றி விற்பனை செய்வதன் மூலம் சுமார் 28 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இதுவும் பால் பண பட்டுவாடா தாமதத்திற்கு ஒரு காரணமாகும்.

மேலும் நுகர்வோர்க்குக் குறைந்த விலையில் பால் விற்பனை செய்வதாலும், பணியாளர்கள் சம்பளம், உள்ளீடு செலவுகள், இடுபொருட்கள் செலவுகள் உயர்ந்துள்ள நிலையில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணப் பட்டுவாடா செய்வதில் சில சங்கடங்கள் ஏற்பட்டன. பால் பணப் பட்டுவாடா நிலுவையைக் குறைத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் பட்டுவாடா நிலுவை சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் உபரி காலத்தில் நமது அண்டை மாநிலங்களான ஆந்திரம் மற்றும் கர்நாடகத்தில் பால் கொள்முதல் விலை குறைக்கப்பட்டது.



ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் பால் உபரி காலத்தில் பால் அதிக அளவில் கொள்முதல் செய்யப்பட்டபோதும், பால் உற்பத்தியாளர்களின் நலனில் அக்கறை கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, பால் கொள்முதல் விலை குறைக்கப்படவில்லை என்பதை இம்மாமன்ற வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாராளமயமாக்கல் கொள்கையின்படி, தனியார் பால் பண்ணைகள் புற்றீசல் போன்று தோன்றியுள்ள நிலையிலும், ஆவின் தனது பால் விற்பனையில் அதீத கவனம் செலுத்தி வருகிறது.

முதற்கட்டமாக குஜராத் மாநிலம் அமுல் நிறுவனத்திற்கு காற்றுப்புகாத வண்ணம் அமைக்கப்பட்ட (டெட்ராபேக்) பால் நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் வீதம் சேலம் பால் பண்ணையிலிருந்து வழங்க சேலம் நிறுவனம் ஒப்புக்கொண்டு, அமுல்-ஆவின் நிறுவனங்களிடையே 1-4-2000 அன்று கையொப்பமாகியுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது குஜராத் - தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் மட்டுமல்ல. இந்தியாவின் ஒரு கோடியில் உள்ள குஜராத் பால் உற்பத்தியாளர்களுக்கும், சேலத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமாகும்.

மேலும் அரியானா மாநில இணையத்திற்கு சேலம் பால் பண்ணையிலிருந்து 200 மில்லி சுவையூட்டிய பாலை டெட்ராபேக்கில் அடைத்து, ஐந்து இலட்சம் பாக்கெட்டுகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***அறிவிப்புகள்:*** திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்குப் புதியதாக பால் பண்ணை அமைக்கவும், பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், மத்திய அரசிடமிருந்து 8.86 கோடி ரூபாய் 100 சதவிகித மானியமாகப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதியாண்டில் பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992-ன்கீழ் மத்திய அரசின் 100 சதவிகித மானியத்தில் 69 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் மாதவரத்தில் சிறப்பு ஆணையரின் கட்டுப்பாட்டில் ஒரு மத்திய தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைக்கப்பட உள்ளது.

மேலும் பகுதி-1 திட்டத்தின்கீழ் மாதவரம் பால் பண்ணை வளாகத்தில் அமைந்துள்ள கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்,

சாலைகளைச் செப்பனிடுதல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்காக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு, பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு நடப்பு நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் அலுமினியம் பால் கொள்கலன்களும், 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால் தரம் அளக்கும் கருவிகளும், 3.5 இலட்சம் ரூபாய் செலவில் கணிப்பொறியுடன்கூடிய பால் சேகரிக்கும் நிலையங்களும், 10 இலட்சம் ரூபாய் செலவில் திரவ நைட்ரஜன் குடுவைகளும் வாங்கித் தரப்படும்.

நடப்பு நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த ஆயிரம் பால் உற்பத்தியாளர்களுக்கு, 2 ஆயிரம் கறவை மாடுகள் 80 இலட்சம் ரூபாய் மானியத்துடன் வாங்கித் தரப்படும்.

கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் மைய அரசின் நிதியுதவியின்கீழ், கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக, கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு சுமார் 1,350 நபர்கள் பயன்பெறும் வகையில் ஒரு கன்றுக்கு 12 ஆயிரத்து 420 ரூபாய் வீதம் 1 கோடியே 67 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட உள்ளது.

பிற்பகல் 1-15

TADHCO திட்டத்தின்கீழ், இந்நிதியாண்டில் ஐயாயிரம் பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் 4 கோடி ரூபாய் மானியத்தில் பத்தாயிரம் மாடுகள் வாங்கித் தரப்படும்.

1998-99 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக நிதியுதவியின்கீழ் கறவை மாட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயனாளிக்கும் 2 கறவை மாடுகள், மாடு ஒன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் கடனுதவி என்று 24 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. நடப்பு நிதியாண்டில் ஒவ்வொரு மாட்டுக்கும் கடன் தொகையானது ரூ. 12 ஆயிரத்திலிருந்து ரூ. 15 ஆயிரமாக உயர்த்தி 30 ஆயிரம் ரூபாயாக வழங்கப்படவுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ், இந்த நிதியாண்டில் 2,000



நபர்களுக்கு, 4,000 கறவை மாடுகள், ஒவ்வொரு நபருக்கும் 30 ஆயிரம் ரூபாய் வீதம் 6 கோடி ரூபாய் செலவில் கறவை மாட்டுக் கடன் நிதியுதவி அளித்திட பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இசைவளித்துள்ளது.

சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாகத் திகழும் இந்த அரசில், சிறுபான்மைச் சமுதாய மக்களின் பாதுகாவலனாகத் திகழும் தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்படி பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய மற்றும் கிருத்துவ பால் உற்பத்தியாளர்களின் தனி ஒதுக்கீடாக 250 நபர்களுக்கு 500 கறவை மாடுகள் வாங்கிட, 75 இலட்சம் ரூபாய் கடனுதவி, பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய பால் உபபொருட்கள். இனிப்பில்லாத யோகர்ட். பால் உபபொருட்களான ஐஸ்கிரீம் மற்றும் யோகர்ட் ஆகியவற்றை வயது முதிர்ந்தோர்கள் மற்றும் சர்க்கரை வியாதியுள்ளவர்கள் வாங்க முன்வருவதில்லை. இவர்களின் தேவைக்கேற்ப ஒரு புதிய பால் உபபொருள் இனிப்பில்லாத யோகர்ட் சென்னையில் அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டு, முதல்கட்டமாக இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கி அறிமுகம் செய்யப்படுகிறது.

சர்க்கரை கலந்த பால் பவுடர். இணையம் மூலம் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப உடனடியாக சூடான பானம் தயார் செய்வதற்கு ஏற்ப, ஒரு புதிய பால் பவுடர் (Dairy Whitner) அறிமுகம் செய்யப்படவுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் நிர்வாகச் சீர்கேடு என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்குப் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்னை மாநகரில் பால்கோவா, வெண்ணெய், நெய், ஐஸ்கிரீம் போன்ற பால் பொருட்கள் ஆவின் பாலகங்கள், கடைகள் மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் போன்ற முக்கிய வாடிக்கையாளர்களுக்கு தினசரி விநியோகம் செய்ய 16-8-1997 அன்று விநாயகா டிரான்ஸ்போர்ட் நிறுவனத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கு, வழித்தடத்திற்கு 418 ரூபாய் என்ற அடிப்படையில் 6 வண்டிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டன. இந்த ஒப்பந்தக்காரர் சரியான நேரத்தில் வண்டியைக் கொடுக்காத காரணத்தால், மிகுந்த முயற்சிகளின் பேரில் கிடைக்கப்பெற்ற இந்தியன் ஏர்லைன்ஸ்-ன் வியாபார ஒப்பந்தம், நேரம் கடந்து பால் பொருட்களைக் கொடுத்த காரணத்தால் இரத்து செய்யப்படும் சூழ்நிலை ஏற்பட்டது. விநாயகா டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தின் ஒப்பந்தம்

25-7-1998 அன்று இரத்து செய்யப்பட்டது. மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, மற்றொரு நிறுவனத்திடம் நாள் ஒன்றுக்கு 471 ரூபாய் ஒரு வழித்தடத்திற்கு என்ற அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதனால் 13 மாதங்களுக்குக் கூடுதலாக ஏற்பட்ட செலவுத் தொகையான 78,000 ரூபாயை விநாயகா டிரான்ஸ்போர்ட் நிறுவனத்திற்குச் சேர வேண்டிய தொகையில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே ஆவினுக்கு எந்தவிதமான நட்டமும் இல்லை. நிர்வாகச் சீர்கேடு எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே பால் வளம் பெருக்குவோம்; பால் நிலையை உயர்த்துவோம் என்ற கொள்கைக்கு வலிவு சேர்க்கின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளை எடுத்து வைத்தீர்கள். உங்களுடைய மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கவனத்தில் கொண்டு, இத்துறை மேலும் சிறப்பான முறையில் செயல்பட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் அவர்கள் 214 பொருட்களுக்கு இறக்குமதி வரிச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். அதிலே பால் பொருட்களும் அடங்கும் என்று நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லும்போதுகூட, இங்கிருக்கின்ற பால் பவுடர், பால், வெண்ணெய், நெய் போன்ற பொருட்கள் 28 கோடி ரூபாய்க்கு விற்காமல் தேங்கியிருப்பதால் பணம் பட்டுவாடா செய்ய இயலவில்லை என்று சொன்னார்கள். இவ்வளவு தேங்கிக் கிடக்கின்றபோது, நமது



இந்தியாவிலே உற்பத்தி செய்யப்பட்ட பால் பவுடர் தேங்கிக் கிடக்கின்றபோது, மத்திய அரசு தாராள வரிச் சலுகை அளித்து பால் பவுடரையும், பால் உற்பத்திப் பொருட்களையும், நெய், வெண்ணெய் போன்ற பொருட்களையும் வெளிநாடுகளிலிருந்து, ஐரோப்பிய நாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்கின்ற முடிவை எடுத்திருக்கிறது. இதனால் பால் உற்பத்தித் தொழில் நசிகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களுடைய மனசாட்சியே, மத்திய.....

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லிவிட்டீர்கள். இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள், வெளிநாடுகளிலிருந்து தாராள இறக்குமதி செய்கின்ற மத்திய அரசின் கொள்கை காரணமாக, உள்நாட்டிலே உற்பத்தியாகின்ற பால் மற்றும் பால் பொருட்களின் உற்பத்தி பாதிக்காதா என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார். மத்திய அரசாங்கமே இதை உடனடியாக உணர்ந்து, இரண்டு நாட்களிலேயே, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற உணவுப் பொருட்கள் எதுவாக இருந்தாலும், உள்நாட்டிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை மனதிலே கொண்டு, 60 சதவீதம் சுங்க வரியை (Excise Duty) விதித்திருக்கின்றார்கள். அப்படிச் சுங்க வரி விதித்ததன் காரணமாக, நம்முடைய உள்ளூரில் உற்பத்தியாகின்ற உணவுப் பொருட்கள் எதுவும் பாதிக்காது. ஏனென்றால் உதாரணத்திற்குச் சொல்கின்றேன். ஒரு லிட்டர் பால் உள்ளூரில் பத்து ரூபாய் என்றால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செயயும்போது அது எட்டு ரூபாய் என்றாலும், அதற்கு 60 சதவீதம் சுங்க வரி கட்டிவிட்டுக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டுவருகின்ற நேரத்திலே, நம்முடைய உள்நாட்டுப் பொருளைவிட வெளிநாட்டுப் பொருளை அதிக விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும். அப்படி அதை யாரும் வாங்க மாட்டார்கள். அதைத் தடுப்பதற்காகவும் இந்தக் கொள்கை, மத்திய அரசாலே, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களுடைய முயற்சியாலே நடைபெற்றிருக்கின்றது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) அவருக்காகச் சொல்கிறீர்களா? திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, பால் வளத்தைப் பெருக்குவதற்காக, மாடு வளர்ப்புக்காக, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) பணம் கொடுத்து உதவுகிறது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த 20 இளைஞர்கள் அதிலே பணம் பெற வேண்டுமென்று விண்ணப்பம் செய்தபோது, சமீபத்திலே அரசு ஆணை எண் 223, நாள் 20-8-1999 வெளியிடப்பட்டு, அந்தக் கடனை வழங்குவதற்கு அந்த ஆணை முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று சொல்லி, அந்தக் கடனை மறுத்துவிட்டார்கள். அண்மைக் காலத்திலே படித்த இளைஞர்கள் எல்லாம் மாட்டுப் பண்ணைகளை நவீனமாக அமைக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள். ஆகவே அந்த அரசு ஆணையை நீக்கி, அவர்களுக்குக் கடன் உதவி செய்வதற்கு அரசு உதவ முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்கு இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1998 ஆம் ஆண்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விற்பனை செய்யப்படும் பாலுக்கு, லிட்டர் ஒன்றுக்கு 50 பைசா மானியம் என்ற வகையில் ரூ. 30 கோடி ஆண்டு ஒன்றுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் 1998 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட மானியம் வெறும் 5 கோடி ரூபாய்தான். பிறகு கொடுக்கவில்லை. பிறகு 1999-2000 ஆண்டில், படிப்படியாக இந்த மானியத் தொகை உரிய வகையிலே அந்தச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படாத காரணத்தால், பணம் பட்டுவாடா செய்வதில் பால் உற்பத்தியாளர்களுக்கு இக்கட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு



முதல்வர் அவர்கள் அறிவித்தபடி ஆண்டுக்கு 30 கோடி ரூபாய் இந்தச் சங்கங்களுக்கு மானியமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-ல் அப்போது ஏற்பட்ட நஷ்டம் 5 கோடியே 70 இலட்சம் ரூபாய். ஆகவே அந்த அளவில்தான் மானியம் கொடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு அது 12 கோடி ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மாதிரி, 28 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டது. அந்த வகையில்தானே தவிர, 1998-ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கணக்கெடுக்கிறபோது, நஷ்டம் 5 கோடி ரூபாய்தான் வந்தது. அந்தப் பணத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது அளித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாராளமயமாக்கல் கொள்கை என்பது முக்கியமான பிரச்சினை என்பதால் சொல்கிறேன். பால் விலை நம்முடைய நாட்டிலே குறைந்திருக்கின்ற நேரத்தில், தருமபுரி, சேலம், ஈரோடு போன்ற இடங்களில் எல்லாம், இன்னும் தமிழ்நாட்டில் இருக்கிற பல ஊர்களில் எல்லாம் 100 கோடி ரூபாய்க்கு மேல் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து பால் உற்பத்தியாளர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. மூன்று மாத காலமாகியும்கூட இன்னும் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. பெரிய அளவிற்கு இப்போது பால் உற்பத்தியாளர்களான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் பால் உற்பத்தியாளர்களான விவசாயிகளுக்கு அந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? அதற்குரிய எந்தவொரு அறிவிப்பும் இல்லை. தாராளமயமாக்கல் கொள்கையைப் பொறுத்துக்கொண்டு, இப்போது கொழுப்பு இல்லாத பாலும், கொழுப்பு இல்லாத பால் பவுடர்களும் நம் நாட்டில் இருக்கிறவர்களால், தமிழ்நாட்டில் இருக்கிறவர்களால் விரும்பி வாங்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு மோகம் இப்போது வந்திருக்கிற காரணத்தால், நம் நாட்டினுடைய விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறீர்கள் என்பதற்குச் சரியான, தெளிவான கொள்கை இல்லை. இதுசம்பந்தமாக தாங்கள் அறிவிப்பீர்கள் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது 60 கோடி ரூபாய் நட்டத்தை பாக்கியிருக்கிறது. துறையாகச் செயல்படுவோமானால் பால் உற்பத்தி அதிகமாக உள்ள தருமபுரி, ஈரோடு, சேலம் போன்ற மாவட்டங்களில்தான் 10 கோடி, 10 கோடி என்றிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் இஎஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இஎஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரிமையாக இருக்கின்ற பாலைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏறக்குறைய 28 கோடி ரூபாய் நஷ்டம் வந்ததாகச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலே தனியார் பால் தயாரிப்பு நிலையங்களை ஆரம்பிக்கிறபோது அரசினுடைய அனுமதி எப்படி வழங்கப்படுகிறது? இப்போது ஆந்திராவிலிருந்து வருகின்ற, ஆந்திர முதலமைச்சருக்குச் சொந்தமானதாகச் சொல்லப்படுகின்ற ஹெரிடேஜ் பால் என்பது நம்முடைய ஆவின் பாலைவிட நன்றாக இருப்பதால் நம்முடைய ஆவின் பால் விற்பனை குறைந்துள்ளது என்று சொல்லப்படுகிறது. இவற்றையெல்லாம் போக்குவதற்கு அரசு முயற்சி செய்கின்றதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹெரிடேஜ் போன்ற மற்ற பால் பொருட்களுக்கு இந்த அரசினைப் பொறுத்தவரைக்கும் உரிமை வழங்கியதுகிடையாது; மத்திய அரசிலிருந்து பெறப்பட்டது. இருப்பினும், உண்மையான, நல்ல தரமான, தூய்மையான பால் ஆவின்தான். அது ஏதோ கெட்டியாக இருக்கிறது. அதனால் மக்களுக்கு மோசம்தான் வருகிறதே தவிர, வேறல்ல. ஆனாலும் உண்மையான, தூய்மையான, தரமான பால் ஆவின் என்பதை நீங்கள் எல்லாம் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக அங்கேயிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அந்த உணவுப் பொருட்களைப் பொறுத்தவரையில் 60 சதவிகிதம் Excise duty போட்டு, அதைக் கட்டுப்படுத்தி இருப்பதாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்



இங்கே விளக்கம் கூறினார்கள். இப்போது கோதுமையினுடைய விலை ரொம்பக் குறைவாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கும் இந்த மானியத்திற்கும் சம்பந்தம் இல்லை. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 21—மீன்வளம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21—மீன்வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். வெட்டுத் தீர்மானம் பேரவையின் பாலசுப்பிரமணியன் அவர்களுடைய திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. வெட்டுத் தீர்மானம் பேரவையின் திருஞானசம்பந்தம் அவர்களுடைய கருதப்படுகிறது அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக்

திரு. ந. கருப்பண்ணன் உடையார்

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி

திரு. கே. தங்கமணி இருக்கையில் இல்லை. திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.



டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மீனளம் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 49,82,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 22 - கால்நடை வளர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி இருக்கையில் இல்லை. திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.



திரு. மு. அப்பாவு இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி இருக்கையில் இல்லை. டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 175,87,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல் திட்டங்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி இருக்கையில் இல்லை. திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி இருக்கையில் இல்லை. டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 13,20,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

139. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் (1998-99). [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

88. மானியக் கோரிக்கை எண் 29—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (ஆங்கிலம்)

89. சமூக நலம் பற்றிய செயல்முறைத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

90. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மக்கள் சாசனம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

91. மானியக் கோரிக்கை எண் 10—பால் பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்குசெயல் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

92. மானியக் கோரிக்கை எண் 22—கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

93. கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

94. மானியக் கோரிக்கை எண் 21—மீன்வளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

95. மீன்வளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)





## இணைப்பு - I

*(8 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 10 -**

**பால் வழங்கு செயல் திட்டங்கள்**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001**

**முன்னுரை**

பால்வளத் துறை 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலாகச் சென்னையில் நவீன பால் பண்ணை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலம் ஆனந்தில் உள்ளதைப்போல் பால் கூட்டுறவுச் சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்குக் கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகவும், மத்தியில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல்மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

**பால்வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள்:**

(அ) நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குப்படுத்தப்பட்ட வணிக உதவிகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி செய்தல்.

(ஆ) நுகர்வோருக்குப் பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருட்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

**நடவடிக்கைகள்:**

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களைக் கருத்தில் கொண்டு பின்வரும் முக்கியமான நடவடிக்கைகள் பால்வளத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(அ) பால் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள அங்கத்தினர்களுக்குச் சொந்தமான கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ வசதி

அளிக்கப்படுகிறது. மேலும் செயற்கை முறைக் கருவூட்டல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல், அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடைப் பராமரிப்புப் பயிற்சி அளித்தல் ஆகியவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவைகள் அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும், அதன் மூலம் காலப்போக்கில் கறவைகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதலைக் கருத்தில்கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) அதிகப் பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும், பாலை விற்பனை செய்யவும், தகுந்த அளவில் உள்ளீடு வசதிகள் அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தும் ஆலைகள் அமைத்தல், நுகர்வோர் நலனுக்காக நவீன பால் விற்பனை முறையை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்தல் போன்ற வணிக நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விணையம் பால்வளத் திட்டங்களை தேசிய பால்வள மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் செயல்படுத்தியது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பால்வளத் துறையின் மூலம் மாநில/மத்திய திட்ட நிதியிலிருந்து பால்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

சில சிறப்புத் திட்டங்களான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஆதிதிராவிடர் நலத் திட்டம் முதலியன, சம்பந்தப்பட்ட துறைகளின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட, 23 பால்பத துணைப் பதிவாளர்கள் உள்ளனர். மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், செயற்கை முறைக் கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்புக் குழுக்களும், 13 நடமாடும் கால்நடைப் பிரிவுகளும், பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-operation flood area) விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.



தற்போது பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், 1988, பால் கூட்டுறவுகளின் தொடர்பான விதிகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய முக்கியப் பணிகளை பால்பெருக்குத் துறை மேற்கொள்கிறது.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலினை காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் மேற்படி சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு உறுப்பினரும் வழங்கும் பாலைப் பரிசோதித்து, அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் இடுபொருட்கள், மருத்துவப் பிரிவுகளில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகின்றது. மேலும், குறைந்த செலவில் செயற்கை முறைக் கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றது. இச்சங்கங்களின் செயலாளர்களுக்கு, சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு, செயற்கை முறை, கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்களுக்குச் சொந்தமாக முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளன. இக்கிராமச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில், உள்ளூர் உபயோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக்கொண்டு எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

**பால்வளத் துறையின் முன்னேற்றம் :**

அரசு திட்ட நிதி உதவியுடனும், மற்றும் பிற சிறப்புத் திட்ட ஒதுக்கீட்டுடனும், கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பால்வளத் துறை அடைந்துள்ளது:

| வ. எண். | இனம் | செயலாக்கம் (31-03-2000) | |
|---|---|---|---|
| 1. | முதன்மைச் சங்கங்களின் எண்ணிக்கை (நுகர்வோர் கூட்டுறவுகள் மற்றும் பால் வழங்கும் கூட்டுறவுகள் உள்ளடக்கியது) | 10554 | |
| 2. | மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 | |
| 3. | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 27.23 | இலட்சம் |
| 4. | பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்) நாள் ஒன்றுக்கு | 20.57 | இ.லி. |
| 5. | பால் கொள்முதல் (ஒன்றியம் அளவில்) நாள் ஒன்றுக்கு | 16.65 | இ.லி |
| 6. | சென்னை நகரத்தில் பால் விற்பனை நாள் ஒன்றுக்கு | 7.35 | இ.லி |
| 7. | பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை/ திறன் நாள் ஒன்றுக்கு | 20 / 28.39 | இ.லி. |
| 8. | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை/ திறன் நாள் ஒன்றுக்கு | 40 / 11.38 | இ.லி. |
| 9. | தானியங்கி பால் நிலையம் | 212 | இ.லி. |

(இ.லி.=இலட்சம் லிட்டர்கள்.)

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி :**

1998-99-ல் 282 சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-3-99 வரை 822 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட சங்கங்களில் 31-3-99 வரை 391 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் 387 கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-03-2000 வரை 325 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 31-03-2000 வரை 151 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.



**பால் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும் தமிழகத்தில் உள்ள ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள்/ஒன்றியங்கள்:**

| | | |
|---|---|---|
| அ) | பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 10488 |
| ஆ) | பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் | 3 |
| இ) | கூட்டுறவு பால் பண்ணை | 1 |
| ஈ) | பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 61 |
| உ) | கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம் | 1 |
| ஊ) | மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| எ) | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (மாநில அளவு இணையம்) | 1 |

**பால்பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் தொடர் திட்டப் பணிகள் :**

விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூரில் ரூ.465.50 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிதி நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்த தொகையில் 70 சதவீத தொகை ரூ.325.85 இலட்சம் கடனாக, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து பெற்றும், மீதித் தொகை ரூ.139.65 இலட்சம் மாநில அரசிடமிருந்து பங்குத்தொகை/ மானியமாக பெற்றும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற கூடுதல் வசதிகள் ஏற்பாடு செய்ய ஏதுவாக தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடம் கூடுதலாக ரூ.98.68 இலட்சம் கோரப்பட்டுள்ளது.

**கறவை மாடுகள் மானியம் மற்றும் கடன் திட்டம் :**

ஆதிதிராவிடர், கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோர்க்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. கறவை மாடு ஒன்றின் விலை ரூ.6,000-லிருந்து ரூ.12,000 என 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இதில் அரசு மானியம் ரூ.3000-லிருந்து ரூ.4000 என

[2000 ஏப்ரல் 18

உயர்த்தி 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள ரூ.8.000 வங்கிக் கடனாக வழங்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மை இனத்தவருக்கு, தேசிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மேம்பாட்டுக்கழகம் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார முன்னேற்றக்கழகம் ஆகியவை மூலம் 100% கடனில் கறவை மாடுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் ஒருங்கிணைந்த முகவர்களாக இருந்து செயல்படுத்தி வருகின்றன. 1999-2000 ஆம் நிதியாண்டில் இத்திட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இலக்கு எண்ணிக்கை கறவை மாடுகள் | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | ஆதிதிராவிடர் நலத் திட்டம் | 2000 | 80.00 |
| 2. | ஆதிதிராவிடர் இனத்திலிருந்து கிறிஸ்துவர்களாக மதம் மாறியவர்கள் | 36 | 1.44 |
| 3. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சிறுபான்மை இனத்தவருக்கு கறவை மாடுகள் வழங்குதல். | 4500 | 513.00 |
| 4. | தாட்கோ நிதியுதவியுடன் | 10000 | 400.00 |
| 5. | கன்று வளர்ப்புத் திட்டம் (தாட்கோ) | 1350 | 167.67 |

### பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள்:

தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த 8607 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு ஆணை எண். 160, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 27-9-1996-ன்படி அனைத்து உறுப்பினர்களும், தேர்தலில் போட்டியிடவும் வாக்களிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டு 8594 சங்கங்களுக்கும் பிப்ரவரி 97-ல் தேர்தல்கள் நடத்தப்பட்டு தற்போது ஜனநாயக முறைப்படி அனைத்து உறுப்பினர்களாலும்



2000 ஏப்ரல் 18]

தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகக் குழுவினரால், பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது இதில் 84 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பல்வேறு நிர்வாகக் காரணங்களால் இத்துறையைச் சார்ந்த தனி அலுவலர்களின் பொறுப்பில் உள்ளன. சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தவிர ஏனைய 16 ஒன்றியங்களுக்கு நிர்வாகக் குழு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்று நடத்தி வருகிறார்கள்.

### தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைத்தல்:

பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 1992-ன் கீழ் மாதவரத்தில் சிறப்பு ஆணையரின் கட்டுப்பாட்டில் ஒரு மத்திய தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் ரூ.69.78 இலட்சம் செலவில் மத்திய அரசின் 100% மானியத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பகுதி 1 திட்டம்:

பகுதி 1 திட்டத்தின் கீழ் 2000-2001 ஆம் ஆண்டுக்கான ரூ.19.20 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு முன்மொழியப்பட்டுள்ளது. இத்தொகை மாதவரம் பால் பண்ணையில் கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல், சாலைகளைச் செப்பனிடுதல் மற்றும் பழுது பார்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படும். மேற்காண் பணிகளுக்காக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பகுதி 2 திட்டம்:

பகுதி 2 திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.60.00 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் கருத்துரு முன்மொழியப்பட்டது. இத்தொகையில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் பெற்றுத்தரும் பொருட்டு, ரூ.10.00 இலட்சம் செலவில் அலுமினியம் பால் கொள்கலன்கள் வாங்கி வழங்குதல். ரூ.10.00 இலட்சம் செலவில் பால் தரமளக்கும் கருவிகள் வாங்கி வழங்குதல், ரூ.3.50 இலட்சம் செலவில் கணிப்பொறியுடன் கூடிய பால் சேகரிப்பு நிலையம் வாங்கி வழங்குதல், ரூ.10.00 இலட்சம் செலவில் திரவ நைட்ரஜன் குடுவைகள் வாங்கி வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

[2000 ஏப்ரல் 18

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்:**

1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாள் முதல் பால் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய வணிக சம்பந்தமான நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் செய்து வருகிறது. தேசிய பால்வள வாரிய நிதி உதவியுடன் இவ்விணையம் கீழ்க்காணும் 23 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பால்வள மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்தியது. இத்திட்டம் 31-03-96 உடன் முடிவடைந்தது:

1. சென்னை
2. காஞ்சிபுரம்
3. திருவள்ளூர்
4. விழுப்புரம்
5. கடலூர்
6. வேலூர்
7. திருவண்ணாமலை
8. தர்மபுரி
9. சேலம்
10. நாமக்கல்
11. ஈரோடு
12. கோயம்புத்தூர்
13. மதுரை
14. தேனி
15. திண்டுக்கல்
16. நீலகிரி
17. திருச்சிராப்பள்ளி
18. கரூர்



2000 ஏப்ரல் 18]

19. பெரம்பலூர்
20. தஞ்சாவூர்
21. திருவாரூர்
22. நாகப்பட்டினம்
23. புதுக்கோட்டை

சென்னை நீங்கலாக மற்ற 28 மாவட்டங்களுக்கும் நிர்வாக வசதிக்காக 17 மாவட்ட அளவிலான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் கீழ்க்கண்டவாறு இயங்கி வருகின்றன:

1. காஞ்சிபுரம் - திருவள்ளூர்
2. விழுப்புரம் - கடலூர்
3. வேலூர் - திருவண்ணாமலை
4. தர்மபுரி
5. சேலம் - நாமக்கல்
6. ஈரோடு
7. கோயம்புத்தூர்
8. மதுரை - தேனி
9. திண்டுக்கல்
10. நீலகிரி
11. திருச்சிராப்பள்ளி - கரூர் - பெரம்பலூர்
12. தஞ்சாவூர் - திருவாரூர் - நாகப்பட்டினம்
13. புதுக்கோட்டை
14. விருதுநகர்
15. சிவகங்கை-இராமநாதபுரம்
16. திருநெல்வேலி-தூத்துக்குடி
17. கன்னியாகுமரி

[2000 ஏப்ரல் 18

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஆனால் பசுவினம் மற்றும் எருமையினக் கறவைகளின் தரத்தை உயர்த்தத் தேவைப்படும் உறைவிந்து தயாரிக்கத் தேவையான பொலிகாளைப் பண்ணைகள், உறைவிந்து நிலையங்கள் போன்ற பொதுவான வசதிகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அமைத்து நிர்வகித்து வருகிறது. தற்சமயம் இவ்விணையத்தின் கீழ் நான்கு இடங்களில் பால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு: 1) அம்பத்தூர் பால் பண்ணை நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்டது. 2) மாதவரம் பால் பண்ணை நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்டது. 3) சோழிங்கநல்லூர் பால்பண்ணை நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்டது. மேற்குறிப்பிட்டுள்ள பால் பண்ணைகள் பாலைப் பதப்படுத்தி பாலித்தீன் பைகளில் நிரப்பி சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விற்பனை செய்து வருகின்றன. 4) அயனாவரத்தில் நாளொன்றுக்கு 12,000 லிட்டர் பாலைப் பதப்படுத்தும் திறன் கொண்ட பால் பண்ணையில் பால் பொருட்களான சுவையூட்டிய தயிர் (யோகர்ட்), ஐஸ்கிரீம், பால்கோவா ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைத்து வழிநடத்தி அவற்றிற்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக திட்டமிடல், பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளையும் இயந்திர சாதனங்கள் நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் பணிகளையும் "டர்ன்கீ" (Turnkey) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும், பால் பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி போன்ற பால் பொருட்களையும், இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.

**மாவட்ட ஒன்றியங்களில் கொள்முதல் :**

தமிழக அரசும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமும் தக்க சமயத்தில் பாலுக்கு நல்ல கொள்முதல் விலை கொடுத்ததின் மூலம் 1999-2000 ஆம் ஆண்டில், மார்ச் 2000 முடிய நாளொன்றுக்கு 16.65 இலட்சம் லிட்டர் என்ற அளவில் பாலை



2000 ஏப்ரல் 18]

கொள்முதல் செய்து சாதனை படைத்துள்ளன.

**மாவட்ட ஒன்றியங்களால் கொள்முதல் செய்யப்பட்ட பாலின் விவரம்:**

| மாவட்ட ஒன்றியம் | 1999-2000 (மார்ச் 2000 முடிய) நாளொன்றுக்கு சராசரியாக (ஆயிரம் லிட்டர்கள்) |
|---|---|
| 1. காஞ்சிபுரம்-திருவள்ளூர் | 41 |
| 2. விழுப்புரம்-கடலூர் | 129 |
| 3. வேலூர்-திருவண்ணாமலை | 250 |
| 4. தர்மபுரி | 164 |
| 5. சேலம்-நாமக்கல் | 287 |
| 6. ஈரோடு | 196 |
| 7. கோயம்புத்தூர் | 119 |
| 8. நீலகிரி | 19 |
| 9. மதுரை-தேனி | 97 |
| 10. திண்டுக்கல் | 40 |
| 11. திருச்சி-கரூர்-பெரம்பலூர் | 185 |
| 12. தஞ்சாவூர்-திருவாரூர்-நாகப்பட்டினம் | 18 |
| 13. புதுக்கோட்டை | 7 |
| 14. சிவகங்கை-இராமநாதபுரம் | 21 |
| 15. விருதுநகர் | 12 |
| 16. திருநெல்வேலி-தூத்துக்குடி | 70 |
| 17. கன்னியாகுமரி | 10 |
| மொத்தம் .. | **1665** |

[2000 ஏப்ரல் 18

**பால் கொள்முதல் விலை :**

பால் உற்பத்திக்குத் தேவைப்படும் தீவனம் மற்றும் இடுபொருட்கள் மற்றும் கால்நடைப் பராமரிப்புச் செலவின் உயர்வைக் கருத்திற்கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை 07-04-98 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது :

| காலம் | எருமைப் பால் (கொழுப்புச் சத்து கிலோ ஒன்றுக்கு) | ஒரு லிட்டரின் விலை | பசும்பால் கிலோ மொத்த திடப்பொருள் (கிலோ ஒன்றுக்கு) | ஒரு லிட்டரின் விலை |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 07-04-1998 | 135.00 | 9.45 | 57.74 | 7.51 |
| முதல் | லிருந்து | லிருந்து | லிருந்து | லிருந்து |
| இன்று வரை | 156.28 | 10.94 | 69.23 | 9.00 |

**விற்பனை விலை :**

பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலைஉயர்வு, மின் கட்டணம், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் பாலித்தீன் பை தயாரிப்பதற்குத் தேவையான பாலித்தீன் பிலிம் போன்றவற்றின் விலை அதிகரிப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பால் விற்பனை விலை 16-04-1998 முதல் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது:

| | பாலித்தீன் பைகளில் | தானியங்கி நிலையங்களில் |
|---|---|---|
| | (லிட்டர் ஒன்றுக்கு) | |
| பால் அட்டை | ரூ. 10.50 | ரூ. 10.50 |
| ரொக்கத்திற்கு | ரூ. 11.00 | ரூ. 10.50 |

மேற்படி பால் விற்பனை விலை ஏற்றத்திற்குப் பிறகும், பெரும்பாலான மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, பால் விற்பனை விலை தமிழ்நாட்டில் குறைவாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



2000 ஏப்ரல் 18]

**விற்பனை-பால் :**

1999-2000 ஆம் ஆண்டில், மார்ச் 2000 முடிய, இணையம் சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 7.35 இலட்சம் லிட்டர் பாலை விற்பனை செய்துள்ளது. சென்னை நகரில் நுகர்வோர் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு, 212 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், 275 கண்ணாடியிழை பிளாஸ்டிக் தொட்டிகள், 512 பூத்துக்கள் மற்றும் 34 பாலகங்கள் மூலம் பால் விற்பனை செய்யப்படுகிறது. சென்னை மற்றும் அதன் புற நகரங்களிலும் 34 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்படுகிறது.

பால் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப, இணையம் 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து மற்றும் 8.5 விழுக்காடு இதரச் சத்து கொண்ட நிலைப்படுத்திய பாலை சென்னை நகர நுகர்வோருக்கு விற்பனை செய்து வருகிறது. சராசரியாக நாளொன்றுக்கு 41,000 லிட்டர் நிலைப்படுத்திய பாலை பாலித்தீன் பைகள் மூலம் விற்பனை செய்து வருகிறது. இணையம் மேலும் 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து மற்றும் 9 விழுக்காடு இதரச் சத்துக் கொண்ட பிரீமியம் பாலை 01-10-1999 முதல் நுகர்வோருக்கு சென்னையில் விற்பனை செய்து வருகிறது. நாளொன்றுக்கு சுமார் 68,000 லிட்டர் பிரீமியம் பால் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள், பால் தொட்டிகள் மற்றும் பாலித்தீன் பைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறாக 3 விழுக்காடு கொழுப்புச் சத்து, 8.5 விழுக்காடு இதரச் சத்து கொண்ட சமன்படுத்திய பாலும், 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து, 8.5 விழுக்காடு இதரச் சத்துக் கொண்ட நிலைப்படுத்திய பாலும், 4.5 விழுக்காடு கொழுப்புச் சத்து, 9 விழுக்காடு இதரச் சத்து கொண்ட பிரீமியம் பாலும் மற்றும் 6 விழுக்காடு கொழுப்புச் சத்து 9 விழுக்காடு இதரச் சத்து கொண்ட கொழுப்பு செறிந்த பாலும், சென்னை மாநகரில் விற்பனை செய்யப்படுகிறது. நுகர்வோர்கள் தங்கள் தேவை மற்றும் பண வசதியைப் பொறுத்து மேற்கண்ட நான்குவகை பாலில் ஏதேனும் ஒன்றை அவரவர் விருப்பத்திற்கேற்ப வாங்கிக்கொள்கிறார்கள்.

பால் அட்டைகள் வழங்குவதிலிருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் முழுமையாக நீக்கப்பட்டு, தற்போது மாதம் முழுவதும் பால் அட்டைகள் தாராளமாக வழங்கப்படுகின்றன.

இது தவிர சென்னை பெருநகரில் இயங்கும் வட்டார பால் விற்பனை அலுவலகங்கள் மூலமாக 5 லிட்டர் பால் வாங்குவதற்குரிய பால் அட்டைகள் தேநீர் விடுதி, பணிமனை சிற்றுண்டி சாலை மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 18

மேலும் சென்னையில் முகவர்கள் மூலமாகவும் பால் விற்பனை செய்யப்படுகிறது. தற்சமயம் 25 முகவர்கள் நியமனம் செய்யப்பட்டு, நாளொன்றுக்கு சுமார் 25,000 லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. அவ்வாறு முகவர்கள் மூலம் விற்பனை செய்யப்படும் பால் விற்பனையில், நிலையான முன்னேற்றம் காணப்படுகிறது.

**தானியங்கி பால் வழங்கும் நிலையத்தில் மாறுதல் :**

தற்சமயம் பால் மட்டும் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலமாக விற்கப்பட்டு வருகிறது. தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் விற்பனை செய்யும் பாலைத் தவிர பால் பாக்கெட்டுகள் மூலம் விற்பனை செய்யவும், பால் உபபொருட்கள் விற்பனை செய்யவும், ஏற்கெனவே இயங்கிவரும் தானியங்கி பால் வழங்கும் நிலையங்களை அதற்கேற்ப மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக சில தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில் குளிர்சாதன இயந்திரங்கள் பொருத்தப்பட்டு ஐஸ்கிரீம், கோவா, வெண்ணெய் மற்றும் நெய் போன்ற பால் உபபொருட்கள் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக 15 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களிலும், இரண்டாவது கட்டமாக 17 தானிங்கி பால் வழங்கும் நிலையங்களிலும் மேற்கண்டவாறு மாறுதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பால் பொருட்கள் விற்பனை :**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் 17 மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்கள் இணைந்த தலைமை நிறுவனமாகும். அரசாணை எண் 555, விவசாயம் (பா.உ.1), நாள் 21-3-80-ன்படி, சென்னை பெருநகரில் பால் விற்பனையை மேற்கொள்வதும், அதனுடன் இணைந்த மாவட்ட ஒன்றியங்கள் உற்பத்தி செய்த பால் பொருட்களை விற்பனை செய்வதும் இணையத்தின் பொறுப்பாகும். 17 மாவட்ட ஒன்றியங்களில், சேலம், ஈரோடு, மதுரை மற்றும் தர்மபுரி ஒன்றியங்களில் சமன்படுத்தும் பால் பண்ணைகள் (பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகள்) உள்ளன. மற்ற ஒன்றியங்களிலுள்ள உபரி பால், அருகிலுள்ள பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகளுக்கு எடுத்து செல்லப்பட்டு, பால் பொருட்களாக மாற்றப்படுகின்றன. இப்பால் பொருட்களை உற்பத்தி செய்யும் பால் பண்ணைகள் உள்ளூர் பால் விற்பனை போக எஞ்சியுள்ள பாலிலிருந்து வெண்ணெய், பால்பொடி மற்றும் நெய் ஆகியவற்றை தயாரிக்கின்றன.



2000 ஏப்ரல் 18]

இப்பால் பொருட்கள் தவிர ஊட்டியிலுள்ள பால் பண்ணையில் பாலாடைக் கட்டிகளும், சேலம் பால் பண்ணையில் டெட்ரா பாக்கெட்டுகளில் பாலும், மாவின் மாம்பழச் சாறும் சுவையூட்டப்பட்ட நறுமண பாலும் தயாரிக்கப்படுகின்றன. இன்சுவை பொருட்களான ஐஸ்கிரீம், யோகர்ட், பால்கோவா போன்றவை இணையத்தின் பொறுப்பில் இயங்கிவரும் சென்னை அயனாவரம் பால் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பால் மற்றும் பால் பொருட்கள் 'ஆவின்' என்ற வணிக முத்திரைப் பெயருடன் இணையத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்சுவை பொருட்கள் 'ஆவின் குட்னெஸ்' எனும் பெயருடனும், ஆவின் நெய் மற்றும் வெண்ணெய் 'அக்மார்க்' முத்திரையிடப்பட்டும், பால்பொடி மற்றும் பாலாடைக் கட்டி இந்தியத் தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் சான்றுடனும் விற்பனை செய்யப்படுகின்றன.

**புதிய பால் உபபொருட்கள் :**

*அ. இனிப்பில்லாத யோகர்ட்* **(Sugar Free Yoghurt)**

பால் உபபொருட்களான ஐஸ்கிரீம் மற்றும் யோகர்ட் வயது முதிர்ந்தோர்கள் மற்றும் உடல் நலக்குறைவுள்ளவர்கள் வாங்க முன்வருவதில்லை. அவர்களின் தேவைக்கேற்ப ஒரு புதிய பால் உபபொருள் "இனிப்பில்லாத யோகர்ட்" சென்னையில் அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*ஆ. சர்க்கரை கலந்த பால் பவுடர்* **(Dairy Whitner)**

இவ்விணையம் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப உடனடியாக சூடான பானம் தயார் செய்வதற்கு ஏற்ப, ஒரு புதிய பால் பவுடர் "டைரி ஒயிட்னர்" (Dairy Whitner) அறிமுகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆவின் பால் உபபொருட்கள் தமிழ்நாடு மற்றும் இதர இடங்களில் இணையத்தால் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு விற்கப்படுகின்றன:

**சென்னை பெருநகர்:**

சென்னை பெருநகரிலும் மற்றும் புறநகர் பகுதியிலும் பால் உபபொருட்கள் இணையத்தால் நேரடியாக கோடம்பாக்கத்தில் உள்ள உபபொருட்கள் விற்பனைப் பிரிவின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. உபபொருட்கள் அம்பத்தூர் மற்றும் அயனாவரத்தில் உள்ள கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு விற்பனை நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

[2000 ஏப்ரல் 18

உபபொருட்கள் விற்பனை ஆவின் பாலகங்கள், சில்லறை உரிமம் பெற்றவர்கள், மொத்த விற்பனையாளர்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் சிறப்பு விற்பனை ஆணைகள் மூலம் பூர்த்தி செய்கிறது.

**பாலகங்கள்:**

இணையத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 34 ஆவின் பாலகங்கள் உள்ளன. அவற்றில் 8 பாலகங்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அனுப்பப்பட்ட மகளிராலும், 1 பாலகம் முன்னாள் இராணுவத்தினராலும் மற்றும் 25 பாலகங்கள் இணையத்தின் பணியாட்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

**சில்லறை விற்பனை உரிமங்கள்:**

சென்னை பெருநகர் மற்றும் புறநகர் பகுதியில் 131 சில்லறை விற்பனை உரிமம் பெற்ற நிலையங்கள் உள்ளன. பணம் பெற்றுக்கொண்ட பிறகே உபபொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. சில்லறை விற்பனை உரிமையாளர்களுக்கு ஐஸ்கிரீமிற்கு 25 சதவிகிதமும், இதர உபபொருட்களுக்கு 6 சதவிகிதமும் தரகு கொடுக்கப்படுகிறது.

**மொத்த விற்பனையாளர்கள்:**

இணையம் சென்னை பெருநகரில் 8 மொத்த விற்பனையாளர்களை நியமனம் செய்துள்ளது. மொத்த விற்பனையில் 60 சதவிகித விற்பனை, மொத்த விற்பனையாளர்கள் மூலம் செய்யப்படுகின்றது. மொத்த விற்பனையாளர்கள் நகரின் பால் உபபொருட்கள் தேவையை சுமார் 2000 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் பூர்த்தி செய்கின்றனர். மொத்த விற்பனையாளர்கள் பகுதிவாரியாக நியமிக்கப்பட்டு நகரின் எல்லாப் பகுதியின் தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றன. மொத்த விற்பனையாளர்களிடமிருந்து உபபொருட்களுக்கான தொகையை கேட்பு காசோலையாக பெற்ற பின்னரே அவர்களுக்கு உபபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மொத்த விற்பனையாளர்கள் 4 விழுக்காடு தரகும், சில்லறை விற்பனையாளர்கள் 6 விழுக்காடு தரகும் பெறுகின்றனர்.

1999-2000-ஆம் ஆண்டில், மார்ச் 2000 முடிய சென்னை நகரிலும், மற்றும் பிற மாநில சி அண்டு எப் முகவர்களின் மூலமாகவும் மொத்த விற்பனையாகவும் பால் பொருட்கள் கீழ்க்கண்டவாறு விற்கப்பட்டுள்ளன:—



2000 ஏப்ரல் 18]

| உபபொருட்கள் | 1997-98 | 1998-99 | 1999-2000 (மார்ச் 2000 முடிய) |
|---|---|---|---|
| | (மெட்ரிக் டன்கள்) | | |
| **வெண்ணெய்** | | | |
| சென்னை பெருநகர் | 953.73 | 1052.98 | 1165.08 |
| பிற மாநிலங்களில் (சி அண்டு எப் முகவர்கள் மூலம்) | .. | 0.88 | 9.00 |
| மொத்த விற்பனை | .. | 1989.00 | 2418.00 |
| **மொத்தம்** | **953.73** | **3042.86** | **3592.08** |
| **நெய்** | | | |
| சென்னை பெருநகர் | 467.46 | 569.79 | 700.85 |
| பிற மாநிலங்களில் (சி அண்டு எப் முகவர்கள் மூலம்) | 1278.00 | 3302.00 | 3433.22 |
| மொத்த விற்பனை | .. | 18.00 | 280.40 |
| **மொத்தம்** | **1745.46** | **3889.79** | **4414.47** |
| **பால் பொடி** | | | |
| சென்னை பெருநகர் | 7.96 | 14.49 | 29.81 |
| பிற மாநிலங்களில் (சி அண்டு எப் முகவர்கள் மூலம்) | .. | .. | 2417.66 |
| மொத்த விற்பனை | .. | 1236.00 | 2698.50 |
| **மொத்தம்** | **7.96** | **1250.49** | **5145.97** |

[2000 ஏப்ரல் 18

**உள்ளீட்டுப் பணி:**

*பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்*

இவ்வாண்டு 1999-2000 மார்ச் 2000 முடிய மாவட்ட ஒன்றியங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 16.65 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1999-2000 (மார்ச் 2000 முடிய) 325 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டு 14.20 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்ய தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்களுக்குக் கால்நடை தீவனமும், பசுந் தீவனமும் வழங்கப்படுகின்றன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் சிகிச்சையும், வெக்கை, கோமாரி மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்குச் செயற்கைமுறை கருவூட்டல் கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்படுகிறது. 1999-2000 (மார்ச் 2000 முடிய) உறைவிந்து மூலம் 10.55 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன.

1999-2000 (மார்ச் 2000 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், நடமாடும் கால்நடைப் பிரிவில் உள்ள நல்ல தேர்ச்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் 8.80 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்தனர். கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர கால அழைப்பிற்காக அவசர கால சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டன. 1999-2000 ஆம் ஆண்டு (மார்ச் 2000 முடிய) 100 நடமாடும் கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும், 37 அவசர கால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டன.

**உள்நாட்டுக் கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி:**

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக 1999-2000 ஆம் ஆண்டு (மார்ச் 2000 முடிய) 1,13,446 வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



2000 ஏப்ரல் 18]

**கால்நடை தீவன உற்பத்தி ஆலை**

மூன்று கால்நடை தீவன உற்பத்தி ஆலைகள், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் மாதவரத்திலும், ஈரோடு ஒன்றியத்தின் கீழ் ஈரோட்டிலும் மற்றும் மதுரை ஒன்றியத்தின் கீழ் கப்பலூரிலும் கால்நடை தீவன ஆலைகள் இயங்கி வருகின்றன. இவ்வாலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும். இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் பெல்லட் மற்றும் மேஷ் வகை தீவனங்கள் அனைத்து மாவட்டபால் உற்பத்தியாளர்களுக்குக் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், இத்தீவனம் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கும், மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணை, உதகை:**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், உதகமண்டலத்தில் கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணை ஒன்றை பராமரித்து வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் தேசிய அளவில் இயங்கிவரும் அனைத்து பொலிகாளைப் பண்ணைகளிலும் இது இரண்டாவது இடத்தில் உள்ளது என தேசிய பால்வள வாரியத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. இப்பண்ணை இலாபத்தில் இயங்கி வருவதோடு இப்பண்ணையில் அமைந்துள்ள உறைவிந்து நிலையம் அகில இந்திய அளவில் பெருமைப்படும் அளவில் புகழ் வாய்ந்தது.

1999-2000 ஆம் ஆண்டு (மார்ச் 2000 முடிய) உதகமண்டலத்தில் உள்ள கருவூல ஜெர்சி பொலிகாளைப் பண்ணையில் 13.25 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஈரோட்டில் உள்ள எருமை இன உறைவிந்து நிலையத்தில் 1.35 இலட்சம் முர்ரா எருமை இன உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

**வம்சாவழி மூலம் பொலிகாளைகள் தேர்வுத் திட்டம்:**

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமான கலப்பின பொலிகாளைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வம்சாவழி மூலம் பொலிகாளைகளைத் தேர்வு செய்யும் திட்டம் வேலூர், தர்மபுரி, சேலம்,

ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சிறந்த பொலி காளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றின் உறைவிந்து நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக நிதி உதவி மூலம் கறவை மாடுகள் வழங்கும் திட்டம்:**

1999-2000 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களில் 2000 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பயன்பெறும் வகையில் 4000 கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் தொகையாக ரூ.456.00 இலட்சம் கடன் உதவியும், 250 நலிவடைந்த சிறுபான்மையினர் பயன்பெறும் வகையில் 500 கறவை மாடுகள் வாங்குவதற்கு ரூ.57.00 இலட்சம் கடன் உதவியும் அளிக்க கருத்துரு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**கால்நடைப் பராமரிப்புத் துறையின் செயலாக்கப் பணிகள் :**

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகளை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் செய்யப்படாத இடங்களில் மேற்குறிப்பிட்ட பணிகளை கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து வருகிறது. கால்நடை மருத்துவம் மற்றும் இனவிருத்தி வசதிகளை பரவலாக உள்ள கால்நடைப் பராமரிப்புத் துறை, கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம், கிளை நிலையங்கள் ஆகியவை மூலம் வழங்குகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை, தொண்டை அடைப்பான், சப்பை நோய், கோமாரி மற்றும் வெக்கை நோய் ஆகிய நோய்கள் கால்நடைகளுக்கு வராமல் தடுப்பதற்காக, தடுப்பு ஊசிகளை கால்நடைகளுக்குப் போடுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு புலனாய்வு செய்து நோயைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

**தொலைநோக்குத் திட்டம் 2010 (Vision 2010)**

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில், வரும் காலத்தில் பால் கொள்முதலை உயர்த்த, இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பால் விற்பனை, பால் உற்பத்தி, பாலைப் பதப்படுத்துதல் ஆகியவற்றை அதிகரிக்கவும், தரக்



கட்டுப்பாட்டை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும் நிதி உதவி அளிக்க தேசிய பால்வள வாரியம் முன்வந்துள்ளது.

மேற்கண்டவற்றை படிப்படியாகச் செயல்படுத்த தேசிய பால்வள வாரியமும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையமும், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும் முடிவு செய்துள்ளன. 1999 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தேசிய பால்வள வாரியம் நடத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப, இவ்விணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் அதற்கான கருத்துருவை தேசிய பால்வள வாரியத்திற்கு அனுப்ப தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

தேசிய பால்வள வாரியத்திடமிருந்து நிதியுதவி பெற்று, கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த இவ்விணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், தொலைநோக்குத் திட்டம் 2010-ல் சேர்த்துள்ளது:

(1) மொரப்பூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

(2) போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

(3) அம்பத்தூரில் பால் உபபொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு பால் பண்ணை அமைத்தல்.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது தேசிய பால்வள வாரியத்தின் ஆலோசனைப்படி தமிழகத்திலுள்ள அனைத்து வகையான பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொண்டிருந்த தணிக்கை வாரியம் கலைக்கப்பட்ட பின்னர் 01-10-1987 முதல் தொடங்கப்பட்டு தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. தொடக்க நிலையிலுள்ள 10,554 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 17 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் இயங்கும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் சட்டரீதியான தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகத் துறையால் 31-03-2000 முடிய பட்டியலிடப்பட்ட 10,554 சங்கங்களில் மாவட்ட அளவிலான நிர்வாகத் துறையினரால் பட்டியலிட்டு

தரப்பட்ட 10,088 சங்கங்கள் மட்டுமே 1998-99-ஆம் ஆண்டிற்கான தணிக்கைக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள சங்கங்களின் தணிக்கை 1999-2000 ஆம் ஆண்டு தணிக்கையில் சேர்த்து திட்டமிடப்படும்.

**தணிக்கை முன்னேற்றம்:**

*அ. தொடக்க நிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை:*

**1998-99 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை:**

1998-99 ஆம் ஆண்டிற்கு 10,088 சங்கங்கள் சட்டரீதியான இறுதித் தணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றுள் 31-03-2000 வரையில் 9063 சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1025 சங்கங்களின் தணிக்கையை மேற்கொண்டு முடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*ஆ. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை:*

***1995-96* ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், 16 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள காஞ்சிபுரம்—திருவள்ளூர் ஒன்றியத்தின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

***1996-97* ஆம் ஆண்டு தணிக்கை:**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 14 ஒன்றியங்களின் தணிக்கை 31-03-2000 வரை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 3 ஒன்றியங்களான காஞ்சிபுரம்-திருவள்ளூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஒன்றியங்களின் தணிக்கைப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

***1997-98* ஆம் ஆண்டு தணிக்கை:**

மொத்தமுள்ள 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், 2 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 11 ஒன்றியங்களில் தணிக்கை தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. எஞ்சியுள்ள 4 ஒன்றியங்களின் தணிக்கைப் பணி விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.



**இ. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் தணிக்கை:**

| வ.எண் | ஆண்டு | தணிக்கையின் தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | 1992-93 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் 1992-93 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை அறிக்கையின் மீது 27-12-1999 ஆம் தேதியில் தணிக்கைச் சான்று வழங்கப் பட்டுள்ளது. |
| 2. | 1993-94 | 1993-94-ஆம் ஆண்டிற்கு தணிக்கைச் சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 3. | 1994-95 | இறுதித் தணிக்கை அறிக்கையின் மீது சென்னை மண்டல துணை இயக்குநரால் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. |
| 4. | 1995-96 | பட்டயக்கணக்காயரால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. |
| 5. | 1996-97 | இவ்வாண்டிற்கான தணிக்கை பட்டயக் கணக்காயரால் மேற்கொள்ளப்படுகிறது. இறுதித் தணிக்கை அறிக்கை இணையத்திடமிருந்து பெறப்பட வேண்டி நிலுவையில் உள்ளது. |
| 6. | 1997-98 | 1997-98-ஆம் ஆண்டிற்கான இறுதித் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது. இணையத்தின் தணிக்கையை மேற்கொள்வதற்கு பிரத்தியேகமாக 1 உதவி இயக்குநர்/தணிக்கையாளர் மற்றும் 10 முதுநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் பணியிடம் கோரிய முன்மொழிவு அரசின் பரிசீலனையில் உள்ளது. |

**அரசு வருவாய்:**

1999-2000 ஆம் நிதியாண்டின் நிதி நிலை அறிக்கையில் தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணத்தின் கீழ் ரூ.1.40 கோடி வருவாய் வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்விலக்கில் 31-03-2000 முடிய ரூ. 1.37 கோடி வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

## இணைப்பு-II

*(13 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### மானியக் கோரிக்கை எண் 22— கால்நடைப் பராமரிப்புத் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

**முன்னுரை**

கால்நடை வளர்ப்பு என்பது மனித வாழ்க்கைக்கும் வேளாண்மைக்கும் முக்கிய அங்கமாக விளங்கி வருகின்றது. உழவர்களுக்குக் கால்நடைகள் வேளாண்மையில் உறுதுணையாகவும் வான் பொய்க்கின்ற காலத்தில் கூட தாம் பொய்க்காமல் காப்பீடாகவும் இருந்து உயரிய பணியாற்றுகின்றன. அவை இடுகின்ற சாணமும் மண்ணைப் புண்படுத்தாத சத்தான எருவாகின்றது. தற்கால அறிவியல் முன்னேற்றங்களால் கால்நடைப் பராமரிப்பு அறிவியல் முறைப்படி செயல்படுத்தப்பட்டு தற்போது தனிப்பட்ட ஒரு தொழிலாக மாறியுள்ளது. பெருகிவரும் மக்கள் தேவைக்கேற்ப சத்தான உணவு அளிப்பதில் இத்துறை ஒரு முக்கியப் பங்காற்றுகின்றது.

குறைந்த முதலீடு, அதிக வேலை வாய்ப்பு, நல்ல வருவாய் ஆகிய காரணங்களினால் கால்நடைப் பராமரிப்பு ஒரு வெற்றிகரமான தொழிலாக இருப்பதுடன் வேளாண் பெருமக்களின் வாழ்வில் இணைந்து அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்கின்றது. கால்நடைகள்-பயிர் மீதப் பொருட்கள், வேளாண் உபபொருட்கள், ஓரளவு மேய்ச்சல் ஆகியவை மூலம் வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு மனித உணவுத் தேவைக்குப் பயன்படாத இதுபோன்ற பொருட்கள் மூலம் வளர்க்கப்படும் கால்நடைகள் மனிதனுக்கே பயனுள்ளதாய் அமைகின்றன.

கால்நடைப் பராமரிப்புத் துறை வேளாண் பெருமக்களால் வளர்க்கப்படும் மாடுகள், எருமைகள், ஆடுகள் கோழிகள், குதிரைகள், முயல்கள், நாய்கள் மற்றும் பன்றிகள் போன்ற கால்நடைகளைப் பாதுகாத்து பராமரிக்கவும் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குப் பால், இறைச்சி, முட்டை போன்ற புரதச் சத்து மிக்க உணவுத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு செயல்பட்டு வருகின்றது.

பல்வேறு துறைகளில் சாதனை புரிந்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் ஐந்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலமும் சிந்திக்கும் முன்பே தான் சிந்தித்து பல்வேறு செயற்கரிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

[2000 ஏப்ரல் 18

உழவர்களும் நுகர்வோரும் இடைத்தரகின்றி பயன்பெறும் "உழவர் சந்தைத் திட்டம்" "பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்"; "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"; "நமக்கு நாமே திட்டம்"; மாணவர்களின் நலன் காக்க "வாழ்வொளித் திட்டம்"; "கணினிப் பாடத் திட்டம்"; நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற கொள்கைக்கு உயிரூட்ட மக்கள் நலம் காக்க "வருமுன் காப்போம்" போன்ற திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருவதைப் போல் வேளாண் பெருமக்களுக்கு உறுதுணையாக இருக்கும் வாய்பேசா உயிரினங்களான கால்நடைச் செல்வங்களின் நலம் காக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு அறிவிக்கப்பட்டதுதான் இந்த சிறப்புக் "கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்", இந்தத் திட்டம். இம்மாநிலத்தில் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றத்தில் 18-1-2000 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் தொடக்கி வைக்கப்பட்டது. நூறாண்டுக்கால கால்நடைப் பராமரிப்புத் துறையின் சீரிய செயல்பாட்டில் ஒளிவீசும் மணிமகுடமாக இத்திட்டம் திகழ்கின்றது.

இத்திட்டம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் மாதத்திற்கு ஒரு சிகிச்சை முகாம் என்ற அளவில் அனைத்து ஒன்றியப் பகுதிகளிலும் 4620 கால்நடை மருத்துவ முகாம்கள் ஆண்டு முழுவதும் நடத்த அரசு ஆணை வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 10-4-2000 முடிய 805 முகாம்கள் நடத்தப்பட்டு 28,06,755 கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறை கால்நடை மருத்துவ நிலையங்களின் கால்நடை சிகிச்சைக்காக மேற்கொள்ளும் நோய் புலனாய்வு, தடுப்பூசிப் பணி, குடற்புழுநீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலட்டுத் தன்மை நீக்கம், ஆண்மை நீக்கம், சினை பரிசோதனை மற்றும் ஈனியல் சம்பந்தமான சிறப்புச் சிகிச்சை, அறுவை சிகிச்சை போன்ற பணிகளெல்லாம் கால்நடைத் துறை மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆகியோருடன் இணைந்து இந்தச் சிறப்பு முகாம்களில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் கால்நடை வளர்ப்பில் ஏற்படும் ஐயப்பாடுகளுக்கு கால்நடைத் துறை வல்லுநர்களால் விளக்கம் அளிக்கப்படுகின்றன. கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும், ஏற்படும் நோய்கள் பற்றிய விளக்கங்களும் நோய்த் தடுப்பு முறைகள், தீவனப் பராமரிப்பு பற்றிய விவரங்களும் அடங்கிய விளக்கக் கண்காட்சி, செயல் விளக்கம் மற்றும் கன்றுகள் பேரணி போன்றவை நடத்தி கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்குப் பசுந்தீவன இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டு



2000 ஏப்ரல் 18]

கால்நடைத் தீவன முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யப்படுகிறது. இந்தத் திட்டம் கிராமப்புற மக்களிடையே சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது.

இத்துறையின் சீரிய செயல்பாட்டினால் பால் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் தொடர்ந்து இரண்டாவது இடத்தை வகித்து வருகின்றது. 1995-96 ஆம் ஆண்டில் தனி நபருக்குக் கிடைத்த பாலின் அளவு நாளொன்றுக்கு 185 கிராம் ஆக இருந்தது. தற்பொழுது 203 கிராம் ஆக உயர்ந்துள்ளது. இந்திய மருத்துவ ஆய்வுக் கழகம் நிர்ணயித்துள்ள, நாளொன்றுக்கு தனி நபர் பால் அளவான 220 கிராம் அளவினை விரைவில் எய்திடும் நிலையில் உள்ளது.

முட்டை உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தினை வகிக்கின்றது. 1995-96 ஆம் ஆண்டில் ஓர் ஆண்டிற்கு நபருக்குக் கிடைக்கும் முட்டையின் அளவு 54 எண்ணிக்கையாக இருந்தது. தற்போது 63 ஆக உயர்ந்துள்ளது.

இதேபோல் இறைச்சி உற்பத்தி மற்றும் தோல் உற்பத்தியிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் துறைமுகங்களில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தோல் மற்றும் தோல் பொருட்களின் ஏற்றுமதி மதிப்பு 1998-99, ஒரே ஆண்டில் 19.22 விழுக்காடு அதிகரித்துள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் கால்நடை உற்பத்திப் பொருட்கள் நுகர்வு 194 விழுக்காடு உயர்ந்துள்ளது என்ற செய்தி இத்துறையின் செயல்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

நம் மாநிலத்தில் 89 விழுக்காடு கால்நடைகள் கிராமப்புறங்களில் வளர்க்கப்படுகின்றன. புத்தாயிரம் ஆண்டில் கால்நடை வளர்ப்போரின் முக்கிய குறிக்கோளானது சந்தைத் தேவையை முழுமையாக பூர்த்தி செய்வதாகவும், எவ்வித தட்பவெப்ப நிலையிலும் நல்ல உற்பத்தித் திறன் கொண்டதாகவும் உள்ள கால்நடைகளை பெருக்குவதே ஆகும். குறைந்த முதலீடு, அதிகரித்த வேலைவாய்ப்பு போன்ற காரணங்களால் கால்நடை பராமரிப்பு ஒரு வெற்றிகரமான தொழிலாக தற்போது உருப்பெற்று கிராமியப் பொருளாதாரத்திற்கு உதவி வருகிறது. அரசின் உதவி, கால்நடை வளர்ப்பில் தனியார் துறையின் பங்கு, கூட்டுறவு இயக்கம் போன்றவற்றால் கிராமங்களில் கால்நடை வளர்ப்பு இலாபகரமான தொழிலாகவும், விற்பனை வாய்ப்புகள் நிறைந்துள்ள தொழிலாகவும் தற்போது மாறி வருகின்றன. தேசிய அளவிலான பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பிற்கும், வருவாய் பெருக்கத்திற்கும், கால்நடை வளர்ப்பும், பராமரிப்பும் முக்கிய அங்கம் வகித்து வருவதற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் சிறந்த செயல்திறனும் முக்கியப் பங்காக அமைந்திருப்பது போற்றத்தக்கது.

வருகின்றனர். இதனால் காளை வளர்ப்பு சரிவடைந்து, குறிப்பாக உற்பத்தி விழுக்காடு சரிவடைந்துள்ளது. இதே கால அளவில் உழைப்பிற்கு உகந்த உள்நாட்டு தூய்மை மரபுடைய காளை இனங்களின் எண்ணிக்கை 33 விழுக்காடு உயர்வடைந்துள்ளது. இது உள்நாட்டு தூய்மை மரபுடைய இனத்தைப் பாதுகாக்க இத்துறை எடுத்துள்ள திட்டப் பணிகளை பிரதிபலிக்கிறது. இதே காலகட்டத்தில் கலப்பின பசுக்களின் எண்ணிக்கை அதிகப்படியாக 103 விழுக்காடு உயர்வு பெற்றுள்ளது. இது தீவிர கலப்பின இனவிருத்திக் கொள்கையை இத்துறை செயலாற்றியதும் மற்றும் விவசாயிகள் கலப்பின இனங்களால் கூடுதல் வருமானம் கிடைப்பதை முன்னிட்டு அவைகளை வளர்க்க ஆர்வம் காட்டுவதிலும் தான் ஆகும். நம் மாநிலத்தில் வெள்ளாட்டின் எண்ணிக்கையில் 7 விழுக்காடு வளர்ச்சியும், கோழி எண்ணிக்கையில் 26 விழுக்காடு வளர்ச்சியும் இதே கால கட்டத்தில் காணப்பட்டுள்ளது.

**ஆ. இனப்பெருக்கம்:**

நாட்டினங்கள் நோய் எதிர்ப்புச் சக்தி பெற்றும், தட்பவெப்ப நிலையை தாங்கக்கூடியதாக இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது, பால் வற்றுகாலம், ஒரு கன்றுக்கும் மற்றொரு கன்றுக்கும் இடைப்பட்ட நாட்கள் அதிகம். மேலும் பால் அளவு, பாலின் கறவை நாட்கள் ஆகியவை குறைவு. ஆனால் உயிரினங்களில் முதல் கன்று ஈனும் வயது, பால் வற்றிய காலம் ஆகியவை குறைவாகவும், பால் கறவை நாட்கள், பால் உற்பத்தித் திறன், அதிக நாட்கள் பால் உற்பத்தி செய்தல் போன்றவை சிறப்பாக உள்ளன. மேற்சொன்னவைகளைக் கருத்தில்கொண்டு பொருளாதார மேம்பாட்டிற்கு உகந்த திறன்களைப் பெருகிடச் செய்தும் மற்றும் குறைந்த காலத்தில் நிறைந்த பயனை அடைவது என்ற நோக்கத்துடன் நமது இனங்களின் நோய் எதிர்ப்பு, தட்பவெப்ப நிலையைத் தாங்குவது போன்ற திறன்களைப் பாதுகாத்து, கலப்பின இனங்களைக் கொண்டு இனப்பெருக்கம் செய்வது ஒன்றே, மாற்று அடிப்படை வழியாகும்.

1952-53ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் இத்துறையால் கால்நடை உற்பத்தியைப் பெருக்க கேந்திர கிராமத் திட்டம் குறிப்பிட்ட இடங்களில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து அறிவியல்பூர்வமான கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்களின் பலனாக சிறந்த கால்நடைகளின் இனப்பெருக்கம், தீவன முறை, நோய்க் கட்டுப்பாடு ஆகியவை செயலாக்கப்பட்டன. இது பின்னர் 1974-ல் தீவிரக் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின் செயலாக்கத்தின் மூலமாக தீவிர கால்நடை கலப்பின இனவிருத்தி செய்யப்பட்டு பால் உற்பத்தி





பெருக்கப்பட்டது. மற்றும் பசுந்தீவன தேவையின் அளவுக்கு உற்பத்தி செய்யப்பட்டு தீவன பற்றாக்குறை குறைக்கப்பட்டது. மாநிலத்தில் கடைப்பிடிக்கப்படும் மாட்டினம் மற்றும் எருமையின இனப்பெருக்கம் கொள்கை பின்வருமாறு:

1. உள்நாட்டினப் பசுக்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இனங்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

2. மரபு வழி நாட்டினக் கால்நடைகளின் இனப்பெருக்கத்திற்கு உகந்த பசுக்களை அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் ப்ரீசியன் பொலி காளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்.

3. நாட்டின் எருமைகளை முர்ரா இனப் பொலி காளைகளைக் கொண்டு இனப் பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்.

4. கலப்பினப் பசுக்களைக் கலப்பினப் பொலி காளைகளைக் கொண்டு இனப்பெருக்கம் செய்தல்.

தவிர பொதுக் கொள்கையாக கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்றைய ஏனைய சமவெளிப் பகுதிகளில் ஜெர்சி இன பொலி காளைகளும் எல்லா மலைப் பகுதிகளிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் ப்ரீசியன் இனக் காளைகள் இனப் பெருக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

**இ. உறைவிந்து உற்பத்தி:**

கால்நடைகளின் மரபியல் குணங்களை முன்னேற்றும் பொருட்டு 1975 வரை திரவ விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உறைவிந்து தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் திரவ விந்து கருவூட்டல் மெதுவாக குறைத்துக் கொள்ளப்பட்டு உறைவிந்து செயற்கை முறை கருவூட்டலுக்கு மாற்றப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள 3572 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களின் தேவைகளை நிறைவு செய்ய, கீழ்க்கண்ட இடங்களில் 4 உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வந்தன:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஈச்சங்கோட்டை | .. | தஞ்சாவூர் மாவட்டம் |
| 2. | அபிசேகப்பட்டி | .. | திருநெல்வேலி மாவட்டம். |
| 3. | ஓசூர் | .. | தர்மபுரி மாவட்டம். |
| 4. | உதகமண்டலம் | .. | நீலகிரி மாவட்டம். |

[2000 ஏப்ரல் 18

மொத்தம் 236 எண்ணிக்கையிலான ஜெர்ஸி, ஹோல்ஸ்டைன் ப்ரீசியன், கலப்பினம், காங்கேயம், சிந்தி மற்றும் முர்ரா இனப் பொலி காளைகள் மேற்கண்ட நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் பிரென்ச் நடுத்தர உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. ஈச்சங்கோட்டையில் மட்டும் ஜெர்மனி நடுத்தர உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

உறைவிந்தினை உறைய வைக்கவும், சேமித்துவைக்கும் பொருட்டு தேவைப்படும் திரவ நைட்ரஜனை உற்பத்தி செய்வற்கு, தமிழகத்தில் திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் ஓசூர், அபிசேகப்பட்டி, ஈச்சங்கோட்டை, உதகமண்டலம், சைதாப்பேட்டை (சென்னை) மற்றும் திருப்பரங்குன்றம் (மதுரை) ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் முறையே எல்லா கருவூட்டல் நிலையங்களுக்கு விநியோகம் செய்யும்பொருட்டு மாநிலத்தில் உள்ள வேலூர், கோயம்புத்தூர், மதுரை திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, சேலம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 12 உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1999-2000 ஆம் ஆண்டில் 35.05 இலட்சம் உறைவிந்துக் குச்சிகளும், 2.83 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும் உறைவிந்து தயாரிப்பு மற்றும் திரவ நைட்ரஜன் ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**ஈ. மேய்ச்சல் வசதி மற்றும் பசுந்தீவன உற்பத்தி:**

நிலம், நீர் மற்றும் காற்று ஆகிய மூன்றும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது. இதிலும் நிலத்துக்குப் போட்டி அதிகம். ஏனெனில் பெருகி வரும் மக்கட்தொகை மற்றும் அவர்களின் மேம்பட்ட வாழ்க்கை தரத்திற்கு ஏற்ப கிராமம் மற்றும் நகர்ப் புறங்களில் குடியிருக்கும் இருப்பிடத்திற்குத் தேவை அதிகரித்துள்ளது. மேலும் நிலமானது தொழிற்சாலை வாணிபம், போக்குவரத்து, பொழுதுபோக்கு ஆகியவைகளை விரிவுபடுத்துவதற்கு மிகவும் தேவைப்படுகிறது. இதனால் பசுந்தீவன உற்பத்தி பாதிக்கப்பட்டு கால்நடைகளுக்கு மேய்ச்சல் நில அளவு குறைந்துள்ளது.

கால்நடைத் தீவனங்கள் மூன்று வகைப்படும். அவைகள் உலர் தீவனம், பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனம் ஆகும். இதில் உலர் தீவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது 15-20 விழுக்காடு கால்நடைகளுக்கு மட்டுமே அடர்தீவனம் வழங்கப்படுகிறது. பெரும்பாலும் பயிறு தானிய வகைகள்



2000 ஏப்ரல் 18]

மற்றும் வாணிபப் பயிறுகள் பயிரிடப்படும் இடங்களில் மட்டுமே உலர் தீவனம் கிடைக்கிறது.

மாநிலத்தில் பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்கள், குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கிறது.

பொதுவாக கிராமங்களில் கால்நடைகள் தரிசு நிலங்கள், ஏரி ஓரங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் மேய்க்கப்படுகின்றன. விளைச்சல் இல்லாத காலங்களில் கால்நடைகள் அறுவடை முடிந்த நிலத்தில் மேய்க்கப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள மொத்த மேய்ச்சல் நிலப் பரப்பளவு 1935424 ஹெக்டேர்கள் ஆகும். இதில் விவசாயத்துக்கு உபயோகமில்லாத நிலங்களும், நிரந்தர மேய்ச்சல் நிலங்களும் அடங்கும்.

இது போக பாதுகாக்கப்பட்ட காடுகள் மற்றும் நிலங்களில் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

தமிழகத்தில் மொத்த நிலப்பரப்பில், நிரந்தர மேய்ச்சல் நிலம் மற்றும் இதர மேய்ச்சல் புல் வெளிகளின் விகிதம் மிகவும் குறைவு (0.97%) தோட்டத் தொழில் மற்றும் உணவுப் பயிர்கள் விவசாயத்திற்கு உண்டான தேவைகள் அதிகரிப்பும், வீடுகள் மற்றும் சிறிய அளவிலான தொழிற்சாலைகள் புறம்போக்கு நிலங்களில் ஆரம்பிக்கப்படுவதே, மேய்ச்சல் நிலங்கள் ஆண்டுதோறும் குறைந்து வருவதற்கான காரணங்கள். மேலும் வடகிழக்கு பருவகாலம் முடிந்த 3 அல்லது 4 மாதங்களுக்கு மட்டுமே மேய்ச்சல் வசதிகள் இருக்கும்.

கால்நடைகளின் மேய்ச்சல் நிலம் விகிதப்படி பார்த்தால் மேய்ச்சல் நிலத்தில் உள்ள கால்நடைகளின் அடர்த்தி 96 எண்ணிக்கை ஆகும். அதாவது ஒரு ஹெக்டேர் மேய்ச்சல் நிலப்பரப்பை 96 கால்நடைகள் பயன்படுத்திக்கொள்கின்றன.

பழங்காலந்தொட்டே விவசாயிகள் தங்கள் கால்நடைகளை ஏரி நிலங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களில் மேய்ச்சலுக்கு அனுப்புகின்றனர். இதன் மூலம் கிடைக்கக்கூடிய பசுந்தீவனம் மட்டுமே குறிப்பிட்ட அளவு பால் உற்பத்தி செய்யக்கூடிய நாட்டின் பசுக்களுக்குப் போதுமானதாகவும், சிக்கனத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது. ஆனால் பெருகிவரும் கலப்பினப் பசுக்கள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட எருமைகளின் அதிகமான பால் உற்பத்தித் திறனால் பசுந்தீவனப் பற்றாக்குறை ஏற்படும். மேலும் அடர்தீவனம் கொண்டே கறவைமாடுகளை பராமரிப்பது

[2000 ஏப்ரல் 18

செலவினங்களைக் கூட்டும். ஆதலால் பசுந்தீவன உற்பத்தி அவசியமானதாகும்.

தமிழகத்திலுள்ள மாடு, எருமை, ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு தேவைப்படும் தீவன உற்பத்தியின் மதிப்பீடு கீழ்க்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| பசுந்தீவனம் | .. | 659 இலட்சம் டன்கள் |
| உலர் தீவனம் | .. | 176 இலட்சம் டன்கள் |

பசுந்தீவனத்தில் 67.53 விழுக்காடும், உலர் தீவனத்தில் 38.07 விழுக்காடும் பற்றாக்குறை உள்ளது.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, இத்துறை பல திட்டங்களை பசுந்தீவனம் மற்றும் பசுந்தீவன விதைகள் உற்பத்தியை அதிகரிக்க கீழ்க்கண்ட இடங்களில் செயலாற்றி வருகிறது.

1. படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)
2. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
3. செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)
4. ஒசூர் (தர்மபுரி மாவட்டம்)
5. சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)
6. திருநெல்வேலி
7. புதுக்கோட்டை

**உ. திட்டங்கள்:**

**i) சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டம்:**

கால்நடைகள் ஒரு செல்வம். எப்படி கழனிகள், காடுகள் ஒரு செல்வமோ அதைப்போல வீடுகளிலே வளர்க்கப்படுகின்ற கால்நடைகள், வேளாண் மக்களின் வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கின்றன. நம் மாநிலத்தில் உள்ள 2.40 கோடிக்கும் மேற்பட்ட கால்நடைகளின் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் 18-1-2000 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அதனால் கால்நடைகளின் உடல் நலம் மேம்பாடு அடைவதுடன், உற்பத்தித் திறனும் அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது.



2000 ஏப்ரல் 18]

கால்நடைகளை சிகிச்சைக்கு வெகுதூரம் மருத்துவ நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதில் விவசாயிகளுக்கு உள்ள சிரமங்களை உணர்ந்து கால்நடை நிலையங்களுக்குத் தொலை தூரத்தில் அமைந்துள்ள கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்தக் கிராமங்களில் சிறப்பு கால்நடை சிகிச்சை முகாம்கள் நடத்தப்படுகின்றன. இங்கு அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும், பறவைகளுக்கும் அளிக்கப்படுகின்றன. இத்துறையைச் சேர்ந்த கால்நடை மருத்துவ அலுவலர்கள் மட்டுமின்றி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக வல்லுநர்களின் சேவையும் பெறப்படுகிறது.

இத்தகைய முகாம்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் மாதத்திற்கு ஒன்று என்ற அளவில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும். இம்முகாம்களுக்கு மருந்துகள், விளம்பரம் ஆகிய செலவினங்களுக்கு ஒரு முகாமிற்கு ரூ. 5,000 வீதம் ஆண்டுக்கு 2.29 கோடி ரூபாய் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முகாமிலும் கால்நடைகளுக்குச் சிகிச்சை, மலட்டுத் தன்மை நீக்கம், அறுவை மற்றும் ஈனியல் சம்பந்தமான சிறப்பு சிகிச்சை, ஆடுகள் மற்றும் கன்றுகளுக்குக் குடற்புழு நீக்கம், தடுப்பு ஊசிகள், ஆண்மை நீக்கம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தீவன உற்பத்தி பெருக்கத்திற்கு தீவன இடு பொருட்களான விதைகள் மற்றும் புல்கரணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் கால்நடை வளர்ப்பில் ஏற்படும் ஐயப்பாடுகளுக்கு நிபுணர்களால் விளக்கம் அளிக்கப்படுகின்றது. கால்நடைகளுக்கும், கோழி இனங்களுக்கும் ஏற்படும் நோய்கள் பற்றிய விளக்கங்களும், நோய்த் தடுப்பு முறைகள் பற்றிய விவரங்களும் அடங்கிய விளக்கக் கண்காட்சியும் இடம்பெறுவதால் கிராம மக்களிடையே புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட வழி வகுக்கிறது.

10-4-2000 முடிய நமது மாநிலத்தில் 805 முகாம்கள் நடத்தப்பட்டு அதன் பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | | | |
|---|---|---|---|
| 1. | சிகிச்சை அளிக்கப்பட்டவை | : | 255546 |
| 2. | ஆண்மை நீக்கம் | : | 22499 |
| 3. | செயற்கை முறை கருவூட்டல் | : | 10615 |

[2000 ஏப்ரல் 18

| | | | |
|---|---|---|---|
| 4. | சினைப் பரிசோதனை | : | 58069 |
| 5. | மலட்டுத் தன்மை சிகிச்சை | : | 57358 |
| 6. | குடற்புழு நீக்கம் பணி | : | 1320989 |
| 7. | தடுப்பூசிப் பணி | : | 1081679 |

**ii உலக வங்கி நிதியுதவிடன் கூடிய கால்நடை பராமரிப்பில் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்:**

துறையின் செயல்பாடுகளால் கால்நடை சிகிச்சை அதிகரித்து வருவதால் தொழில்நுட்பப் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துவது அவசியமாகிறது. மனித வளமானது இதர வளங்களைப் பயன்படுத்திட மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் எந்தத் துறையும், நிறுவனமும் அல்லது அமைப்புகளும், பணியாளர்களின் எண்ணிக்கையின் பலத்தினை மட்டுமே சார்ந்திராமல் பணியாளர்களின் நவீன தொழில் நுட்ப அறிவினையும் நம்பி உள்ளது. இந்நோக்கத்தினைக் கருத்திற்கொண்டு துறையானது உலக வங்கி நிதியுதவியுடன் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.366.29 இலட்சம் மதிப்பில் 1995-96 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டு கால அளவில் செயல்படுத்தி வருகிறது.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:**

1. பணியில் உள்ள பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு தேவையான உள்ளிருப்பு வசதிகளை பலப்படுத்துவதும், பெருக்குவதுமாகும்.

2. பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக கால்நடை இனப்பெருக்கம், நோய் கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் பசுந்தீவன அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு தற்கால நவீன அறிவியல் முறைகளில் பயிற்சி அளித்தல்.

**இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

அ. ஒசூர், ஈச்சங்கோட்டை மற்றும் அபிசேகப்பட்டி ஆகிய இடங்களில் ஏற்கெனவே உள்ள பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்.

இதன்கீழ் பயிற்சியாளர்களுக்கான விடுதி ஒன்று அபிசேகப்பட்டி, மாவட்டக் கால்நடைப் பண்ணையில் கட்டப்பட்டது. செயற்கை முறை



2000 ஏப்ரல் 18]

கருவூட்டல் பயிற்சி நிலையத்திற்கு ஒலிபரப்பு சாதனங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் உள்தொடர்பு தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

ஆ. மாநில அளவிலான பயிற்சி நிலையத்தை ஒசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் நிறுவுதல்.

இத்திட்டத்தின் மூலமாக பயிற்சி மையம் மற்றும் விடுதிக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பயிற்சி மையத்திற்கு அறையணிகள், அலுவலக உபகரணங்கள், கணிப்பொறி, சிறிய பேருந்து ஆகியவைகளை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

இ. பயிற்சிக்குத் தேவையான மதிப்பீட்டு பிரிவினை இயக்குநரகத்தில் அமைத்தல்:

இத்துறை பணியாளர்கள் பயிற்சிகள் பெறுவதற்கு பலவகையான செயல் முறை திட்டங்களை வரையறுப்பதற்காக மதிப்பீட்டுப் பிரிவு ஒன்று இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் முதன்மையான பயிற்சி நிலையங்களாக விளங்கும் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டு தகுதியான பயிற்சி திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

**iii டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்:**

டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம், 1-8-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல், குன்றாண்டார் கோயில், விராலிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ. 5.46 கோடி செலவில் முதல் கட்டமாக ஆறு வருட கால அளவில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் செயலாக்கமானது, இளம் தம்பதிகள் “இணைப்பு தொடர் தம்பதிகளாக” தேர்ந்தெடுக்கப்பட்டு கால்நடை பராமரிப்பு நடைமுறைகள், தீவனப்பெருக்கம், விரிவாக்கத் தொழில்நுட்பம் ஆகியவைகளில் பயிற்றுவிக்கப்பட்டனர். இத்தொடர் தம்பதியர் இத்திட்டத்தின் முன்னோடிகள் ஆவர். மற்றவர்கள் இத்திட்டத்தின் செயல்பாட்டின் குறியீட்டினை பின்பற்றக்கூடிய விவசாயிகள், விவசாயிகள் சங்கம் மூலமாகவும், அரசு சாரா நிறுவனங்கள் மூலமாகவும் கால்நடை நிலையங்கள் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்றனர். இவர்கள் “இலக்கு

விவசாயிகள்" ஆவர். பயிற்சி பெற்ற இணைப்பு தொடர் தம்பதிகள் இலக்கு விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பார்கள். பயிற்றுவிக்கும் முறையானது எளிதானதாகவும் நடைமுறைக்கு உகந்ததாகவும் இருக்குமே தவிர பெரிய அளவிலான உள்ளீடுகளைக் கொண்டதாக இருக்காது.

இத்திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதால் இரண்டாவது கட்ட திட்டமானது 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி 1-2-1997 முதல் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ஏழு ஆண்டு கால அளவில் ரூ. 27.50 கோடி செலவில் மொத்தம் 2,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 20 இலட்சம் வேளாண்குடி மக்களை ஈடுபடுத்தி பயன்பெறும் பொருட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் முக்கியத்துவத்தினை திட்டம் செயல்படும் பகுதிகளில் நன்கு உணர முடியும். பயிற்சிக்குப் பின் சிறப்பான முறையில் பராமரிப்பு வழிமுறைகள் பின்பற்றப்படுவதால் இத்திட்டம் செயல்படும் பகுதிகளில் கோழி இறப்பு சதவீதம் பெருமளவில் குறைந்துள்ளது. மற்றும் கருவுறுதல் சதவீதம் அதிகரித்துள்ளது. பயிற்சிபெற்ற பிறகு விவசாயிகள் கால்நடைகளுக்கு முறையான குடற்புழு நீக்கம், காலம் தவறாமல் தடுப்பூசி மற்றும் அறிவியல் முறைப்படி செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு உணவளிப்பது போன்ற செயல்பாடுகளால் அவைகளின் உடல் எடை அதிகரித்துள்ளது. இறப்பு வீதம் 5 சதவீதத்திற்கும் குறைவாகவும், ஆட்டுக் குட்டிகள் ஈனும் திறன் அதிகரித்து இரண்டிலிருந்து மூன்றாக இத்திட்டப் பகுதிகளில் அதிகரித்துள்ளது.

**ஊ. கால்நடைப் பண்ணைகள்:**

இத்துறை 7 கால்நடைப் பண்ணைகள் மற்றும் 1 அயலின கால்நடை பெருக்குப் பண்ணையினையும் பராமரித்து வருகிறது. இந்தப் பண்ணைகள் செயல்விளக்க பண்ணைகளாகவும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் கீழ் பயனடைந்த பயனாளிகளுக்கு தரமான கால்நடைகளை வழங்குவதற்கு மூலாதாரமாகவும் செயல்பட்டு வருகின்றன. இது தவிர இப்பண்ணைகள் மூலம் விவசாயிகளுக்கு தீவன விதை பொருட்கள் அளிப்பதுடன் கால்நடை இனப்பெருக்கம், தீவனம் அளித்தல் மற்றும் பராமரிப்பதில் உள்ள அண்மைக் கால தொழில் நுட்பப் பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளித்து வருகின்றது. பண்ணைகள் அமைந்துள்ள இடம் மற்றும் பராமரிக்கப்படும் இனங்கள் பின்வருமாறு:



| | பண்ணையின் பெயர் | பராமரிக்கப்படும் இனம் |
|---|---|---|
| 1. | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (தருமபுரி மாவட்டம்) | மாடு, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, கோழி மற்றும் குதிரை |
| 2. | மாவட்ட கால்நடைப் பண்ணை (புதுக்கோட்டை மாவட்டம்) | மாடு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி |
| 3. | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்) | மாடு, எருமை |
| 4. | மாவட்ட கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்) | மாடு, வெள்ளாடு |
| 5. | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) | எருமை, செம்மறியாடு, பன்றி, கோழி |
| 6. | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்) | மாடு, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி |
| 7. | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) | மாடு |
| 8. | அயலின கால்நடைப் பெருக்குப்பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) | மாடு |

ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள பண்ணையில் ஜெர்சி இன கால்நடைகளும், உதகமண்டலத்தில் அமைந்துள்ள பண்ணையில் ப்ரீசியன் இன கால்நடைகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. அபிசேகப்பட்டி மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்ட கால்நடைப்

[2000 ஏப்ரல் 18

பண்ணைகளின் முர்ரா இன எருமைகள் மட்டும் வளர்க்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டு இன கால்நடைகளைப் பாதுகாத்து அதன் மரபுத் தன்மையை காத்து வளர்ப்பதற்காக உம்பளாச்சேரி இனம் கொருக்கையில் அமைந்துள்ள பண்ணையிலும் மற்றும் சிகப்பு சிந்தி, காங்கேயம் இனங்கள் ஓசூரில் அமைந்துள்ள பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

மரபுவழி சோதனைத் திட்டம் மூலமாக ஓசூரில் சிந்தி இன பொலி காளைகளின் தரத்தினையும், ஒரத்தநாடு பண்ணையில் முர்ரா இன பொலி காளைகளின் தரத்தினையும் மதிப்பீடு செய்து சிறந்த காளைகள் இனப்பெருக்கத்திற்காக எதிர்வரும் காலங்களின் இனப்பெருக்கத் திட்டங்களுக்கு தேர்வு செய்யப்படுகின்றன. மேலும், ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் களம் சார்ந்த மரபுவழி பரிசோதனைத் திட்டம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. ஓசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் கலப்பின காளைகளின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் முக்கிய நோக்கம் கலப்பினங்களின் உயர் இரத்த அளவு கட்டுப்படுத்தப்படுவதால் பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், நோய் எதிர்ப்புத் திறனும் காப்பாற்றப்படுகின்றது.

கரு மாற்றல் தொழில்நுட்பம் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கரு மாற்ற தொழில்நுட்பப் பிரிவு அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டையிலும், மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூரிலும் இயங்கி வருகிறது. இதன் வாயிலாக கன்றுகள் வெற்றிகரமாக பெறப்பட்டு உள்ளன.

**2. செம்மறி ஆடு இனப்பெருக்கம்.**

மாநிலத்தில் தற்பொழுது செம்மறியாடுகளின் எண்ணிக்கை 53,73,601 ஆகும். செம்மறியாடு வளர்ப்பு இம்மாநிலத்தில் ஒரு முக்கிய உபதொழிலாகக் கருதப்படுகிறது. உகந்த தட்பவெப்ப நிலை கொண்ட தென்மாவட்டங்களான இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகள் செம்மறி ஆட்டுத் தொழிலுக்கு ஏற்றதாக உள்ளது. செம்மறியாடு வளர்ப்பு பெரும்பாலான நிலமற்ற விவசாய தொழிலாளர்கள் வாழ்க்கைக்கு முதன்மையான தொழிலாகவும், குறைந்த வருவாய் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வருவாயை அதிகரிக்கவும் உதவுகிறது. இறைச்சி மற்றும் தோல் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர நிலத்தினை வளப்படுத்துவதற்காக செம்மறி ஆட்டினங்களை வயல்வெளிகளில் மந்தைகள் மூலம் பராமரித்தலால் சிறிது வருமானம் கிடைக்கிறது. பொதுவாக கிராமப்புறங்களில்



2000 ஏப்ரல் 18]

"கொட்டிலில் ஆடு—பெட்டியில் பணம்" என்ற பழமொழி வழக்கத்தில் உள்ளது. கொட்டகைகளில் உள்ள செம்மறியாடுகளின் இருப்பைக் கொண்டு, கையில் பணம் என்பது முற்றிலும் உண்மையாக உள்ளது. அதாவது செம்மறி ஆட்டினை எந்த நேரத்திலும் விற்று பணத்தை அவசரத் தேவைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

**(அ) ஆட்டுப் பண்ணைகள் மற்றும் ஆட்டினப் பிரிவுகள்**

கீழ்க்கண்ட இடங்களில் ஆட்டினப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(i) சின்ன சேலம் (விழுப்புரம் மாவட்டம்)

(ii) சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்)

(iii) முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்)

ஓசூர், புதுக்கோட்டை, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய பண்ணைகளில் தனியே ஆட்டினப் பிரிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் சென்னை சிகப்பு, மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், மாண்டியா மற்றும் வேம்பூர் இன செம்மறியாடுகள் பராமரிக்கப்பட்டு இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு பண்ணைகளில் இனப்பெருக்கம் செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட செம்மறி ஆட்டுக்கிடாக்களும், பெட்டைகளும் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகளின் ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்படுகிறது.

**(ஆ) தீவிர மருத்துவ நலப் பணி.**

செம்மறியாடுகள் பெரும்பாலும் மேய்ச்சலை நம்பியே இருப்பதால் அவைகளுக்கு குடற்புழு தாக்கம் ஏற்பட்டு பல தொல்லைகள் வர வாய்ப்புள்ளது. அதன் காரணமாக உடல் எடை குறைவும், இனவிருத்திக்கு காலம் கடந்தும் அதிக அளவிலான இறப்பு சதவீதமும், குறைவான இனப்பெருக்க சதவீதமும் போன்ற பல உடல் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் வேறு பல நோய்களும் ஏற்படக் காரணமாகிறது. இவ்வகையினால் இறைச்சியின் தன்மை, தோல் தன்மை மற்றும் இறைச்சி எடைக் குறைவும் ஏற்படுகின்றன.

குடற்புழுவால் மேற்கூறிய இன்னல்களிலிருந்து செம்மறியாடுகளைக் காப்பாற்ற, அவைகள் காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்பட வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு ஏழை விவசாயிகள் பராமரிக்கும்

[2000 ஏப்ரல் 18

செம்மறி ஆடுகளுக்குத் துறையின் மூலம் தீவிர நலம் பேணும் முறைகளின் கீழ், காலமுறைப்படி 1982-83ஆம் ஆண்டு முதற்கொண்டு முறையாக குடற்புழு நீக்கம், சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக பிற மாவட்டங்களில் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டச் செயலாக்கத்திற்கு 1999-2000ல் ரூ.40.00 இலட்சம் செலவில் பலவகையான குடற்புழு நீக்க மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டன.

### 3. வெள்ளாடு இனப்பெருக்கம்

உள்ளூர் வெள்ளாடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்தி தரமான வெள்ளாடுகளை பொது மக்களுக்கு வழங்குவதற்காக இத்துறை ஜமுனாபாரி வெள்ளாடுகள்-ஆட்டுப் பண்ணை, சின்னசேலம், சாத்தூர், மாவட்ட கால்நடைப் பண்ணை செட்டிநாடு, கொருக்கை, ஓசூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் இனப்பெருக்கத்திற்காக வளர்க்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை, மாவட்ட கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த வெள்ளாடுகளின் வம்சாவழிகளை உள்ளூர் ஆடுகளின் பால் மற்றும் இறைச்சித் திறனை அதிகரிப்பதற்காக உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், உள்நாட்டு இனங்களான கொடி ஆடு மற்றும் கன்னி ஆடுகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றை வளர்ச்சி அடையச் செய்வதற்கும் அவைகள் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 4. பன்றி இனப்பெருக்கம்

முந்தைய ஆண்டுகளில் பன்றி வளர்ப்பு அறிவியல் முறைப்படி இல்லாதிருந்தாலும் அண்மைக் காலங்களில் இது சிறந்ததாக விளங்குகிறது. மேலும் ஏழை விவசாயிகளுக்கு சத்துமிக்க உணவாகவும், இலாபகரமான சுய வேலைவாய்ப்புத் தொழிலாகவும், கூடுதல் வருவாயை அளிக்கக் கூடியதாகவும் உள்ளது. நகர்ப்புற மக்களின் பன்றி இறைச்சி மற்றும் பன்றி உற்பத்திப் பொருள்களின் தேவையினை நிறைவு செய்ய பன்றி வளர்ப்பு கிராம மக்களிடையே ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் பன்றி இனங்கள் சென்னை சைதாப்பேட்டை பன்முக கால்நடை மருத்துவமனை வளாகத்திலும், மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் இனப்பெருக்கத்திற்காகவும் பராமரிக்கப்படுகின்றது. உள்ளின சேர்க்கையை தவிர்ப்பதற்காக வெளி மாநிலங்களிலிருந்து புதிய பன்றிகள் வாங்கப்பட்டு, மேற்கண்ட இடங்களிலுள்ள பன்றிப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.



2000 ஏப்ரல் 18]

1999-2000 ஆண்டு இந்திய அரசு ரூ.108.00 லட்சம் செலவில் மூன்று புதிய பன்றிப் பிரிவுகளை மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு, ஆட்டுப்பண்ணை, சின்னசேலம், மற்றும் முகுந்தராயபுரம் ஆகிய இடங்களில் அமைப்பதற்காகவும் தற்போதுள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் ஓசூர், அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய இடங்களில் உள்ள மூன்று பன்றிப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்காகவும் இசைவளித்துள்ளது.

### 5. முயல் இனப்பெருக்கம்

தனி நபருக்கு விலங்குகளிலிருந்து கிடைக்கும் புரதச்சத்தினை அதிகரிக்கவும் மாநிலத்தில் இறைச்சி உண்பவர்களுக்கு பலதரப்பட்ட கால்நடை புரதச் சத்தினை அளிப்பதற்காக (சென்னை) (சைதாப்பேட்டை), மற்றும் கோழி விரிவாக்க நிலையம், எஸ்.வி. நகரம் (திருவண்ணாமலை மாவட்டம்) ஆகிய இடங்களில் முயல் வளர்ப்புப் பிரிவு அமைத்து முயல் வளர்ப்பு பொது மக்களிடையே ஊக்குவிக்கப்படுகிறது.

### 6. குதிரை வளர்ப்பு

ஓசூரில் அமைந்துள்ள மாவட்ட கால்நடைப் பண்ணையை சுற்றிப்பார்த்து கண்காணிப்பதற்கு குதிரைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. விரைவாகப் பெருகி வரும் போக்குவரத்து சாதனங்களால் குதிரைகளின் எண்ணிக்கை பண்ணையில் அடியோடு குறைந்துள்ளது. இவ்வினத்தை இனப்பெருக்கம் செய்து பாதுகாக்க அரசு ரூ.5.00 இலட்சம் இசைவளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5 பெண் குதிரைகளும் 1 ஆண் குதிரையும் வாங்கி ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையில் இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் 1998-99ல் ரூ.26.00 இலட்சம் செலவில் இசைவளிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 1 ஆண் மற்றும் 6 பெண் குதிரைகள் வாங்கப்பட்டன. தற்போது இப்பண்ணையில் 16 பெண், 4 ஆண் குதிரைகள் மற்றும் 5 குட்டி குதிரைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 7. நாய் வளர்ப்பு

மனிதனுக்கு உற்ற நண்பன் நாயாகும். நமது மாநிலத்தில் தலைசிறந்த நாய் இனங்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை ஆகியவைகள் உள்ளன. இந்த உள்ளூர் இன நாய்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக 1980-81 ஆம் ஆண்டு சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தி வளர்க்கப்படுகின்றன. மேலும் லேப்ரடார், டாபர்மேன் மற்றும் கூலி இன நாய்களின் தேவை அதிக

அளவில் இருப்பதால் இவ்வினங்களும் தற்பொழுதுள்ள நாய்ப் பிரிவில் 1997-98ஆம் ஆண்டு முதல் சேர்க்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இதன் குட்டிகள் பொது மக்களுக்கு விற்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது 15 ஆண், 22 பெண் மற்றும் 33 குட்டிகள் இப்பிரிவில் உள்ளன.

## 8. கோழி இனப்பெருக்கம்

புழக்கடையில் மட்டுமே வளர்க்கக் கூடியதாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது ஒரே துடிப்பான, சுறுசுறுப்பான வர்த்தகரீதியான தொழிலாக மாறிவிட்டது. 1960 ஆம் வருடத்தின் பின் பகுதியில் ஆழ்க்கூழ் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் கோழி வளர்ப்பு மிகப் பெரிய முன்னேற்றம் கண்டுள்ளது. பின்னர் 1980-ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதுவிதமான அறிவியல் தொழில்நுட்பங்கள், புதிய இனக்கோழிகள் மற்றும் கலிபோர்னியா கூண்டு முறை கோழி வளர்ப்பு போன்றவைகளின் வருகையினால் கோழி வளர்ப்பில் புரட்சி ஏற்பட்டு தொழிலாக மாறியுள்ளது. இதனை விரைவுபடுத்தும் நோக்குடன் 1950ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட கோழி விரிவாக்க நிலையங்கள் முக்கிய காரணமாய் அமைந்துள்ளன. அவைகள் செயல் விளக்க பண்ணைகளாகவும், விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து கோழிப்பண்ணைத் தொழிலைச் செய்ய ஊக்குவித்தன. தற்போது வர்த்தக ரீதியான கோழிப்பண்ணைத் தொழில், பெரிய முதலீட்டாளர்களின் வசம் உள்ளது. இந்நிலையில் கோழி விரிவாக்க நிலையங்கள் தேவை இல்லாததால், அவற்றின் உள்ளீட்டு வசதிகளை வேறு நல்ல முறையில் பயன்படுத்த இத்துறை திட்டமிட்டுள்ளது.

கிராமப்புற வீடுகளில் புழக்கடையில் வளர்க்கப்படும் 5 முதல் 10 கோழிகள் விவசாயத்துடன் கலந்து சிறிய முதலீட்டில் வளர்க்கப்படுகின்றன. இதன் காரணமாக இறைச்சி மற்றும் முட்டைகள் அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன. புழக்கடையில் வளர்க்கப்படும் கோழிகள் பூச்சி, புழு மற்றும் வீணாகின்ற தானியங்களை உட்கொண்டு நமக்கு முட்டையாகவும் இறைச்சியாகவும் பலன் அளிக்கின்றன. இந்தக் கோழிகள் வெள்ளைக்கழிச்சல் என்ற நோயால் பாதிக்கப்பட்டு இறக்கக்கூடிய வாய்ப்புள்ளது. ஆகவே, இத்துறையானது நோயிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் அனைத்து கால்நடை நிலையங்களில் ஒவ்வொரு வாரத்தில் குறிப்பிட்ட நாட்கள் மற்றும் கிளை நிலையங்களில் மாதத்திற்கு இருமுறை தடுப்பூசிப் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இந்நோய் தொடர்பாக கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நோயிலிருந்து காக்கும்பொருட்டு மாநிலம் தழுவிய "கோழி





வெள்ளைக்கழிச்சல் நோய்த் தடுப்பூசிப் பணி" திட்டம் இத்துறையால் பிப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. முதன் முதலாக செயல்பட்ட இத்திட்டத்திற்கு பொது மக்களிடையே கிடைத்த வரவேற்பைக் கண்டு ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பணியினை செயல்படுத்த இத்துறை தீர்மானித்துள்ளது. 2000 வருடம் நடைபெற்ற திட்டத்தில் பயனடைந்த கோழிகள் 63 இலட்சமாகும்.

விவசாயிகளுக்கு குஞ்சுகள் வழங்குவதற்காக, இரண்டு குஞ்சு பொரிப்பகங்கள், ஒன்று காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்திலும், மற்றொன்று தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரிலும் செயல்படுகின்றன.

கோழிகளில் ஏற்படும் நோய்களை அறிந்துகொண்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, இரண்டு கோழி நோய் புலனாய்வுக் கூடங்கள் ஒன்று ஈரோட்டிலும், மற்றொன்று நாமக்கல் மாவட்டத்திலுள்ள ஆண்டகலூர் கேட்டிலும் செயலாற்றி வருகின்றன. விவசாயிகளிடையே வான்கோழி வளர்ப்புபற்றி பிரபலப்படுத்த, வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது.

## 9. சிறப்புத் திட்டங்கள்

நாகரீகம் தோன்றிய காலம் முதல் நமது கிராமப்புற வீடுகளில் ஏதேனும் கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும் விளைச்சல் நிலங்களின் பற்றாக்குறையினாலும் பெரும்பாலான நிலமற்ற மக்கள் கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துகின்றனர். ஆகையால், இப்பிரிவினருக்கு, வேலைவாய்ப்பு அளித்திட, இத்துறை பல்வேறு பயனாளிகள் பயன்பெறும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

### அ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

"மலைகளின் ராணி" என்று அழைக்கப்படும் நீலகிரி மலைத் தொடர் தனித் தன்மை வாய்ந்தது. இம்மலையின் இயற்கை சூழலைப் பாதிக்கா வண்ணம், மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்குடன், நீலகிரி மாவட்டத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் ஒன்று "மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டமாக" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கன்றுகள் மற்றும் செம்மறியாடு அலகுகள் பழங்குடியினர் குடும்பங்களுக்கு

[2000 ஏப்ரல் 18

வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் ஓர் உறைவிந்து உற்பத்தி நிலையம், உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் தோற்றுவிக்கப்பட்டு, பண்ணைக்கு பசுந்தீவன வளர்ப்புக்குத் தேவையான உள்ளிருப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட்டு உள்ளன. மலைப்பகுதியில் நோய்ப் புலனாய்வு வசதியை மேம்படுத்தவும், உள்ளிருப்பு வசதிகளைப் பெருக்கவும் ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை மற்றும் முதல் உதவிக்கூடம் மூன்று கால்நடை மருந்தகத்திலும் நிரந்தரக் கட்டட வசதி ஒரு கால்நடை மருந்தகத்திலும், ஏற்படுத்தப்பட்டுள்ளது. மலை நிலப்பரப்புகளில் வசிக்கும் எல்லா விவசாயிகளும், கால்நடை மருத்துவ வசதி பெற கால்நடைகளை கால்நடை நிலையங்களுக்கு அழைத்து வர இயலாததால், விவசாயிகளின் இருப்பிடத்திற்கே சென்று, கால்நடை நலப்பணியை மேற்கொள்ள இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கோத்தகிரி மற்றும் கூடலூரில் நிறுவப்பட்டுள்ளன.

1999-2000 ஆம் ஆண்டு ரூ.23.09 இலட்சம் செலவில் இத்திட்டத்தினை செயல்படுத்த இசைவு அளிக்கப்பட்டது.

### ஆ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலையின் இயற்கைச் சூழலை பாதிக்காவண்ணம் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 1981 ஆம் ஆண்டு முதல் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் புல்கரணைகள், புல் நாற்றுகள், புல் விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுதல், கால்நடை மருத்துவ நிலையங்களை ஒட்டி தரிசாக உள்ள நிலங்களில், தீவன வளர்ச்சியைப் பெருக்குதல், கால்நடை மற்றும் ஆட்டினப் பண்ணைகளின் உள்ளிருப்பு வசதிகளை மேம்படுத்தி தீவனப் பெருக்கம் செய்தல் ஆகிய பணிகள் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் அபிசேகப்பட்டியில் உள்ள உறைவிந்து சேமிப்பு வங்கி வலுப்படுத்தப்பட்டதுடன் ஒரு பயிற்சி நிலையமும் கட்டப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வேட்டைக்காரன்புதூர் மற்றும் தேனி மாவட்டத்தில் உத்தமபாளையத்தில் நடமாடும் கால்நடைப் பிரிவு மற்றும் திண்டுக்கல்லில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.



2000 ஏப்ரல் 18]

இரண்டு நடமாடும் கால்நடைப் பிரிவுக்கும் ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுக்கும் ஆகும் பணியாளர்களின் செலவுக்காக ரூ.13.00 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர கன்றுகள், குடற்புழு நீக்க மருந்துகள் வாங்குவதற்கும் மற்றும் அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணையில் உள்ள குழாய்களைப் பழுதுபார்க்கவும் ரூ.41.00 இலட்சம் பயன்படுத்தப்பட்டது.

### (இ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற பழங்குடியின விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருவாயைப் பெருக்க, இத்துறையினரால், 1976 ஆம் ஆண்டு முதல் சேலம், நாமக்கல், தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினர் நலன் கருதி "ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்" மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கறவை மாடுகள், செம்மறியாடுகள், எருதுகள் மற்றும் தீவன வளர்ப்புக்கு உள்ளீடுகள் பல்வேறு பயனீட்டாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டப் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகின்றது. விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடியினர்களுக்கு மட்டும் 75 விழுக்காடு மானியம் வழங்கப்படுகின்றது.

### (ஈ) சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்

வறுமைக் கோட்டுக்குகீழ் வாழும் இந்து ஆதிதிராவிடர் சமூகத்தின் பொருளாதார மேன்மையில் அரசு மிகவும் முனைப்பாக உள்ளது. அதற்காக 1983 ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம் என்ற இந்தத் திட்டத்தினை அவர்களின் நலனுக்காகவே முன்னுரிமையாக செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டம் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டு இத்திட்டத்தினை செயல்படுத்த அரசு இசைவு அளித்துள்ளது.

### (உ) மாதிரி வரைவுத் திட்டம்

கால்நடைப் பொருட்களைப் பற்றி நம்பத்தக்க மற்றும் குறிப்பிட்ட கால அளவில் புள்ளிவிவரங்களைப் பெற மாதிரி அளவீட்டு வரைவுத் திட்டம் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களில் 1977-78 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் அளவீடுகள் பருவவாரியாக வருடந்தோறும் தொடர்ந்து நிரந்தரமாக கணக்கெடுப்பு மூலம் அறியப்படுகின்றன.

[2000 ஏப்ரல் 18

இவ்வாறு மாநில மாதிரி வரைவுத் திட்டத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு அறியப்படும் பால் மற்றும் கால்நடை மூலமாகப் பெறப்படும் இதரப்பொருட்கள் மதிப்பீட்டினால் இத்துறையின் திட்ட மதிப்பீடு மற்றும் வருங்கால திட்டங்களுக்கு அடிப்படியான புள்ளிவிவரமாக இது அமைகின்றது.

1999-2000 ஆண்டில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் கணக்கெடுப்பு அளவீடுகள் பின்வருமாறு:.

| | | |
|---|---|---|
| 1. | பால் (000'மெ.டன்) | 4580 |
| 2. | முட்டை. (மில்லியன்களில்) | 3890 |
| 3. | இறைச்சி (மி.கிலோ)<br>(பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்கள்) | 37 |

கால்நடைக் கணக்கெடுப்புப் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுகிறது. இக்கால்நடைக் கணக்கெடுப்பில் இடைப்பட்ட காலங்களில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கால்நடைக் கணக்கெடுப்புத் திட்டம் ஒன்று இயக்குநரகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**கூட்டுறவுச் சங்கங்கள்**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 ஆம் ஆண்டு முதல் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சங்கங்களுக்கு செயல்முறை பதிவாளராகக் கால்நடை மருத்துவப்பணிகள் இயக்குநர் செயல்படுகிறார். 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதியின்படி பதிவாளருக்கு உள்ள அதிகாரம் மண்டல அளவில் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநருக்கும், கோட்ட அளவில் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநருக்கும் வழங்கப்பட்டுள்ளது. நலிவுற்ற பகுதியினரின் பொருளாதாரத்தை இடைத் தரகர்கள் இல்லாமல் உயர்துவதே இந்தச் சங்கங்களின் நோக்கமாகும். இது தவிர, உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ நலன் அளித்து கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்புப் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், கால்நடை வளர்ப்பிற்கான உள்ளீடுகள் வழங்குவதுடன், விற்பனைக்கும் இத்துறை உதவுகிறது.



2000 ஏப்ரல் 18]

## பாகம் 3

### கால்நடை மருத்துவ நலப் பணிகள்

மாநிலத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை, கால்நடைகளுக்கு உடல் நலம் பேணும் பணியில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. பெருமளவிலான கால்நடை மருத்துவ நிலையங்களில் மருத்துவ நல பணியாளர்களைக் கொண்டு கால்நடைகளுக்கு உடல்நலப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துறை, காலந்தொட்டே கால்நடைப் பணிகளை விரிவு செய்து, மருத்துவ நலப்பணிகளுக்குத் தேவையான உள்ளீட்டு வசதிகளான உடல் நலம் பேணுதல், நோய் கண்டறிதல், நோய் தடுத்தல், நோய் அறவே ஒழித்தல், இனபெருக்கப் பணிக்கு உதவிடல், வேளாண் குடிமக்களுக்கு இத்துறையின் பணிகளில் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டும், இவை தவிர மாண்புமிகு முதலமைச்சரின் கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தை களப்பணி அளவில் செயல்படுத்தியும் வருகிறது.

**1. உடல் நலம் பேணுதல்**

**அ. கால்நடை மருத்துவ நிலையங்கள்:**

கால்நடைகளுக்கு உடல் நலப் பாதுகாப்புப் பணியானது, களப்பணி கால்நடை நிலையங்களான பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையங்களின் செயல்பாடுகள் யாவும், கால்நடை மருத்துவப் பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகள் மற்றும் கால்நடை முனைவர்கள் (Ph.D) தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

பன்முக மருத்துவமனைகள் சென்னையில் சைதாப்பேட்டையிலும், மதுரை தல்லாகுளத்திலும் மற்றும் கோயம்புத்தூரிலும் அமைத்து கால்நடைகளுக்கு சிகிச்சை வசதி 24 மணி நேரமும் அளிக்கப்பட்டு வருகின்றன. பன்முக மருத்துவமனைகள், பெரு மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள் உள் நோயாளிகள் பிரிவுகளுடன், ஈனியல், மருத்துவம், பெரிய அறுவை சிகிச்சைகள் போன்ற சிறப்பு மருத்துவ வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. கால்நடை நிலையங்களான சேலம், கோயம்புத்தூர், வேலூர், ஈரோடு, பொள்ளாச்சி, தல்லாகுளம் (மதுரை) மற்றும் சைதாப்பேட்டை (சென்னை) ஆகிய இடங்களில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன.

[2000 ஏப்ரல் 18

கால்நடை நிலையங்களில், கால்நடை மற்றும் கோழிகளுக்கு இலவசமாக சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றன. நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை வசதி செய்வதுடன், நாட்டின மாடுகளின் மரபினங்களின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் செயற்கை முறை கருவூட்டல் பணியும், உடல்நலப் பணியாக நோய்த் தடுப்பூசிப் பணியும், குடற்புழு நீக்கப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் கலப்பின பசுக்களில் ஏற்படும் மலட்டுத் தன்மையையும், கால்நடை நிலையங்களில் கவனிக்கப்படுவதன் பயனாக அதிக அளவில் பால் உற்பத்தி பெருக்கப்பட்டு, கிராமப்புற ஏழை விவசாயிகளின் பொருளாதார உயர்வுக்கு வழிவகை ஏற்பட்டுள்ளது.

*1959-60-ல்* ஆரம்பகாலத்தில் இருந்த *120* கால்நடை நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு *1999-2000-ல் 1,006* என்ற அளவில் உயர்ந்துள்ளது. *1995-96* முதல் வருடவாரியான கால்நடை நிலையங்கள் கீழ்வருமாறு:—

| | *1995-96* | *1996-97* | *1997-98* | *1998-99* | *1999-2000* |
|---|---|---|---|---|---|
| 1. பன்முக மருத்துவமனைகள் | 3 | 3 | 3 | 3 | 3 |
| 2. பெரு மருத்துவமனைகள் | 21 | 21 | 24 | 24 | 24 |
| 3. மருத்துவமனைகள் | 94 | 104 | 121 | 141 | 141 |
| 4. கால்நடை மருந்தகங்கள் | 765 | 765 | 807 | 828 | 838 |
| மொத்தம் | **883** | **893** | **955** | **996** | **1,006** |

*1999-2000* ஆண்டில் *149.12* இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணியும், *6.84* இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், *233.72* இலட்சம் கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு தடுப்பூசிப் பணியும், *127.16* இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கப் பணியும் மற்றும் *31.11* இலட்சம் செயற்கை கருவூட்டல் பணியும் மேற்கொள்ளப்பட்டன.

**ஆ. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு மற்றும் மருந்தகங்கள்:**

கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள் மாநிலமெங்கிலும், குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்கள் கால்நடை சிகிச்சையின் பொருட்டு அதிக தொலைவு செல்ல மற்றும் அவர்களின் இருப்பிடத்



2000 ஏப்ரல் 18]

தன்மையினால் கால்நடைகளை அழைத்து செல்ல முடியாமல் போவதை தவிர்க்கும் நோக்குடன் இந்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகளின் முக்கிய நோக்கங்களாவன:—

1. கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் உடல்நலப் பாதுகாப்பு மற்றும் மருத்துவ உதவி அளித்தல்.
2. நோய் வருமுன் தடுப்பு நடவடிக்கையாக, தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுதல் மற்றும் தொற்று நோய்த் தாக்கி ஏற்படும் நோய் கிளர்ச்சியினை தடுக்க நடவடிக்கை எடுத்தல்.
3. அறிவியல் பூர்வமான மற்றும் தொழில்நுட்ப உத்திகளை கால்நடைப் பராமரிப்பில் புகுத்துவது குறித்து விவசாயிகளுக்கு அறிவித்தல்.
4. செயற்கை முறை கருவூட்டல் பணி பசுவினங்களுக்கும், எருமையினங்களுக்கும் மேற்கொள்ளுதல்.

மாநிலமெங்கிலும் *54* நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கால்நடை உதவி மருத்துவரின் பொறுப்பிலும் மற்றும் தேவையான பணியாளர்களுடனும், ஊர்தியுடனும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில், நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகின்றன. இம்மாதிரியான சிகிச்சை வசதிகள் மக்களின் இருப்பிடத்திலேயே கிடைப்பதால், பொதுமக்களிடையே அதிக அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

*383* நடமாடும் கால்நடை மருந்தகங்களும், அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், அந்தந்த கால்நடை விரிவாக்க அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இப்பணிக்காக இவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் உலக வங்கி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**இ. கிளை நிலையங்கள்:**

கிளை நிலையங்கள், கால்நடை ஆய்வாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்நிலையங்களில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவி, பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணி, சினைப் பரிசோதனை பணிகள் மற்றும் கிளை நிலைய எல்லையில் உள்ள கால்நடை மற்றும் கோழிகளின் வருடாந்திர கணக்கெடுப்புப் பணியும் நடைபெறுகின்றன. கால்நடை உதவி மருத்துவரின் தொழில்நுட்ப ஆலோசனைப்படி தடுப்பூசிப் பணிக்கும்,

[2000 ஏப்ரல் 18

குடற்புழு நீக்கப் பணிக்கும் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள். மாநிலத்தில் தற்பொழுது 2126 கிளை நிலையங்கள் பல்வேறு பகுதிகளிலும் செயல்பட்டு வருகின்றன. செயற்கை முறை கருவூட்டல் பணியை விரிவுபடுத்தவும் எல்லா கிராமங்களிலுள்ள கால்நடைகளுக்குச் சிகிச்சைப் பயன் கிடைக்க 1996-97-ல் 2126 கிளை நிலையங்களுக்கும் இணையாக 2126 பார்வைக் கிளை நிலையங்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டன.

### 2. நோய்த் தடுப்பு, ஆய்வு, கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்

விலை உயர்ந்த கலப்பின பசுக்கள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட முர்ரா இன எருமையினங்கள் பெருகுவதால் நோய்ப் பிரச்சினைக்கு முன்னுரிமை தரப்படுகின்றது. விவசாயிகள் வருமானம் குறைந்து நோயுற்ற கால்நடைகளினால் உற்பத்தி திறன் குறைவதால் பெரிதும் அவதிக்குள்ளாகின்றனர். இவற்றை கருத்திற் கொண்டு, முன் கூட்டியும், துல்லியமாகவும் மற்றும் குறிப்பாகவும் நோயைக் கண்டறிதல் இன்றியமையாத பணியாகின்றது. மேலும், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு ஏற்படும் தொற்று நோய் வெற்றிகரமாகச் சிறந்த தடுப்பூசிப் பணியின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது.

மாட்டினங்களில் ஏற்படும் நோய்களில் ஆபத்தான நோய் கோமாரி நோயாகும். இது அதிக அளவில் கால்நடைகளைத் தாக்குவதால் விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றது. செம்மறி ஆடுகளுக்கு ஆட்டம்மை மற்றும் துள்ளுமாரி நோய்கள் அதிக அளவில் இறப்பினை ஏற்படுத்துகின்றன. கால்நடைகளின் உரிமையாளர்கள் நோயுற்ற கால்நடைகளை குணப்படுத்துவதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். ஆனால், நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோய் வராமல் பாதுகாக்க அதிக அக்கறை செலுத்துவதில்லை. ஆகையால், இத்துறை மட்டுமே தேவையான நோய்த்தடுப்பு கட்டுப்பாடு மற்றும் அறவே ஒழித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

#### அ. நோய்த் தடுப்பு:

"நோய் வருமுன் காத்தல்" என்ற சொல்லுக்கு இணங்க, இத்துறையால் கால்நடைகள் வளர்ப்பு, செல்லப் பிராணிகள் மற்றும் கோழியினங்களுக்கு முக்கியத்துவம் தந்து, நோய்த் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தடுப்பூசி மருந்துகள், கால்நடை மற்றும் கோழிகளின் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்தில் இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு



2000 ஏப்ரல் 18]

வருகின்றன. இந்நிலையத்தில் தற்போது 7 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும் 11 வகையான வைரஸ் தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

### நோய் கடுங்கண்காணிப்பு மற்றும் தொற்று நோய் கண்டறிவது

கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய தொற்று நோய்களான பாக்டீரியா நோய்கள், வைரஸ் நோய்கள், ஒட்டுண்ணி நோய்கள், புரோட்டோசோவா நோய்களையும் மற்றும் ரிக்கட்ஸியல் நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து அவற்றிலிருந்து காத்திட நோய்ப் புலனாய்வுப் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. இதனடிப்படையில், கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள், மாநிலமெங்கிலும் தோற்றுவிக்கப்பட்டு செயலாற்றுவதுடன் கால்நடை நோய்க் கடுங்கண்காணிப்புப் பிரிவு ஒன்று கால்நடை மருத்துவ பணிகள் இயக்ககத்தில் செயல்படுகிறது.

### கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய பணிகளாவன:

1. நோய்க் கிளர்ச்சிப் பகுதியினை ஆய்வு செய்து வரைபடம் மூலம் விளக்குதல்.
2. தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய காரணங்களை முன்கூட்டியே கண்டறிந்து அதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தடுப்பு வழிமுறைகளை குறித்த காலத்தில் மேற்கொள்ளுதல்.
3. நோய்க் கிளர்ச்சி ஏற்படக்கூடிய இடங்களில் நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து களப்பணி அலுவலர்களுக்குத் தகுந்த முறையில் எச்சரித்தும், உதவியும் செய்தல்.
4. உடனடியாக நோயின் தன்மையைக் கண்டறிந்து அதை களப்பணியாளர்களுக்குத் தெரிவித்து அதற்குச் சரியான மருத்துவ சிகிச்சை அளித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.
5. நோய்க் கிளர்ச்சி ஏற்பட்டுள்ள இடத்தில் மாதிரிகளைச் சேகரித்துப் பாதுகாத்து அதனை ஆய்வின் பொருட்டு சென்னை சைதாப்பேட்டை, மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம் மற்றும் இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திற்கு அனுப்பி வைத்தல்.
6. விலங்குகளிலிருந்து மனிதனுக்கு பரவும் நோய்களான காசநோய் மற்றும் கருச்சிதைவு ஆகியவைகளை கால்நடைகளுக்கு காலமுறைப்படி பரிசோதனை செய்தல்.

[2000 ஏப்ரல் 18

7. தொற்று நோய் தொடர்புடைய பலவகையான நோய்களின் (பராமரிப்புக் குறைவினால் ஏற்படும் நோய்கள் மற்றும் தொற்று நோய்கள்) கிளர்ச்சி குறித்து மண்டல அளவிலான மண்வளத்துடன்கூடிய வரைபடம், மாவட்ட அளவில் வரைந்து அந்தந்தப் பகுதியில் குறைவாகவுள்ள தாது உப்புச் சத்துக்கள் முதலியவைகளை குறித்துத் தயாரிப்பது.

இந்த அடிப்படையில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் கீழ்க்கண்ட 15 இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

1. காஞ்சிபுரம்
2. வேலூர்
3. கடலூர்
4. கோயம்புத்தூர்
5. தஞ்சாவூர்
6. சேலம்
7. சிவகங்கை
8. திருநெல்வேலி
9. மதுரை
10. திருச்சிராப்பள்ளி
11. உதகமண்டலம்
12. தூத்துக்குடி
13. ஈரோடு
14. திண்டுக்கல்
15. விழுப்புரம்

மாநிலத்தில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட கால்நடைகள் மற்றும் கோழியினங்களினால் அதிக அளவில் உற்பத்தி பெற அவற்றை நல்ல ஆரோக்கியமான நிலையில் பராமரித்து வருவது அவசியமாகும். எனவே, நோயினைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க நோய் கடுங்கண்காணிப்பு மிகவும் அத்தியாவசியமாகிறது. இவற்றை கருத்தில்



2000 ஏப்ரல் 18]

கொண்டு தலைமையலுவலகத்தில் கால்நடை நோய்க் கடுங்கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றின் மூலமாக நோய்களின் கிளர்ச்சி குறித்து அறிய பல விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கால்நடை நோய் பற்றிய தகவல் அறியும் முறை மத்திய அரசின் தேசிய தகவல் மையம் மூலமாக தொடர்புகொண்டு நோயின் தாக்குதல் உடனுக்குடன் அறியப்பட்டு, அந்தப் பகுதியில் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோயினை கட்டுப்படுத்தி அவற்றினை அறவே ஒழிக்க உதவியாக இருக்கின்றது. இதில் கிடைக்கும் தகவல்கள் அருகிலுள்ள மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

**ஆ. நோய் ஆய்வு:**

கோழிகள் அதிகமாகப் பராமரிக்கப்படும் பகுதிகளில் விவசாயிகளின் நலன் கருதி இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடம், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டலூர்கேட்டிலும், மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலமாக நோய் ஆய்வு விரைவில் செய்வது மட்டுமின்றி தீவன ஆய்வு, நீர் ஆய்வுகளை மேற்கொண்டு, காலத்தே விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கிறது.

நான்கு நடமாடும் ஆய்வுக் கூடங்கள் நோய்ப் புலனாய்வுப் பிரிவுடன் சார்ந்து மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நிலையான எல்லைகளைக் கொண்டு பணியாற்றுகின்றன. நடமாடும் ஆய்வகங்கள் யாவும், தேவையான ஆய்வுக் கூட உபகரணங்களுடன் நோய் ஆய்வுப் பணி மேற்கொள்ளும் வசதியுடனுள்ளன. அவை நோய்ப் பாதிப்புள்ள இடங்களுக்குச் சென்று உடனுக்குடன் ஆய்வினை மேற்கொண்டு நோய்த் தன்மையைக் கண்டறிந்து மாதிரி சேகரிப்புச் செய்தும், தீவிர நோய் ஆய்வுப் பணியை மேற்கொள்கிறது.

கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகளின் பணிகளை ஆய்வு செய்தல், நோய்க் கண்டறிதல் மற்றும் அது தொடர்பான புலனாய்வுப் பணிகளில் உதவிடல் ஆகியவற்றிற்கு ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம் சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவ வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம் பலவகையான நுண்ணுயிரியல் சோதனை, நீர் பரிசோதனை மற்றும் தசை நோய் குறியியல் பணியினை மேற்கொண்டு நோயின் தன்மையை உறுதிப்படுத்துகிறது.

[2000 ஏப்ரல் 18

## இ. நோய்க் கட்டுப்பாடு:

### கோமாரி நோய்:

விலைமதிப்பு மிக்க கலப்பின பசுக்களும், தரம் உயர்த்தப்பட்ட எருமையினங்களும் பெருகி வருவதால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளும் முக்கியமாகிறது. கோமாரி நோய் வைரஸ் கிருமிகளினால் ஏற்படுகிறது. அது மாட்டு இனங்களையும், எருமையினங்களையும், செம்மறியாடுகளையும் மற்றும் வெள்ளாடுகளையும் தாக்குகின்றன. அதிக நோய் பாதிப்பு விழுக்காடு தன்மையால் அவை பால் உற்பத்திக் குறைப்பு, மலட்டுத் தன்மை மற்றும் இளங்கன்றுகள் இறப்பு போன்றவைகளை ஏற்படுத்துகிறது. இவை விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. நல்ல திறன் வாய்ந்த உயரின மரபு வழியைச் சார்ந்த கால்நடைகளைக் காத்திட இத்துறையானது ஊநீர் மருந்தின் விலையில் 50 விழுக்காடு மானியமாக அளித்து ஏழை வேளாண் குடிமக்களின் கால்நடைகளுக்குத் தடுப்பூசி திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

### நோயற்ற மண்டலம்:

கால்நடை மற்றும் கால்நடைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இந்நாட்டின் தென் பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கால்நடைகளைப் பெரிதும் தாக்கக்கூடிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நோய்களான வெக்கை நோய் மற்றும் கோமாரி நோய் தாக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் ஏற்றுமதியை வலுப்படுத்தவும், அதிகரிக்கவும் நோயற்ற பகுதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, திட்டப் பகுதிகளிலும் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில் 40 கிலோமீட்டர் உள்ளடக்கிய பகுதிகளிலும் முறையான பெருமளவிலான தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தினை ஒட்டிய எல்லையோரப் பகுதியில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, வரும் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்படுகின்றன. இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 29-10-1984 முதல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



2000 ஏப்ரல் 18]

## ஈ. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்:

இந்நோயைத் தடுக்க வெக்கை நோய் தடுப்பூசிப் பணி, 10 வெக்கை நோய் கண்காணிப்புப் பிரிவுகள், 16 வெக்கை நோய் குழுக்கள் மற்றும் எல்லையோரப் பகுதிகளில் 10 கால்நடை சோதனைச் சாவடிகள் மூலமாக காலமுறைப்படி மாநிலத்திற்கு உள்ளே வரும் மற்றும் வெளியே செல்லும் கால்நடைகளுக்கும் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின்படி 1993-94 முதல் 1995-96 வரை 100 விழுக்காடு தடுப்பூசிப் பணி தமிழ்நாட்டிலுள்ள 14 எல்லையோர மாவட்டங்களில் போடப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள மற்ற மாவட்டங்களில் 100 விழுக்காடு தடுப்பூசிகள் போடப்படும் பணி மேற்கொள்ளப்பட்டது. எல்லையோர மாவட்டங்களில் தீவிர தேடுதல் பணிகளின் மூலம் தடுப்பூசிகள் போடப்பட்டது.

தடுப்பூசிப் பணியானது 31-12-1997-ல் முடிக்கப்பட்டது. தற்போது நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என தீவிர கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்துறையின் கடும் முயற்சியின் பயனாக செப்டம்பர் 1995 முதல் இம்மாநிலத்தில் வெக்கை நோய்க் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை. தேர்வு செய்யப்பட்ட கால்நடைகளில் ஊநீர் பரிசோதனை செய்து, நோய் தடுப்புத் திறன் கண்டறியப்பட்டு, நமது மாநிலம் 2001-2002-ல் வெக்கை நோய் இல்லாத மாநிலமாக அறிவிக்கப்படும்.

# பாகம் 4

## விரிவாக்கப் பணி மற்றும் கால்நடை பொது சுகாதாரம்

முறையான விரிவாக்கப் பணியும், பிரச்சாரப் பணியும் இன்றி புதிய தொழில்நுட்ப மற்றும் அறிவியல் நுட்பங்களை அறிவது என்பது இயலாது. சிறந்த விரிவாக்கப் பணிகளால் கால்நடைப் பராமரிப்பின் புதிய முன்னேற்றங்களைக் கற்று உணரவும், அவற்றில் விழிப்புணர்ச்சி ஏற்படவும், இத்துறையின் திட்டங்களை பொதுமக்களுக்கு தெள்ளத்தெளிவாக புரியும்வண்ணம் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

[2000 ஏப்ரல் 18

கால்நடைக் கண்காட்சி மற்றும் பொருட்காட்சிகளில் பொதுமக்களுக்குத் தற்கால அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தெரிவிக்கவும், கால்நடை மற்றும் கோழியினங்கள் முறையாக பராமரித்து அதிக இலாபத்தை ஈட்டுவது பற்றி தெளிவுபடுத்தவும் ஒரு சிறந்த சாதனமாக அமைகிறது.

**அ. விளம்பரம் மற்றும் பிரச்சாரம்:**

கிடைத்த அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொண்டு இத்துறையானது விவசாயிகளிடம் அறிவியல் வழியிலான கால்நடைப் பராமரிப்பு, தொழில்நுட்ப விவரங்களைப் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகின்றது. மேலும், அதிநவீன நுட்பங்கள் செயல்விளக்க முறையில் விவசாயிகளுக்கு விளக்கப்படுவதால் அவர்களுக்கு உள்ள நம்பிக்கையை மேலும் மேம்படுத்துகிறது.

"காண்போம் கற்போம்" என்ற கொள்கையின்படி இத்துறையானது நடைபெறும் உள்ளூர் விழாக்களிலும், பொருட்காட்சிகளிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு கால்நடைப் பராமரிப்பின் தற்கால நவீன தொழில்நுட்பங்களையும், பொதுச் சுகாதாரம் குறித்து நுட்பங்களையும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் அதிக மக்களைக் கவரும் சென்னை அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி மற்றும் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் கூட்டுறவு வார விழாவில் இத்துறை கலந்துகொள்கிறது. பல வகையான தகவல் ஒலிபரப்பு முறையான தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ்கள் மூலமாகவும், விவசாயிகளுக்குத் தேவையான அடிப்படை விவரங்கள் மற்றும் துறையில் ஏற்படும் தொழில்நுட்ப மாற்றங்களையும், நிகழ்வுகளையும் தெரிவிக்கின்றன.

கால்நடைப் பராமரிப்பு மற்றும் பசுந்தீவன உற்பத்தி குறித்து இத்துறை 19 வகையான சிறு திரைப்படங்களைத் தயாரித்துள்ளது. மேற்கண்ட திரைப்படங்கள், மக்கள் தொடர்பு முகாம்களிலும், திருவிழாக்களிலும், பொருட்காட்சியிலும் மற்றும் உள்ளூர் கால்நடைச் சந்தைகளிலும் மாநிலமெங்கிலும் திரையிட்டு காண்பிக்கப்படுகின்றன. இத்துறையினால் ஒவ்வோர் ஆண்டும் 30000 மக்கள் தெடர்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், சுற்றறிக்கைகள், செய்தி மடல்கள் ஆகியவை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.



2000 ஏப்ரல் 18]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட "சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்" நடக்கும் ஒவ்வொரு முகாமுடன் கால்நடை வளர்ப்புத் தொடர்பான அறிவியல் நுட்பங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய விளக்கக் கண்காட்சி நடைபெறுவதால், கால்நடை வளர்ப்பில் ஏற்படும் ஐயப்பாடுகளும் விவசாயிகளுக்கு தெளிவாக்கப்படுகின்றன.

இத்துறையில் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன், இத்துறைக்குத் தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்கப் பணிக்குத் தேவையான அச்சடிப்புப் பணிகளுக்கு சைதாப்பேட்டையில் (சென்னை) செயல்பட்டுவருகிறது. இந்த அச்சுக்கூடம் நவீன சாதனங்களான லேசர் பிரிண்டிங் மற்றும் டெக்ஸ் டாப் பப்ளிசிட்டி (Desk Top Publicity) போன்ற வசதிகளைக் கொண்டுள்ளது.

மக்கள் தொடர்பு சாதனங்களான அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சியை இத்துறை முழுமையாக பயன்படுத்திக் கொண்டுள்ளது. கால்நடைப் பராமரிப்பு பற்றிய செய்தி ஒலிபரப்பு வாரந்தோறும் சென்னை அலைவரிசையில் வியாழக்கிழமையும், திருச்சி அலைவரிசையில் ஞாயிற்றுக்கிழமையும் ஒலிபரப்பப்படுகிறது. இது மட்டுமின்றி கிடைக்கும் மற்ற வழிகளும் பயன்படுத்தப்பட்டு, விவசாயிகளுக்கு கால்நடைப் பராமரிப்பு பற்றிய நவீன யுக்தியை தெளிவுபடுத்துகிறது. இந்த வருடம் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி வானொலி நிலையங்களிலிருந்து 210 கால்நடைப் பராமரிப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

**ஆ. வெறி நாய்க்கடி நோய்த் தடுப்புத் திட்டம்:**

விலங்கிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களுள் வெறி நாய்க்கடி ஓர் அபாயகரமான நோய். மனிதர்களுக்கு இந்நோய் வெறி நோய்க் கண்ட நாய்களின் மூலமாகப் பரவுகிறது. ஆகையால், இந்நோய் உள்ள நாய்களுக்கும், நாய்களிலிருந்து மனிதனுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் பரவுவதைத் தடுக்க வெறி நாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் சென்ற ஆண்டு முதல் கால்நடை மருத்துவமனைகளில் வெறிநாய்க்கடி தடுப்பூசி மருந்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 18

**இத்திட்டப் பிரிவுகளின் முக்கிய நோக்கம்:**

1. கட்டாய நோய்த் தடுப்பு முறையை கையாள வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறி நோய்த் தடுப்பூசி மருந்தின் விலையை மட்டும் கட்டணமாக வசூலித்து, தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

2. நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

3. பொதுமக்களிடையே இந்நோய் பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலம் தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல், நாய் கண்காட்சி நடத்துதல்.

இத்திட்டம் வெகுவாக வரவேற்கப்பட்டு, மனிதர்களைத் தாக்கக்கூடிய வெறி நாய்க்கடி நோய் கணிசமான அளவில் குறைந்துள்ளது.

**இ. பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்:**

இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாக தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் செய்து வருகிறது. அனைத்து கால்நடைகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. அடைப்பான், புருஸெலோசிஸ், டெட்டனஸ், நாடாப்புழு நோய் போன்ற அபாயகரமான நோய்களைத் தடுத்து, மேலும் பரவாமல் தடுக்கிறது. முறையான குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்குப் பரவாமல் குடற்புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.

**ஈ. இறைச்சித் தரம் ஆய்வு:**

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 183 பதிவு பெற்ற இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் இறைச்சி மூலம் பரவும் நோய்களான டீனியாஸிஸ், ட்ரைகூரிசிஸ் போன்ற நோய்களிலிருந்து பொதுமக்கள் காக்கப்படுகிறார்கள்.



2000 ஏப்ரல் 18]

**தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம்**

**முன்னுரை:**

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) 12-7-1973 அன்று ஓர் அரசு நிறுவனமாக தொடங்கப்பட்டது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.200.00 இலட்சமும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.126.68 இலட்சமும் ஆகும்.

**நடவடிக்கைகள்:**

தற்பொழுது இந்நிறுவனம் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள விற்பனை பிரிவுகளில் முட்டை, உயிர்க் கோழிகள், கோழி இறைச்சி மற்றும் ஆட்டு இறைச்சி ஆகியவற்றை விற்பனை செய்து வருகின்றது. மற்ற நடவடிக்கைகளான கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்தல், தீவனம் உற்பத்தி செய்தல், கோழி வளர்ப்புப் பணிகள் மற்றும் சத்துணவு மையங்களுக்கு முட்டை விநியோகம் செய்தல் ஆகியவை நிறுத்தப்பட்டு உள்ளன.

**நிதி நிலைமை:**

இந்நிறுவனத்தின் 31-3-1999 அன்றைய மொத்த நட்டம் ரூ.451.95 இலட்சமாகும்.

**தற்போதைய நிலைமை:**

திரு. எஸ்.வி.எஸ். இராகவன் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு அளித்த பரிந்துரையின் பேரில், அரசு கவனத்துடன் பரிசீலித்து அரசு நலனுக்கும், பணியாளர்களின் நலனுக்கும் ஊறு விளைவிக்காவண்ணம் கழகத்தினை மூடிவிட அரசு ஆணை எண் 86, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளத் (டாப்கோ) துறை, நாள். 19-4-1999ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இக்கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வந்த சத்துணவு முட்டை விநியோக மேற்பார்வைப் பணியினை கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககத்திற்கு, அப்பணியினைச் செய்து வந்த பணியாளர்களோடு மாற்றம் செய்யலாம் என ஆணை பிறப்பித்துள்ளது. மீதமுள்ள பணியாளர்களுக்குத் தன்னார்வ ஓய்வுத் திட்டத்தின்கீழ் செல்ல வாய்ப்புத் தரலாம் எனவும், அவ்வாறு செல்லாத பணியாளர்களுக்குச் சட்டப்படி பணி இறுதி பயனுடன் பணியாளர் குறைப்பு செய்யலாம் என ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாறு

[2000 ஏப்ரல் 18

தன்னார்வ ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் அனைத்து அரசு கழகங்களுக்கும், வாரியங்களுக்கும், இதர அரசு நிறுவனங்களுக்கும் தெரிவித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க கேட்டுக் கொள்ளப்படும்.

அதன்படி, சத்துணவு முட்டை விநியோகப் பணியினை மேற்பார்வை செய்து வந்த 114 பணியாளர்கள் 8-7-1999 அன்று கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககத்திற்கு மாற்றம் செய்யப்பட்டனர். 31-1-2000 அன்று முடிய பணியாளர்களுக்கு தன்னார்வ ஓய்வுத் திட்டத்தின்கீழ் செல்ல வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதற்கிடையில், கோழியின வளர்ச்சிக் கழக பணியாளர்கள் சங்கம், கழகத்தை மூடிவிடும் ஆணையையும், சத்துணவுத் திட்டத்திற்கு முட்டை விநியோகத்தை மேற்பார்வையிடும் பணியில் ஈடுபட்டு பணியாளர்களை, கால்நடை மருத்துவப் பணிகள் இயக்ககத்திற்கு மாற்றும் ஆணையையும் எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில், நீதிமன்றம், கழகத்தை முடிவிடும் ஆணையை ஏற்றுக்கொண்டு, கழகத்தின் பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்றுவதற்கு பணியாளர்களின் முதுநிலை மூப்பு பட்டியலின்படி, ஒரு நேர்மையான நடைமுறையைப் பின்பற்றவும், மற்ற பணியாளர்களைத் தன்னார்வ ஓய்வு கோரவும், பணி நீக்கம் செய்யவும், கழகத்தை மூடவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளது. அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

**பொது**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், உயர்கல்வி அளிக்கவும், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் உழவர்களைச் சென்றடைய தேவையான விரிவாக்க முறைகளைக் கையாளவும் செயல்பட்டு வருகின்றது. மேலும், கால்நடை உற்பத்தியை உயர்த்துவதற்காக, கால்நடைப் பண்ணையாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்கு நவீன தொழில் நுட்பங்களை உடனுக்குடன் வழங்கி வருகின்றது. அத்துடன், மக்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊட்டச் சத்துமிக்க உணவின் உற்பத்தியைப் பெருக்கி அதன்வழி, தமிழகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவி வருகின்றது.



2000 ஏப்ரல் 18]

இப்பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல், மீன் வளம், அடிப்படை அறிவியல் ஆகிய மூன்று கல்வி பிரிவுகளைக் கொண்டுள்ளது. மூன்று கல்லூரிகளையும், ஐந்து ஆராய்ச்சி நிலையங்களையும், கால்நடை உணவு நிறுவனம் ஒன்றையும், உணவு மற்றும் பால்வள நிறுவனம் ஒன்றையும், கோழி நோயாய்வுக் கூடம் ஒன்றையும், கால்நடை தீவனத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்றையும், கால்நடை நலக் கண்காணிப்புப் பிரிவு ஒன்றையும், பதினாறு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களையும், இரண்டு வேளாண் அறிவியல் மையங்களையும், மீன் வள ஆராய்ச்சி மையம் ஒன்றையும், மூன்று உழவர் பயிற்சி நிலையங்களையும் தன்னகத்தே கொண்டு இப்பல்கலைக்கழகம் ஒரு வலுவான உள்கட்டமைப்பு வசதிகளைத் தமிழகமெங்கும்கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.

**நிதிநிலைச் செயல்பாடு (ரூபாய் இலட்சத்தில்)**

| | நிதிநிலை மதிப்பீடு 1998-99 (நிகழ்ந்த செலவு) | திருத்திய மதிப்பீடு 1999-2000/ திருத்தப்பட்ட இறுதி ஒதுக்கீடு | 2000-2001ஆம் ஆண்டிற்கான உத்தேச நிதிநிலை மதிப்பீடு |
|---|---|---|---|
| திட்டம் சாராதவை | 1385.75 | 1817.76 | 1721.63 |
| திட்டம் | 1336.15 | 1999.70 | 1629.14+ 28.28 (புதிய திட்டங்கள்) |
| வே.ம.வ.மே. திட்டம் | 660.95 | 1876.80 | — |

[2000 ஏப்ரல் 18

**வேளாண் மனித வள மேம்பாடு**

வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உயர்பயிற்சி ஆய்வுப் பயணம் மேற்கொள்ள பதினாறு தொழில்நுட்ப வல்லுநர்கள் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்துடன் 50 தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்நாட்டில் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| தொழில்நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை | திட்ட விவரம் மற்றும் நாடுகள் | கால அளவு |
|---|---|---|
| 8 | 1. கால்நடைத் தீவன ஊட்ட மற்றும் தொழில் நுட்பம்-இங்கிலாந்து | 3 மாதங்கள் |
| | 2. கால்நடை இனப் பெருக்கத்தில் நவீன தொழில் நுட்பங்கள் அமெரிக்கா | ” |
| | 3. தீவனச் சேர்க்கைப் பொருட்கள்-அமெரிக்கா | ” |
| | 4. மரபு வள விவரப்பதிவேடு-அமெரிக்கா | |
| | 5. வணிக அளவிலான குஞ்சுப் பொறிப்பு மேலாண்மை-அமெரிக்கா | ” |
| | 6. ஊட்டச் சத்துப் பற்றாக்குறையினால் ஏற்படும் மலட்டுத் தன்மை-அமெரிக்கா | ” |
| | 7. வெப்ப மண்டல மாடுகளின் நோயாய்வு-இங்கிலாந்து | ” |
| | 8. கால்நடை மருத்துவக் கவனிப்பு மற்றும் பராமரிப்பு-இங்கிலாந்து | ” |
| | 9. தீவனச் சேர்க்கைப் பொருட்கள் -இங்கிலாந்து | 6 மாதங்கள் |
| | 10. இனவிருத்தியில் மேம்பாடு-இங்கிலாந்து | ” |
| | 11. விரிவாக்கக் கல்வி போதிக்கும் முறைகள் மற்றும் வசதி கருவிகள் - இங்கிலாந்து | ” |



2000 ஏப்ரல் 18]

| தொழில்நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை | திட்ட விவரம் மற்றும் நாடுகள் | கால அளவு |
|---|---|---|
| | 12. மனித வள மேம்பாட்டில் மேலாண்மைப் பயிற்சி-இங்கிலாந்து | 6 மாதங்கள் |
| | 13. பால்பதப்படுத்துதலில் இயக்கப் பயிற்சி-அமெரிக்கா | ” |
| | 14. அசையூண் நுண்ணுயிர்களும் அவற்றின் பயன்பாடும்-அமெரிக்கா | ” |
| | 15. மருத்துவச் சிகிச்சையில் நுண்ணுயிர்கள் - அமெரிக்கா | ” |
| | 16. கால்நடை மருத்துவக் கவனிப்பு மற்றும் பராமரிப்பு-இங்கிலாந்து | ” |

**கல்வி**

இப்பல்கலைக்கழகத்தின் மூன்று கல்லூரிகளிலும் தற்சமயம், பல்வேறு நிலைகளில் 1558 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். தற்பொழுது 390 மாணவியர்கள் (25 விழுக்காடு) இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருவது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்).

**மாணவர் சேர்க்கை**

| பட்ட வகுப்புகள் | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீனவளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்சி. | 147 | 80 | .. | 227 |
| பி.எப்.எஸ்சி. | .. | .. | 25 | 25 |
| எம்.வி.எஸ்.சி. | 97 | 64 | .. | 161 |
| எம்.எப்.எஸ்சி. | .. | .. | 22 | 22 |

| | | | | |
|---|---|---|---|---|
| பி.எச்.டி (கால்நடை மருத்துவம்) | 87 | 10 | .. | 97 |
| பி.எச்.டி. (மீன் வளம்) | .. | .. | 13 | 13 |
| முதுநிலைப் பட்டயம் | 15 | .. | .. | 15 |
| **மொத்தம்** | **346** | **154** | **60** | **560** |

**ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் கால்நடை மற்றும் மீன் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக 150 சிறப்பு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மாநிலத் திட்டக் குழுவினால் 2000-2001 ஆம் ஆண்டிற்காகப் பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒரு ஆராய்ச்சித் திட்டத்தினை மேற்கொள்ள, ரூபாய் 19.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ரூபாய் 1,822 இலட்சம் வரை பெற்று எழுபது ஆய்வுத் திட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம்
2. உயிர் தொழில்நுட்பவியல் துறை
3. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை
4. ஊரகப் பகுதி மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்
5. அணுச் சக்தித் துறை
6. தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியம்
7. தேசிய பால் வள மேம்பாட்டு வாரியம்
8. கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை





9. தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்றம்
10. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்
11. இந்திய விலங்கு நல வாரியம்
12. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி
13. குழும அமைப்புகள்

நெருப்புக் கோழி ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றும் மற்றும் போயர் இன வெள்ளாடு வளர்ப்புப் பிரிவு ஒன்றும் முன்னோடித் திட்டமாக அமைக்கப்பட்டுள்ளன. கால்நடைகள், பறவைகள் மற்றும் மீன்களைத் தாக்கும் நோய்களை ஆராய்ந்திட ஆய்வுக் கூட வசதியமைப்பு, கால்நடை உற்பத்திப் பொருட்களின் எஞ்சியுள்ள பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கண்டறிதல் மற்றும் காளான் நச்சுகளை மதிப்பிடுதல், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறைச்சித் தொழில் நுட்பம் மற்றும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் சிறிய பிராணிகளுக்கான ஒரு அறுவைச் சிகிச்சை அரங்கம் அமைத்தல் ஆகியவை இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டு மாடுகளைத் தாக்கும் சப்பை நோயினைத் தடுத்திட, திறனுள்ள தடுப்பூசி மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், மாடுகளில் ஏற்படும் லெப்டோஸ்பைரா நோயினைத் தடுத்திட முத்தடுப்பூசி மருந்தும் தயாரிக்கப்பட்டுள்ளது. இது, மிகவும் பாதுகாப்பானதும் திறனுள்ளதுமாகும். கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தினை 18-1-2000 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தபோது, ஆடுகளில் ஏற்படும் நீலநாக்கு நோயினைக் கண்டறியும் நோயாய்வுப் பெட்டி ஒன்று வெளியிடப்பட்டது. கறவை மாடுகளில் ஆரம்பக் காலத்திலேயே சினைத் தரித்திருப்பதை புரெஜெஸ்டிரான் அளவு அடிப்படையில் கண்டறிந்திட ஒரு பரிசோதனைப் பெட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. கருமாற்றத்தின் மூலம், பத்து வெள்ளாடுகளுக்கு கருவூட்டல் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் அமைப்பு ரீதியான பால்பண்ணைகளில் பதப்படுத்தப்பட்ட பாலில் உள்ளதைவிட, உள்ளூர் வணிகர்களால் விற்கப்படும் பாலில், நுண்ணுயிர்க் கிருமிகள் அதிகமாக உள்ளன என்பது கண்டறியப்பட்டது. 85 சதவிகித எருமை இறைச்சியையும், 15 சதவிகித

[2000 ஏப்ரல் 18

கடலை எண்ணையையும் கொண்டு பலராலும் உண்ணத் தக்க வகையில் "சாசேஜ்" தயாரிக்கும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. பன்றியிறைச்சியை, கரிவளி அடக்கப்பட்ட பையில் வைத்து 21 நாட்கள் வரைக் கெடாமல் பாதுகாக்கும் முறை கண்டறியப்பட்டுள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய வேளாண் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் கால்நடை உயிர்த்தொழில் நுட்பவியல் மற்றும் நோய் எதிர்ப்பு நிலை ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படும் மையமாக, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்துடன், பதினைந்து உடனியங்கு ஆராய்ச்சிப் பிரிவுகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான விரிவான ஆராய்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஏப்ரல் 1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கால்நடை உயிர்த்தொழில் நுட்பவியலில் உயராய்வு மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேலும், உற்பத்தி நுணுக்கத்தில் இரண்டு திட்டங்களும், பதப்படுத்துதல் மற்றும் உற்பத்தி நுணுக்கத்தில் இரண்டு திட்டங்களும், தொழில்நுட்ப உறுதித் திட்டத்தில் ஆராய்ச்சி ஒன்றும், மீன்வள நுட்பத்தில் இரண்டு திட்டங்களும் இவ்வாண்டில் மேற்கொள்ள ரூபாய் 470.88 இலட்சங்களுக்கு இசைவளிக்கப்பட்டுள்ளது.

**விரிவாக்கக் கல்வித் திட்டம்**

தமிழகத்திலுள்ள ஏழை எளிய மக்களின் பயன்பாட்டிற்காக, பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 27 புற மையங்களில் நடத்தப்படும் களநிலைப் பயிற்சிகள் மூலம், நவீன தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பல தமிழக மாவட்டங்களிலுள்ள பிற்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த உழவர் பெருமக்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் மக்கள் தொடர்பு முகாம், பண்ணையைப் பார்வையிடல், கண்காட்சிகள், ஆலோசனை வழங்குதல், நோயைக் கண்டறிதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் மூலம் 11,864 உழவர் பெருமக்கள் பயனடைந்துள்ளனர். திருக்கழுக்குன்றத்தில் 18-01-2000 அன்று கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின்போது நடத்தப்பட்ட மக்கள் தொடர்பு முகாமினால் கால்நடை மற்றும் கோழிப்பண்ணையாளர்கள் பெரிதும் பயனடைந்தனர்.



2000 ஏப்ரல் 18]

தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, பத்திரிகை போன்ற பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் நவீன தொழில் நுட்பங்கள், ஆய்வகத்திலிருந்து உழவர்களின் இல்லங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வேளாண் பள்ளிப் பாடங்கள் உழவர்களுக்காக நடத்தப்பட்டன.

உழவர் பெருமக்களின் பயன்பாட்டிற்காக, நவீன தொழில் நுட்ப முறைகள் குறித்த கட்டுரைகள் அடங்கிய "கால்நடைக்கதிர்" மற்றும் "செய்திமடல்" போன்றவை தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. அத்துடன் "செய்ரான்" என்னும் ஆராய்ச்சி இதழும் வெளியிடப்பட்டு வருகின்றது.

**திட்டம்**

இப்பல்கலைக்கழகத்திற்காக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின் நிதி உட்பட ரூபாய் 9365 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று ஆண்டுகளில் ரூபாய் 6395 இலட்சங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டிற்காக உத்தேச மதிப்பீடு ரூபாய் 2144.68 இலட்சங்கள் ஆகும்.

## 2000-2001 ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

1. ஒரத்தநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள வயதான கால்நடைகளுக்கு பதிலாக புதிய கால்நடைகள் ரூ.5.98 இலட்சம் செலவில் வாங்குதல்.
2. தீவன பெருக்கத் திட்டத்தினை தீவிரப்படுத்தும் வகையில் ஒரத்தநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.3.70 இலட்சம் செலவில் ஓர் ஆழ்குழாய் கிணறு தோண்டவும், 3 நீர்மூழ்கி மோட்டார்கள் வாங்கவும் உத்தேசிக்கப்பட்டு உள்ளது.
3. இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் மருந்துகள் தயாரிக்கும் பிரிவினை ஊசி மருந்துகள் தயாரிப்பதற்கு ரூ.10.00 இலட்சம் செலவில் விரிவுபடுத்துதல்.

[2000 ஏப்ரல் 18

4. கால்நடை பராமரிப்புத் துறையின் கையேட்டினை ரூ.3.74 இலட்சம் செலவில் திருத்தம் செய்தல்.

5. கிராமப்புற இளைஞர்களுக்கு கால்நடை வளப்பில் செயற்கைமுறை கருவூட்டல், குடற்புழு நீக்கம், தடுப்பூசிப் பணி மற்றும் இதர பணிகளில் பயிற்சி ரூ.2.57 இலட்சம் செலவில் சேலம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஏற்படுத்துதல்.

6. மேலாண்மை தகவல் தொடர்பு, விவரங்கள் சேகரிப்பு பணிக்காக ரூ.15.50 இலட்சத்தில் 15 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களுக்குத் தேவையான கணினி மற்றும் சாதனங்களை அமைத்தல்.

7. ரூ. 11.95 இலட்சம் செலவில் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி நுண்ணுயிரியல் துறையில் ஆட்டுக் கொள்ளை நோய்க்கான வீரியம் குறைக்கப்பட்ட உயிர் நச்சுயுரிகளைக் கொண்ட தடுப்பூசி தயாரித்து, கள நிலைகளில் அதன் மதிப்பீடு மற்றும் தரம் நிர்ணயம் அளித்தல்.



2000 ஏப்ரல் 18]

# இணைப்பு-III

***(18 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

**மானியக் கோரிக்கை எண் 21.**

**மீன்வளத் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001**

## முன்னுரை

மனித சமூகத்தின் மிகப் பழமையான தொழில்களில் வேளாண் தொழிலுடன் மீன்பிடிப்பும் ஒன்று. மீன் பிடிப்பு வளமையான மற்றும் எளிதில் கிடைக்கக் கூடிய புரதச் சத்தினை அளிக்கின்றது. மேலும் அது உணவின் தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. உலகத்தின் அதிக மீன் உற்பத்தி செய்யும் ஏழு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் வளம் செறிந்த உள்நாட்டு மற்றும் கடல்வளம் கொண்ட முக்கிய கடலோர மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இது 1000 கி.மீ. நீளமுள்ள கடற்கரை கொண்டது. மேலும் இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 15 விழுக்காடு. நாட்டின் மொத்த கடல் பொருள் ஏற்றுமதியில் ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கினை தமிழ்நாடு அளிக்கின்றது.

தமிழ்நாட்டின் மீன் வளத் துறையானது 1907-ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. மீன்வளத்தை அதிகரித்தல் மற்றும் பாதுகாத்தல் மேலும் மொத்த மக்கட் தொகையில் பெரும் பகுதியாகி மீன் வளத்தையே வாழ்க்கையின் முக்கிய ஆதாரமாகக் கொண்ட மீனவ மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்துதல் ஆகிய இரு நோக்கங்களுடன் செயல்பட்டு வருகின்றது.

## மீன் வளத் துறையின் கொள்கை நோக்கங்கள்

மாநிலத்தின் கொள்கையானது மீன்வளத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் மற்றும் மீனவ சமுதாயத்தின் நலனை நோக்கமாகக் கொண்டுள்ளது. மீன் வளத் துறையின் நோக்கங்கள் பின்வருமாறு:

1. சுற்றுச்சூழலுக்கு இசைந்த, வளங்குன்றா தொழில் நுட்பங்களின் மூலமாக மீன் உற்பத்தியை உயர்த்துதல்
2. மீனவ சமுதாயத்தின் சமூக, பொருளாதார நிலையை, முக்கியமாக பெண்களுக்கு முன்னுரிமை அளித்து மேம்படுத்துதல்

3. நல்ல தரம் பராமரித்தலை ஒரு வாழ்க்கை நெறியாகவே மீனவ மக்களை மேற்கொள்ளச் செய்தல்
4. வேலைவாய்ப்புகள் அளித்தல்
5. ஊரக வருவாயினை உயர்த்துதல் மட்டுமின்றி அந்நியச் செலாவணியையும் அதிகரித்தல்.
6. இயங்க வல்ல மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துதல், மேலும்
7. பன்னாட்டு சந்தைகளுக்கான தரத்தைப் பேணுவதை மீன்பிடி தொழிலுடன் இணைத்தல்

2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கென முன்மொழியப்படும் திட்டங்களின் விவரங்கள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:

**1. கடல் மீன்வளம்**

**1.1. கடல் மீன்வளக் கொள்கை**

கடந்த 30 ஆண்டு காலமாக அரசின் கடல் மீன் வளக் கொள்கையானது கடலின் மீன்வள ஆதாரங்களை பயன்படுத்துவதிலேயே கவனம் கொண்டிருந்தது. இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி கலன்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவைகளுக்கு மானியம் வழங்குதல் ஆகியவை இதற்கான காரணங்களாக இருந்தன. மீன்வளத் துறையினால் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 556 கடல் மீன்பிடி கிராமங்களில் 6.70 இலட்சம் கடல் மீனவர்கள் உள்ளனர். இவர்களில் 2.62 இலட்சம் மீனவர்கள் முழுநேர தீவிர மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தற்போது சுமார் 10,000 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் சுமார் 43,000 பாரம்பரிய மீன்பிடி படகுகளும் கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் அண்மைக் கடல் மீன்வளமும் அதிக அளவில் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. ஆகவே நமது கடல் மீன்வளக் கொள்கையானது தற்போதுள்ள மீன்வளப் பகுதிகளை பாதுகாத்து அவைகளை நிலைநிறுத்தக்கூடிய அளவில் மீன்பிடி செய்வது என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இனிவரும் காலத்தில் இந்நாள்வரை மீன்பிடிப்பு மேற்கொள்ளப்படாத தொலை தூரக் கடல் பகுதியில் உள்ள மீன் வளம் செறிந்த இடங்களில் பல்வேறு மீன்பிடி சாதனங்கள் கொண்டு பல நாட்கள் கடலில் தங்கி விசைப்படகுகளின் மூலம் மீன்பிடிப்பு செய்வதற்கு முக்கியத்துவம் தரப்படும்.



**1.2. பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்**

மீனவர்கள் பயன்படுத்தும் தற்போதுள்ள கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களில் நீண்டதூரம் கடலில் மீன்பிடிக்கச் செல்ல ஏதுவாக அவற்றில் பொருத்திக் கொள்வதற்கு உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களின் விலையில் 50 விழுக்காடு மானியம் வழங்கிடும் திட்டம் வகுக்கப்பட்டது. 1987-88ம் ஆண்டு முதல் இந்த மானியத்திற்கான செலவினத்தை மாநில அரசும் மத்திய அரசும் சமமான விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டத்தின்கீழ் இயந்திரங்களின் விலையில் உட்பொருத்தும் இயந்திரத்திற்கு 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ. 12,000 வரையிலும், வெளிப்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு அதிகபட்ச மானியமாக ரூ. 10,000 வரையிலும் வழங்கப்படுகிறது. இயந்திரத்தின் விலையில் மீதமுள்ள 50 விழுக்காட்டினை பயன்பெறும் மீனவர்கள் தமது பங்காகச் செலுத்த வேண்டும். 1987-88 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் 1998-99 வரை 11,633 இயந்திரங்கள் மானிய விலையில் பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் (31-3-2000 வரை) 1204 இயந்திரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டதின் கீழ் பாரம்பரிய மீனவர்கள் வலைகள் வாங்கிக் கொள்ள நபர் ஒன்றுக்கு மானியம் அதிக பட்சமாக ரூ. 6,000 வரை வழங்கப்படுகிறது. இது வரை (31-3-2000 வரை) 163 வலைகள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.3. மீன்பிடி கலன் ஒன்று கட்டுதல்**

1999-2000 ஆம் ஆண்டில் ஒரு 43-1/2 அடி மீன்பிடி கலன், மீன்பிடி தளவாடங்கள்—கடலாண்மைக் கருவிகள் போன்ற சாதனங்களுடன் கட்டுவதற்கென ரூ. 25.00 இலட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்படகு தூத்துக்குடியில் கட்டப்பட்டது. 'குமரி' என்ற இப்படகு கன்னியாகுமரியில் உள்ள அண்மைக்கடல் மீன்பிடி அளவை நிலையத்திலிருந்து இயக்கப்படுகிறது. இப்படகானது பல்முனை நோக்குடன் பன்னாட்கள் மீன்பிடிப்பிற்கு பயன்படுத்தப்படும்.

**1.4. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தும் சட்டம்—செயல்முறை**

(அ) 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தும் சட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ. 449.95 இலட்சம் செலவில் 5 சுற்றுக்காவல் படகுகளைக் கட்டுவதற்கு அரசு 1997-98 ஆம்

ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கியது. 5 சுற்றுக்காவல் படகுகளான நீலம், முத்து, பவளம், கயல் மற்றும் வலம்புரி ஆகியவை முறையே சென்னை, தூத்துக்குடி, இராமேஸ்வரம், மல்லிப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி தளங்களிலிருந்து இயங்கி வருகின்றன.

(ஆ) தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் இரட்டை மடி வலைகள் மற்றும் சுருக்கு மடி வலைகளை பயன்படுத்த மீன்பிடி கலன்கள் மீன்பிடித்தலை தடை செய்யும் அறிவிக்கை.

எந்தவொரு மீன்பிடி விசைப்படகும் அல்லது நாட்டு படகும் அவைகளின் அளவுகள் அல்லது பயன்படுத்தும் இயந்திர வகைகளை கணக்கில் கொள்ளாமல் இரட்டை மடி வலைகள் மற்றும் சுருக்கு மடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பு மேற்கொள்வது என்பது தமிழ்நாடு சார்ந்த கடல் பகுதியில் மீன்வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் தடை செய்யப்படும் அறிவிக்கை 25-3-2000 முதல் அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### 1.5. தமிழ்நாட்டு மீனவர்களுக்கு நிவாரணம்

புயல், வெள்ளம் அல்லது ஏனைய இயற்கை இடர்பாடுகள் போன்ற சூழ்நிலைகளில் தமிழ்நாட்டு மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடல் எல்லைப் பகுதிக்குச் சென்றுவிடுகின்றனர். இந்த மீனவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு திரும்ப கொணர்வதற்கு அதிக காலம் தேவைப்படுவதால், அரசு 1998-99ல் அவர்களின் குடும்பங்களை பாதுகாப்பதற்கு ஒரு திட்டத்தினை துவக்கியது. மீனவர் வீடு திரும்பும் வரையில், மீனவர் குடும்பத்திற்கு நாள் ஒன்றிற்கு ரூ. 50/- வீதம் வழங்கப்படுகிறது. இது வரை 40 மீனவர் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 2000-2001-லும் இத்திட்டம் தொடரும்.

### 1.6. பாக் ஜலசந்தி பகுதியில் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள்

பாக் ஜலசந்தி பகுதியில் இலங்கை கடற்படை மற்றும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்படும் துப்பாக்கிச் சூட்டில் இந்திய மீனவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவது தமிழ்நாட்டின் மீனவர் சமுதாயத்தினரிடையே கொந்தளிப்பையும் எதிர்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. 1998ஆம் ஆண்டில் இவ்வாறான 5 நிகழ்வுகளில் 5 மீன்பிடி படகுகள் தாக்குதலுக்கு உள்ளாகின. இவற்றில் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டது. 3 மீனவர்கள் காயமடைந்துள்ளனர். 6 மீனவர்கள் உயிர் இழந்துள்ளனர். 1999-2000ஆம் ஆண்டில் (31-3-2000) வரை நடந்த 7



தாக்குதல்களில் 3 மீனவர்கள் உயிர் இழந்தனர். 4 மீனவர்கள் காயமடைந்தனர். இவ்வாறான அனைத்து நிகழ்வுகளும் மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இலங்கை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 1.00 இலட்சம் உடனடி நிவாரணமாக இறந்த மீனவர் குடும்பங்களுக்கு வழங்க அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31-3-2000 முடிய 10 மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 5 மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது. 31-3-2000 வரை 181 மீனவர்களும், 9 படகுகளும் இலங்கையிலிருந்து திரும்ப பெறப்பட்டுள்ளன.

### 1.7. அன்னிய நாட்டு மீனவர்களை தாயகம் அனுப்புதல்

இத்திட்டத்திற்கென மாநில அளவிலான ஒரு நிலைக் குழு கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. தலைவர் என்ற முறையில் சம்பந்தப்பட்ட கரையோர காவற்படை, சுங்கத் துறை, புலனாய்வுத் துறை ஆகியோருடன் தொடர்பு கொண்டு இந்திய கடற்பகுதியில் பிடிக்கப்பட்ட அன்னிய நாட்டு மீனவர்கள் மற்றும் மீன்பிடி கலன்களை விரைவில் விடுவிக்கவும், திருப்பி அனுப்பவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். 31-3-2000 நிலவரப்படி 14 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டு திரும்ப செல்வதற்காக மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி தமிழ்நாட்டில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### 1.8. மீனவர் மக்கட் தொகை கணக்கெடுப்பு

கடல் மீனவர் மக்கட் தொகை கணக்கெடுப்பு 1986ல் கடைசியாக நடத்தப்பட்டது. இந்த புள்ளி விவர அமைப்பு பழையதாகிவிட்டது. மேலும் மீன்பிடி தொழிலின் இடுபொருட்களான வெளிப்பொருத்தும் மோட்டார், உட்பொருத்தும் இயந்திரம் புதுவகை மீன்பிடி கலன்கள், கருவிகள் ஆகியவற்றின் உரிமைதாரர்களில் அதிக அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மீனவர் மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக 1999-2000 ஆம் ஆண்டில் அரசு ரூ. 5.00 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கணக்கெடுப்புப் பணிகள் முடிந்துவிட்டன. விவரங்களை தொகுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2000 ஏப்ரல் 18

**2. உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

**2.1. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தள வசதிகள்**

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் உள்ள 362 மீன்பிடி தளங்களிலிருந்து இயந்திரப் படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. மோசமான வானிலை உள்ள நேரங்களில் படகுகளை நங்கூரம் இடவும், பாதுகாப்பாக வைத்திடவும், பிடித்த மீன்களை கரை சேர்த்திடவும் டீசல் பிடித்துக் கொண்டு வருவதற்கு மட்டுமின்றி பிடிக்கப்பட்ட மீன்களை கெடாமல் பாதுகாப்பான முறையில் நுகர்வோர் வசிக்கும் இடங்களுக்கு கொண்டு செல்ல ஏதுவாக தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய படகு தங்கு தளங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைப்பது அவசியமாகிறது. இவ்வசதிகள் எதிர்காலத்தில் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பராமரிக்கப்படும்.

**2.2. சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 6.84 கோடி செலவில் அனைத்து பெரும்பான்மையான வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தை சுமார் 150 படகுகள் பயன்படுத்தி வருகின்றன. மேலும் இத்துறைமுகத்தில் கூடுதல் வசதிகள் செய்திட ரூ. 9.45 கோடி செலவினத்திற்கு திருத்திய நிதி ஒதுக்கீடு கோரி உரிய கருத்துரு மாநில அரசால் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டபின் கீழ்க்காணும் பணிகள் துவக்கப்படும்:

1. அலை தடுப்புச் சுவர்களை பலப்படுத்துதல்
2. நீர்விநியோகம்
3. மேல்நிலை தொட்டி
4. காவலர் அறை
5. டோக்கன் வழங்கும் அறை
6. பாதுகாப்பு சுவரை விரிவுபடுத்துதல்
7. தார்ச் சாலை
8. சாய்வான வழுக்குப்பாதை



2000 ஏப்ரல் 18]

**இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம்**

ிமத்திய அரசு தெரிவித்தவாறு ரூ. 45.42 கோடி செலவில் ராமேஸ்வரத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் அமைத்திட மாநில அரசால் த்திய மதிப்பீடு ஒன்று மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிய அரசு இந்த நிதி ஒதுக்கீட்டிற்கான மதிப்பீட்டை ஏற்றுக் 'ண்டபின் கீழ்க்காணும் பணிகள் துவங்கப்படும் :

. அலை தடுப்புச் சுவர் மற்றும் படகு தளம் கட்டுதல்

?. ஏலக் கூடம்

!. சாய்வான வழுக்குப்பாதை

!. சாலைகள் அமைத்தல்

i. தூர் வாருதல் மற்றும் மண் மேடுகளை அகற்றுதல்

i. குடிநீர்/மின்சாரம்/ கழிவுநீர்/ அலுவலகக் கட்டடம் மற்றும் உணவகம் 'ன்ற வசதிகள்

**மீன் இறங்குதளங்கள் கட்டுதல்**

மத்திய அரசு, தமிழ்நாட்டில் கீழ்க்காணும் உள்ளமைப்பு வசதிகளுடன் ரத்தம் ரூ. 13.32 கோடி செலவில் 10 மீன் இறங்கு தளங்கள் அமைத்திட ளிப்பு வழங்கியுள்ளது.

: ஏலக்கூடம்

?. 2 மீன்இறங்கு தளங்கள்

3. ஒரு கழிவறைத் தொகுதி

4. வெளிப்புற குடிநீர் வசதி

5. மின்வசதி/விளக்குகள் அமைத்தல்

6. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி

7. உட்புறச் சாலைகள் அமைத்தல்

8. படகு துறை அமைத்தல்

இதற்கிடையில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வீரபாண்டியபட்டினம் மற்றும் புன்னக்காயல் ஆகிய இரு இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைத்திட ஒவ்வொரு மீன் இறங்கு தளத்திற்கும் ரூ. 0.75 கோடி என்ற விகிதத்தில் ரூ. 1.50 கோடியினை மத்திய அரசின் பங்கினை எதிர்நோக்கி மாநில அரசு தனது 50 விழுக்காடு பங்குத் தொகையாக செலவிட ஆணை வழங்கியுள்ளது. மேற்காணும் இரு இடங்களில் புன்னக்காயலில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

**2.5. மீனவர் அங்காடிகள் அமைத்தல்**

மீனவர்கள் மீன்களை விற்பதற்குப் படும் சிரமங்களை நீக்குவதற்கும், சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் "மீனவர் அங்காடிகள்" தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும். நவீன வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும். மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டுமொத்த ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக்கூடமும், உலர்களமும் அமைத்துத் தரப்படும்.

**3. உள்நாட்டு மீன்வளம்**

உள்நாட்டு மீன்வளப் பகுதியில், தமிழ்நாட்டின் பெரிய நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன ஏரிகள், கிராம குளங்கள் மற்றும் குட்டைகள் சுமார் 3.71 இலட்சம் எக்டேர் நீர்ப்பரப்பு உடையன. இவற்றைப் பயன்படுத்தி நீர்த்தேக்க மீன்வளப் பராமரிப்பு மற்றும் மீன் உற்பத்தி செய்வது உள்நாட்டு மீன்வளத்தின் முக்கிய நோக்கமாகும். பெருநீர்த் தேக்கங்களில் மீன்வளர்ப்பினை 45 நீர்த்தேக்கங்களில் மீன்துறையும், 9 நீர்த்தேக்கங்களில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமும் மேற்கொண்டு வருகின்றன. மேலும் சுமார் 32,000 எக்டேர் நீர்ப்பரப்புள்ள பெரிய மற்றும் சிறிய பாசனக் குளங்களில் பெருங்கெண்டை மீன்குஞ்சுகளை இருப்பு செய்து உள்ளூர் மீனவர்களைக் கொண்டு மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது. ஏனைய பாசனக் குளங்கள் உள்ளாட்சி அமைப்புகளால் குத்தகைக்கு விடப்படுகின்றன. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் மூலம் கூட்டின மீன்வளர்ப்பு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஊரக குளம், குட்டைகளில் சுமார் 5,000 எக்டேரில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 1998-99ஆம் ஆண்டில் மேற்காணும் உள்நாட்டு நீர்நிலைகளில் 1.09 இலட்சம் டன் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.





**3.1. மீன் குஞ்சு உற்பத்தி**

தமிழ்நாட்டின் உள்நாட்டு நீர்நிலைகளில் இந்திய பெருங்கெண்டை மீன் இனங்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சீன கெண்டை மீன் இனங்களான புல்கெண்டை, வெள்ளிக்கெண்டை மற்றும் சாதாக் கெண்டை ஆகியவை நிலை நிறுத்தப்பட்டு, உள்நாட்டு மீன் உற்பத்தியில் கணிசமான பங்கினை இவ்வினங்கள் வகித்து வருகின்றன.

பெருங்கெண்டை மீன்குஞ்சுகளை பெரு நீர்த்தேக்கங்களில் விட்டு வளர்த்தெடுக்க மீன் துறை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிர்வகித்து வருகின்றன. அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள மொத்தம் 41 மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு பண்ணைகளில் 500 இலட்சம் விரலளவு மீன்குஞ்சுகள் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் 84 மீன் குஞ்சு உற்பத்தி பண்ணைகள் தனியார் துறையினரால் அமைக்கப்பட்டு ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு 600 இலட்சம் விரலளவு மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தரமான மீன் குஞ்சு உற்பத்தியினைப் பெருக்கிடும் வகையில் தனியாரை ஊக்குவிக்கும் பொருட்டு மானிய உதவியும் அரசு வழங்கி வருகின்றது. இதுவரை தனியார் மீன்குஞ்சு உற்பத்தி செய்வோரில் 18 நபர்களுக்கு ரூ. 4.50 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**3.2. மீன் பண்ணைகளை மேம்படுத்துதல்**

1999-2000-ஆம் ஆண்டில் பவானிசாகரில் உள்ள பூங்கார், (ரூ. 6.64 இலட்சம்) மற்றும் சித்தார் அணை-2 (ரூ. 3.36 இலட்சம்) ஆகிய இடங்களிலுள்ள மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளை மேம்படுத்துவதற்காக அரசு ரூ. 10.00 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. இவ்விடங்களின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**3.3 நன்னீர் இறால் பண்ணைகள் மூலம் இறால் உற்பத்தியை அதிகரித்தல்**

சமீபகாலமாக ஏற்பட்டுள்ள இறால்களின் உற்பத்திக் குறைவை ஈடுசெய்ய நன்னீர் இறால் பண்ணை அமைத்து நன்னீர் இறால் வளர்க்கும் தனியாரை ஊக்குவிக்கும் பொருட்டு சமீப காலத்தில் அரசு மானியம் வழங்கி வருகிறது. 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டில் நன்னீர் இறால் பண்ணை அமைத்து இறால் வளர்க்கும் தனிநபர் பயனீட்டாளர்களில் 50 நபர்களை தேர்வு செய்து ஒரு பயனீட்டாளருக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ. 30,000 வீதம் 50 பயனீட்டாளர்களுக்கு அரசு மானியம் வழங்கியுள்ளது. இந்த நன்னீர் இறால் வளர்ப்போர் ஏற்றுமதி செய்யக்கூடிய 50 டன் இறால் உற்பத்தி செய்வார்கள்.

[2000 ஏப்ரல் 18

### 3.4 நன்னீர் இறால் பொரிப்பகம் அமைக்க மானியம் வழங்குதல்

நன்னீர் இறால் வளர்ப்பு பண்ணைகளுக்கு தேவைப்படும் தரமான நன்னீர் இறால் குஞ்சு தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் அரசு 1999-2000 ஆம் ஆண்டில் நன்னீர் இறால் பொரிப்பகம் ஒன்று தனியார் துறையில் அமைக்க ரூ. 1.00 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

### 3.5. உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையின் போது மீனவச் சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் உள்நாட்டு மீனவர்களுக்கென புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து உள்நாட்டு மீனவர்களுக்கென 3 மானியத் திட்டங்கள் ரூ. 15.50 இலட்சம் செலவில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1000-க்கும் மேலான உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மற்றும் 500-க்கும் மேலான உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க மகளிர் பயன் அடைவர்.

#### 3.5.1. புதிய வலை வழங்குதல்

அரசு 1999-2000 ஆம் ஆண்டில் 500 உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வாங்குவதற்கென 25 விழுக்காடு மானியமாக ரூ.12.50 இலட்சம் வழங்க ஒப்பளிக்கப்பட்டு, அதிகபட்சமாக ஒரு மீனவருக்கு ரூ. 2,500 வரை மானியம் வழங்கப்படும். இதுவரை 492 மீனவர்களுக்கு புதிய வலைகள் வாங்கிட மானியம் வழங்கப்பட்டுள்ளது.

#### 3.5.2. மிதி வண்டி வழங்குதல்

500 உள்நாட்டு மீனவர்களுக்கு மிதி வண்டி வாங்கிட 1999-2000 ஆம் ஆண்டில் 25 விழுக்காடு மானியம் வழங்கிட ரூ. 2.25 இலட்சத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. அதிகபட்சம் ரூ. 450/-. இதுவரை 202 மீனவர்களுக்கு மிதிவண்டிகள் வாங்கிட மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

#### 3.5.3. அலுமினியப் பாத்திரங்கள் வழங்குதல்

1999-2000 ஆம் ஆண்டில் 500 அலுமினியப் பாத்திரங்கள் 500 மீனவ மகளிருக்கு வழங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்க ரூ. 0.75 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுநாள்வரை 353 மீனவ மகளிருக்கு அலுமினியப் பாத்திரங்கள் வாங்கிட மானியம் தரப்பட்டுள்ளது.

### 3.6. உள்நாட்டு மீனவர்களுக்கு வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாட்டில் 245 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 56,169 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர்



2000 ஏப்ரல் 18]

வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளனர். எனவே இந்நிதி ஆண்டில் உள்நாட்டு மீனவர்களுக்கு 1000 வீடுகள், ஒரு வீட்டிற்கு ரூ. 32,000/- வீதம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.7. தமிழ்நாடு ஊராட்சி விதிகள், 1999 (ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மீன்பிடி உரிமை குத்தகை மற்றும் உரிமம் வழங்கும் விதிகள்)

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்களில் நவீன தொழில் நுட்பம் மூலம் கலப்பின மீன்களை வளர்க்கும் முறை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பிறகு வேலையில்லா இளம் தலைமுறையினரிடையே கிராமக் குளங்களில் மீன்வளர்க்கும் தொழிலில் ஈடுபாட விழிப்புணர்ச்சி பெரிதும் ஏற்பட்டுள்ளது.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய வருவாயினை அதிகரித்திடவும், அறிவியல் ரீதியில் மீன்வளர்ப்பை ஊக்குவிக்கவும் அரசாணை நிலை 169,. ஊரக வளர்ச்சித் (ப்பி-3) துறை நாள் 16-8-1999-ல் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குளங்களில் மீன்பிடி குத்தகை 5 ஆண்டுகளுக்கு பொது ஏலம் மூலம் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குளங்களுக்கு அடிப்படைக் குத்தகை விலையை கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட மீன் துறை ஆய்வாளரைக் கலந்து ஆலோசித்து நிர்ணயிக்கும். இதன்மூலம் குத்தகைதாரருக்கு மீன்வளர்ப்பின் தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்கி ஊராட்சி நிறுவனங்களுக்கு நல்ல வருவாயையும் இதன் மூலம் மீன் துறை ஈட்டித் தர உதவும்.

### 3.8. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகமண்டலத்திலுள்ள வில்சன் மீன் பண்ணையை மேம்படுத்தவும், வண்ண மீன்காட்சியகம் அமைக்கவும் 1999-2000 ஆம் ஆண்டில் அரசு ரூ. 20.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பான பணிகள் பொதுப்பணித் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.9. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்

(அ) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறில் உள்ள தேசிய மீன்குஞ்சு

பண்ணைக்கு நீர்வசதி அமைத்துத் தரவும், சீன வகை பொரிப்பகம் கட்டுவதற்கும் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 35.00 இலட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இப்பணிகள் இத்துறையின் பொறியியல் பிரிவின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணிமுத்தார் மற்றும் கடனா ஆகிய இடங்களில் உள்ள 2 மீன் குஞ்சு பண்ணைகளை மேம்படுத்துவதற்கென அரசு ரூ. 25.45 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## 4. ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கம்

### 4.1. ஆராய்ச்சி

ஏழு ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொன்றும் ஒரு மீன்துறை உதவி இயக்குநரின் கட்டுபாட்டில் உள்ளன. மாநில மீன்வள ஆராய்ச்சிக் குழுமத்தால் ஜூன் 1998-ல் அனுமதிக்கப்பட்ட 16 வகை ஆய்வுத் திட்டங்களில் மொத்தம் 36 ஆராய்ச்சி உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி மூலம் மீன்துறை வளர்ச்சி அடைய உதவுவதாகும். மீன்வளத் துறையானது மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படும்.

### 4.2. கடல் மீன்வளர்ப்பில் முன்னோடி திட்டம் (கலவா மீன்)

உணவு வகை கடல் மீன்களில் கலவா மீன் தக்க உணவாகவும், பெரியதாகவும் வளரக்கூடியது. மேலும் வர்த்தக ரீதியிலும், உயிரியல் ரீதியிலும் வளர்ப்பதற்கு ஏற்ற மீன்வகை. இந்த மீனிற்கு பன்னாட்டு சந்தைகளில் நல்ல வரவேற்பு உள்ளது. 1999-2000 ஆண்டில் இந்த மீன் வளர்ப்பு முறையினை எடுத்துக்காட்டும் நோக்குடன் தூத்துக்குடி அருகே உள்ள புன்னக்காயல் உவர்நீர் மீன் பண்ணையில் செயல்படுத்த ரூ. 1.90 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கலவா மீன் குஞ்சுகளை இருப்பு செய்து அவற்றின் வளர்ச்சி போன்ற விவரங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் தமிழ்நாட்டில் கலவா மீன் வளர்ப்பினை விரிவடைய செய்தல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



### 4.3. கழிவு நீரில் மீன் வளர்ப்பதற்கான முன்னோடி திட்டம்

கழிவு நீரில் மீன் வளர்ப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தும்முகத்தான் 1999-2000ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சியுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்கான திட்டத்தினை முதன்முறையாக தமிழ்நாடு அரசு அறிவித்தது. இத்திட்டச் செலவான ரூ. 5.00 இலட்சத்தை மீன்துறை மற்றும் மதுரை மாநகராட்சி சமமாக பகிர்ந்துகொள்ளும். இதற்கான பணி நடைபெற்று வருகின்றது.

### 4.4. மீனவர் பயிற்சி

சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 6 இடங்களில் மீனவப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிலையங்களில் மீனவ மாணவர்களுக்கு நவீன மீன்பிடி முறைகள், மீன்பிடி விசைப்படகுகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் (ஜனவரி திங்கள் முதல் அக்டோபர் திங்கள் முடிய) 10 மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர தூத்துக்குடி, குளச்சல், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் மண்டபம் ஆகிய 5 மீனவ பயிற்சி நிலையங்களிலும் சிறுதரக் கம்மியர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

### 4.5. மீன்வள விரிவாக்கம்

விரிவாக்கத் திட்டத்தின்கீழ் மாநில மற்றும் மாவட்ட அளவில் கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சி நிகழ்ச்சிகள் நடத்தப் பெறுகின்றன. வானொலி போன்ற செய்தி ஒலிபரப்பு சாதனங்கள் மூலமும் தொலைக்காட்சி மூலமும் மீன்வளம் மற்றும் வானிலை சம்பந்தப்பட்ட தகவல்கள் மீனவர்கள் பயனடையும் வகையில் விரைவில் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. மாநில மற்றும் மத்திய அரசுடன் மற்றும் சில சேவை நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் குறித்தும் மீன்வளத் தொடர்பான அறிவியல் முன்னேற்றங்கள் குறித்தும் துண்டு பிரசுரங்கள், கையேடுகள் முதலியன தயாரிக்கப்பட்டு மீனவருக்கும், பொதுமக்களுக்கும் விரிவாக்கப் பணிகளின்கீழ் விளம்பரப்படுத்தப்படுகின்றன. மீன்துறையில் தற்போது செயல்பட்டு வரும் 4 விரிவாக்கம் மற்றும் விளம்பரப் பிரிவுகளின் மூலம் அண்மைக் கால மீன்வளம் குறித்த அறிவியல் செய்திகள் மீனவர்கள் மற்றும் பொது மக்கள் அறிந்திடும் வண்ணம் விளம்பரப்படுத்தப்படுகின்றது.

1999-2000ஆம் ஆண்டில் 30 வானொலி உரைகள் 6 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரித்து வழங்கப்பட்டன. இவை தவிர பல பொருட்காட்சிகளில் இத்துறை பங்கு கொண்டு மீன்வளத் துறையின் திட்டங்களைப் பற்றி பலரும் அறிந்திட வழிவகை செய்துள்ளது.

[2000 ஏப்ரல் 18

## 5. உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாட்டில் ஐந்து உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இம்முகமைகள் நீரியல் தன்மைகளை ஆய்வு செய்தல், இறால் பண்ணைகளில் ஏற்படும் நோய்களை கண்டறிதல், உவர்நீர் மீன்வளர்ப்பு, கடல் உயிரின வளர்ப்பில் விருப்பம் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளன. மேலும் இம்முகமைகள் உவர்நீர் பண்ணைகளை அமைக்கும் இடங்களையும், பயனாளிகளையும் தேர்வு செய்வதிலும், வங்கிகள் மூலம் உதவி பெறும் வகையில் உவர்நீர் வாழ் உயிரின வளர்ப்பு திட்ட அறிக்கைகளை தயார் செய்வதிலும், மானியம் மற்றும் விற்பனை குறித்த தகவல் அளிப்பது போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

நீர்வாழ் உயிரின வளர்ப்பு குழுமத்தின் பரிந்துரையின் பேரில் மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலுமான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டக் குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை முதன்மை நிர்வாக அலுவலர் உறுப்பினர் செயலராகவும் இருப்பார். நீர்வாழ் உயிரின குழுமத்தின் முன் அனுமதி பெறும் பொருட்டு இறால் வளர்ப்போரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, உரிய பரிந்துரைகளுடன் அனுப்பி வைப்பது போன்ற பணிகளை முகமையின் முதன்மை நிர்வாக அலுவலர் கவனிக்கின்றார். 972 விண்ணப்பங்கள் இறால் வளர்ப்போரிடமிருந்து பெறப்பட்டு உவர் நீர் மேம்பாட்டு முகமைகளினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. 184 விண்ணப்பங்களை மாநில குழு நீர்வாழ் உயிரின குழுமத்தின் ஒப்புதலுக்காக பரிந்துரை செய்துள்ளது.

## 6. வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கியின் உதவியோடு மீன்வளத் துறை வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தை 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தும். மீன்வள அறிவியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளின் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள ஆசிய நீர் உயிரின வளர்ப்பு கூட்டமைப்பு மையம் மற்றும் தென்கிழக்கு ஆசிய மீன்வளர்ச்சி மையம் மற்றும் தாய்லாந்து நாட்டிலுள்ள ஆசிய தொழில் நுட்ப மையம் ஆகியவை மூலம் இங்குள்ள பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல் என்பது ஒரு முக்கியமான திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் 13 பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். இவை தவிர



2000 ஏப்ரல் 18]

துறையின் பல்வேறு பகுதிகளைக் கணினி மூலம் இணைத்து துறையின் மனித வள மேலாண்மையினை மேம்படுத்த இந்த வருடம் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7. மீனவர் நலம்

மீனவர் நலனே மாநில அரசின் கொள்கையில் முன்னுரிமை பெற்றுள்ளது. மீனவ சமுதாயத்தின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்திட எல்லா நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும். கீழ்க்காணும் முக்கியமான நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது.

1. ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்
2. மீனவர் குழு காப்புறுதித் திட்டம்
3. மீனவ மக்கள் விபத்துக் குழு காப்புறுதித் திட்டம்
4. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
5. உயர்வேக டீசல் எரிபொண்ணெய் மீதான ஆயத்தீர்வையை திரும்ப வழங்குதல்
6. பாரம்பரிய மீனவர் உபயோகிக்கும் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலன்களுக்கு மண்ணெண்ணெய்/டீசல் மானியம் வழங்குதல்.

### 7.1. ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 1999-2000-ஆம் ஆண்டு வரை 16,000 வீடுகள் கட்டிட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் இந்நாள் வரை 12,603 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கருத்தில் கொண்டு 1997-98-ல் ரூ. 32,000 என்று இருந்த அலகுத் தொகை 1998-99-ல் ரூ. 37,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2000-2001-ஆம் ஆண்டில், மேலும் 4000 வீடுகள் மீனவர்களுக்கு கட்டித் தரப்படும்.

### 7.2. மீனவர் குழு காப்புறுதித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், ஒரு மீனவருக்கு மாநில அரசும் மத்திய அரசும் ஆண்டு சந்தாவாக ரூ. 12/- வீதம் புதுடெல்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு மாநில அரசு செலுத்தி வருகிறது. இந்தச்

[2000 ஏப்ரல் 18

சந்தாத் தொகையை மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஏற்றுக்கொள்கின்றன. மீனவர்களிடமிருந்து எந்த ஒரு தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. மீனவர் இறந்தாலோ அல்லது முழு நிரந்தர ஊனமடைந்தாலோ ரூ. 35,000 அவர்களது குடும்பத்திற்கு காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது. பகுதி நிரந்தர ஊனமடையும் மீனவர்களுக்கு ரூ. 17,500 காப்புறுதி நிவாரணமாக வழங்கப்படுகிறது.

1999-2000 ஆம் ஆண்டிற்கென மாநில அரசு ரூ. 17.86 இலட்சத்தினை 50 விழுக்காடு பங்காக புதுடெல்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு, 2,97,657 மீனவர்களுக்கென செலுத்தியுள்ளது. மத்திய அரசு மீதமுள்ள தன்னுடைய பங்கினை நேரடியாக புதுடெல்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு செலுத்திவிடும்.

மேலும் மத்திய அரசின் நிதி உதவியுடன் அமலாக்கப்படும் விபத்துக் குழு காப்புறுதித் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டும் முறைகளின் அடிப்படையில் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம், திருநெல்வேலி மூலமாக கூடுதல் நிவாரணமாக ரூ. 15,000 வழங்குவதை மாநில அரசு ஒரு தனி திட்டமாகச் செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான காப்பீட்டு சந்தாத் தொகையான ஒரு மீனவருக்கு ரூ. 4-ஐயும் மாநில அரசே செலுத்துகிறது. மீனவர் இறந்தால் அல்லது முழு நிரந்தர ஊனமுற்றால் மீனவர் குடும்பத்திற்கு ரூ.15,000/-மும், பகுதி நிரந்தர ஊனமடையும்போது ரூ. 7,500-ம் வழங்கப்படுகிறது.

மாநில திட்டத்தின்கீழ் 100 விழுக்காடு பங்கு சந்தாத் தொகையான ரூ.11.91 இலட்சம் 2,97,657 மீனவர்களுக்கு, நியூ இந்தியா அஷ்யூரன்ஸ், திருநெல்வேலிக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 7.3. மீனவ மக்கள் விபத்துக் குழு காப்புறுதித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் மீன்பிடி விசைப் படகுகள், வள்ளம் மற்றும் கட்டு மரங்களில் பணிபுரியும் மீனவர்/மீனவ மகளிர் சார்பாக திருநெல்வேலி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனத்திற்கு ஆண்டு காப்புறுதிச் சந்தாவாக ரூ. 24 மற்றும் ரூ. 20 செலுத்தப்பட வேண்டும். உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிரும் இத்திட்டத்தின்கீழ் காப்புறுதி செய்யப்படுவர். இவ்வாறு காப்புறுதி செய்யப்பட்ட மீனவர் மற்றும் மீனவ மகளிர் இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு ரூ. 1.00 இலட்சம் காப்புறுதி நிவாரணமாகவும், அவர்கள் பகுதி ஊனமடைந்தால் காப்புறுதி நிவாரணமாக ரூ. 50,000-மும் வழங்கப்படும். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 1,18,793 மீனவர்களும், 12,942 மீனவ மகளிரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.



2000 ஏப்ரல் 18]

இது தவிர, மீனவர்கள் பயனடையும் வகையில் திருநெல்வேலி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் ஒரு கூடுதல் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டு சந்தாவாக ஒரு மீனவருக்கு ரூ. 60/- ம் ஒரு மீனவ மகளிருக்கு ரூ. 50/-ம் செலுத்தவேண்டும். இப்புதிய திட்டத்தின்படி கீழ்க்காணும் பயன்களை மீனவர்கள் பெறுவர்.

| | |
|---|---|
| விபத்தில் இறக்க நேரிடில் | ரூ. 2.50 இலட்சம் 100 விழுக்காடு |
| இரண்டு உடல் உறுப்புகள் அல்லது இரண்டு கண்கள் அல்லது ஒரு உடல் உறுப்பும் ஒரு கண்ணும் இழப்புக்கு | ரூ. 2.50 இலட்சம் 100 விழுக்காடு |
| ஒரு உடல் உறுப்பு அல்லது ஒரு கண் இழப்புக்கு | ரூ. 1.25 இலட்சம் 50 விழுக்காடு |
| நிலையாக உடல் செயல் இழக்க நேரிட்டால் | ரூ. 2.50 இலட்சம் 100 விழுக்காடு |

மேற்கண்ட இரு திட்டங்களிலும் மீனவர்கள் சேர்ந்து பயனடையும் வகையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### 7.4. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடலோரப் பகுதிகளில் வசிக்கும் கடல் மீனவர் மீன்பிடிப்பு இல்லாத காலங்களில் துயரடைவதைக் குறைப்பதற்கென அரசு 1982-83-ஆம் ஆண்டில் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் முதலில், ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10/- என்ற கணக்கில் ஒரு ஆண்டில் 9 மாதங்களுக்கு ரூ. 90/- வசூலிக்கப்பட்டு வந்தது. மீனவக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கடல் மீனவருக்கு மட்டுமே இந்தத் திட்டம். இதற்கு இணையான தொகையாக ரூ. 90-ஐ மாநில அரசு செலுத்தியதால் மொத்தம் ரூ. 180/- ஆன இந்தத் தொகை ஒவ்வொரு மீனவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 என்ற கணக்கில் மீன்பிடிப்பு இல்லாத மூன்று மாதங்களில் வழங்கப்பட்டு வந்தது.

மீன்பிடிப்பிற்குச் செல்ல இயலாத காலங்களில் கடல் மீனவருக்கு நிவாரணம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு ஊனவரி திட்டத்தில் பங்கேற்க முன்வந்தது. 1992-ல் சேமிப்பு மற்றும் நிவாரணத் தேசிய நல நிதி திட்டத்தின்கீழ் இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தது. இத்திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு

[2000 ஏப்ரல் 18

மீனவரிடமிருந்தும் ரூ. 45 ஆண்டொன்றுக்கு 8 மாதங்களுக்கு வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசும் மாநில அரசும் தங்களது பங்குத் தொகையாக தனித் தனியே ரூ. 360 செலுத்துகின்றன. இவ்வாறு செலுத்தப்பட்ட ரூ. 1,080-ம் ஒவ்வொரு மீனவருக்கும் மீன்பிடிப்புக்குச் செல்ல இயலாத 4 மாதங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 270 வீதம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டின் கடலோர மீனவ சமுதாயத்தினரிடையே இத்திட்டம் மிகவும் பிரபலமானது. 1999-2000-ஆம் ஆண்டு 1.84 இலட்சம் கடல் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென அரசு ரூ. 13.23 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் 2000-2001-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.5. உயர்வேக டீசல் எரியெண்ணெய் மீதான மைய ஆயத்தீர்வையை திரும்ப அளித்தல்

20 மீட்டர் நீளத்திற்கும் குறைவாக உள்ள மீன்பிடி விசைப் படகுகளுக்கு வழங்கப்படும் உயர்வேக டீசல் எரியெண்ணெய்க்கு மைய ஆயத் தீர்வையை ஈடு செய்வதற்கென 80 விழுக்காடு மத்திய அரசின் பங்காகவும் 20 விழுக்காடு மாநில அரசு பங்காகவும் கொண்ட மைய அரசு நிதியுதவியுடன்கூடிய இத்திட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. 1998-99ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கென மத்திய அரசு ரூ. 62.00 இலட்சமும், மாநில அரசு ரூ. 37.64 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 99.64 இலட்சத்தை விடுவித்து மைய ஆயத் தீர்வையினை ஈடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 2000-2001-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.6. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களில் உபயோகப்படுத்தப்படும் மண்ணெண்ணெய்/டீசலுக்கு மானியம் வழங்குதல்

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை வைத்துள்ள சிறு மீனவர்களுக்கு எரிபொருளின் விலையேற்றத்தால் ஏற்பட்டுள்ள இன்னல்களை மட்டுப்படுத்த மாநில அரசு 1998-99 ஆம் ஆண்டில் முதன்முறையாக இத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இதன்படி 1998-99 ஆம் ஆண்டில் உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட சுமார் 20,000 மீன்பிடிக் கலன்கள் பயன்பெறும் வகையில் அவைகள் பயன்படுத்தும் மண்ணெண்ணெய்/டீசலுக்கு ஒரு லிட்டருக்கு 50 காசுகள் வீதம் மாதம் ஒன்றுக்கு ஒரு மீன்பிடிக் கலனுக்கு ரூ. 125/-க்கு மிகாமல் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500/-ஐ அதிகபட்ச மானியமாக வழங்குவதற்கென மொத்தம் ரூ. 3.00 கோடி செலவிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



2000 ஏப்ரல் 18]

### 8. மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள்

31-3-1999 நிலவரப்படி, தமிழகத்தில் 3,18,074 உறுப்பினர்கள் அடங்கிய
632 கடல் மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 56,169
உறுப்பினர்கள் கொண்ட 245 உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச்
சங்கங்களும் 655 உறுப்பினர்கள் கொண்ட 10 மாவட்ட மீனவர் கூட்டுறவு
இணையங்களும், 386 உறுப்பினர்கள் அடங்கிய மாநில மீனவக் கூட்டுறவு
இணையமும், 2,722 உறுப்பினர்கள் 16 இதர வகை மீனவக் கூட்டுறவுச்
சங்கங்களும் உள்ளன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இம்மாநிலத்தில்
வாழும் மீனவர் மற்றும் மீனவ மகளிர் சமுதாய முன்னேற்றத்திற்கென
உழைப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

### 9. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்)

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்
தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983ன் கீழ் பதிவு செய்யப்பட்டு
19-10-1992 முதல் அனைத்து மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை
இணையமாக செயல்பட்டு வருகிறது. இவ்விணையத்தில் தற்போது 519
தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்டக் கூட்டுறவு
இணையங்களும் உறுப்பினர்களாக உள்ளன. இம்மாநிலக் கூட்டுறவு
இணையத்தின் மொத்தப் பங்குத் தொகை ரூ. 79.34 இலட்சமாகும்.

### 9.1. ஒருங்கிணைந்த கடல் மீன் வள மேம்பாட்டுத் திட்டம்

#### முதல் கட்டம்

இத்திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக உதவியுடன் தமிழ்நாடு
மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் மூலம்
செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு
ரூ. 15.88 கோடி. இத்திட்டம் 1993-94 முதல் 31-3-2000 வரை 78 கடற்கரை
மீனவ கிராமங்களை உள்ளடக்கிய கடலோர மாவட்டங்களான
காஞ்சிபுரம்/திருவள்ளூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி
மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு
வருகின்றது. தமிழக அரசு இதுவரை இத்திட்டத்திற்கென ரூ. 15.88 கோடி
விடுவித்துள்ளது இதுநாள்வரை ரூ. 13.52 கோடி மதிப்புள்ள 2105 மீன்பிடி
உபகரணங்களான கட்டுமரம், வள்ளம், இயந்திரங்கள், பிளைவுட் படகுகள்
மற்றும் மீன்பிடி சாதனங்கள் முதலியன வழங்கப்பட்டுள்ளன.
இத்திட்டத்தினால் 4253 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

[2000 ஏப்ரல் 18

இத்திட்டத்தின்கீழ் 6895 மீனவர்களுக்கு கூட்டுறவின் அனைத்து நடைமுறைகள், மீன் வள நெறிமுறைகள், வெளிப்பொருத்தும் இயந்திரங்களைப் பராமரித்தல் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலில் செலுத்த வேண்டிய ஈடுபாட்டினை வெளிக்காட்டும் கலைநிகழ்ச்சிகள், ஒருங்கிணைந்த கடல் மீன் வள மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுவதற்கான மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் கலந்துரையாடல் போன்றவை தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

**இரண்டாம் கட்டம்**

தமிழகத்தின் 13 கடற்கரை மாவட்டங்களிலுள்ள 100 மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் பயனடையும் விதத்தில் ரூ. 45.00 கோடி மதிப்பில் இரண்டாவது கட்டம் அரசினால் ஒப்பளிக்கப்பட்டு 1-4-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முதலாண்டிற்கு ரூ. 801.00 இலட்சத்தினை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகையில் ரூ. 582.31 இலட்சம் மதிப்புள்ள கட்டுமரங்கள், வள்ளங்கள், பிளைவுட் படகுகள், வலைகள் போன்றவைகள் வாங்க ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 471.57 இலட்சம் தொகையானது 46 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை சேர்ந்த 1072 பயனீட்டாளர்கள் 412 உபகரணங்கள் வாங்கிட விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தினை விரைவாகச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் 8 புதிய ஈப்புகளையும், 4 கணினிகளையும் வாங்கியுள்ளது. இரண்டாம் ஆண்டிற்கென அனுமதிக்கப்பட்டுள்ள ரூ. 954.00 இலட்சத்தில் ரூ. 804.00 இலட்சம் மதிப்புள்ள 826 மீன்பிடி உபகரணங்களை வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் ஏலக் கூடம், மீன் உலர்த்தும் தளம் ஆகியன அமைத்தல், மீன்போக்குவரத்து வாகனம், பனிப்பெட்டிகள் வாங்குதல் மற்றும் பழுது பார்க்கும் நிலையம் அமைத்தல் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த இணையம் மீனவர்களுக்கு கூட்டுறவின் அனைத்து நடைமுறைகள், மீனள நெறிமுறைகள் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களின் பாதுகாப்பு போன்றவை குறித்து தொடர்ந்து பயிற்சி அளித்து வருகின்றது. மேலும் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மீன் விற்பனை, உதிரி பாகங்கள் விற்பனை, பெட்ரோல் மற்றும் டீசல்



2000 ஏப்ரல் 18]

விநியோகம் ஆகியவற்றிற்கென வட்டியில்லாக் கடன் தருவதன் மூலம் அதிக வருவாயினை ஈட்ட உரிய நடவடிக்கையினை தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் மேற்கொண்டு வருகிறது.

**10. 2000-2001ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**

கீழ்க்காணும் புதிய திட்டங்கள் 2000-2001 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளன.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருமங்கலம் மற்றும் விழுப்புரம் தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டத்தின்கீழ் மீன்குஞ்சு வளர்ப்பிற்கு 60 மிதவைக் கூண்டுகள் வாங்குதல் | 4.06 |
| 2. | கண்ணாடி நாரிழையிலான 20 பரிசல்கள் வாங்குதல் | 2.40 |
| 3. | மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2000 அலுமினியப் பாத்திரங்கள் வழங்குதல் | 3.00 |
| 4. | பேச்சியம்மன் படித்துறை, மதுரையில் தற்போது உள்ள பனிக்கட்டி நிலையத்தில் ஒரு அலுவலகம் கட்டுதல் | 6.00 |
| | மொத்தம் | **15.46** |

**10.1 திருமங்கலம் மற்றும் விழுப்புரம் தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டத்தின்கீழ் 60 மிதவைக் கூண்டுகள் வாங்குதல்**

தீவிர உள்நாட்டு மீன் வளர்ப்பு மற்றும் விற்பனைத் திட்டத்தின்கீழ் திருமங்கலத்தில் 195 ஏரிகளும், விழுப்புரத்தில் 134 ஏரிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்விரண்டு இடங்களிலும் போதுமான மீன் குஞ்சு வளர்ப்பிடங்கள் இல்லாமையால் தேவைப்படும் நுண்ணிய மீன் குஞ்சுகளை வளர்த்தெடுக்க பயன்படுத்தப்படும் 60 மிதவைக் கூண்டுகளை ரூ. 4.06 இலட்சம் செலவில் வாங்கிட இத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 18

**10.2 கண்ணாடி நாரிழையிலான 20 பரிசல்கள் வாங்குதல்**

மீன்துறையின் மூலமாக நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசனக் கண்மாய் மற்றும் மாதிரி செயல் விளக்கக் குளங்களில் மீன் குஞ்சுகளை எடுத்துச் சென்று இருப்பு செய்யவும், வளர்ந்த மீன்களை பிடித்திடவும், ரோந்துப் பணிகளை மேற்கொள்ளவும் மீன்பிடிக் கலன்கள் அவசியமாகும். ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வரும் தோல் மற்றும் மூங்கிலினாலான பரிசல்கள் தற்போது கண்ணாடி நாரிழையினால், வடிவமைக்கப்படுகின்றன. இவை மிகவும் பாதுகாப்பானவை மற்றும் நீண்ட நாட்கள் உழைக்கக்கூடியவை. எனவே 20 கண்ணாடி நாரிழைப் படகுகள் ரூ. 2.40 இலட்சம் செலவில் வாங்கிட முன்மொழியப்பட்டுள்ளது.

**10.3 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 2000 அலுமினியப் பாத்திரங்கள் வழங்குதல்**

தற்போது தமிழகத்தில் 170 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 54,979 மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. மீனவ கிராமங்களில் கரை வந்து இறங்கும் மீன்களைச் சுத்தமாக சுகாதாரமான முறையில் கையாளவும், விரைவில் அருகில் உள்ள நகரம் மற்றும் மாநகர மீன் அங்காடிகளுக்கு எடுத்துச் சென்று மீன்கள் கெட்டுவிடாமல் நல்ல விலைக்கு விற்கவும் வங்காள விரிகுடா திட்டத்தின் மூலம் தமிழகத்தின் மீனவ மகளிருக்கு அலுமினியப் பாத்திரம் வடிவமைத்துக் கொடுத்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாத்திரத்தை ஏறத்தாழ 7 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம். இதற்காக 2000 அலுமினியப் பாத்திரங்களைக் கொள்முதல் செய்து, தமிழக மீனவ மகளிர் உறுப்பினர்களுக்கு மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக 50 விழுக்காடு மானியத்தில் வழங்கிட ரூ. 3.00 இலட்சம் முன்மொழியப்பட்டுள்ளது. ஒரு அலுமினியப் பாத்திரத்தின் மதிப்பு ரூ. 300/- ஆகும்.

**10.4 மதுரையில் தற்போது உள்ள பனிப்பொறி நிலையத்தை அலுவலக கட்டடமாக மாற்றுதல்**

மதுரை மாவட்டத்திலுள்ள பேச்சியம்மன் படித்துறையில் 1965-ஆம் ஆண்டு தரைத் தளம் மற்றும் மேல்மாடி கொண்டு பனிக்கட்டி நிலையம் கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் மேல்மாடி தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு வாடகைக்கு விடப்பட்டது. இப்பகுதியை 1-1-1991 அன்று மீன்துறையிடம் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஒப்படைத்துவிட்டது. இக்கட்டடம் பனிப்பொறி நிலையமாக பயன்படுத்தப்பட்டது. தற்போது



2000 ஏப்ரல் 18]

இந்நிலையம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனை ரூ. 6.00 இலட்சம் செலவில் பழுது பார்த்திட முன்மொழியப்பட்டுள்ளது. பழுது பார்த்தபின் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 4,500/- வாடகை செலுத்தும் மதுரை மண்டல மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம் இக்கட்டடத்தில் இயங்கும்.

**11. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டில் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 500.00 இலட்சம். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 445.52 இலட்சமாகும். இக்கழகம் கீழே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

1. ஆழ்கடல் மீன்பிடிப்பில் மீன்பிடி நாவாய்களை இயக்குதல்
2. நீர்த்தேக்க மீன் வளத்தை மேலாண்மை செய்தல்
3. தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல்
4. பனிக்கட்டி நிலையங்கள், குளிர்சாதன அறைகள் மற்றும் பதப்படுத்தும் நிலையங்களை நிர்வகித்தல்
5. மீனவர்களுக்கு டீசல் விற்பனை செய்தல்
6. தரமான மீன்களை விற்பனை செய்தல்
7. மீன்பிடி வலைகளை தயாரித்தல்
8. இறால் குஞ்சு பொரிப்பகம் மற்றும் இறால் பண்ணையை நிர்வகித்தல்
9. உலர் மீன் கிடங்கு
10. முத்து வளர்ப்புத் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் முத்துச்சிப்பி பொரிப்பகத்தை நிர்வகித்தல்
11. உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மானிய விலையில் வழங்குதல்
12. வண்ண மீன்கள் உற்பத்தி மற்றும் விற்பனை

[2000 ஏப்ரல் 18

### 11.1 ஆழ்கடல் மீன் பிடிப்பு

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் விசாகப்பட்டினத்தை தளமாகக் கொண்டு 3 ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கிவருகிறது. இந்த மீன்பிடி நாவாய்கள் மூலம் 1999-2000-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 53.66 டன் இறால்களும், 123.26 டன் மீன்களும் பிடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாய் ரூ. 193.90 இலட்சமாகும்.

### 11.2 நீர்த்தேக்கங்கள்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகப் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறைப்படியாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு மூன்றில் ஒரு பங்கு (1/3) என்ற முறையில் உள்ளூர் மீனவர்களை பணியமர்த்தி மீன்பிடிப்பு நடத்தப்படுகிறது.

1. சாத்தனூர் அணை
2. பவானிசாகர்
3. அமராவதி
4. ஆழியார்
5. திருமூர்த்தி
6. உப்பார்
7. மஞ்சளார்
8. பாலார்-பொறந்தலாறு
9. பெரும்பள்ளம்

மேற்கண்ட நீர்த்தேக்கங்களிலிருந்து 1999-2000-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 436 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ. 100.40 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட 9 நீர்த்தேக்கங்களில் பாலார்-பொறந்தலாறு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

### 11.3 மீன் குஞ்சு உற்பத்தி

இக்கழகம் சாத்தனூர் அணையில் ஓர் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தையும் அமராவதி, ஆழியார், திருமூர்த்தி மஞ்சளார், உப்பாறு மற்றும் பாலார்-பொறந்தலாறு ஆகிய இடங்களில் மீன் குஞ்சு வளர்ப்பு பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி



2000 ஏப்ரல் 18]

செய்யப்படும் மீன் குஞ்சுகள் இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களுக்கு வழங்கப்பட்டு இருப்பு செய்யப்படுகிறது. மேலும் மீன் துறை மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கும், தனி நபர்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. 1999-2000ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 238 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### 11.4. மீன் பதப்படுத்துதல்

இக்கழகத்தின் கட்டுபாட்டில் 6 பனிக்கட்டி நிலையங்களும் 4 மீன் பதப்படுத்தும் நிலையங்களும் உள்ளன. இதில் மண்டபம் பனிக்கட்டி மற்றும் பதப்படுத்தும் நிலையம் தனி நபருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 1999-2000-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய ரூ. 13.80 இலட்சம் குத்தகைத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

### 11.5. டீசல் விற்பனை நிலையங்கள்

தற்போது இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி, பழையாறு உட்பட 17 இடங்களில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களில் மீனவர்கள் மற்றும் மீன்பிடி விசைப் படகு இயக்குபவர்களின் நலன் கருதி டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 35,002 கிலோ லிட்டர் டீசல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ. 73.13 இலட்சம் தரகுத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

### 11.6. மீன் விற்பனை

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் சில்லரை விற்பனை அங்காடிகள் மூலமாக புதிய மற்றும் வறுத்த மீன்களை விற்பனை செய்து வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 530 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ. 202.32 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 11.7. மீன் வலை பின்னும் நிலையம்

இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன் வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன்கள் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 1999-2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 40 டன் நைலான் மற்றும் எச்.டி.பி.இ. வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 101.38 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 11.8. இறால் பொரிப்பகம் மற்றும் பண்ணை

நீலங்கரையில் கடல் இறால் குஞ்சு பொரிப்பகம் ஒன்றினை இக்கழகம் இயக்கி வருகிறது. இந்தப் பொரிப்பகம் ஆண்டு ஒன்றுக்கு 16 மில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. 1999-2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 10.25 இலட்சம் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 2.53 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை மற்றும் செயல் விளக்கப் பயிற்சி மையம் நிறுவப்பட்டுள்ளது.

### 11.9. உலர் மீன் கிடங்கு

உலர் மீன் ஏற்றுமதியாளர்களுக்கு உதவிடும் வகையில் தூத்துக்குடியில் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தால் கட்டப்பட்ட உலர் மீன் கிடங்கினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்படுத்தி வருகிறது. 1999-2000-ம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய ரூ. 1.85 இலட்சம் வாடகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

### 11.10 முத்து வளர்ப்பு

தமிழ்நாடு, மீன் வளர்ச்சிக் கழகத்தால் 1990 ஆம் ஆண்டு முதல் மண்டபத்தில் நிறுவப்பட்டு பராமரித்து வந்து முத்து வளர்ப்பு நிலையத்துறை 31-1-1995 முதல் தனியாருக்கு 5 ஆண்டுகள் குத்தகைக்கு விடப்பட்டது.

### 11.11 முத்துச்சிப்பி பொரிப்பகம்

புதுடெல்லியிலுள்ள உயிரியல் தொழில் நுட்பத் துறையினரால் வழங்கப்பட்ட மானிய உதவியுடன் மண்டபத்தில் முத்துச்சிப்பி பொரிப்பகம் நிறுவப்பட்டது. இப்பொரிப்பகத்தில் 1995-96 முதற்கொண்டு முத்துச்சிப்பிகளை உற்பத்தி செய்வதற்காக இயங்கி வருகிறது.

### 11.12. உட்பொருத்தும்/வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்கிட மானியம் வழங்குதல்

இக்கழகம் படகுகளுக்கு உட்பொருத்தக்கூடிய மற்றும் வெளிப் பொருத்தக்கூடிய இயந்திரங்களை மானிய விலையில் மீன் துறை இயக்குநரால் தெரிவு செய்யப்படும் மீனவ பயனாளர்களுக்கு வழங்கி வருகிறது. வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்ச





மானியமாக ரூ. 10,000-ம் உட்பொருத்தும் இயந்திரங்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்ச மானியமாக ரூ. 12,000-ம் வழங்கப்பட்டு வருகிறது. 31-3-2000 வரை 318 இயந்திரங்கள் வழங்கப்பட்டு சுமார் ரூ. 4.90 இலட்சம் இலாபமாக ஈட்டப்பட்டுள்ளது.

### 11.13. வண்ண மீன்கள் உற்பத்தி

இக்கழகம் வண்ண மீன் உற்பத்தி செய்து விற்பனை செய்ய திட்டமிட்டு அதற்கான உற்பத்தி செய்யும் இடங்களாக ஆழியார் மற்றும் திருமூர்த்தி பண்ணைகளைத் தெரிவு செய்துள்ளது. இவ்விடங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன்களை சென்னை மற்றும் கோவை நகரங்களில் விற்பனை நிலையங்கள் நிறுவி விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

223306